பாரதிதாசன்
திருக்குறள் உரை

(ஆய்வும் பதிப்பும்)

டாக்டர் ச. சு. இளங்கோ

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

பாரதிதாசன்
திருக்குறள் உரை

[ஆய்வும் பதிப்பும்]

டாக்டர் ச. சு. இளங்கோ

பாரி நிலையம்
184, பிராட்வே · சென்னை · 600108

முதல் பதிப்பு : டிசம்பர்—1992

நூற் பெயர் : பாரதிதாசன் திருக்குறள் உரை

ஆசிரியர் : டாக்டர் ச. சு. இளங்கோ

பதிப்புரிமை : பாரி நிலையம்

தாள் : 10.7 கிராம்

நூலின் அளவு : 18. 5 செ. மீ. × 12. 5 செ.மீ.

பக்கங்கள் : xii+252=264

வெளியிடுவோர் : பாரி நிலையம்
184, பிராட்வே,
சென்னை-600 108.

பொருள் : இலக்கியம்

விலை : 32-00

அச்சிட்டோர் : சாலை அச்சகம்
11, திருவீதியான் தெரு,
கோபாலபுரம், சென்னை-86

டாக்டர்
இரா. நெடுஞ்செழியன்
எம்.ஏ.,டி.லிட்.,
நிதி அமைச்சர்

தலைமைச்
செயலகம்,
சென்னை-9

நாள் : 16-8-1992

அணிந்துரை

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் செந்தமிழ் நாட்டின் இருபதாம் நூற்றாண்டின் ஈடும் எடுப்பும் அற்ற ஒருபெரும் கவிஞராகத் திகழ்ந்தார் என்பது பாரோர் போற்றும் புகழ்ச்சிக்குரிய மொழியாகும்.

புதுமைக் கவிஞர் பாரதியாருக்குப்பின், மக்கள் கவிஞர்' என்று போற்றப்படும் பெருமைக்குரியவராக விளங்கியவர், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனே ஆவார்.

உலகில், சிலர் கவிஞர்களாகவே பிறக்கிறார்கள்; சிலர் கவிஞர்களாக ஆக்கப்படுகிறார்கள்; சிலர் கவிஞர்களாக விளம்பரப்படுத்தப்படுகிறார்கள். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் முதல்வகையைச் சேர்ந்தவர்; கவிஞராகவே பிறந்தவர்.

புரட்சிக்கவிஞர் தமது 11ஆம் வயதிலேயே கவிதை இயற்றும் ஆற்றலைப் பெற்றிருந்தார். அவர் தமிழ் இலக்கண நூல்களையும், இலக்கிய நூல்களையும் முறை

யாகவும், முழுமையாகவும் இலக்கண - இலக்கியப் பேராசிரியர்களிடம் கற்றுத் தேர்ந்தவர். இயற்றமிழ், இசைத் தமிழ், இயக்க (நாடக)த் தமிழ் ஆகியவைபற்றி அவர் இயற்றிய இலக்கியங்கள் அழியாச் சிறப்புடையன வாகும். அவர் இன்தமிழில் இயற்றித் தந்துள்ள கவிதைகள், காவியங்கள், கதைப்பாடல்கள், இசைப்பாடல்கள், சிறு கதைகள், பெருங்கதைகள், ஆய்வுக் கட்டுரைகள், இலக்கியத்திறனாய்வுகள், இலக்கணக் குறிப்புக்கள், நாடகங்கள், திரைப்படக் கதைகள் போன்றவை பல்பல வாகும்.

அவர் வைதிக உள்ளம் கொண்டிருந்த இளமைப் பருவத்தில் **'கனக சுப்புரத்தினமாக'த்** திகழ்ந்தார்; தேசிய உள்ளம் படைத்திருந்த காளைப் பருவத்தில், **'பாரதிதாச னாக'** விளங்கினார்; பகுத்தறிவு உள்ளம் செறிந்திருந்த அறிவுமுதிர்ந்த பருவத்தில், **'புரட்சிக் கவிஞராக'** மிளிர்ந்தார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பற்றியும், அவரது அரிய இலக்கியப் படைப்புக்கள் பற்றியும் முழுமையாக ஆய்ந்து அறிந்து சிறந்த ஆய்வு நூல்களையும், சீரிய பதிப் புக்களையும் தமிழுலகத்திற்குத் தந்துள்ள பெருமைக் குரியவர், டாக்டர் ச. சு. இளங்கோ, எம். ஏ., பி. எச் டி., டி.லிட்., அவர்கள் ஆவார்.

அவர் பதிப்புக்கு வராத புரட்சிக்கவிஞரின் கவிதை கள் பலவற்றைப் பதிப்புக்குக் கொண்டு வந்துள்ளார். அவர் தமிழுலகத்திற்கு அறிமுகப் படுத்தியுள்ள அரிய பதிப்புக்களில் **'வள்ளுவர் உள்ளம்'** என்ற பெயர் பெற்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் திருக்குறள் உரை பற்றிய இச் சிறுநூலும் ஒன்றாகும்.

வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையாரின் உள்ளத்தை உள்ளவாறு அறிந்து, உலகியல் நடைமுறைக்கு ஒப்பவும், அறிவாராய்ச்சிக்கு ஏற்பவும், பகுத்தறிவு நெறிக்கு ஒத்த முறையிலும், உண்மை நெறி புலப்படவும் புரட்சிக்கவிஞர் அவர்கள், திருக்குறளின் முதல் 85 குறள்களுக்கு, அவ்வப்போது, 'குயில்' இதழில் எழுதிவந்த உரைகளின் தொகுப்பே இந் நூல் ஆகும்.

இந்த நூல், பல்லாண்டுக் காலமாகவே என்னைப் போன்றவர்களால் எதிர்பார்க்கப்பட்ட நூல்; விரும்பப் பட்ட நூல். இந்த அரும்பணியைச் சிறப்புறச் செய்து முடித்த டாக்டர் இளங்கோ அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

புரட்சிக் கவிஞரின் திருக்குறள் 85 குறள்களோடு நின்று விட்டது. அவர் 1330 அருங்குறள்களுக்கும் உரை எழுதி வழங்கியிருப்பாரேயானால் அதனால் பகுத்தறிவு நெறிப்பட்ட முற்போக்குத் தமிழுலகம் எவ்வளவோ எண்ணிறந்த பலன்களைப் பெற்றுப் பெரும் புகழ் அடைந்திருக்கும்.

புரட்சிக்கவிஞர் ஒவ்வொரு குறளுக்கும் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், திட்பமாகவும், ஐயப் பாட்டிற்கோ — குழப்பத்திற்கோ இடமில்லாத வகையில், ஆணித்தரமாகப் பொருள் விளக்கம் தந்துள்ளார். ஒவ்வொரு குறள் பற்றியும் எழக்கூடிய — ஐயவினா, அறியும் வினா, அறியா வினா ஆகியவற்றிற்கெல்லாம் தெளிவான விடைகளை அழுத்தந்திருத்தமாகவும், அடுக்கடுக்காகவும் எடுத்து வைத்துள்ளார். ஆங்காங்கு இலக்கிய மேற்கோள் களையும், இலக்கணக் குறிப்புக் களையும், சொற்களின் அமைப்பையும், பொருட்

பொலிவையும் சுட்டிக்காட்டி, வள்ளுவர் உள்ளத்தை உள்ளபடியே தெளிவுபடுத்துகிறார்.

''வள்ளுவன் சாக்கை எனும் பெயர் மன்னற்கு
உள்படு கருமத் தலைவற்கு ஒன்றும்'

என்னும் பிங்கலந்தைச் செய்யுளை மேற்கோளாக எடுத்துக்காட்டி, வள்ளுவர், வேந்தரின் உள்படு கருமத் தலைவராக இருந்து அருப்பணி ஆற்றியிருக்க வேண்டும் என்னும் கருத்தை, வலியுறுத்துகிறார்.

வள்ளுவர் எந்த ஒரு இடத்திலும் கடவுள் என்ற சொல்லைப் பயன்படுத்தவிலலை என்றும், ''கடவுள் வாழ்த்து இடையில் ஏற்பட்ட வேலை'' என்றும் புரட்சிக் கவிஞர் தெளிவுபடுத்தியுள்ளார்.

''கடவுள் - கடந்தது; அறிவுக்கு எட்டாதது என்னும் அதன் பொருளையும் நோக்குக. எட்டாத ஒனறுக்கும் பெயர் எப்படி எட்டியிருக்கும்?] இவைகளைக் கருதி யன்றோ வள்ளுவர் தம் நூலில கடவுள் என்றபெயரையே எடுத்தாளாது விட்டார்'' என்று புரட்சிக்கவிஞர் விளக்கம் தந்துள்ளார்.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே உலகு'' என்ற முதல் குறளுக்குப் பரிமேலழகர், வைதிகச் சமய உள்ளத்தோடு எழுதியுள்ள விளக்கவுரை எவ்வகையிலும் பொருந்தாது என்பதைப் புரட்சிக் கவிஞர் காரணகாரிய விளக்கங்களோடு தெளிவுபடுத்தியுள்ளார்.

''ஆதி - வடசொல் அன்று; தூய தமிழ்ச் சொல்லே. அஃது ஆதல் எனப் பொருள்படும் தொழிற்பெயர்'' என்றும், ''பகவன் வட சொல் அன்று; பகல் - அறிவு;

ஆகுபெயர். உணர்வு என்றும், அஃது, பகவு அஃதாவது உணர்வு என்றே கொள்க'', என்றும் புரட்சிக் கவிஞர் விளக்கம் தந்துள்ளார்.

'உலகு என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது இலக்கணம். உயர்ந்தோர் என்போர் அறிவுத்தெளிவும், அறிவு மிகுதியும் உடையவர் ஆவர். உலகை உருவாக்க - மேம்படுத்த - வளப்படுத்த - வலிவுபடுத்த - சீர்படுத்த - செம்மைபடுத்தப் பயன்படுவது அறிவேயாகும். அந்த அறிவைக் கொண்டுள்ள அறிவன் அல்லது பகவன், அதுவும் உலகு செம்மை ஆவதற்குக் காரணமாக அமைந்த ஆதி அறிவன் அல்லது ஆதிபகவன் உலகுக்கு முதன்மை யாக அமைகிறான்.

எல்லா எழுத்துக்களுக்கும் 'அ' முதன்மையாக விளங்குகிறது; அதுபோல உலகிலுள்ள எல்லாச் செம்மை யான நடவடிக்கைகளுக்கும் 'ஆதி அறிவன்' அல்லது 'ஆதி பகவன்' முதன்மையாக விளங்குகிறான்.

ஆவதற்குக் காரணமாக, அறிவு அல்லது மெய் யுணர்வு விளங்குகிறது என்பதை வள்ளுவப்பெருந்தகை யார் பல குறட்பாக்களின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்.

''அறிவுடையார் ஆவது அறிவார்'' - (427)

''அறிவுடையார் எல்லாம் உடையார்'' - (430)

''அறனறிந்து மூத்த அறிவுடையார்'' - (441)

''உண்மை அறிவே மிகும்'' - (373)

''மெய்ப்பொருள் காண்பது அறிவு'' - (355)

''செப்பொருள் காண்பது அறிவு'' - (358)

''அறிவு அற்றங்காக்கும் கருவி'' - (421)

''தீதொரீஇ, நன்றிபால் உய்ப்பது அறிவு'' - (422)

''அறிவு இன்மை இன்மையுள் இன்மை'' - (841)

''இடும்பை அறிவுடையார், உள்ளத்தில் கெடும்'' (622).

அறிவுக்கு எவ்வளவு முதன்மையும், வலிமையும், வளமையும், செம்மையும் உண்டு என்பதை மேற்கண்ட குறட்பாக்கள் தெள்ளிதின் விளக்கும்.

இப்படியாகப் புரட்சிக்கவிஞர் பல குறள்களுக்கும் புதுமையான, பொலிவான, பொருத்தமான, பொருள் பொதிந்த, உலகியலுக்கு ஒத்த, உண்மைக்கு ஏற்பப் பொருள் விளக்கங்களைத் தெளிவாகவும், திட்பமாகவும் கூறியுள்ளார்.

வள்ளுவரின் நெறி, உண்மை நெறி, வையத்தில் வாழ்வாங்கு வாழும் நெறி என்பதைப் புரட்சிக்கவிஞர் ஆங்காங்கு வலியுறுத்திக் காட்டுகிறார்.

புரட்சிக்கவிஞர் முதல் பத்து குறள்களுக்கும் புதுமை யான விளக்கங்களைத் தந்துள்ளார். மேலும்,

''வானின் றுலகம் வழங்கி வருதலான்'' - (11)

''சிறப்பொடு பூசனை செல்லாது வானம்'' - (18)

''இருமை வகை தெரிந்து ஈண்டு அறம்'' (23)

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை'' - (37)

''தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழு தெழுவாள்'' - (55)

''எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்கா'' - (62)

''ஆபயன் குன்றும் அறுதொழிலோர்
நூல்மறப்பர்'' - (560)

''முறைகோடி மன்னவன் செய்யின்
உறைகோடி'' - (559)

போன்ற குறள்பாக்களுக்குப் புரட்சிக் கவிஞர் தந்துள்ள பொருள் விளக்கங்கள், பெரிதும் போற்றிப் பாராட்டுவதற்குரியனவாகும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அருஞ்சொற்கள் பலவற்றிற்குச் சிறப்பான பொருள் விளக்கம் தந்துள்ளார், அவற்றில் சில வருமாறு :

வள்ளுவன் - அரசனின் உள்படு கருமத் தலைவன்; ஆபயன் - ஆனபயன், உறைகோடி - நீர்த்தேக்கங்கள் சீர்கேடு அடைதல்: அடி (தாள்) - தத்துவம்; அடிகள் - தத்துவ உணர்வு உடையவர்; செய்யுள் - செவ்விய உள்ளம்; ஆதி - ஆவதற்குக் காரணமான முதன்மை: பகல் - அறிவு; பகவன் - அறிவன்; கடவுள் - கடந்தது; அறிவுக்கு எட்டாதது; இருள் - அறியாமை; இருவினை - நல்ல செயல் தீய செயல் ஆகிய இருவினைகள்; எண்குணம் - சிறப்பாக எண்ணுகின்ற பண்புகள், இறைவன் - இறைந்தவன்: எவ்வுயிரிலும் பரவியவன்; அதாவது அறிவு; மழை - அமிழ்து, அமிழ்தம்; இருமை - அறம்பாவம் என்ற இரண்டு. எழுபிறப்பு - ஏழுதலைமுறை.

85 குறட்பாக்களுக்குத்தான் புரட்சிக்கவிஞர் உரை விளக்கம் தந்துள்ளார் என்றாலும், ஏனைய குறட்பாக்களையெல்லாம் எந்த முறையில் அணுகிப் பொருள் கொள்ளவேண்டும் என்பதற்கு, அவரது உரைவளம் மிகவும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திருவள்ளுவரின் உள்ளம் இதுதான் என்று படம்படித்துக் காட்டுகின்ற முறையில் உரைகண்டுள்ள குறட்பாக்களை ஒன்றுதிரட்டித் தந்த டாக்டர் ச. சு. இளங்கோ அவர்களுக்குத் தமிழ்கூறு நல்லுலகம் நன்றி செலுத்தக்கடமைப் பட்டிருக்கிறது.

வாழ்க புரட்சிக்கவிஞரின் புகழ்!
வெல்க அவரது திருக்குறள் உரை வளம்!

சென்னை
16-8-1992.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பாரதிதாசன் திருக்குறள் உரை

வள்ளுவர் உள்ளம்

முன்முகம்

காவலன் காவான் எனின்...?

தமிழர்கள் ஆண்ட நாளில் அரசியல் ஆறு துறையாய் வகுத்து ஆட்சி நடத்தப்பட்டது. அவை, உழவு, தொழில், வாணிகம், கல்வி, தச்சு, வரைவு என்பன.

உழவும் தொழில் என்னும் துறையில் அடங்குமேனும், சிறப்புக் கருதி உழவுத் தொழிலைத் தனித் துறையாக வைத்துக் கருத்தூன்றிக் காத்து வந்தார்கள். உழவும் தச்சும் (சிற்பம்) நீங்கிய பிற வேலை அனைத்தும் தொழிற்றுறையில அடங்கியவை.

எழுத்து, சொல், பொருள் என்பனவும் கோள் நிலையறிதல், மருத்துவம் முதலியனவும் போர்ப் பயிற்சியும் கல்வி என்ற துறையில் அடங்கும்.

வரைவு என்னும் துறையாவது யாது?— எல்லைப் பிரிவை உறுதி செய்தல், கோட்டை கட்டுதல் முதல் குளம் வெட்டுதல் வரைக்குமுள்ள இடங்களை வரையறுத்தலும் அளவு செய்தலும் முதலியவை.

இந்த ஆறு துறைக்கும் அக்காலத்தில் ஆறு

அமைச்சர்களை அமைத்துத் திறம்பட நாட்டைக் காத்து வந்தான் தமிழரசன்!

ஆறு துறையே அன்றிப் போர்த்துறை ஒன்று தனியே இருந்து வந்ததோ எனில் அவ்வாறில்லை. கல்வி என்னும் துறையில் போர்ப் பயிற்சியும் அடங்கியது என்று முன்னமே சொன்னேன். ஒரு துறைக்கு ஓர் அமைச்சனே அன்றிப் பல அமைச்சரை அமைத்தலும் உண்டு.

இந்த ஆறு துறையின் ஆறு அமைச்சர்களுக்கும் அலுவலகம் ஒன்றே; அது இந்நாளைய 'செக்ரடேரியேட்' போன்றது. அந்த அலுவலகத்தில் கருமத் தலைவன் ஒருவனிருப்பான். அவன் எல்லாத் துறையிலும் வல்லவன். அவனுடைய அலுவற் பெயர் "வள்ளுவன்" என்பது.

"வள்ளுவன் சாக்கை எனும் பெயர் மன்னற்கு
உள்படு கருமத் தலைவற்கு ஒன்றும்"

என்னும் பிங்கலந்தைச் செய்யுள் இந்தக் கருதத் தக்கது. உள்படு கருமத் தலைமை என்பது வள்ளுவன் என்ற அலுவற் பெயரையே குறித்து நின்றது காண்க.

பின் நாளில் வள்ளுவன் என்ற சொல் சாதியைக் குறிப்பதாகக் கருதும் நிலை உண்டாயிற்று. இப்படிப் பல. அகம்பட்டன் என்ற சொல் அரசனின் அகச் சுற்றம் ஆறில்—மருத்துவப் புலவன் பெயர். இதைப் பண்டிதச் சொல்லாலும் வழங்கி வந்ததுண்டு. இந்நாளில் இழிந்த சாதிக்காரர் என்று எண்ணும்படி ஆக்கப்பட்டிருக்கிறது.

வள்ளுவன் என்ற சொல், வண்மையினடியாகப்

பிறந்தது. வண்மை என்றது அறிவு வளத்தை. (நம் திருவள்ளுவர் இயற்பெயர் தேவர் என்பதும், அவரின் அலுவற் பெயரே வள்ளுவர் என்பதும் இங்கு நாம் அறிந்து இன்புறுவோமாக.)

அந்நாளில் அரசியல் பொறி என்ன அழகாக, எவ்வளவு திட்டவட்டமாக இயங்கி வந்தது என்பதை நாம் உற்று நோக்க வேண்டும் இதை விவரிக்க இங்கு இடம் போதவில்லை.

கோனாட்சி, குடியாட்சி, குடிக்கோனாட்சி என்ற அரசியல் முறைகளில் அந்நாளைய ஆட்சியைக் குடிக் கோனாட்சி எனல் வேண்டும். இந்நாள் சில நாடுகள் நல்லதோர் ஆட்சி முறையில் நடந்து வருவன என்று நாம் எண்ணுகின்றோம். இருக்கலாம். அது மட்டுமல்ல. இன்னும் சிறந்த வகையில் ஆட்சி முறை வகுக்கப் படலாம். அவை அனைத்தும் பண்டைய தமிழர் வகுத்த குடிக்கோனாட்சியில்தான் வந்து முடியும் என்பது மறுக்க முடியாது.

குடிக்கோனாட்சி ஒன்றுதான் சனநாயகம்—குடி யாட்சி என்பதெல்லாம். மக்களின் நன்மையை—அவர் களின் முழுதுரிமையை முன்னின்று நடத்த என்றைக் கும், எங்கும் ஓர் ஆள் வேண்டும். மக்களே நேரிலிருந்து தமக்கு வேண்டியவற்றைச் செய்து கொள்வதென்பது முடியாதது.

முடுக்கிவிட்டால், அரசியற் பொறி (எந்திரம்) தன்னிலையில் சுழன்று கொண்டு போகுமே, அதற்கு அரசன் எதற்கு என்று கேட்கலாம். இது அறிவற்ற கேள்வி. பொறி இயக்குவோனின் அன்புள்ளம், அப்பொறி இயங்க இன்றியமையாத ஓர் மின்னாற்றல்,

அரசன் தன் காத்தற்றொழிலைச் செவ்வனம் செய்யான் எனில் ஆறு துறையும் நடவா. நாட்டுக்கு ஆகிக் கொண்டுவந்த பயன் ஆகாமலே அளவிற் குன்றிவிடும்.

இவற்றை எல்லாம் வள்ளுவர் நமக்கு ஒரே குறளில் காட்டுகின்றார். பழந்தமிழ் நாட்டின் படப்பிடிப்பை நாம் அறிந்து கூத்தாட வேண்டும்.

என்ன?

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

'கொடுங்கோன்மை' அதிகாரத்தில் 10—ம் செய்யுள் இது. 'காவலன் காவான் எனின் ஆபயன் குன்றும், அறுதொழிலோர் நூல்மறப்பர்' என்று மொழி மாற்றிப் பொருள் கொள்க.

ஆபயன் என்பதற்குப் பரிமேலழகர் பசுவின் பயன் (பால்) குறையும் என்று பொருள் கொண்டார். அவர் ஆபயன் என்றதை ஆவினது பயன் என ஆறாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டார். அவ்வாறு கொண்டால் ஆப்பயன் என ஒற்று மிக வேண்டும், "ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர்" என்ற சிலப்பதிகாரத்திற் போல!

எனவே, ஆபயன் என்பது வினைத்தொகை நிலைத் தொடர் என்க. காலங்கரந்த பெயரெச்சம் வினைக்குறை என்பது வினைத்தொகை இலக்கணம்.

"ஆபயன் என்பது ஆனபயன், ஆகின்ற பயன், ஆகும் பயன் என முக்காலத்துக்கும் விரியும். இங்கு ஆனபயன் என்ற இறந்த காலத்துக்கு விரிக்க.

ஆபயன் (ஆனபயன்) என்றால் அரசன் நல்லபடி ஆண்டு வந்த போது ஆனபயன் என்பது பொருள். அவையாவன: பகையரசர் அஞ்சிக் கப்பம் கட்டுதல், வரி வரவு முதலியவை.

இனி, அறுதொழிலோர் என்பது உழவு, தொழில், வாணிகம், கல்வி, தச்சு, வரைவு ஆகிய ஆறு தொழிலுக்குரியோர். அவர்தாம் ஆறு அமைச்சர்.

நூல் மறப்பர்—தம் கொள்கையை விடுவர்.
நூல்—கொள்கை. மறத்தல்—கைவிடுதல்.

இனிப், பரிமேலழகர் அறுதொழில் என்பது ஆரிய மறை யோதுதல், ஓதுவித்தல், வேட்டல் (கொலை வேள்வி முதலியவை), வேட்பித்தல், அறிவு தரல், பிச்சைபுகல ஆகிய ஆறுதொழில் என்றார். பொருந்துமா? ஆரியர், தீயொழுக்கம் தமிழர்பால் தலைநீட்டத் தொடங்கக் கண்டருளிய வள்ளுவர் அவற்றை மறுத்துத் தமிழரை தமிழர் நெறியில் நிறுத்த அருளிய திருக்குறளில், ஆரியர் அறுதொழில் இந்நாட்டில் நடவாது ஒழிந்து விடுமே என்றா அழுவார்? எனவே பரிமேலழகர் கொண்ட பொருள் பொய்ப் பொருள் என விடுக்க.

—தென்றல் : மலர் 2 : இதழ் 21 (5-11-55)

2

ஆசிரியருக்கு அஞ்சல்

முறைகோடி மன்னவன் செய்யில் உறை கோடி ஒல்லாது வானம் பெயல்.

இக்குறளின் கருத்து என்ன?

அரசன் முறை தவறாக நடப்பானாயின், நீர்த் தேக்கங்கள் சீர்கேடு அடையும் காரணத்தால், அந்நீர்த் தேக்கங்கள் வானம் பெய்வதைத் தேக்கி வையா— என்பது.

பரிமேலழகர், அரசன் முறை தவறாக நடந்தால் மழை பெய்யாது என்று பொருள் கூறுகிறரே என்றால் அது பொருந்தாது என்றுதான் நாம் கருதுகின்றோம்.

நாம் கூறும் பொருளே பொருந்துவதாகும் என்பதை அடுத்த இதழில் விளக்குவோம்.

கேள்வி கேட்ட தமிழ்ப்புலவர்க்கு ஒன்று சொல்ல விரும்புகிறோம்.

திருக்குறளுக்கு வள்ளுவர் உள்ளம் என்ற நம் உரை அச்சாகி வருகிறது. மேலே புலவரால் கேட்கப் பட்டது போன்ற மிகப்பல குறட்பாக்களுக்கு அதில் பொருள் கிடைக்கும்.

அச்சாகி வருவதற்குள் தனித்தனியே இப்படிப் பொருள் கூறும்படி கேளாதிருக்க வேண்டுகிறோம்.

(குயில், 1-6-58)

5

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

இது கொடுங்கோன்மை என்னும் அதிகாரத்தில் 9-ஆம் செய்யுள். இதற்குப் பரிமேலழகர் கூறும் பொருள் வருமாறு :

மன்னவன் முறைகோடிச் செய்யின் - மன்னவன் தான் செய்யும் பொருளை முறை தப்பச் செய்யுமாயின்; உறை கோடி வானம் பெயல் ஒல்லாது - அவனாட்டுப் பருவமழை இன்றாம் வகை மேகம் பொழிதலைச் செய்யாது.

இரண்டிடத்தும் கோடவென்பன திரிந்து நின்றன. உறை கோடுதலாவது பெய்யும் காலத்துப் பெய்யாமை. அதற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப என்பது.

இவ்வுரையில் நமக்கெழும் கேள்வி என்னவெனில் மன்னவன் முறைகோடிச் செய்தால் அதைக் காரண மாகக் கொண்டு முகில் பொழிதலைச் செய்யா தொழியும் எனின், முகில் அறிவுடைப் பொருளா? — அறிவுடைப் பொருள் என்பதற்குச் சான்று என்ன? — இருக்க முடியாது. ஆனால் முகில் பெய்வதென்பது இயற்கை யின் கொடை எனின் மறுப்பார் யார்?

ஆதலின் பரிமேலழகர் கூறிய இப்பொருள் பொருந் துவதன்று என்பதோடு வேள்விக்கு மழை கட்டுப் படுவது என்று கூறி மக்களை ஏய்க்கும் ஓரினத்தாரின் கொள்கையை வலியுறுத்தவே இவ்வாறு பொருந்தப் பொருள் புகன்றார் என்றும் அறிதல் வேண்டும்.

இச்செய்யுட்குரிய பொருள் வருமாறு :

மன்னவன் முறை கோடி செய்யின் - அரசன் செய்யத்தக்க செயல்களை முறை தவறாகச் செய்வா னாயின், உறைகோடி - (ஏரி குளம் முதலிய) நீர்த் தேக் கங்கள் சீர்கேடு அடைதலாலே, வானம் பெயல் - வானம் பெய்தலை, ஒல்லாது - தேக்குதல் செய்ய மாட்டா என்பது.

ஏரி, குளங்களை மண்ணெடுத்துக் கரை உயர்த்தி நீர் தேங்குமாறு செய்தால்தான் உழவுத் தொழில் நன்றாகிக் கழனிகள் விளைவு தரும் என்றார் என்க.

இதில் உறை தொகுதி ஒருமை. அது தொழிலாகு பெயராய் உறையுமிடத்திற்கானது. உறு - முதனிலை. ஐ - தொழில் பெயர் இறுதி நிலை. கோடி இரண்டும் கோட என்ற செய என்னும் வினையெச்சத் திரிபுகள். பெயல் - இரண்டன் தொகை.

மன்னவன் செய்யத்தக்க செயலை முறை தவறாகச் செய்தலாவது :

உழவு, தொழில், வாணிகம், வரைவு, தச்சு, கல்வி ஆகிய அரசின் அறு துறைகட்கும் தக்க அமைச்சரை அமைக்காதிருப்பதும். அமைத்தும் மேற்பார்வை இடாதிருப்பதும ஆகும். இவற்றில் வரைவு என்பது பொதுவேலைகளைப் பழுதுபார்க்கும் துறை. இதை இந்நாள் பொது மராமத்து இலாகா என்பர்.

திருவள்ளுவர் இப்பாட்டை அருளிச் செய்ததால், அவர் முன்னால் தமிழரசர்க்கு அந்நாள் புலவர்கள் சொல்ல வேண்டிய இன்றியமையாச் சொற்களைச் சொல்லி விழிப்பூட்டியருளினார் என்க.

பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கிக் குடபுல வியனார் என்ற புலவர் ஏரி குளங்களை மண்ணெடுத்துக் கரை உயர்த்த வேண்டியதன் இன்றியமையா மையை வற்புறுத்தி உள்ள ஓர் அரிய செய்யுளைப் புறநானூற்றிற் காண்க (புறம் : 18)

"'முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ...
இவண் தள்ளா தோரே.....,''

ஏரி, குளங்களை மண்ணெடுத்து ஆழப்படுத்துவது நீர் ஊற்றுக் கருதி மட்டுமன்று. பெய்யும் மழையைத் தேக்கி வைக்க வேண்டும் என்பதைப் பெருநோக்கமாகக் கொண்டே அவ்வாறு செய்வாரென்க. இந்நாள் தொண்டை நாட்டில் கேணியையும் கிணற்றையும் உறை என்றே சொல்லுவது கருதத் தக்கது.

—குயில் ப. 15 8-6-58
குரல் : 1 இசை , 2

4

ஆசிரியருக்கு அஞ்சல்

கேள்வியும்—விடையும்

கேள்வி : அடிகள் என்று பெரியோர்களையும் கடவுளரையும் சொல்லுகிறார்கள். ஒன்றும் விளங்கவேயில்லை. விளக்க வேண்டுகிறேன்.

விடை : தோழருக்கு மட்டுமா விளங்காமலிருக்கிறது! தமிழ்ப் புலமைமிக்க புலவர் பலர்க்கு விளங்கவில்லை என்று நினைக்க வேண்டியதாகிறது.

அடி தாள் என்பன ஒருபொருட் சொற்கள். அடி, தாள் என்றால் மக்கள் உறுப்பாகிய காலையே குறிப்பதாகக் கொள்ளக்கூடாது. வேறு பொருளும் உண்டு. அதுதான் "தத்துவம்" என்பது.

இனி, அடிகளே என்று பெரியோர்களைச் சொன்னால், தத்துவ உணர்வு உடையவரே என்று

பொருள். அடிகளே என்று கடவுளைக் கூறினால் தத்துவனே என்று பொருள்.

அடிகள் என்னும் வழக்குத் திருவாரூர்க் கபிலர் தொகுத்த எண்ணூல் அதாவது சாங்கிய நூல் வழக்கு.

அனைத்தும் இருபத்தைந்து தத்துவத்துள் அடங்கின என்று சாங்கிய நூல் சாற்றுகின்றது. அதுவேயுமன்றி, அனைத்தும் இருபத்தைந்து தத்துவமாம் என்றுணர்ந்த நிலையே விடுதலை என்றும் அச் சாங்கிய நூல் உறுதிச் செய்கின்றது.

அடிகள் என்ற சொல் சமண் சமையத்தாருடையது என்றும், சைவ சமயத்தாருடையது என்றும் கூறிக் கொள்வது பொருத்தமன்று.

திருக்குறளில் தாள் என்றும் அடி என்றும் வருமிடங்களில் இவ்வாறே பொருள் காணவேண்டும்

திருக்குறள் மடத்துப் பதிப்பில் நற்றாள் என்பது சிவபெருமான் சீபாதம் என்று பொருள் சொல்லப் பட்டிருப்பதும் கலப்பற்ற பிழையேயாம்.

திருக்குறளில் அடி என்றும் தாள் என்றும் வந்துள்ளதால், திருவள்ளுவர் உருவ வணக்கத்தை ஒப்புகின்றார் என்று வேறு சிலர் எண்ணுகின்றார்கள். அதுவும் மேற்கூறியவாறு பிழையேயாம். ஏன் எனில்,

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

என, உருவ வணக்கத்தை மறுக்கும் வள்ளுவரே அதை ஏற்பாரா? ஏற்கமாட்டாரன்றோ!

இனித் தத்துவம் என்ற சொற்பற்றியும் சில கூறுவோம்.

தத்துவம் வடமொழியன்று. தன்மையின் அடியாகிய தன் துவம் பெற்று வடமொழிச் செய்கைக்கு உட்பட்டது, துவம் நீக்கி தன்மை என்று சொன்னாலே தத்துவம் அடி தாள் என்று சொன்னதேயாகும். என அறிதல் வேண்டும். தத்துவம் என்ற சொல்லுக்கு நாம் கொள்ளும் பொருளை வடச்சொல் கொள்ளவில்லை என்பது ஆராயற்பாலது.

—**குயில், ப. 3(17-6-58)**
குரல்-1; இசை-3

வள்ளுவர் உள்ளம்

உரைப் பாயிரம்

சீரோங்கி வாழ்ந்த திருவள்ளுவர் இப் பாரோங்கி வாழச் செந்தமிழால்திருக்குறள் என்னும் செய்யுள் செய்யத் திருவுளங் கொண்டார்.

செய்யுள் என்பது செவ்விய உள்ளம். அஃது நூலுக் காயிற்று. ஆகுபெயர். இனி எப்பொருள் கொண்டு செய்யுள் செய்தார் என்பது கேள்வி. நிலம், நீர், நெருப்பு, உயிர், விசும்பு ஆகியவையும், அவற்றின் பகுதியாகிய உலகம், மக்கள், விலங்கு, பறவை முதலியனவும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவையும்,அறிவு, முனைப்பு, மனம், ஆதி [மூலப் பகுதி] இறைவன் [பகவன்] ஆகியவை யும், அறம், பொருள், இன்பம் ஆகியவையும், அவற்றின் நிலையின்மையும் பிறவுமாகக் கூறப்பட்ட பருப் பொருள் நுண்பொருள் அனைத்தும் பொருள்களே.

இப் பொருள்கள் அனைத்தும் அகப் பொருள் புறப் பொருள் என இரும் பெரும் பிரிவாக்கப்படும். செய்யுள் செய்வார் அகப் பொருளையும் புறப் பொருளையும் வைத் தேனும், இவ்விரண்டில் ஒன்றை வைத்தேனும் செய்யுள் செய்வர். அந்நெறியே பற்றி அகம், புறமாகிய இருதிணை யையும் வைத்துச் செய்யுள் செய்தருளினார் திருவள்ளுவர் என்பது விடை.

இனி அகம் புறம் எனும் இரு பொருளும் பற்றிச் செய்யுள் செய்தார் ஆயின் அவற்றால் எய்தும் பயன்கள் எவை எனின், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் என்க. இவ்வாறு நூற்பயன் நான்காகக் கொள்வது வடவர் முறை அன்றோ எனின், அன்று, கடல் கொண்ட

குமரி நாட்டு முதற் கழகத்தார், உலகுக்கு முதற்கண் அருளிய தமிழ் நான்மறை என்பது அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கும் பற்றியதன்றோ? அந்நான் கனுள் அறமாவது தமிழ்ச் சான்றோர்களால் தமிழ் நான் மறை முதலிய நூற்களில் செய்க என்றவற்றைச் செய்தலும் மனு முதலிய நூற்கள் கூறியவற்றை விலக்கலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். அவற்றுள் ஒழுக்கமாவது. அறம் எனச் சொல்லியவற்றினின்று வழு வாது ஒழுகுதல்.

வழக்காவது ஒரு பொருள் மேல் என்னுடையது' என்னுடையது என இருவருக்கு ஏற்படும் மாறுபாடு காரண மாகத் தொடர்வது. அது கடன்படல் முதல் பதினெட்டுப் பிரிவுகளையுடையது.

தண்டமாவது அக ஒழுக்க நெறியினும் வழக்கு நெறியி னும் வழுவினோரை அந்நெறி நிறுத்தற் பொருட்டு ஒப்ப நாடித் தக்கவாறு தண்டித்தல். தண்டு—கோல், தடி அதனடி யாகப்பிறந்தவை. தண்டம்-தண்டனை-தண்டித்தல். தூய தமிழ்ச் சொற்கள். அறமும் வழக்கும் தண்டமும் அறமே யாயினும் அறநூற் செய்த தமிழ்ச்சான்றோர் பின்னிரண் டையும் மன்னன்பால் அளித்து முறைசெய்யச் சொல்லி யருளுவார். மற்றைய அறமேயும் இல்லறம், துறவறம் என்னும் இருவகைத்தாதலின் அவற்றுள் இல்லறத்தை முதற்கண் கூறுவான் தொடங்கி அனைத்தும் நிகழ்தற்குரிய உலகின் தோற்றத்தை ஈண்டுக் கூறுகின்றார்.

அறத்துப்பால்

அதாவது அறத்தைக் கூறும் பகுதி இரண்டனுருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

அதிகாரம் 1. உலகின் தோற்றம்

அதாவது உலகாகிய இடம், உலகத்து உயிர்கள், அவற்றின் நிலை ஆகியவை தோன்றும் முறையாம்.

''அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.''

என்பது பாட்டு.

''அகரம் முதல எழுத்து எல்லாம் ஆதி
பகவன் முதற்று ஏ உலகு.'' என்பது அப்பாட்டின் சொற்களைப் பிரித்துரைத்தது.

அகரம் முதல எழுத்து எல்லாம் ஆதி
உலகு பகவன் முதற்று ஏ

என்பது சொற்களைப் பிரித்து, மொழி மாற்றியமைத்தது. மேற் செய்யுட்களுக்கெல்லாம் சொற் பிரித்தலை மட்டும் குறிக்க ''பி'' என்பதையும், அதனோடு மொழி மாற்றையும் குறிக்க 'பி.மா' என்பதையும் குறிக்கப்படும்.

பொருள் : அகரம் முதல—அகரத்தை முதலாக உடைய, எழுத்து—எழுத்துக்களும், எல்லாம்—அவ்வெழுத்துக்களாலாகிய சொற்களும், அச்சொற்களால் பெறப்படும் பொருள்களுமாகிய எல்லாம். ஆதி—முதன்மையினின்று தோன்றியவை. உலகு பகவன் முதற்று—மக்கள் பகவனை முதல்வனாகக் கொள்ளத் தக்கவர்.

கருத்து : உலகும், உயிர்களும், மற்றுள்ளவைகளும் ஆதி என்பதினின்று தோன்றியவை. ஆயினும் உலக மக்கள் பெறத்தக்க பேறு மெய்யுணர்வு ஒன்றே.

ஏ—ஈற்றசை. முதல—குறிப்புப் பெயரெச்சம். மலர, காய (அகம்) என வந்தன காண்க. ஆதி—வட சொல் லன்று. தூய தமிழ்ச் சொல்லே. அஃது ஆதல் எனப் பொருள்படும் தொழிற் பெயர். ஆ—முதல் நிலை, தி- இறுதி நிலை. செய்தி, உய்தி என்பவற்றிற் போல. ஆதி—முதன்மை ஒரு பொருட் சொற்கள். இதை வடவர் மூலப் பிரகிருதி என்பர்.

ஆதியாவது எல்லாப் பொருளும் தோன்றுதற்கிட மாவது. இதை,

"தனையறிவரிதாய்த் தாமுக் குணமாய்
மனநிகழ் வின்றி மாண்பமைப் பொருளாய்
எல்லாப் பொருளும் தோன்றுதற் கிடமெனச்
சொல்லுதல் மூலப் பகுதி. [மணி-சமய 203—206]

என்பதாலும் அறிக.

காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று பண்புகளும் ஒன்றுபட்ட நிலை ஆதி என்று உணரப்படும். அவற்றின் கலங்கிய நிலையே இவ்வுலக மெல்லாம் என்க. எல்லாம் ஆதி என்றதால், உலகம் ஆதி அல்லது முதன்மையினின்று தோன்றியது என்றவாறாயிற்று. எல்லாம் ஆதியினின்று தோன்றின என்னாது, எல்லாம் ஆதி என்றது என்னை யெனில் காரணத்தில் உள்ளதே காரியத்திலும் உள்ளது என்னும் உள்ளது சிறத்தல் [சற்காரியவாதம்] ஆனதோர் முறை கொண்டு, மகனறிவு, தந்தையறிவு [நாலடி] என்பது போல. எல்லாம் எழுவாய். ஆதி—பயனிலை.

பகவன் வட சொல் அன்று; பகல் எனப் பொருள்படும் பகவு ஆண்பால் இறுதிநிலை பெற்றது. பகல்-அறிவு, ஆகு பெயர், உணர்வு எனலும் அஃது. பகவன் ஆண்பாலாற்

சொல்லப்படினும், பகவு அஃதாவது உணர்வு என்றே கொள்க. மேலைச் செய்யுட்களிலும் இவ்வாறே:

> "அறிதற் கெளிதாய் முக்குண மன்றிப்
> பொறியுணர் விக்கும் பொதுவு மன்றி
> அப்பொருள் எல்லாம் அறிந்திடற் குணர்வாய்
> ஒன்றாய் எங்கும் பரந்து நித்திய மாய்
> நின்றுள உணர்வாய் நிகழ்தரும் புருடன்"
> [மணி.சமய : 227-232],

என்பதால் பகவன் இலக்கணம் அறியப்படும்.

எண்ணூலை வடவர் சாங்கியம் என்பர். எண்ணூல் என்பது அனைத்தும் இருபத்தைந்து தத்துவமென எண்ணப் படுதலின் வந்த காரணப் பெயர். சாங்கியம் என்பது சங்கியையையுடையது. சாங்கியம் ஆனது வடமொழித் தத்திதப் பெயர். இவ்வாறு மொழிபெயர்த்துக் கொண் டனர் வடவர். எண்ணூல் திருவாரூர்க் கபிலரால் முதற்கண் ஆக்கி இவ்வுலகுக்கு அளிக்கப்பட்ட தத்துவ நூல். தலைக் கழக நாளினின்று சென்ற 2500 ஆண்டு முன் வரை இஃது எழுதாக்கிளவியாயிருந்தது. பின்னர் கபிலர் நூலாக்கினர் என்பர் ஆராய்ச்சியாளர். மேல் நாட்டில் எழுந்த தத்துவ நூல்களுக்கும் எண்ணூலே அடிப்படை என அறிதல் வேண்டும்.

எந்நாளில் நூல் தோன்றுகின்றதோ அந்நாளில் மக்க ளிடம் பரவியிருந்த பண்பாட்டின் அடிப்படையில்தான் நூற்கருத்துக்களும் அமையும் என்பது இயற்கைச் சட்டம். (திருவள்ளுவர் திருக்குறளும் பெரும்பாலும் எண்ணூற் கொள்கையின் அடிப்படையில்தான் எழுந்துள்ளது என்பது மறுக்கக் கூடியதன்று.) இஃது மேல் வரும் செய்யுட்களின் உரைகளில் எடுத்துக் காட்டப்பெறும். மற்றும் நீத்தார் பெருமை ஏழாம் செய்யுள் உரையில் எண்ணூற் கொள்கை விரிக்கப்படும். அங்குக் காண்க.

இக்குறட்பாவுக்குப் பலரெல்லாம் பலவாறு பொருள் கூறினார். அவையனைத்தும் தத்தம் சமயத்தை அடிப்படையாகக் கொண்டவை. திருவள்ளுவர் சமையக் கணக்கர் மதி வழியே நூல் செய்தாரிலர்.

வள்ளுவர் உள்ளம் என்னும் இவ்வுரையின் மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் விடையும் வருமாறு :

ஆத்திகன் : பகவன் என்பதற்கு மெய்யுணர்வு, அதாவது அறிவு என்று பொருள் கூறிக் கடவுள் என ஒருவர் இல்லை என்று ஆக்க எண்ணுகின்றீரா?

உரை ஆசிரியர் : ஆமாம் ''அறிவான தெய்வமே'' என்று தாயுமானாரும், அறிவை அறிவது பொருளென அருளிய குருநாதா என்று அருணகிரிநாதரும் ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர்வில்லாதவர்க்கு என்று இந்நூலாசிரியரும் போல.

நாத்திகன் : அறிவு ஒன்றே பெறத்தக்கது என்று கூறிக் கடவுள் ஒருவர் உண்டு என்பதை உறுதி செய்கின்றீர்களா?

உரை ஆசிரியர் : பெறத்தக்கது அறிவு என்று நான், உண்மை உரை கூறினேன். அதனால் கடவுள் ஒருவர் உண்டு என்று ஆய்விடாது. அப்படி ஆய்விடுமானால் ஆய்விடட்டும். அதனால் உமக்கென்ன முழுகிப்போகும்?

ஆத்திகன் : மக்கள் பெறத்தக்கது அறிவு என்று மட்டும் கூறிய நீவிர் அறிவாகிய கடவுள் என்று ஏன் கூறவில்லை?

உரை ஆசிரியர் : கடவுள் என்ற சொல் மக்கள் அறிவு பெறாத காலத்தில் ஏற்பட்டதாய் இருக்கலாம். கடவுள்—கடந்தது; அறிவுக்கு எட்டாதது என்ற அதன் பொருளையும் நோக்குக. எட்டாத ஒன்றுக்குப் பெயர் எப்படி எட்டியிருக்கும்? இவைகளைக் கருதியன்றோ வள்ளுவர் தம் நூலில் கடவுள் என்ற பெயரையே எடுத்தாளாது விட்டார்.

நாத்திகன் : சாங்கியம் என்பது ஒரு மதமா?

உரை ஆசிரியர் : இல்லை. தமிழர் பால் தொன்று தொட்டு இருந்து வரும் பண்பாடு. இடையில் திருவாரூர்க் கபிலர் எண்ணூல் என்ற பெயரால் நூலாக இயற்றி யருளினார்.

நாத்திகன் : அந்தப் பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே அக்கால நூல்கள் உண்டாகும் என்பதை விளக்க முடியுமா?

உரை ஆசிரியர் : மேல் என்றால் வானத்தை நோக்கி அண்ணாந்து பார்ப்பது இந்நாள் வழக்கம். இந்நாளில் ஏற்படும் நூற்களும் அதை அடிப்படையாகக் கொண்டுதான் உண்டாகும். கீழ்ப்புறத்திற்கும் மேல் என்பது பொருந்தும் என்று கொண்டு கீழ்நோக்கார். அதுபோலவே அக்காலத் தமிழர்கள் இந்த உலகம் என்றைக்கு உண்டானது என்று ஆராய்வது பயனற்ற வேலை என்பார், உலகம் ஆதியினின்று முதன்மையினின்று தோன்றிற்று என்றார்! அந்தக் கருத்தின்,— பண்பாட்டின் அடிப்படையில்தான் அக் கால நூற்களும் அமைந்தன. உலகம் ஒருவனால் உண்டாக் கப்பட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டு நூல் அமையாது. இதுதான் சாங்கியத்தின் அடிப்படையில் குறள் உண்டாயிற்று எனப்பட்டது. சாங்கியம் மதமன்று. அது எவராலும் உண்டாக்கப்பட்டது அன்று. அக்கருத்துக்களின் தொகுதியே எழுதாக்கிளவி எனப்பட்டது. எழுதியபின் எண்ணூல் என்றார்கள்.

எண்ணூல் பல மொழியில் பெயர்க்கப்பட்டது. ஆரியர்—திபேத்தியர் முதலியவர்களால் பலவாறு திரித்து எழுதப்பட்டது. சாங்கியக் கருத்துக்கள் இயற்கையோடு இயைந்தவை. பகுத்தறிவுக்கு ஒத்தவை. ஆதலால்தான் அக்கருத்துக்கள் தத்துவ நூற்கள் என எழுந்த அனைத்திற் கும் அடிப்படையாகி மிளிர்கின்றன.

மதம், சமையம் என்று சொல்லப்படுவன அனைத்தும் ஒருவனால்—ஒரு கொள்கையை நோக்கி மக்களை இழுக்க உண்டாக்கப்படுவன. சாங்கியம்— கருத்துக்கள்— பண்பாடுகள் எவராலும்—எவரைத் தம்பக்கம் இழுக்கவும் ஆக்கப்பட்டன அல்ல என்பதை உணர்வார் அதை மதம் என்றார் என்பதை நீவிர் இங்கு நினைவிற் கொள்க.

ஆத்திகன் : எழுத்தெல்லாம் அகரத்தை முதலாகக்—காரணமாகக் கொண்டவை. அதாவது அகரத்தினின்றே மற்ற எழுத்துக்கள் உண்டாயின, இது பெரியோர் கொள்கையல்லவா?

உரை ஆசிரியர் : எழுத்துக்கள் அனைத்தும் ஓம் என்றதினின்று தோன்றியவை என்று விளக்கிய மாணிக்க நாயக்கர் சிறியோரா? அன்றியும், அ முதல் ஔ வரைக்குமுள்ள உயிர்கள் பனிரண்டு. அவற்றில் ஓர் எழுத்திலிருந்து மற்றவை தோன்றின என்பது எப்படிப் பொருந்தும்? காலில் விலங்கும் கையில் விலங்கும் உடல் மறைய ஒரே வகைச் சட்டையுமாய்ச் சிறையில் இருக்கும் பனிரண்டு குற்றவாளிகளில் ஒருவன் மற்றவரை ஆக்கினான் எனில் அதற்கு என்ன அடையாளம்? என்ன ஆதாரம்? சொல்லத்தான் வேண்டும் என்று மதமக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் ஊற்றுக்கு நிற்காது.

ஆத்திகன் : எழுத்துக்களில் நான் அகரமாய் இருக்கிறேன் என்று கண்ணபிரானே சொல்லவில்லையா?

உரை ஆசிரியர் : ஆமாம் கண்ணபிரான் மக்களை இருட்டில் வருக என்று அழைக்கிறான். நாம் ஏன் போக வேண்டும்? வள்ளுவரைப் பின்பற்ற வேண்டுவது வையத்தின் கடனன்றோ?

ஆத்திகன் : இந்த அதிகாரத்திற்குக் கடவுள் வாழ்த்து என்று இருந்ததை நீவிர் உலகின் தோற்றம் என்றது என்ன?

உரை ஆசிரியர் : இதுதான் வள்ளுவர் உள்ளம். கடவுள் வாழ்த்து இடையில் ஏற்பட்ட வேலை.

நாத்திகன் : முதல் நான்கு அதிகாரங்கள் வள்ளுவர் அருளிச் செய்தனவா?

உரை ஆசிரியர் : இல்லை என்று வ. உ. சிதம்பரனார் எண்ணுகின்றார். நான் அவ்வாறு எண்ணவில்லை. உரை முழுவதும் நீர் படித்த பின் நான் சொல்லுவது உண்மை என்று உமக்கே தோன்றலாம்.

—(குயில் 1-12-59)

முதற் குறள்
ஆத்திக நாத்திக வினாவும் விடையும் (தொடர்ச்சி)

ஆத்திகன் : உலகு பகவன் முதற்று என்பதன் பொருளைத் தெளிவுபடுத்த முடியுமா?

உரை ஆசிரியர் : உலகு—உலகினர், பகவன் முதற்று—பகவனை முதன்மையாகக் கொள்ளத்தக்கவர். இங்கு முதன்மை என்பது காரண முதன்மையன்று, இடமுதன்மை. எனவே அறிவை உலக மக்கள் முதலிடத்ததாகக் கொள்ளத் தக்கவர். மக்கள் பெறத் தக்கது அறிவே ஆகும் என்றாம். அறிவு ஒன்றை ஆக்கத் தக்கதன்று. எவற்றிற்கும் மேலானது; சிறந்தது; பெறத்தக்கது என்க.

—(குயில் 8-12-59)

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்

(பி.மா) வாலறிவன் நல்தாள் தொழாஅர் எனின்
கற்றதனால் ஆய பயன் என் கொல்

பொருள் : வாலறிவன்—தூய அறிவுடையவனாகிய பகவனுடைய, நல்தாள்—நல்ல அடியை, தொழாஅர் எனின்—

தொழாமற் போவாராயின், கற்றதனால் ஆய பயன் என் கொல்—படித்ததனால் ஏற்பட்ட பயன் என்ன? (இல்லை என்றபடி)

கருத்து : மெய்யுணர்வை உண்டாக்காத கல்வியால் பயனில்லை. வாலறிவை வாலறிவன் என்றதற்கேற்பத் தத்துவத்தை நற்றாள் என்றார். தாள், அடி, தன்மை தத்துவம் ஒரு பொருட் சொற்கள். தன்மையின் அடியாகிய தன் என்பது வடமொழிச் செய்கை பெற்றுத் தத்துவமாயிற்று. நற்றாள் தொழுவதாவது, தத்துவ உணர்வு பெறுவது. கடவுளரையும் துறவிகளையும் அடிகள் என்னும் பிற்கால வழக்கும் எண்ணூல் கொண்டே என்க. தத்துவ உணர்வு பெற்ற நிலையே வீடு ஆகிய எண்ணூற் கொள்கை இங்கு அறியத்தக்கது

தொழாஅர்—ழ் என்பதன் மேனின்ற ஆ தனக்குள்ள இரண்டு நொடி நேர நீட்டலோடு மற்றும் ஒரு நொடி நீட்டலுக்கு அ என்பதையும் வேண்டிற்று. உயிரளபெடை.

வள்ளுவர் உள்ளம் என்ற இவ்வுரையின் மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் விடையும் வருமாறு :

நாத்திகன் : வாலறிவன் என்பதும் வாலறிவு தானோ?

உரை ஆசிரியர் : அஃறிணைப் பொருளை உயர்திணையாகச் சொல்லி வைப்பது கவிமரபு என்று தெளிக.

நாத்திகன் : வாலறிவு உண்டு. அதற்குத் தாளும் (காலும்) இருக்குமோ?

உரையாசிரியர் : வாலறிவை வாலறிவன் என்றவர் தத்துவத்தைத் தாள் என்றார். பாட்டுப் படித்துச் சுவை உணரும் ஆற்றல் உமக்கு இருந்தால் இவ்வாறு கேட்க மாட்டீர்.

நாத்திகன் : தத்துவம் என்றால் என்ன?

உரை ஆசிரியர் ; தன்மை என்பது பொருள். வாலறிவன்

நற்றாள் என்றால் அறிவின் நல்ல தன்மை என்பதுதான் பொருள். பெறத்தக்கது அறிவின் தன்மை என்றது அறிவுக்குரிய குணம் செயல்களை.

ஆத்திகன் : திருக்குறளை நாத்திகத்தை நோக்கி இழுத்துக் கொண்டு போகின்றீரா?

உரை ஆசிரியர் : ஆத்திகத்தை நோக்கி இழுத்துக் கொண்டு போவதும் நாத்திகத்தை நோக்கி இழுத்துக் கொண்டு போவதும் பிழையே. ஏன் எனில் வள்ளுவர் உள்ளம் நாத்திகமும் இல்லை ஆத்திகமும் இல்லை. அவர் நெறி உண்மை நெறி. வையத்தில் வாழ்வாங்கு வாழும் நெறி.

ஆத்திகன் : மெய்யுணர்வு என்று நீவிர் சொல்வதெல்லாம் கடவுளை அல்லவா?

உரை ஆசிரியர் : மெய்யுணர்வை ஆத்திகன் கடவுள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். நாத்திகன் கடவுளின்மை தான் மெய்யுணர்வு என்கிறான். இதுதான் நன்று இதுதான் நன்று அன்று என்று கருதி அந்நெறியை மேற்கொள்வது மெய்யுணர்வு.

நாத்திகன் : மெய்யுணர்வை உண்டாக்காத கல்வியும் உளவோ?

உரை ஆசிரியர் : மிகுதியாய் உண்டு. அவை ஆரியர் நூற்கள். பாரதம் இராமாயணம் புராணங்கள் தமிழர்களால் கற்கத் தகாதவை! பொய்கள் நிறைந்தவை. பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை. தமிழரின் செயலுக்கு ஒத்துவராதவை. எடுத்து காட்டு: ஒரு பெண் ஐந்து ஆடவரை மணந்து கொண்டதாகப் பாரதம் பகர்கின்றது. தமிழர் ஒத்துக்கொள்ளலாமா? உலகம் ஒத்துக் கொள்ளுமா?

நாத்திகன் : நன்று! நன்று!

ஆத்திகன் : மெய்யுணர்வை உண்டாக்கத் தக்க நூற்கள் தமிழ் நூற்களோ?

உரை ஆசிரியர் : தமிழ் நூற்களும், ஆரியர் நூற்கள் ஒழிந்த பிறமொழி நூற்களும் என்று கடைப்பிடிக்க.

ஆத்திகன் : ஏன் அப்படி?

உரை ஆசிரியர் : ஒருவன் ஒரு கொலை செய்து விடுகிறான், அக்கொலை செய்ததனால் கொலை செய்தவனுக்கு உண்டாகும் மனக்கோட்டம் ஒரு பார்ப்பனனுக்கு ஒன்று கொடுப்பதனால் தீர்வதுண்டா? தீர்ந்து விடுகின்றது என்று ஆரியர் நூல் சொல்லுகிறது. இதை அறிவுலகம் ஒத்துக் கொள்ளுமா? மக்களில் உயர்வு தாழ்வு பிறப்பிலேயே உண்டு என்கிறது. அறிவுலகம் ஒத்துக் கொள்ளுமா? இவ் வாறு அமைந்த நூற்களைக் கற்கலாமா?

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல் மற்றன்ன செய்யாமை நன்று என்றும், பிறப்பொக்கும் எல்லாவுயிர்க் கும் என்றும் வள்ளுவர் அருளினார். அவர் போலவே பிற தமிழ்ச் சான்றோரும் சாற்றினார்கள். கறகத் தக்கவை இத் தகைய தமிழ் நூற்களன்றோ?

—(குயில் 9-12-59)

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

[பி] மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார்
நிலம் மிசை நீடு வாழ்வார்.

பொருள் : மலர் மிசை-உலக உயிர்கள் மாட்டு, ஏகினான் —சென்று பரந்தவனாகிய பகவனுடைய, மாண் அடி— பெருமை பொருந்திய அடிகளை, சேர்ந்தார்—பின்பற்றிய வர்கள், நிலமிசை—இவ்வுலகின் கண், நீடு வாழ்வார்— நீண்டகாலம் வாழ்ந்திருப்பார்கள்.

கருத்து : மெய்யுணர்வு பெற்றார் தாம் விரும்பும் காலம் மட்டும் இவ்வுலகில் வாழ்ந்தின்புறுவர்.

மலர்—மலர்தல் என்பதின் முதனிலைத் தொழிற்பெயர். உலகுக்கானது ஆகுபெயர். உலகை மலர் என்றும் மயில் என்றும், ஆதியை அரும்பு என்றும், மயிலின் முட்டை என்றும் எண்ணூல் கூறும். இதை உட்கொண்டே உலகை மலர் என்றார் ஆசிரியர். ஏகுகின்றான் என முக்காலத்திற்கும் பொதுவாகக் கூறாமல், ஏகினான் என இறந்த காலத்தாற் கூறியது ஆதியினின்று உலகம் வெளிப்பட்ட பின்னரே பகவனின் இறைமை தோன்றியதென்பதைக் குறிக்க.

நிலமிசை நீடுவாழ்வார் என்பதற்கு, வீட்டுலகில் நீண்ட நாள் வாழ்ந்திருப்பார் எனப் பொருள் கூறுவாருமுளர். அவர் அறியார். ஆசிரியர், வீட்டுலகையே கூறியிருப்பாரானால் நீடு வாழ்வார் எனக் கூறியிரார், வீட்டுலகில் நீணாள் வாழ்தலும், ஐந்தாறு நாள் வாழ்ந்து மீளுதலும் என இரண்டில்லையாதலால். அன்றியும் நிலமிசை என்பது வீட்டுலகில் எனப் பொருள்படாமையும் உணர்க. "மன்னுக பெரும நீ நிலமிசையானே [புறம்-6] என்றவிடத்தும் அப் பொருள் ஆதல் அறியற்பாலது. மிசை ஏழனுருபு.

ஆரிய மறைச்சார்பினர், வேத நூற் பிராயம் நூறு என்பர். அவர்கள் தமிழ்ச் சான்றோர் பன்னூறாண்டுகள் வாழத் தெரிந்தவர்கள்—அவ்வாறு வாழ்ந்தவர்கள் என்பதையும் நம்பாத "நாத்திகர்கள்".
மற்றும்,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே."

"நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை; மனைக்கும் அழிவில்லை,"
(மனை—உடம்பு)

"வளியினை வாங்கி வையத்தில் அடுக்கிடில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்"

என்று திருமூலர் அருளிச் செய்தவற்றையும்,

"கூற்றங் குதித்தலும் கைகூடும்" என இவ்வாசிரியர் குறித்ததையும்,

"நோற்றார் மன்ற தாமே கூற்றம்;
கோளுற விளியார் பிறர்கொள விளிந்தோர்"

என மாமூலனார் அருளியதையும் நோக்குக.

ஆத்திகன் : அன்பர் உள்ளமாகிய மலரில் இருப்பவன் என்று மலர்மிசையேகினான் என்பதற்குப் பொருள் கொண்டால் வரும் இழுக்கென்ன?

உரை ஆசிரியர் : அரும்பு—ஆதி; அதாவது முதன்மைக்குப் பெயர். மலர் உலகின் பெயர். உலகிலுள்ள உயிர்களுக்கும் பெயர். அறிவு உயிர்களிடமெல்லாம் பரவியிருப்பது தெரிந்தது. அறிவில்லாத இடத்தில் உயிரில்லை அன்றோ! ஆதலால் இவ்வாறு மெய்ப்பொருள் கூறப்பட்டது. இதனால் வரும் இழுக்கு என்ன?

நாத்திகன் : ஆன்மா எங்கும் பரவி இருப்பது என்று ஆத்திகர் சொல்வதொப்பவே அறிவு உயிர் தோறும் பரவி இருக்கிறது என்று கூறி ஆத்திகத்தை வலியுறுத்துகின்றீரா?

உரை ஆசிரியர் :- மக்களிடத்து ஆறறிவு இருத்தலைப் பார். விலங்குகளிடத்து ஐந்தறிவு இருத்தலைப் பார்! வண்டு, நண்டு முதலியவற்றிடத்து நான்கறிவு பார்! இதில் எறும்புகளிடத்து மூன்றறிவு பார்! நத்தை அட்டைகளிடம் இரண்டறிவைப் பார்! புல், மரம் முதலியவற்றில் ஓரறிவு பார்! எனவே, உலக உயிர்களிடத்து—அறிவு பரவியிருப்பது உண்மை. இதைப் பார்த்து ஆன்மா எங்கும் பரவி இருக்கிறது என்றார் ஆத்திகர், அதைப் பார்த்தா இவ்வுரை கூறப்பட்டது?

ஆத்திகன் : நிலமிசை நீடு வாழ்வார் அதாவது உலகில் நீண்ட நாள் வாழ்வார் எனில் ஏன் வாழ வேண்டும்? அவ்வாறு வாழ எண்ணுவது பற்று விடாமையை அன்றோ குறிக்கும்?

உ. ஆசிரியர் : உலக மக்களை நல்வழியிற் செலுத்தி வாழ வைப்பதற்கு வாழுவோர்; இல்லத் துறவிகள்.

நாத்திகன் : இப்போது நூறாண்டுகட்கு மேல் உயிர் வாழ்வோர் பலர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் இல்லத் துறவிகள்தாமோ?

உ. ஆசிரியர் : பின், பிஞ்சில் பழுத்தவர்களா? ஒழுக்க மில்லாதவர்களா? ஊரான் பணத்துக்கு ஆசைப்பட்டவர் களா? இல்லத் துறவிகளே [அதாவது] பிறர் நலங் கருதி தன்னலந் துறந்தவர்களே!

ஆத்திகன் : மாணடி சேர்ந்தார் எனில் அறிவு பெற்றவர் கள் என்பது உம் உரை; அறிவு பெற்றவர் பிறர் நலம் காப்பவரா?

உ. ஆசிரியர் : இவ்வாசிரியரும் அறிவினான் ஆகிய துண்டோ, பிறிதின் நோய் தன் நோய் போற் போற்றாக் கடை? என்றதும் காண்க. அறிவின் பயன் அறிக.

—(குயில் 15-12-59)

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில.

[பி. மா]

வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
இடும்பை யாண்டும் இல.

பொருள் : வேண்டுதல் வேண்டாமை இலான்—மக்களிட மிருந்து ஒன்றை விரும்புதலும், இவர் இன்னது செய்திலரே என அவர்களை வெறுத்தலும் இல்லாத பகவனின்; அடி—

அடியை, சேர்ந்தார்க்கு—அடைந்தார்க்கு, இடும்பை—துன்பம், யாண்டும் இல—எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லை.

கருத்து : மெய்யுணர்வு பெற்றோர்க்கு யாண்டும் துன்பம் ஏற்படுவதில்லை. இக்குறட்பாவால், உருவ வணக்கத்தை யும், அவ்வுருவங்கட்குக் கோயில் கட்டுவது, உணவு, உடை, இழை தருவது முதலிய [மடமை] வழக்கத்தையும் எதிர்த் தார் ஆசிரியர். யாண்டும் என இரட்டுற மொழிந்தார். எவ்விடத்தும் என்றதால் அரச வாயிலாயும், நோய் வாயிலாயும் வருந்துன்பங்கள் என்றாராயிற்று.

சேர்ந்தார்க்கு யாண்டும் — சேர்ந்தார்க்கியாண்டும். குற்றியலுகரத்தின் முன் யகரம் வர அவ்வுகரம் இகரமாகத் திரிந்தது. ''யகரம் வரக் குறள் உத்திரி யிகரமும் அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய'' [நன்னூல்]

வள்ளுவர் உள்ளம் என்ற இக்குறளுரையின் மேல் எழுந்த ஆத்திக நாத்திகர் வினாவும் உரையாசிரியா விடையும் வருமாறு :

ஆத்திகன் : வேண்டுதல் வேண்டாமை இலான் என்பதற்கு ஒரு பொருளை விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன் எனப் பரிமேலழகர் கூறியபடி பொருள் கொண்டால் வரும் இழுக்கு என்ன?

உரை ஆசிரியர் : ஒரு பொருளை விரும்புவோன் அதே பொருளை விரும்பாமலும் விடுவான் என்பதோ, ஒரு பொருளை வெறுப்பவன் அதே பொருளை விரும்புவான் என்பதோ எவ்வாறு பொருந்தும்? எனவே பரிமேலழகர் பொருள் இழுக்குடையது.

நாத்திகன் : வேண்டுதல் வேண்டாமை இலான் என்றதும் **அறிவைத்தானே?**

உரை ஆசிரியர் : வேறென்ன? அறிவுதான் பிறரிடமிருந்து ஒன்றை விரும்பாதது. அப்பிறர் ஒன்று தராமை பற்றி அவரை வெறுக்காதது.

ஆத்திகன் : அடி சேர்தல் என்பதும் தத்துவ உணர்வு பெறுவதுதானோ?

உ. ஆசிரியர் : ஆம்.

ஆத்திகன் : இடும்பை என்பதற்குப் பரிமேலழகர் பிறவித் துன்பம் என்று பொருள் கூறினார். அவ்வாறு கூறுவதால் வரும் இழுக்கு என்ன?

உ. ஆசிரியர் : பிறவித் துன்பம் என்று பொருள் கூறினால் மறுபிறப்பை ஒத்துக் கொண்டதாகும். அது வள்ளுவர் உள்ளமன்று.

இடும்பை எங்கெங்கு இருந்து உண்டாகும் என்னில்—இயற்கையின் மோதுதலாலும், ஒழுக்கக் கேட்டினாலும், தன் தந்தை தாய்மாரின் ஒழுக்கக் கேட்டினாலும் வரும். எவ்வகைத் துன்பமும் அறிவு பெற்றானை அண்டுவதில்லை என்பதும் இங்கு அறிந்து வைக்க.

—(குயில் 22-12-59)

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(பி.மா) இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு
இருள்சேர் இருவினையும் சேரா.

பொருள் : இறைவன்— எங்கணும் இறைந்தவனாகிய பகவனின், பொருள்சேர்—உண்மையான, புகழ் புரிந்தார் மாட்டு—புகழை விரும்பிச் சார்ந்தாரிடத்தில், இருள்—அறியாமையானது, சேர்—சேர்க்கின்ற, இருவினையும்—நல்ல செயல் எனப்படுவதும் தீயசெயல் எனப்படுவதும், சேரா—சேரமாட்டா.

கருத்து : மெய்யுணர்வை நாடுவாரிடத்தில் அம்மெய்

யுணர்வு பெறுதலாகிய நிலையான இன்பத்துக்குக் காரண மாகிய செயலன்றி மற்றுள்ள பொருள் சேர்த்தல் முதலிய வற்றிற்குக் காரணமாகிய நல்வினை, தீவினைகள் நாட மாட்டா.

''செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்'' சேர்தல் என்னும் பேச்சுக்கே இடமின்றி ஒருவன் மெய்யுணர் வடைந்த நிலையே வீட்டு நிலை—அதாவது, நிலையான இன்பநிலை என்னும் எண்ணூல் முடிபு இங்கு எண்ணி மகிழத்தக்கது. மெய்யுணர்வொன்றே புகழுக்குரியது என்பார் புகழ்புரிந்தார் மாட்டு என்றார்.

இக்குறட்பா உரைமேல் எழும் ஆத்திக நாத்திகர் வினா வுக்கு உரையாசிரியர் தரும் விடை வருமாறு:

நாத்திகன் : இப்பாட்டின் பொருளை இன்னும் தெளிவு படுத்த முடியுமா?

உரையாசிரியர் : மனம் தன்னிலையில் நிற்பதே பொருள்: அதாவது அடையத்தக்கது! அது வெளியிற் குதிப்பது— அதாவது பொருள்களின் மேற் பற்றுக் கொண்டு திரிவது துன்பத்தையே செய்யும். அப்படிச் செல்வதென்பது நல்ல செயல் செய்வதாகவும் சொல்லப்படலாம். தீய செயல் செய்வதாகவும் சொல்லப்படலாம். இரண்டும் தீமையே பயக்கும். அறிவை அதாவது மெய்யுணர்வை அடைந்தவர் களிடம் இந்த இரண்டு வகைச் செயல்களும் (நல்வினை, தீவினை) இரா. அவர்களின் மனம் தன்னிலையிலேயே இருக்கும் என்பதுதான் இச்செய்யுளின் கருத்து.

ஆத்திகன் : மெய்யுணர்வு என்பது என்ன?

உரையாசிரியர் : உணர்வு என்பதற்கும் அறிவு என்பதற் கும் வேறுபாடு உண்டு.

உணர்வு மன அறிவு. அது நுண்பொருள் பற்றியது. அறிவு புலனறிவு. அது பருப்பொருள் பற்றியது.

உணர்வுடையான் உணர்ந்த நிலையும் செயல் செய்யும் நிலையும் ஒருங்கு உடையவன். இதைத்தான் "ஒடினேன் ஓடி உய்வதோர் பொருளால் உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்றார் ஆழ்வார்.

அறிவுடையான் அறிந்த நிலையும் செயல் செய்யும் நிலையும் ஒருங்கு உடையவன் அல்லன். அறிந்தான் அறிந்த படி செய்யு முன் ஐயந்திரிபுகளுக்கும், ஆராய்ச்சிக்கும் உள்ளாகிக் கிடப்பான்.

இங்குக் காட்டிய உணர்வைத் திருவள்ளுவர் மெய் யுணர்வு என்று கூறிச் சிறப்பித்தார். "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர் வில்லாதவர்க்கு" என்பதிற் காண்க.

இனி,

உணர்வை அறிவென்றே சொல்வதும் நூல்வழக்கே என்க.

—(குயில் 28-12-59)

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார்.

[பி] பொறி வாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்கம்
நெறி நின்றார் நீடு வாழ்வார்.

பொருள் : பொறி வாயில் ஐந்து — மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளை வாயிலாக உடைய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமெனும் ஐந்தும் பற்றி வரும் ஐந்து அவாவினையும், அவித்தான்— நீக்கினோனாகிய பகவனைப் பற்றிய, பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார்— மெய்யான ஒழுக்க நெறிக்கண் வழுவாமல் நின்றவர்கள், நீடு வாழ்வார்—எந்நாளும் இன்புற்று வாழ்வார்கள்.

கருத்து : அவா நீங்கிய நிலையானது மெய்யுணர்வு. அவ்

வுணர்வை அடைவதற்கு மெய்யான ஒழுக்க நெறி நிற்றல் வேண்டும்.

நீடு வாழ்தலாவது, அருள் மிகுதியால் தன்னலம் நீக்கி மக்கட்குச் செய்யும் தொண்டு நிறைவுறு மட்டும் துன்பின்றி வாழ்ந்திருத்தல். தீர் ஒழுக்கம்—வினைத் தொகைநிலைத் தொடர். ஐந்தவித்தான்—இரண்டனுருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. ஐந்தவித்தானைப் பற்றிய என விரிக்க. ஒழுக்க நெறியை இறைவனே இயற்றினான் என்ற பொருளில் கபிலரது பாட்டு என்பது போல் செய்யுட் கிழமைப் பொருளில் வந்தது என்பர் சிலர். அவரெல்லாம் உருவ வணக்கத்தை நாட்டில் வளர்த்து இன நலம் தேடும் கலகக் கொள்கையர்.

இக் குறட்பாவின் உரையின் மேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு :

ஆத்திகன் : ஐந்தவித்தான் என்றதும் அறிவைத்தானோ?
உரை ஆசிரியர் : மெய்யுணர்வு நிலைதான் ஐந்தவித்த நிலை.

நாத்திகன் : மெய்யொழுக்கம் என்றதால் பொய்யொழுக்கம் என்பதும் ஒன்று உண்டு போலும்! அஃதென்ன?

உரை ஆசிரியர் : நல்லொழுக்கம் தீயொழுக்கம் என இந் நூலாசிரியரே சொல்லியருளினார் அன்றோ! பொய் யொழுக்கம் :

> ''கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
> புன்மை தெரிவா ரகத்து''

என்ற குறட்பாவால் கொலைத் தொழிலுடைய ஆரியர் எவ்வாறு தம்மைக் காட்டிக் கொண்டாலும் அவர்கள் புலை வினையரே. இச்செய்தி புன்மை இது மேன்மை இது என்று நுண்ணிதின் அறிவோர் நெஞ்சத்ததன்றி அறியார்க்குத் தெரிய வழியில்லை என்று சுட்டினார் ஆயிற்று. இது போற்

பல உண்டு. இதனால் பொய்யொழுக்கம் இன்னதென்பதும் அந்நெறியே ஒழுகுவார் உளர் என்பதும் உண்டாம் அன்றோ? நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் என்பதும் காண்க.

நாத்திகன் : ஐந்தவித்தானுக்கே நீடு வாழ்தல் முடியும் என்றார் எனில் இல்லறத்தானுக்கு அது முடியாது என்றாரா ஆசிரியர்? இது பற்றி விளக்குக.

உரை ஆசிரியர் : ஐந்தவித்தலின் அதாவது பற்றின்றி வாழ்தலின் பயன்களில் சிறப்பான தொன்றைக் கூறினார். பற்றறுத்தல் என்றதொரு பண்பாடு துறவிக்கு மட்டுமே நலம் செய்யும் என்று அவர் கூறினாரல்லர். இல்லறத்தானுக்கும் அது தேவை என்பது மட்டுமன்று, இருந்தே தீர வேண்டும் என்றும் அறிய வேண்டும். யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன் என்றதை நோக்குக. அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை என்பதையும் எண்ணுக.

இல்லறத்தான் எந்தெந்தப் பொருளின் **ஆசையை** நீக்கிக் கொள்ளுகின்றானோ, அந்தந்தப் பொருளைத் தேடுதலால் நேரும் துன்பம் இல்லாதொழியும். இஃ துணர்த்துதற்கே இல்லறமே இன்பமாம் என்று குறித்தார். எனவே இல்லறத்தானும் பற்றறுக்க வேண்டும்; அதனால் அவனும் பயன் பெறுவான்—நீடு வாழ்வான் என்க.

—(குயில் 5-1-60)

தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

[பி. மா] மனக்கவலை தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மாற்றல் அரிது.

பொருள் : மனக்கவலை — மனத்துன்பத்தை, தனக்கு உவமை இல்லாதான்—தனக்கு நிகர் இல்லாத பகவனின்

தாள் சேர்ந்தார்க்கு அல்லால்—அடியடைந்தவர்க்கு அல்லா மல் மற்றவர்க்கு, மாற்றல் அரிது—தீர்த்தல் முடியாது.

கருத்து : உவமை சொல்ல முடியாத மெய்யுணர்வு பெற் றார்க்கன்றி மனக்கவலை தீராது. ஒரு பொருளுக்கு உவமை யாக அப்பொருளினும் சிறந்த ஒன்றையே சொல்ல வேண்டும். மெய்யுணர்வினும் சிறந்தது இல்லையாதலின் தனக்குவமை இல்லாதான் என்றார். அரிது இன்மைப் பொருட்டு. உவமை உவத்தற்றன்மை, உவமை பொருளுக்கு ஆகுபெயர்.

இச் செய்யுள் உரையின் மேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு :

நாத்திகன் : அறிவு அல்லது உணர்வு மெய்யுணர்வுக்கு உவமை சொல்ல முடியாதா? அவ்வாறாயின் அது கடவுளா?

உரை ஆசிரியர் : மாந்தர் பெறத்தக்கது மெய்யுணர்வு. அதாவது அறிவு என்று வள்ளுவர் கூறியபடி கூறினேன். இதில் கடவுள் பற்றிய செய்தியே எழவில்லை. மாந்தர் பெறத்தக்கது மெய்யுணர்வு என்றேன். அந்த மெய்யுணர் வைத்தான் தனக்குவமை இல்லாதான் என்பது போன்ற வகையில் சொல்லிப் பாடல் வழக்கம் செய்தார் என் கின்றேன். இது கேட்டும், அப்படியானால் கடவுளா இப்படி என்றால் கடவுளா என்று கூறி உன் மனத்தைக் குழப்பிக் கொள்ளுவதால் என்ன பயன்? மெய்யுணர்வுக்கு நிகராக மற்றொன்றைச் சொல்ல முடியாது என்றுதான் பொருள் கூறினேன். இதுதான் வள்ளுவர் உள்ளமும். உவமை சொல்ல முடியாதது மெய்யுணர்வு என்றால் அது கடவுளா என்று கேட்கின்றாய். இது பிழையான கேள்வியாகும்.

ஆத்திகன்: தனக்குவமை இல்லாதான் என்று வள்ளுவர் ஓர் உருவத்தைக் கூறினார் அல்லவா?

உரை ஆசிரியர் : இல்லை. தனக்குவமை இல்லாத அறிவு மெய்யுணர்வு என்பதைப் பாவாணர் அவ்வாறு கூறுவது மரபு என்பர்.

இன்னொன்று : தனக்குவமை இல்லாதான் ஒருவனின் உருவம் ஒன்று இருக்கவே முடியாது. எப்போது ஒன்று உருவம் பெற்றதோ அப்போதே அது உவமை சொல்லப் படும் பொருளாகி விடும். மெய்யுணர்வுக்கு அப்படியில்லை. உவமை சொல்ல முடியாதது அது.

தாள் எனில்?

உரை ஆசிரியர் : தன்மை! மெய்யுணர்வின் தன்மை [தத்து வம்] உணர்ந்தவிடமே பெறத்தக்கது பெற்றதாகும். மெய் யுணர்வு பெற்ற நிலையில் எந்த மனக்கவலையும் இல்லா தொழியும் என்பது இதன் பொருள். தாள் ஒருவனின் கால் அன்று. தாள், அடி இவை தத்துவம், தன்மை என்னும் பொருளுடையவை.

—(குயில் 12-1-60)

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

[பி. மா]. *பிற ஆழி நீந்தல் அறம் ஆழி அந்தணன்*
தாள் சேர்ந்தார்க்கு அல்லால் அரிது.

பொருள் : பிற ஆழி நீந்தல் — அறமல்லாத மறத்தின் பயனாகிய துன்பக்கடலை நீந்திக் கரையேறுதல் என்பது, அறம் ஆழி — அறத்தின் பயனான இன்பக் கடலாகிய, அந்தணன்—உயிர்களிடத்து அருளுடையானாகிய பகவனு டைய, தாள் —அடிகளை, சேர்ந்தார்க்கு அல்லால்—சேர்ந்த வர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு, அரிது—அரிதாகும். [முடியா தென்றபடி]

கருத்து : மெய்யுணர்வு அறக்கடல். அதனைப் பற்றித் துன்பக்கடலைக் கடத்தல் வேண்டும்.

அறம், அதன் பயனாகிய இன்பத்தைக் குறித்தது—ஆகு பெயர். மேலே அறம் என்றதால் அடுத்து வந்த பிற, அற மல்லாத மறத்தின் பயனாகிய துன்பம் எனப் பொருள் கொள்ளப்பட்டது. இதுவும் ஆகுபெயர். அந்தணன்—அம் தண்மை என்னும் சொற்றொடர் அன் இறுதி பெற்றது. அம் தண்மை என்பது அழகிய தட்பம் எனப் பொருள் தந்து அருளைக் குறித்தது. அந்தணன் என்பதற்கு மறை யின் அந்தத்தை அணவுவோன் எனத் தம் கலகக் கொள்கைக் கேற்றவாறு பொருள் கூறிப் பொய்ப்பர். அத் தன்மையுடை யோர் அந்தண் கூடல், அந்தண் பாதிரி, அந்தண் காவிரி என வருவன கண்டு தெளிந்து அடங்க வேண்டும். அந் தண்மை யுடையதெனில் பொருந்துமோ எனிற் பொருந் தும். அருள் என்பதே உணர்வின் பயனன்றோ? இன்பக் கடல் என்று மெய்யுணர்வைக் கூறலாமோ எனில் கூறலாம், மெய்யுணர்வுதான் இன்பமாதலால். ஆழி—ஆழ்ந்தது. காரணப் பெயர்.

இச் செய்யுளின் உரைமேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரையாசிரியர் விடையும வருமாறு:-

நாத்திகன் : அறவாழி அந்தணன் என்று, மெய்யுணர்வைக் கூறுவதன் மூலம் தென்னாட்டுப் பார்ப்பனர்க்கு உயர்வு தந்து விடுகின்றாரா வள்ளுவர்?

உரை ஆசிரியர் : இல்லை. அவ்வாறு கூறி இங்குள்ள பார்ப்பனரின் வாயை அடக்குகின்றார் திருவள்ளுவர். வேறென்ன? அந்தணன் என்ற பெயர் மெய்யுணர்வுக்கே— உயர்ந்த பொருளுக்கே பொருந்தும். அருளில்லாத பார்ப் பனர்க்குச் சிறிதும் பொருந்தாது என்பதையல்லவா வள்ளுவர் சொல்லாமற் சொன்னார்?

ஆத்திகன் : அறவாழி அந்தணன் என்று சொன்னதால் வள்ளுவர் கடவுளுக்கு உருவம் காட்டினார் அன்றோ?

உரை ஆசிரியர் : கடவுளைப் பற்றி இங்குப் பேச்சே

யில்லை. வள்ளுவர் உள்ளங்கண்டவர்கள் இதை நன்கு அறிவார்கள். அறவாழி— இன்பக்கடல், அந்தணன்—அருளுடைய மெய்யுணர்வு. இதில் கடவுள் முழக்கம் எள்ளளவும் இல்லாமை உணர்க.

ஆத்திகன் : இன்பக் கடலாகிய அருளுடைய மெய்யுணர்வு என்று பொருள்படுகின்றதால் அது பொருந்தாதன்றோ?

உரை ஆசிரியர் : ஏன் பொருந்தாது? மெய்யுணர்வு இன்பக்கடல்தான். அது அருளுடையதுதான். அறிவில்லாத ஒன்றில் இன்பத்தையும் அருளையும் காண முடியுமோ?

நாத்திகன் : அறவாழி என்பதற்குத் தருமசக்கரம் என்று பொருள் கொள்ளுகின்றார்களே சிலர்?

உரை ஆசிரியர் : அருக சமயத்தார் ஆழி என்பதைச் சக்கரம் என்று கூறி இழுக்கடைகின்றார்கள். ஏன்? அறவாழி என்றால் தருமசக்கரம் என்பவர் பிற ஆழி என்பதற்கு என்ன பொருள் கூறுவார்? மேலும் நீந்துவர் என்று வள்ளுவர் சொல்லி வைத்தார். நீந்தப்படுவது கடலா?— அல்லது சக்கரமா?—கடல் தானே?

—(குயில் 26-1-60)

கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

[பி. மா] எண் குணத்தான் தாளை வணங்காத் தலை
கோள் இல் பொறியின் குணம் இல ஏ.

பொருள் : எண்— மக்கள் சிறப்பெண எண்ணுகின்ற, குணத்தான்—குணங்களையுடைய பகவனின், தாளை— அடியை, வணங்காத் தலை—வணங்காவிடத்து, கோள் இல் —சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றவற்றில் தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்ளமுடியாத, பொறியின்—மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகளைப் போல,

குணம் இல—ஒருவனுக்கமைந்த மன அறிவாகிய உணர்வும் பயன்படல் இல்லை.

கருத்து : எப்பொருட்கும் மேற்பொருள் என்று மெய் யுணர்வை உணராவிடத்து மற்ற ஐயுணர்விருந்தும் பயனில்லை.

வணங்கல்—தன்னினும் உயர்ந்த பொருளை உயர்ந்த தென்று கொள்ளுதல். வணங்காத் தலை என்பது வினை எச்சம், ''ஈதலியையாக் கடை'' [குறள்] என்பது போல. அறிவு வேறு, உணர்வு வேறு. அறிவு—பருப்பொருள் பற்றி யது, உணர்வு—நுண் பொருள் பற்றியது. அறிவு ஐந்தும் பொறிகள் ஐந்தினையும் வாயிலாக உடையன. உணர்வு—மனத்தை வாயிலாக உடையது.

வணங்காத் தலை என்பதற்கு வணங்காததாகிய தலை என்று பொருள் கொள்வாருமுளர். அவர் அறியார். மெய்யும் வாயும் கண்ணும் மூக்கும் காதும் பயனற்றுப் போகையில் தலை மட்டும் வாழுமோ? இனி எண்குணத் தான் என்பதற்கு எட்டுக் குணத்தான் என்று பொருள் கூறி, இது சைவர் நூலிற் கண்டது என்றும் கூறுவர். சமயக் கணக்கர் மதிவழி கூறாத வள்ளுவர் சைவக் கருத்தை எடுத்தாள்வாரா? அன்றியும் உருவம் ஒன்றுக்குக் குணங்கள் இத்தனை என்றும் வகுப்பரோ?

இவ்வுரையின் மேல் எழும் ஆத்திக, நாத்திகர் வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன் : குணம் இல அதாவது பயன் இல்லை என்றீர் கள்! எப்போது?

ஆசிரியர் : எண் குணத்தான் தாளை வணங்காத போது.

ஆத்திகன் : எது போல?

ஆசிரியர் : கெட்டுப் போன பொறிகள் போல. பொறியின் என்பதில் இன் ஐந்தனுருபு. ஒப்புப் பொருள்.

ஆத்திகன் : எண் குணத்தான் என்றது சிவபெருமானை அல்லவா?

ஆசிரியர் : சிவபெருமான், ஐயப்பன் முதலிய உருவ வணக்கத்தை எதிர்ப்பவர் வள்ளுவர். எண் குணம் என்பது வினைத் தொகைநிலைத்தொடர். எண்ணும் எண்ணிய எண்ணுகின்ற என முக்காலத்தும் விரிவது. எண் என்பது எண் குணம் எட்டுக் குணமன்று.

நாத்திகன் : சிவபெருமானை வள்ளுவர் ஆதரித்தார் என்று காட்ட ஆத்திகர் முயல்வது முட்டாள் தனந்தானே?

ஆசிரியர் : ஆம் ஆம் ஆம். உங்கட்கு அண்ணன்மார் அவர்கள்.

நாத்திகன் : அப்படியானால் நாங்களும் முட்டாள்கள் தாமோ? கடவுள் உண்டு என்பாரை எதிர்ப்பவர்களாகிய நாங்களுமா முட்டாள்கள்?

ஆசிரியர் : உண்டு என்றும் இல்லை என்றும் சொல்லப் படுவது எது? கடவுள்தானே! எனவே இரு சார்பினரும் கடவுள் எனும் ஒன்றை வைத்துத்தாமே கணக்குப் போடு கின்றார்கள்!

ஆத்திகன் : திருவள்ளுவர்?

ஆசிரியர் : அந்தத் தெருப்பக்கம் கூட அடி வைக்கவில்லை. மக்கள் பெறத் தக்கது அறிவு; அதாவது உணர்வு.

—(குயில் 2-2-60)

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடிசேரா தார்.

[பி. மா]

இறைவன் அடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்தார்.

[இறைவன் அடி சேர்ந்தார்] பிறவிப் பெருங்கடல் நீந்துவர்.

பொருள் : இறைவன்—எங்கும் நிறைந்துள்ள பகவனின், அடி சேராதார்—அடியை எக்காலத்தும் எண்ணாதார், பிறவிப் பெருங்கடல் நீந்தார்—பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கரை சேரமாட்டார்கள். சேர்ந்தார்—இறைவன் அடியை எக்காலும் எண்ணுகின்றவர், நீந்துவர்—பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரையேறுவார்கள்.

கருத்து : மனத்தை ஒருவழிப்படுத்தினார் துன்புறுதல் இல்லை.

நீந்தார் என்பதனோடு பிறவிப் பெருங்கடல் என்ற தொடர் சேர்க்கப்பட்டது. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்பதற்குத் தக இறைவனடி சேர்ந்தார் என்பது வருவிக்கப் பட்டது. ஈண்டுப் பிறவி என்றது மாண்டு பிறப்பதையன்று. நொடிதோறும் மிகப் பலவாக வேறுபட்டு வரும் மனக் குறிப்பையே. இவ்வாறு புத்தரும் கூறுகிறார். அதைக் கணிகக் கணக்கு என்பர். முற்பிறப்பும் மறு பிறப்பும் கூறுவோர் சில சமயக் கணக்கர்தாமேயன்றி எல்லாச் சமயத்தார்க்கும் எல்லா அறிஞர்கட்டும் அது ஒப்பமுடிந்த தன்று. வள்ளுவர் எம்மதத்தையும் சார்ந்தவர் அல்லர் என்பதை மறத்தல் கூடாது.

இவ்வதிகாரத்தில் எல்லாம் ஆதியினின்றே தோன்றின என்றும் உலக மக்கள் முதல்வனாகிய பகவனை—மெய் யுணர்வை அடைந்து நீடு வாழ வேண்டும் என்றும் கூறினார். ஆயினும் உலகின் தோற்றத்தையே கூறினார். தோன்றிய உலகு பெறத் தக்க பேற்றையும் இன்றியமையாமை கருதி உடன் கூறினார் என்க.

இக்குறட்பாவின் உரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரை ஆசிரியர் விடையும் :

ஆத்திகன் : பிறவி என்பதற்கு நீவிர் சொல்லும் பொருள் புதுமையானது அல்லவா?

ஆசிரியர் : உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்கு நோக்காடு என்பதுண்டு. உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்கு மட்டுமன்று பலர்க்கும் புதுமையாகத்தான் தோன்றும். பிறப்பென்னும் பேதமை என்றவிடத்து பிறப்பு என்றதற்கு என்ன பொருள்? பிறப்பு என்னும் 'பேதமை' என்றதனால் பிறப்பு என்பது மனம் பற்றியது அல்லவா? அவ்வாறில்லாவிட்டால் பிறப்பாகிய பேதமையை என்பாரா? குழந்தை தாய் வயிற்றினின்று பிறக்கும் பிறப்புக்குப் பேதமை என்று கூறுவாரா? கூறினார் என்றால் பிறப்பு என்பதற்கு வேறு பொருள் உண்டு என்று தோன்ற வில்லையா? இனிப் "பிறப்பு என்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னும் செம் பொருள் காண்பது அறிவு" என்பதற்கு மனம் தன்னிலையில் நில்லாமல் கணந்தோறும் பொருட்களின் மேல் செல்வதாகிய பிறத்தலாகிய மனப் பிறப்பு ஆகிய பேதைமை நீங்கினால் சிறப்பு என்று சொல்வதோர் செம் பொருளாகிய அறிவை அடைவதே அறிவாகும் என்பதாம்.

அறிவை அறிவது பொருள் என்றார் அருணகிரியாரும். எனவே பிறவி என்பதற்கு நொடிதோறும் மிகப் பலவாக வேறுபட்டு வரும் மனக்குறிப்பு என்று நாம் பொருள் கூறியது உண்மைப் பொருள் கூறியதேயாகும். அது வள்ளுவர் உள்ளமேயாகும். இறைவனடி சேர்ந்தார்க்கு பிறவி யில்லை என்பது இக்குறட்பாவின் கருத்து. பிறவியில்லை— மனக் கோட்டம் இல்லாதொழியும். இவ்வாறாகிய மனம் பொருள்கள் மேற்செல்லுவது ஒரு நாளைக்கு ஒரு முறை யல்ல— ஒரு கணத்துக்குப் பன்முறை. ஆதலால் பிறவிப் பெருங்கடல் என்றார்.

நாத்திகன் : இறைவன் என்று கூறுவது கடவுளை அல்லவா?

ஆசிரியர் : இறைவன்— இறைந்தவன்— எவ்வுயிரிலும் பரவியவன். அதாவது அறிவு. இதைக் கடவுளுக்கு இட்டுக் கூறினார்கள் என்றால் இறைவன் கடவுளாகி விடமாட்டார்

என்க. இறைவன் என்று மன்னனுக்கும் சொல்வதுண்டு. தன் அதிகாரம் மக்களிடம் இறைந்து பரவி நிற்றலால்.

நாத்திகன் : நீந்துதல் என்ன?

ஆசிரியர் : பலவாகிய மனக்குறிப்புகளைக் கடல் என்றதற்கு ஏற்ப நீந்துதல் என்று சொன்னார்.

ஆத்திகன் : புத்தர் மறுபிறப்பு இல்லை என்றாரா?

ஆசிரியர் : இல்லை என்றுதான் சொன்னார்.

ஆத்திகன் : பிறப்பு ஒழிய வேண்டும் என்று சொன்னாரே?

ஆசிரியர் : அவர் பிறப்பு ஒழிய வேண்டும் என்றது வேறு பொருளில். மக்களின் துன்பம் ஒழிய வேண்டுமானால் மக்கள் எல்லாரும் பிறவாமல் இருக்க வேண்டும். அதாவது மனிதப் பூண்டே வேரற்றுப் போக வேண்டும் என்றார்.

ஆத்திகன் : ஐயையோ, எல்லாரும் செத்துவிட்டால் இவ்வுலகம் என்ன ஆவது?

ஆசிரியர் : இன்ப நிலை எய்தும்.

ஆத்திகன் : மக்கள் ஒருங்கே தொலைவதும் இன்பமா?

ஆசிரியர் : வேறென்ன? எண்ணிப்பார்க்க. பதறவேண்டாம். நீ ஒரு நாளிரவு தூக்கம் வராமல் துன்புற்றிருந்தாய். அது துன்பமானது என்று நீயே சொன்னாய். நீ ஒரு நாள் நன்றாகத் தூங்கினாய். அடடா நான் இரவு இன்பமாகத் தூங்கினேன் என்றாய். சில மணி நேரம் அயர்ந்து உலகத் துன்பங்களில் சேராமல் தூங்கியதே இன்பம் என்ற நீ நூறு கோடி ஆண்டுகள் அயர்ந்து எத்தொல்லையுமின்றித் தூங்குவது பேரின்பம் என்று சொல்லமாட்டாயா?

—(குயில் 16-2-60)

அதிகாரம் 2 : வான் சிறப்பு

மழையினது சிறப்புக் கூறுவது. வான் மேலிடம்—அங்குள்ள மழைக்காயிற்று. ஆகுபெயர். மழை என்பது புனலே. புனல் பற்றிக் கூறுதல் பொதுவாகக் கூறுதலாம். அப்புனல், மேற்சென்ற வழி வாழ்வார்க்குப் பயன்படுமாறு கூறுதல் அதன் சிறப்புக் கூறுவது எனப்பட்டது. மேலதிகாரத்தில் உலகின் தோற்றம் கூறினார். இவ்வதிகாரத்தில் தோன்றிய உலகு அற்றொழியாது நிலை நிறுத்தும் மழைச் சிறப்புக் கூறினார் என அறிக.

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

[பி. மா.] வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்று உணரல் பாற்று.

பொருள் : வான்—மழையானது, நின்று—நிலையாக நின்று பொழிந்து வர அதனால், உலகம்—உலகின் உயிர்கள், வழங்கி வருதலால்—நிலை பெற்று வருவதனாலே, தான்—அம் மழையானது, அமிழ்தம் என்று—அமிழ்து என்று, உணரல்—உணருதற்குரிய, பாற்று—பான்மையைக் கொண்டிருக்கிறது.

கருத்து : மழை, அமிழ்து என்னுந் தன் பெயருக்கேற்ப உலகை நிலைபெறுவிக்கிறது.

நிற்க என்னும் செயவெனெச்சம் நின்று என செய்தெனெச்சமாகத் திரிந்தது. இப்பாட்டால் ஆசிரியர் மழையே அமிழ்து என்னும் உண்மையை வற்புறுத்தினார். அமிழ்தமே மழை என்றிருக்கவும் அதை வற்புறுத்திக் கூறுவானேன் எனில் அம்ருதம் என்ற வடசொல்லாற் சொல்லப்படுவதே அமிழ்தென்றும், அதுவே சாவா மருந்தென்றும் மக்க

ளிடைப் பரப்பப்பட்டுள்ள புராணக் கொள்கையை மாற்றி உண்மையை நாட்டவே என்க. அமிழ்து அமிழ்-து என்ற இரு சொற்களால் அமைந்த வினைத் தொகைநிலைத் தொடர். அமிழ்—அமிழ்கின்றது—உணவு. மேனின்றமிழ் கின்ற உணவு காரணப் பெயர்.

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகுக்கு அவனளி போல்
மேனின்று தான் சுரத்தலால்"

என்ற சிலப்பதிகார அடிகளாலும் மழை மேனின்று வரும் சிறப்பு குறிப்பிடுவதறிக.

இனி மழையே அமிழ்தாயின் ஈண்டு அமிழ்து என்னும் சொல்லாற் குறிப்பிடுவதில் சிறப்பென்ன வெனில், வெப்ப மானது முகக்கும் நிலையில் அந்நீர், முகில் என்றும், அம் முகில் நீரைக் கொண்டு நின்ற நிலையில் அந்நீர் கொண்டல் என்றும், அக்கொண்டல், மேற் சென்ற நிலையில் அந்நீர் வான் என்றும், அவ்வான் கருமையுற்ற நிலையில் அந்நீர் கார் என்றும் அக்கார் மழைக்கும் நிலையில் அந்நீர் மழை என்றும், அம்மழைதான் வாழ்வார்க்கு அமிழும் உணவாகி அமிழ்ந்து வரும் நிலையில் அமிழ்தென்றும் அவ்வமிழ்து நிலத்தை மருவும் நிலையில் மாரி என்றும் மற்றும் பற்பல நிலைகளில் அந்நீர் பற்பல பெயர் பெறினும் அவற்றில் அமிழ்து என்று கூறப்படும் நிலையே சிறப்பாதல் அறிக.

இப்பாட்டில் அமிழ்து, அமிழ்தம் என அம் சாரியை பெற்றது, குன்றம், மன்றம் என்பவற்றிற் போல. இன்னும் அமிழ்தம் என்பது அமுதம் எனவும் மருவி வழங்கும். அம்ருதம் என்பது வடசொல். அது அமிர்தம் அமுர்தம் எனப் பல்வாறு மருவி வரும். அம்ருதம், அமிழ்தம் என்ற தமிழ்ச் சொல்லினின்று இடையில் ஆக்கிக் கொண்டதெனிற் பொருந்துமேயன்றி உலகு தோன்றிய போது தோன்றிய மழையின் பெயராகிய அமிழ்தம் என்ற சொல் இடையிற்

றோன்றிய புராணத்தாற் சொல்லப்படும் அம்ருதத்தினின்று தோன்றியது எனல் பொருந்துவதாகாதென்றுணர்க.

அமிழ்து—சாவா மருந்து, அஃது சாவாமைக்கே அடிப்படையானது. அம்ருதம் அவ்வாறன்று: பகைவனின் வாளைத் தடுப்பதோர் பலகை போன்ற சாவைத் தடுப்பதோர் கருவி என்று கதையில் வரும் சொல். உலகுயிர்க்கெல்லாம் பயனளிப்பதன்றி அம்ருதம் தேவர்க்குப் பயன்படுவதாக இடைக்காலத்திற் சொல்லப்படுவது. அமிழ்து என்ற சொல்லாற் குறிக்கப்படும் பொருள் இதோ என்று [மழையை] இன்றும் காட்டமுடியும். அம்ருதம் என்ற சொல்லாற் குறிக்கப்படுவதான புராணம் கூறும் பொருள் எங்கே?

இப்பாட்டின் உரை மேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு :

ஆத்திகன் : கடவுள் எல்லாவற்றையும் படைத்தார்—மழையைப் படைத்தார். அந்த மழையைப் பெய்ய வைத்து உயிர்களைக் காக்கின்றார் என்பதற்கு மாறாகத் திருவள்ளுவர் மழை உயிர்கள் அற்று ஒழியாமல் காக்கின்றது என்றது பிழையல்லவா?

உ. ஆசிரியர் : நீ சொல்லுகிறபடி பார்த்தாலும் மழை உயிர்களைக் காக்கின்றது என்பதில் பிழை ஒன்றுமில்லையே. நீ என்ன எண்ணுகின்றாய் என்றால், கடவுளால் படைக்கப்பட்ட மழையைக் கொண்டு கடவுள் உலகைக் காக்கின்றார் என்று திருவள்ளுவர் சொல்லியிருக்க வேண்டும் என்பதுதான். கடவுள் இந்த உலகையும் மற்றுமுள்ள உலகங்களையும் படைத்தார் என்பது உனக்குத் தெரியும். அது மட்டுமா? எல்லா உலகங்களிலும் உள்ள எல்லாவற்றையும் படைத்தார் கடவுள் என்பதும் உனக்குத் தெரியும். மழையையும் கடவுள் படைத்தார் என்பதும் உனக்குத் தெரியும். அந்தக்

கடவுள் வைகுந்தத்தில் உட்கார்ந்திருக்கிறாரா, சிவபுரத்தில் உட்கார்ந்திருக்கிறாரா என்பதும் உனக்குத் தெரியும். அதே கடவுள் தெருக்கள் தோறும் உள்ள கோயில்களில் என்ன உருவத்தோடு எத்தனை மனைவி மக்களோடு உட்கார்ந்து கொண்டு என்னென்ன காரியங்களை எவரெவர்களைக் கொண்டு எப்படி எப்படிச் செய்து வருகிறார் என்பவை உனக்குத் தெரியும். ஆனால் உன்னிடமுள்ள வீரத்தனத்தையும் காட்டுமிராண்டித் தனத்தையும் திருவள்ளுவரிடத்திலேயும் நாம் எதிர்பார்க்க முடியுமா? மழை பெய்கின்றது, உயிர்கள் வாழ்கின்றன என்பதை—கேள்விக்கு இடமில்லாமல் அறிவுக்குப் பொருத்தமாகத் திருவள்ளுவர் சொல்லத் தான் தெரிந்து கொண்டிருக்கிறார்.

ஆத்திகன் : அப்படியானால் கடவுள் இல்லை என்பது வள்ளுவர் கருத்தா?

உ. ஆசிரியர் : இந்தக் கேள்விக்கு விடை சொல்லும்படி வள்ளுவர் நமக்கு எதையும் சொல்லவில்லை.

ஆத்திகன் : உலக மக்கள் அடையத் தக்கவை இன்னவை என விளக்க வேண்டாமா?

உ. ஆசிரியர் : ஆம்! அடையத் தக்கது அறிவு என்று அவர் முழங்கிய முழக்கத்தின் பெயர்தான் திருக்குறள்.

நாத்திகன் : அப்படியானால் மழையைக் கடவுள் என்கின்றாரா வள்ளுவர்?

உ. ஆசிரியர் : உன் உள்ளத்தில் படிந்துள்ள கடவுள் என்ற ஒரு பெயர் திருவள்ளுவர் உள்ளக்கடலில் எவ்விடத்திலும் தட்டுப்படவில்லை. மக்கள் உயிர் வாழ்க்கைக்கு மழை மிக்க பயன்பட்டு வருகின்றது என்பதுதான் வள்ளுவர் கருத்து. மழை மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்றுதான் அவர் சொன்னார். அப்படிப்பட்ட உட் பொருளை கடவுள் என்பதோடு எந்த இடத்திலும் எப்

போதும் பிணைக்க எண்ணியதேயில்லை. அந்த வகையில் அவர் உன்போன்றவர் அல்லர்.

நாத்திகன் : அமிழ்து மழையா?

உ. ஆசிரியர் : வேறென்ன?

நாத்திகன் : அமிழ்து இனிமையாயிருக்கும்-- மழை அப்படி இருக்கின்றதா?

உ. ஆசிரியர் : அமிழ்தில் உள்ளதாக நீ சொல்லும் இனிமையைச் சுவைத்து அறிந்திருக்கிறாயா? அதை அளந்திருக்கிறாயா?

நாத்திகன் : தேனமுது, பாலமுது என்னும் போது அமுது இனிமை உடையது என்று தோன்றுகிறது. அந்த இனிமையின் அளவும் ஒருவாறு புலப்படுகின்றது. மழையில் அப்படி என்ன இருக்க முடியும்?

உ. ஆசிரியர் : தேன் என்றே சொல்லாமல் தேனமுது என்று ஏன் சொல்ல வேண்டும். பால் என்று சொல்லாமல் பாலமுது என்று ஏன் சொல்ல வேண்டும்! அப்படிச் சொல்ல வேண்டிய நிலை எப்படி ஏற்பட்டது? மழை அதாவது இனிமையானது. இனிமையான ஒரு தனிப்பொருள். கூட்டுக்கறியல்ல. இதுவும் இனிமையுடையதுதான் என்று தேனைக் காட்ட இனிமையுடைய அமுதையும் சேர்க்கின்றார்கள். மழையை அல்லாமல் அமுது ஒன்று தனியாக எங்கும் இல்லை. இனியும் இருக்கப் போவதும் எவ்விடத்துமில்லை.

—(குயில் 23-2-60)

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

[பி. மா.] துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி
துப்பார்க்கு துப்பு ஆயதூஉம் மழை.

பொருள் : துப்பார்க்கு—உண்பார்க் கெல்லாம், துப்பு ஆய —உயிர்த்துணையாகிய, துப்பு ஆக்கி—சோறு கறி முதலிய உணவுகளை உண்டாக்கி து—அவ்வுண்ணுதலையுடைய, பார்க்கு—உலகுக்கு, துப்பு ஆய தூஉம் மழை—தானே உண்ணு நீர் ஆகியும் உதவுவது மழையாம்.

கருத்து : உயிர்த்துணையாகிய உணவையாக்கி, உண்ணும் நீருமாகி உதவுவது மழை, து—முதனிலைத் தொழிற் பெயர் து பார் : துப்பார். இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகைநிலைத் தொடர். துவ்வினையுடைய பார் என விரியும். சோறு முதலியவைகளை ஆக்கினால் மட்டும் அமையாது, உண்ணு நீரும் இன்றியமையாதது என்பார், துப்பாய தூஉம் மழை என்றார். துப்பாய தூஉம் உயிரள பெடை. பார் உலகின் உயிர்க்கு ஆகுபெயர். முன் உள்ள துப்பார்க்கு வினையாலணையும் பெயர்.

> அரக்கும் பவளமும் ஆயுதப் பொதுவும்
> துணையும் வலியும் பொலிவும் நெய்யும்
> அனுபவ 'மும்தூய் மையும் துப்பாகும்
> [பிங்கலந்தை 3656]

என்பதால் துப்பு என்ற சொல்லின் பொருள்கள் இத்தனை என்பது அறிக.

இவ்வுரையின் மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் ஆசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன் : மக்களுக்கு ஏற்படும் பயன் பற்றிப் பேசும் போதெல்லாம் கடவுள் நினைவை உண்டாக்க வேண்டும். இது நம் தமிழ்ச் சான்றோர் கையாண்டு வரும் முறை. இதற்கு முற்றிலும் மாறாக வள்ளுவர் நடக்கலாமா? மக்கட்கு மழை பெரும் பயன் விளைக்கின்றது என்று கூறு வதை விடக், கடவுள் மழை தந்து மக்களைக் காத்து வரு கின்றார் என்றால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

ஆசிரியர் : கடவுள் பற்றிய விளம்பரங்கள் குறைகின்றன என்பது உன் கருத்து. அதை எண்ணி எண்ணி இடர்ப்படு கின்றாய். விளம்பரம் இல்லையானால் கடவுள் இல்லா மல் போய் விடும் என்றும் கருதுகின்றாய். காரியம் தொடங்கும் போது கடவுள் பற்றி நினைக்க வேண்டும். நூலொன்று தொடங்கும் போது கடவுள் பற்றி நுவல வேண்டும். கட்டுரைகள் எழுதினால் முதலில் கடவுள் ஒருவர் உண்டு என்பது பற்றித்தான் எழுதவேண்டும். இதெல்லாம் கடவுள் என ஒரு பொருள் இல்லை என்பதை மனதில் வைத்துச் செய்யப்படும் முயற்சி என்று தோன்று கிறது. இருக்கும் பொருளைப் பற்றி இருக்கின்றது இருக் கின்றது என்ற முழக்கம் ஏன்? கடவுள் உண்டு என்பதில் ஆத்திகனுக்கு உள்ள ஐயப்பாடு நாத்திகனிடம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆத்திகனே, மழை முதலிய பொருள்களின் பயனை அறிதலில் ஆசையாயிரு! கடவுளை இழுத்து இழுத்துப் போடுவதால் பொருட்பற்றி அறிவ தோர் ஆற்றல் ஏற்படாது.

—(குயில் 15-3-60)

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

[பி. மா] விண் நின்று பொய்ப்பின் விரிநீர் வியன்
உலகத்து உண் இன்று பசி உடற்றும்.

பொருள் : விண்—மழையானது, நின்று—மிகுதியாக இருக் கவும் அது, பொய்ப்பின்—பொய்யாதபின், விரி நீர் வியன் உலகத்து—விரிந்த நீரையுடைய இந்த அகன்ற உலகத்தின் கண், உண் இன்று—உணவு இல்லா தொழியும் அதனால், பசி உடற்றும்—பசி நோய் துன்புறுத்தும்.

கருத்து : மழையின்றேல் பசி நோய் மிகும்.

விண்—மழை. ஆகுபெயர். விண் என்றாராயினும் விண்ணிற் பெரிதளவு உள்ள மழை முதலைக் கொள்வதால்,

நின்று செயவென் எச்சத்திரிபு. இவ்வுலகு விரிந்த நீரினை யுடைதாயினும் அஃது நிலையான பயன் தந்து நிற்பதன்று என்பார் விரிநீர் வியனுலகத்து உண்ணின்றுடற்றும் பசி என்றார். உலகத்து— அத்துச் சாரியை ஏழனுருபின் பொருள் தந்து நின்றது. உண்—முதனிலைத் தொழிற் பெயர். உணவுக்கு ஆகியது ஆகு பெயர்.

பசி வந்திடப் பத்தும் பறக்கும் என்பதால் பசி உடற்றும் என்று கூறி மழையின் இன்றியமையாமையை விளக்கினார் இப் பாட்டால்.

இக்குறட்பாவின் உரைமேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன் : விண் என்றது மழையை. நின்று என்றால் என்ன பொருள்?

உ. ஆசிரியர் : இருக்க என்பது பொருள். நின்று என்றது நிற்க என்றிருக்க வேண்டும். இவ்வாறு செய்த என் வினை யெச்சம் செய்து என் வினையெச்சமாகத் திரிவது வழக்கம்.

ஆத்திகன் : பொய்ப்பின் என்றால் என்ன பொருள்?

உ. ஆசிரியர் : இருக்கும் மழையை என்னிடம் கொஞ்சம் கூட இல்லை என்று பொய்க்குமானால்—என்று பொருள். இருப்பதை இல்லை எனல் பொய்யல்லவா?

ஆத்திகன் : இன்னொரு கேள்வி. வருந்த மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். அதுதான் விரிநீர் வியனுலக மாயிற்றே, அது மழை பெய்யாவிட்டால் பசித்துன்பத்தையா அடையும்?

உ. ஆசிரியர் : காவரிக்கரையில் அமைந்த ஓரூர் மழை இல்லையே மழையில்லையே என்று கழுதை போலக் கத்தியதை நீ கேட்டதில்லையா? ஏன்? விளைவில்லை; அதனால் நெல்லில்லை. அதனால் உணவு இல்லை. பசித்

துன்பம் பொறுக்க முடியவில்லை. விரி நீர் உலகமாக இருந் தாலும் மழையில்லாவிடில் அரோகராதான் என்று கூறி மழையின் இன்றியமையாமையை வற்புறுத்தினார்.

ஆத்திகன் : உண்ணின்று என்பதை உள்நின்று எனப் பிரித்து —பசியானது வயிற்றின் உள்ளே இருந்துகொண்டு துன் புறுத்தும் என்று பொருள் கொண்டால் என்ன?

உ. ஆசிரியர் : பசி என்பது வயிற்றின் நிலை வேறுபாடு. அப்படியிருக்க பசி வயிற்றுக்குள் ஒரு பக்கம் உட்கார்ந்து கொண்டு தொல்லைப் படுத்துவதென்பது எப்படி? அதை விட, மழையில்லா தொழியுமானால், உணவு இல்லா தொழியும், பசித்துன்பம் உண்டாகும் என்று கூறும் பொருள் நன்றாயில்லையா? உண் இன்று எனப் பிரிக்க, உண் என்பது உணவு என்றும் இன்று என்பது இல்லாதொழியும் என்றும் பொருள் கூறப்பட்டது.

நாத்திகன் : விண் என்ற சொல்லை வள்ளுவர் எடுத் தாண்டே இருக்கக் கூடாது. விண்ணை வைத்துத்தான் விண்ணவரை ஆக்கினார்கள். ஆத்திகர்கள் விண், இல்லாத பொருள். விண் என்பது மேலுலகம் என்று புளுகுகிறார்க ளென்பதும் காண்க. மேலிருப்பதால் மழையை விண் என்றார்கள்.

உ. ஆசிரியர் : ஐந்து பருப் பொருள்களில் ஒன்றான விண் என்பது தள்ளத் தக்கது அன்று. அது இங்கு மேல் என்று பொருள் படுவது கொண்டும் தள்ளிவிடுவதிற்கில்லை. நீ சொல்லலாம், மேல் என்பதும் கீழ் என்பதும் ஆராயும் போது ஒன்றாகத்தானே முடியும் என்று! உலகினும் பெரிய உள்ளத்தில் மேலும் கீழும் ஒன்றுதான். உலகளவுள்ள உள்ளத்தை வைத்தே இங்கு குடித்தனம் செய்கின்றோம் என்பதை நோக்குக.

—(குயில் 12-4-60)

ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன் றிக் கால்

[பி. மா] உழவர் புயல் என்னும் வாரி வளம்
குன்றிக்கால் ஏரின் உழாஅர்.

பொருள் : உழவர்—உழுவோர், புயல் என்னும் வாரி— மழை என்னும் அரிய வரவு, வளங் குன்றிக் கால்—பயன் குன்றிய இடத்து, ஏரின் உழா அர்— ஏர் கொண்டு உழுதலைச் செய்ய மாட்டார்.

கருத்து : மழையின்றேல் உழவு நடவாது.

உழாஅர்—உயிரளபெடை, குன்றியக்கால், குன்றிக்கால் என இடையகரம் குறைந்தது. வாரி—வார்தலின்முதனிலைப் பகுதிப் பொருள் இறுதி நிலை இகரம் பெற்றது. வாரி என்பதை வடசொல் என்று கூறுவாரும் உளர். அவர்,

''வார்தல், போகல், ஒழுகல் மூன்றும் நோவும்நெடுமை யும் செய்யும் பொருள் ''[தொல். உரி—21]

என்பதால் வாரி தூய தமிழ்ச் சொல்லாதல் அறியார்.

ஆத்திகரும் நாத்திகரும் இச்செய்யுள் உரையின் மேல் எழுப்பும் வினாவும் உரையாசியர் விடையும் வருமாறு:

ஆத்திகன் : அவனன்றி ஓரணுவும் அசையாதெனும் பெரிய ஆப்தர் மொழி ஒன்று கண்டாய் என்ற தமிழ்ச் சான்றோர் மொழிக்கு மரியாதை காட்டப்படவேண்டுமே என்பதுதான் என் கேள்வி.

உ. ஆசிரியர் : அது முட்டாள்தனமான கேள்வி என்பது தான் என் விடை.

நாத்திகன் : இவ்வுரையின் கருத்தால் மக்கள் ஆற்றல் குறைத்து எடை போடப் படுகிறது. என்ன? மழை இல்லா விட்டால் உழவு நடவாது என்றால், அண்டை அயலில் உள்ள ஏரி குளங்களிலுள்ள தண்ணீரை இறைத்துக் கொள்ள லாம் அன்றோ?

உரை ஆசிரியர் : மிக்க அறிவாளி! மழை இல்லையானால்

அண்டை அயலில் உள்ள ஏரியிலும் குளத்திலும் மட்டும் தண்ணீர் இருக்குமோ?

ஆத்திகன் : புயல் என்பதன் பொருள் என்ன?

உ. ஆசிரியர் : புய்த்தல் பிறவினை, புய்தல் தன்வினை. புய்தல்—ஓரிடத்தினின்று விரைவாகப் புடை பெயர்தல்—ஆகு பெயராய் மழையை உணர்த்திற்று. இது இழிவழக்காய் பிய்த்தல் என வழங்கும். புய் என்பதின் அடியாகப் புயல் தோன்றியது. புயல் எனினும் புய்த்தல் எனினும் ஒன்றே. மழையானது விரைந்து அடிக்கும் நிலையில் அதைப் புயல் என்று சொல்ல வேண்டும். புயல் இன்றியமையாச் சொல்.

நாத்திகன் : புயல் என்று கூறி அமையாது புயல் என்னும் வாரி என்றது ஏன்?

உ. ஆசிரியர் : விரைந்து அடிக்கும் மழையாயினும் அது வேண்டா இடத்துச் சிதறாமல் வேண்டும் வழி வருதலைக் குறிக்கவேண்டும் ஆதலின் புயலென்னும் வாரி என்றார்.

—(குயில் 10-5-60)

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

[பி. மா.] கெடுப்பதூஉம் மற்று ஆங்கே கெட்டார்க்குச் சார்வு ஆய் எடுப்பதூஉம் எல்லாம் மழை.

பொருள் : கெடுப்பதூஉம்-பெய்யாது உலகில் வாழ்வாரைக் கெடச் செய்வதும், மற்று ஆங்கே- அஃதன்றி அவ்விடத்து, கெட்டார்க்கு சார்வு ஆய்-அவ்வாறு கெட்டவர்க்குத் துணையாகிய, எடுப்பதூஉம்-பெய்து கைதூக்கி விடுவதும் ஆகிய, எல்லாம் மழை—அனைத்தும் மழை.

கருத்து : பெய்யாது கெடுப்பதும் பெய்து வாழ்விப்பதும் மழை பெய்யாவிடத்து மக்கள் கேடுறுவதும் பெய்த விடத்து நலமுறுவதும் ஆகிய மழையினதாற்றல் விளக்கியவாறு. கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் உயிரளபெடை

பெடைகள். மற்று வினைமாற்று. இயற்கையின் கொடையாகிய மழை மக்களுக்குத் தீமை செய்ய வேண்டும் என்றோ நன்மை செய்ய வேண்டும் என்றோ எண்ணிப் பெய்வதும் பெய்யாதொழிவதும் செய்யாது எனினும், மழையால் மக்கள் அடையும் நலம், தீது கருதி அதைக் கெடுப்பது எடுப்பது என்கின்றார் என்பது இங்கு அறிதல் வேண்டும்.

இவ்வுரை மீது எழும் ஆத்திக, நாத்திகர் கேட்டலும் உரை ஆசிரியர் கிளத்தலும் வருமாறு :

ஆத்திகர் : படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலும் உடையவர் கடவுள் ஒருவரே. இச்செய்யுளின்படி காத்தலும், அழித்தலும் மழையால் முடியும் என்றாகிறது. இவர் செய்துள்ள மற்றச் செய்யுளால் படைத்தலும் செய்கின்றது மழை! இது எவ்வாறு பொருந்தும்?

உ. ஆசிரியர் : மழை பெய்யாவிட்டால் புல்லும் முளையாது, மழை பெய்யாவிட்டால் மக்கட்குக் கேடு உண்டாகும். மழை பெய்தால் மக்கள் அடைந்த கேடு ஒழியும் என்பதில் கடவுள் பற்றிய மறுப்பு ஏதாகிலும் உண்டா? குற்றி நட்டுத் தடுக்கி விழுகின்றீரே.

நாத்திகர் : மழை கெடுக்கும் எடுக்கும் என்றுகூறி அறிவற்ற பொருளை அறிவுடைய பொருள் போல் கூறியது சரியா? அறிவில்லாத உருவங்களை அறிவுடையனவாகக் கூறுவது அறிவுக்குப் பொருந்தாத உருவ வணக்கத்தை ஆதரிப்பதாகாதா?

உ. ஆசிரியர் : ஆகாது. பேசாத ஒன்றைப் பேசுவது போலவும் வராத ஒன்றை வருவது போலவும் அறியாத ஒன்றை அறிந்தது போலவும் வைத்துச் செய்யுள் செய்வதென்பது கவிமரபு!

—(குயில் 31-5-60)

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

[பி. மா] பசுமைபுல். தலை விசும்பின் துளிவீழின் அல்லால் மற்று ஆங்கே காண்பு அரிது.

பொருள் : பசுமைபுல்தலை - பசும்புல்லின் தலையையும், விசும்பின் துளி வீழின் அல்லால்-மழையின் துளி மண்ணில் வீழ்ந்தாலல்லாது, மற்று-வேறு வகையால், ஆங்கே- அவ்விடத்து, காண்பு அரிது-காண முடியாது.

கருத்து : மழையின்றேல் ஓரறிவுயிராகிய பசும்புல்லும் உண்டாதல் இல்லை.

விசும்பு-மழை, ஆகுபெயர். மற்று-வினைமாற்று, தலையும் என வரவேண்டியது தலை என நின்றது. இழிவு சிறப்பு உம்மை தொக்கது. மக்கள் கெடுதலேயன்றி ஓரறிவுயிராகிய புல்லும் தலை யெடாது என்பார், பசும்புல் தலை காண்பரிது என்றார். ஓரறிவுயிரைக் குறித்தார் எனினும் ஈரறிவுயிர் முதலியவைகளையும் கொள்ள வேண்டும். பசுமை புல்-பசும்புல். பசுமையின் ஈறுகெட்டு இனமிக்கது. விசும்பின் ஐந்தாவதின் இன் உருபு நீங்கற் பொருளில் வந்தது. காண்பு தொழிற் பெயர். பு, தொழிற் பெயர் இறுதி நிலை. அரிது இன்மை குறித்தது,

இவ்வுரைமீது எழும் ஆத்திக நாத்திகர் கேட்டலும் உரை ஆசிரியர் கிளைத்தலும் வருமாறு :

ஆத்திகன் : விசும்பு மழையா?

உ. ஆசிரியர் : விசும்பு ஆகுபெயராய் மழையைக் குறிக்கும் என்று கூறியுள்ளேன்.

ஆத்திகன் : விண் என்பதும் மழைதான் எனப்பட்டது. எனவே மேலே மழைக்கு ஆதாரமானதோர் நீர் இருப்பு உண்டோ?

உ. ஆசிரியர் : உண்டு,

ஆத்திகன் : அது யாரால் உண்டாக்கப்பட்டது?

உ. ஆசிரியர் : ஒன்று உண்டு என்றால் அதை ஆக்கிய பொருள் ஒன்று இருக்கவேண்டும் என்பது உம் கருத்தா?

ஆத்திகன் : வேறென்ன?

உ. ஆசிரியர் : சரி, ஒரு பொருள் உண்டு என்றால் அதை ஆக்கிய ஒரு பொருள் இருக்கவேண்டும். ஆக்கிய பொருள் ஒன்று உண்டு என்றால் அதை ஆக்கிய பொருள் ஒன்று இருக்கவேண்டுமே! நீர் கேட்டதும் ஒரு கேள்வியா? உலகு என்றுமிருப்பது அவ்வுலகின் ஒரு பகுதி விண்.

ஆத்திகன் : விண் உலகின் ஒரு பகுதியா?

உ. ஆசிரியர் : ஆம்! உலகம் என்பது நீயிருக்கும் தரை மட்டுமன்று. அதைச் சுற்றியுள்ள வெளியும் இவ்வுலகைச் சேர்ந்ததே.

நாத்திகன் : பசும்புல் தலை என்றால், பசும்புல் முளைக்க ஆதாரமான பசும்புல் மூலம் என்பது பொருளல்லவா?

உ. ஆசிரியர் : அவ்வாறும் கொள்க.

—(குயில் 7-6-60)

நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

[பி. ம] எழிலி தடிந்து தான் நல்காது ஆகிவிடின்
நெடுமை கடலும் தன் நீர்மை குன்றும்.

பொருள் : எழிலி தான்—முகிலானது, தடிந்து—மின்னி, நல்காது ஆகிவிடின்—மழை தராதாகிவிட்டால், நெடுமை கடலும்—நீரான் மிக்க கடலும், தன் நீர்மை—தனது நீரின் மிகுதித் தன்மை, குன்றும்—குறையும்.

கருத்து : மழையின்றேல் பெருங்கடலும் தன் மிகுதித் தன்மை குறையும்,

நீர்மை—நீரின் தன்மை. அஃதாவது நீரினது மிகுதித் தன்மை. நீரின் இயல்பு குறைதலாவது, அதன் கண்ணுள்ள நீர் வாழுயிர்கள் பிறவாமையும், மணி முதலாயின படாமையுமாம் என்று பொருள் கூறுவாரும் உளர். அது பொருந்தாது. நீரின் தன்மை பற்றியே இங்குப் பேச்சே தவிர அதற்கு அப்பாற்பட்ட உயிர் முதலியன பற்றியன்று. நீர் மிகுதித் தன்மை குறையாவிடில், உயிர், மணி குறைதலில்லை என்பதையும் குறிக்கவே, நீரின் மிகுதி அளவில் குறையும் என்றார். தான்-அசை, தடிதல்—மின்னுதல். எழிலிக்கு இயற்கை அடையாய் நின்றது. கடலே நீர் முதன்மையன்று. கடலுக்கு நீர் முதன்மை மழை என்றதோர் உண்மையை இப்பாட்டால் விளக்கினார்.

இவ்வுரை மீது எழும் ஆத்திகர் நாத்திகர் கேட்டலும் உரையாசிரியர் கிளத்தலும் வருமாறு:

நாத்திகன் : கடலோ நெடிது, நிறையத் தண்ணீர் இருக்கின்றது. அப்படிப்பட்ட பெருநீரும், மழை பெய்யாவிட்டால், அளவிற்குறையும் என்பது இக் குறட்பாவின் கருத்து. மழை பெய்யாவிட்டால் கடல் நீரே இல்லாமற் போய்விடும் என வள்ளுவர் கருதினார். இது கொண்டு எண்ணினால், கடல்கட்கும் ஆதாரமாக விண்ணில் ஒரு பெரு வெள்ளம் இருக்கிறது என்றாகிறது. அதனால், நாம் வாழும் இந்த உலகம் பெரு வெள்ளத்தை வைத்திருக்கும் விண்ணால் வாழ்கின்றது என்றாகிறது. சில சமைய நூற்கள் விண்ணுலகு நாம் பெறத்தக்க பேறு, மண்ணுலகில் பிறந்ததன் பயன் விண்ணுலகை அடைவதே என்று கூறுவதில் உண்மையிருக்கின்றதாகக் கொள்ள வேண்டுமா?

உ. ஆசிரியர் : விண்ணுலகு என ஒன்றில்லை. அது ஆத்திகர் விட்ட கரடிதான். ஆனால், உலகுக்குச் சொந்தமான—உலகோர் பிரித்து எண்ணப்படாத ஒரு மண்டிலம் இருக்கிறது, அங்குக் கடலுக்காதாரமான வெள்ள இருப்பு

இருக்கலாம்— இருக்கின்றது. அப்படியிருந்தால், அதைத் தேடி வைத்திருப்பது விண்ணுலகா? இல்லை உலகந்தானே? ஆதலால், இல்லாத விண்ணுலகை மக்கள் பெறத்தக்கது என்பது பொய்யின்மேல் அடித்த ஆணி!

நாத்திகன் : அப்படி ஒரு வெள்ளக்காடு இருக்கத்தான் வேண்டும் என்பதற்கு ஆதாரம் என்ன? அந்த வெள்ளக் காட்டுக்குக் காரணம் கடவுள் என்பதை மறுப்பதெப்படி?

உ. ஆசிரியர் : நீர் கேட்ட இரண்டில் கடைசிக் கேள்விக்குப் பன்முறை பதில் சொல்லப் பட்டாய் விட்டது.

கடலுக்காதாரமான வெள்ளக்காடு உண்டு என்பதற்குத் திருவள்ளுவரின் இத் திருக்குறள் சான்று. மற்றொன்று எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்வுலகு, நீர், நெருப்பு, காற்று, மண், வெளி என்ற ஐந்து பருப் பொருள்களால் ஆனது. அவற்றில் நீர் என்னும் பருப்பொருள் கடல் மட்டு மல்ல; உம் வீட்டு அண்டாவில் நிறைந்துள்ள நீர் மட்டுமல்ல என்பதை நீவிர் உற்றுணர வேண்டும். கடலுக்கு அப்பாலாக வும் நீர் உண்டு என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

—(குயில் 14-4-60)

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(பி. மா.) வான் ஓர்க்கும் ஈண்டு வானம் வறக்குமேல் சிறப்பொடு பூசனை செல்லாது.

பொருள் : வான் ஓர்க்கும்-மேல் நோக்கி (மழை வரவை) ஆராயும், ஈண்டு-இவ்வுலக மக்கட்கு, வானம்-மழை, வறக்குமேல்-பெய்யாவிடில், சிறப்பொடு-விழாவுடன் கூடிய, பூசனை-பூசனையானது, செல்லாது-நடவாது.

கருத்து : மழையின்றேல் விழா முதலிய நடைபெற மாட்டா,

சிறப்பொடு பூசனை என்பதை, இக்காலத்தில், கல்லையும் செம்மையும் காட்டி மடமையையும், கலகத்தையும் வளர்த்து வரும் கோயில்கள் என்பவற்றில் நடைபெறும் விழாவுடன் கூடிய பூசனை என்று மக்கள் நினைக்கும் வண்ணம், நித்திய நைமித்தியங்கள் என்ற சொற்களைப் பயன்படுத்திக் காட்டுவார் பரிமேலழகர் தம் உரையில். சிறப்பொடு பூசனை என ஆசிரியர் சொன்னது எதை?

வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட
புன்தலை ஒள்வாள் புதல்வன்கண்டு—அன்புற்றுக்
கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு
வான்கெழு நாடு வர.

(தொ. புற. 5 மேற்கோள்)

மன்னன் புதல்வன் வாட் போரிட்டு மேம்பட்டான். அம் மேம்பாடு கண்டு மக்கள் அன்புற்றார், அதனால் அவனை நாடாளச் செய்தார். அப்போது நடக்கின்றதோர் விழா. விழா—சிறப்பு.

காப்பு நூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்
பூப்பலி பெய்து புகைகொளீஇ-மீப்படர்ந்த
காளை நடுகற் சிறப்பயர்ந்து கால் கொண்மின்
நாளை வரக்கடவ நாள்.

(தொ. புற. 5. மேற்கோள்)

தமிழ் மறவன் தனிநின்று போராடிப் பருவுடல் நீத்துப் புகழுடல் நிறுவினான். அவனுக்கு நடுகற் சிறப்பும் பூசனையும் செய்ய நாள் குறித்தார். அஃதோர் சிறப்பொடு பூசனை, பூசனை-தூய்மை செய்தல், பூசு முதனிலை, ஐ தொழிற்பெயர் இறுதி நிலை, அன் சாரியை.

அன்றுகொள் ஆபெயர்த் தாரமரில் வீழ்ந்தோற்கு
இன்று கொள் பல்லான் இனமெல்லாம்-குன்றாமல்

செய்ம்மினோ சீர்ப்பச் சிறப்பாகத் தீபங்கள்
வைம்மினோ பீடம் வகுத்து.

(தொ. புற. 5 மேற்கோள்)

இதுவும் அது.

மற்றும் பகைவரின் ஆனிரை கவர்ந்து மீண்ட மறவர் நடத்துவது முதலிய சிறப்பொடு பூசனையையே குறித்தது இச்செய்யுள். இதை மறைக்கும் எண்ணத்தோடு கல்லிலும் செம்பிலும் கடவுளைக் காட்டும் பொல்லார் நெறி குறித்த தாகப் புகல்வார் உரை, துகளுரையாம் என விடுக்க. உருவ வணக்கத்தைத் தூற்றுவாராகிய திருவள்ளுவர் அதைப் போற்றுவாரா? எண்ணிப் பார்க்க! வான் ஓர்த்தல்—மேல் நோக்கி (மழை பற்றி) ஆராய்தல் என்று பொருள் கூறப் பட்டது. ஓர்த்தல்—ஆராய்தல். ''ஓர்த்துள்ளம் உள்ளது உணரின்'' (குறள் 357) என இவ்வாசிரியரே கூறியமை காண்க.

ஓர்க்கும்—உம்மீற்றுப் பெயரெச்சம், நிகழ் காலத்தது.

வான் ஓர்த்தலாவது: வெள்ளி, கரும் பாம்பு, செம் பாம்பு, அறிஞன், ஆகிய கோள்களோடு மதி கூடினால் மழை உண்டாகும். ஆதலின் அக்கோள் நிலை நோக்கி ஆராய்தலாம்.

வைகாசித் திங்கள் மதிகுறைந்த நாலாம் நாள்
பெய்யுமே யாயிற் பெருமையாம்-பெய்யாக்கால்
ஏரி குளமும் எழிற்கிணறும் நீர்வற்றும்
பாரில் மழையில்லை பார்.

இது கருதியும் மேனோக்கி ஆய்வர். வானம்—மழை, ஆகுபெயர்.

இக் குறட்பாவின் உரைமேல் எழும் ஆத்திகர் நாத்திகர் வினாவும், உரையாசிரியர் விடையும் வருமாறு :

ஆத்திகர் : பூசனை என்பது பூஜா என்ற வடசொல்லின் சிதைவல்லவா?

உரையாசிரியர் : சொன்னவர் யார்?

ஆத்திகர் : வடசொற்காரர் சொல்கின்றார்கள்.

உரையாசிரியர் : யாரிடத்தில்?

ஆத்திகர் : என்னிடத்தில்.

உரையாசிரியர் : நீர் வடவரின் அடியார் என்பதைக் கருதித்தாமே?

ஆத்திகர் : தமிழர் என்று கருதியே.

உரையாசிரியர் : நீர் தமிழர் என்பது மெய்யானால் அவரைச் சும்மா விட்டனுப்பியிருக்க மாட்டீரே?

ஆத்திகர் : என்ன செய்ய முடியும்?

உரையாசிரியர் : குறைந்த அளவில் அவருக்கு விடை யாவது கூறியிருக்கலாமே?

ஆத்திகர் : என்ன என்று?

உரையாசிரியர் : எம் தமிழ்ப் புலவர்கள் பூசனை என்பது தமிழ் என்றும், மேலும் காரணப் பெயர் என்றும் கூறி விளக்கியிருக்க நீர் இப்படிப் பேசுவது தீய செயல் ஆகும் என்று.

நாத்திகர் : வானை நோக்கியிருக்கும் இவ்வுலகத்தில் மழை யில்லாவிட்டால் ஒன்றும் நடவாது என்று மொத்தமாகக் கூறாமல் சிறப்பையும், பூசனையையும் இழுத்துப் போடுவது ஆத்திகப் போக்கையே காட்டுகின்றதல்லவா?

உரையாசிரியர் : சிறப்பையும் பூசனையையும் இழுத்துப் போட்டுத்தாம் நும் பண்டைத் தமிழக மேன்மையை உமக்குக் காட்ட எண்ணியருளினார் வள்ளுவர் என்க.

— (குயில் 21-6-60)

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்

[பி. மா] வியன் உலகம் வானம் வழங்காது எனின் தானம் தவம் இரண்டும் தங்கா.

பொருள் : வியன் உலகம்—அகன்ற உலகின் கண், வானம் வழங்காதெனின்—மழை பெய்யாவிட்டால், தானம்—தானமும், தவம்—தவமும் ஆகிய, இரண்டும்—இரண்டறங்களும் தங்கா—நிலைபெறமாட்டா.

கருத்து : மழையின்றேல், தானமும் தவமுமாகிய அறங்கள் நடைபெறா.

தானும்—இல்லார்க்கு உள்ளார் மனமுவந்தளிப்பதோர் பண்பு. தானம்—தன்மையின்—மை இறுதி கெட்டு முதல் நீண்டு அம் இறுதிநிலை பெற்றது. பசுமை, பசு, பாசி, கொடுமை, கொடு, கோடு, கோட்டம் என்பவை போல.

ஈறு போதல் இடையுகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடியகரம் ஐயாதல்
தன்ஒற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே

[நன். சூ. 136]

என்பதால் மையீற்றுப் பண்பு வேறுபடும் வகை அறிக. தானம் : தூய தமிழ்ச்சொல். இதை வடமொழியென்று கூறுவர். இதே போன்ற ஓசையுடைய மற்றொரு சொல் வடமொழியில் இருக்கலாம். அது இதுவன்று. மற்றும், தானம் என்ற தமிழ்ச் சொல்லை வடவர் எடுத்தாண்டுமிருக்கலாம், சொல் வறுமைப்பாடு உடைய வந்தேறிகள் ஆனதால். தவம் : மிகுதிப் பெருள் தருவதோர் உரிச்சொல். அது பிறர் பால் எழும் அருள் மிகுதியைக் குறித்தது. தவ என்பது, இழி வழக்காக மகர இறுதி பெற்றது. எது போலவெனில், சட்ட என்ற செம்மைப் பொருட்டாவதோர் அகர ஈற்று இடைச்

சொல் இழிவழக்காக மகர ஈறு பெற்றமை போல. இவ்வாறு சிவஞான போத உரையாசிரியரும் கூறினார். இதை தபஸ் என்ற வடசொல்லின் சிதைவு என்று அறியாது கூறுவாரும் உளர்.

உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப.

[தொ. உரி.3]

என்பதால் தவ என்ற சொல் மிகுதிப் பொருள் தருவது அறியப்படும்.

இக் குறட்பாவின் உரைமேல் எழும் ஆத்திகர், நாத்திகர் வினாவும், உரையாசிரியர் விடையும் வருமாறு :

ஆத்திகர் : தானமும் தவமும், அடுத்த பிறவியில் எதிர் பார்க்கப்படும் சிவபெருமானின் சீபாதம் கருதியல்லவா?

உ. ஆசிரியர் : அப்படித்தான் மடத்தார் வெளியிட்ட மடவுரை வரைந்தது. அதைவிட்டு இவ்வுரையை ஊன்றிப் படிக்க! பிறந்தவன், இறந்தபின் மீண்டும் பிறப்பான் என்பதும், சிவபெருமான் என்பதும், சீபாதம் என்பதும் சமையக்கணக்கர் திரிக்கும் கயிறு. பெறத்தக்கது மெய் யுணர்வு என்றார் வள்ளுவர்.

நாத்திகன் : தானம் என்பதும் தவம் என்பதும் ஆத்திகர் பேச்சுக்கள் அல்லவா?

உ. ஆசிரியர் : அவை ஆத்திகர் பேச்சுக்களும் அல்ல; நாத்திகர் பேச்சுக்களும் அல்ல. அவை தூய தமிழ்ப் பேச்சுக் கள். தானம் என்பது தன்மை என்ற பொருள் உடையது. அது பண்பாகு பெயராய்க் கொடைக்கு ஆயிற்று. தவம் என்பது பற்றிய விளக்கத்தையும் உரையிற் காண்க.

—(**குயில் 28-6-60**)

நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு

[பி. மா] உலகு நீர் இன்று அமையாது எனின் யார் யார்க்கும் ஒழுக்கு வான் இன்று அமையாது.

பொருள் : உலகு—உலகம், நீர் இன்று அமையாது—நீர் இன்றி நிலை பெற முடியாது. எனின்—என்றால், ஒழுக்கு—ஒழுக்கம், யார் யார்க்கும்—எப்படிப்பட்டவர்க்கும், வான் இன்று—மழையில்லாமல், அமையாது—நிலை பெறாது.

கருத்து : மழையின்றேல் ஒழுக்கம் நிலையாது.

நிலம், தீ, நீர், வளி, விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் (தொ. மரபு 89)

ஆதலின் நீரின்றமையாது உலகு என்றார். வானின்று அமையாதொழுக்கு என்பதற்கு, மழையில்லாவிடில் மழையொழுக்கு இராது என்றுபொருள் கூறினார். அவர் பொருள் சிறவாமை உணர்ந்திலர். ஒழுக்கு—ஒழுக்கம் ஆதலை இவ்வாசிரியர் கூறிய

பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு
[பிறனில் விழையாமை 8]

என்ற பாட்டாலும் அறிக. மணக்குடவரும் இவ்வாறே பொருள் கொண்டார். உயிரினும் சிறந்ததாக ஓம்பப்படும் ஒழுக்கம் போலும் மழையும் இன்றியமையாதது எனப் பொருட் பெற்றி உணர்த்துவார், யார் யார்க்கும் வானின் றமையா தொழுக்கு என்றார். இன்று—இன்றி, எதிர் மறைக் குறிப்பு வினையெச்சம். இவ்வதிகாரத்தால், தோன்றிய உலகுயிர்கள் நிலைபெறுதற்கு இன்றியமையாத மழையின் சிறப்பை விரித்துரைத்தருளினார்.

இக் குறள் உரையின் மேல் எழும் ஆத்திகர் நாத்திகர் வினாக்களும், அவற்றிற்கு உரையாசிரியர் தரும் விடையும் வருமாறு:

ஆத்திகர் : மழையால் ஒழுக்கம் நிலைபெற்று விடுமா? நீரினால் உலகு நிலை பெற்று விடுமா?

உ. ஆசிரியர் : ஒழுக்கம் என்பது இல்லறமோ துறவறமோ பற்றி ஒழுகுவது—நடந்து கொள்வது அன்று. மழையில்லாமல் முடியுமா? ஏன் நீரில்லாமல் உலகம் நிலை பெறாதல்லவா? நீ சொல்வாய் கடவுள் இல்லாமல் எதுவும் நடக்காது என்று. சொல்லிக் கொண்டிரு! அதனால் தொல்லை என்பதெல்லாவற்றையும் விலைக்கு வாங்கு, மடத்தம்பிரான் முதலியவர்களைப் போல! ஆனால் யார் மனத்தையும் புண்ணாக்க எண்ணாத உண்மைக்கு ஒத்த வகையில் செய்யுள் செய்த வள்ளுவரிடத்தில் மட்டும் வராதே; வாலாட்டாதே.

நாத்திகர் : மழை இருந்தால் வாழலாம் என்று மட்டு மன்றியமையாமல் வள்ளுவர் கடவுள் வேண்டாம் என்று கூறியிருக்கலாம். அவ்வாறு கூறாமை என்ன?

உ. ஆசிரியர் : எதில் அவர் மாட்டிக் கொள்ளவில்லையோ அதையே அவர் ஒத்துக் கொள்வாரா? கடவுள் வேண்டாம் என்று கூறினால் என்ன பொருள்? கடவுள் என்பதொரு சொல்லை அவர் ஒத்துக் கொண்டதாகி விடாதா?

ஆத்திகர் : இவ்வாறு செய்யுள் செய்தார் திருவள்ளுவர் என்றாலும் கடவுளின் நீர் இன்றியமையாதது. கடவுளின் வான் (மழை) இன்றியமையாதது என்று கூறியதாகத்தானே கொள்ள வேண்டும்?

உ. ஆசிரியர் : நாத்திகன் நவிலுவான் : நீரால் உலகமையும், மழையால் ஒழுக்கமையும், கடவுள் இல்லை என்று வள்ளுவர் சொன்னதாகவே கொள்ள வேண்டும் என்பான். எவனும் வள்ளுவரிடம் மாட்டிக் கொண்டு தொல்லையடைய வேண்டாம். ஆத்திகனோ நாத்தகனோ மனிதர் போல் நடந்துக்கொள்ள வேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை என்க.

—(குயில் 5-7-60)

அதிகாரம் 3 : நீத்தார் பெருமை

அஃதாவது துறந்தாரது பெருமை கூறுவது. மழையால் நிலை நின்றனர் உலக மக்கள்; அது போதியதன்று. அவர்கள் அறம் உணர்ந்து ஒழுகல் வேண்டும். அதற்கு அறநூல் வேண்டுமன்றோ? அஃது இயற்றியருளும் ஆற்றல் இல்லந் துறந்தார்க்கே அமைவது, இஃது அறம், இஃது மறம் என்று துணிவதோர் துணிவு அவர்க்கே உண்டாதலின்.

அறப் பனுவலின் உயர்வு அதன் ஆசிரியர் ஆற்றலின் உயர்வையே பொறுத்தது ஆதலின், நீத்தாரது நூற் பெருமை எனப்படாமல் நீத்தார் பெருமை என்றே கூறப்பட்டது.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(பி.மா) ஒழுக்கத்து விழுப்பத்து நீத்தார் பெருமை
வேண்டும் பனுவல் துணிவு.

பொருள்: ஒழுக்கத்து—உலக மக்களின் ஒழுக்கத்து பொருட்டும், விழுப்பத்து—மேன்மையின் பொருட்டும், நீத்தார் பெருமை—இல்லந்துறந்த தமிழ்ச் சான்றோரின் பெருமை என்னெனில், வேண்டும்—வேண்டப்படுகின்ற, பனுவல் துணிவு—நூலில் இது அறம், இது மறம் என்று அவர் துணிந்த துணிவேயாகும்.

கருத்து : நீத்தார் பெருமை, அவரின் பனுவற்றுணிவால் ஏற்பட்டது.

ஒழுக்கத்து, விழுப்பத்து என்பவற்றின் அத்துச்சாரியை கள் நான்கனுருபின் பொருள் தந்து நின்றன. இவ்வாறே பொருள் கொண்டார் மணக்குடவரும். வேண்டும் பெயரெச்சம்; மக்கள் விரும்புகின்ற என்ற பொருள். இதில் மக்கள் அவாய் நிலையாற் கொள்க.

நீத்தார்—துறந்தார். துறத்தல் இருவகை : இல்லந் துறத்தல், உள்ளந் துறத்தல். இவ்வாறு பட்டினத்து அடிகளும் பகர்ந்தார்.

அது வருமாறு :

> அறந்தான் இயற்றும் அவனிலும் கோடி அதிகம் இல்லம்
> துறந்தான் அவனிற் சதகோடி யுள்ளத்
> துறவுடையான்......

இல்லத்துறவாவது : மனை மக்களின் நலத்தையும், தன் நலத்தையும் துறந்து மக்கள்பால் அருள் உள்ளம் துறவாத நிலை. இதுவே இங்குக் கூறிய நீத்தார் நிலை என்க. மற்ற உள்ளத் துறவு உலகுக்குப் பயன்படாது. அவர் அறப் பணுவல் செய்வது யாங்ஙனம்? உள்ளத்தையும் துறந்த நிலை செயலுக்கு ஏற்றதாகாது.

இக்குறள் உரையின் மேல் எழும் ஆத்திகர், நாத்திகர் வினாக் களும் அவற்றிற்கு உரையாசிரியர் தரும் விடையும் வருமாறு:

நாத்திகன் : ஆத்திகத்தில் ஒழுக்கம் காண முடியுமா?

உரையாசிரியர் : நாத்திகத்திலும் ஒழுக்கம் இருக்க முடியுமா? ஆனால் திருவள்ளுவரால் ஒழுக்கம் இன்ன தென்று நல்ல முறையில் கூறப்பட்டிருப்பது காண்க.

ஆத்திகன் : மக்களின் ஒழுக்கத்திற்காகவும் மேன்மைக் காகவும் இல்லத்துறவை மேற்கொண்டவர்கள், ஒழுக்கத் தின் மேன்மை இலக்கணங்களை எவரிடமிருந்து கற்றுக் கொண்டார்கள்?

நாத்திகன் : எவர் உண்மையாக இல்லத் துறவு பூண்டார்களோ அவர்கள் மற்றொருவரிடம் கற்றுக் கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. அவர்கள் அறியாதது ஒன்றுமில்லை; வள்ளுவரைப் பார்க்க.

—(குயில் 12-7-60)

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

(பி. மா) துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டு அற்று.

பொருள் : துறந்தார்—அறப்பனுவல் அருளிச் செய்யும் பொருட்டு இல்லந் துறந்த தமிழ்ச் சான்றோரது, பெருமை —பெருமைக்கு, துணைக் கூறின்—நிகர் இவ்வளவு என்று கூறப் புகுந்தால், அது வையத்து இறந்தாரை—இன்று வரைக்கும் உலகத்தில் இறந்தாரின் தொகையை—எண்ணிக் கொண்டு அற்று—கணக்கெடுத்தால் எப்படி முடியாதோ அப்படிப் போல் முடியாது போகும்.

கருத்து : இன்றுவரை இறந்தார் தொகையை எண்ண முடியாதது போல், துறந்தார் பெருமையையும் இவ்வளவென்று கணக்கிட்டுச் சொல்ல இயலாது.

துறந்தார் — இறந்தகால வினையாலணையும் பெயர். ஆறனுருபு தொக்கது. பெருமை—நான்காவதன் தொகை, துணைக்கூறல் ஒரு சொற்றன்மையது. கொண்டு, கொண்டால் என்பதன் திரிபு. அற்று—அத்தன்மைத்து; குறிப்பு வினைமுற்று. ஒரு நாளில் அன்றி எந்நாளிலும் அமைய இது பொருள் என அடைதற்கு அடிப்படையான ஒழுகலாறுகளைத் துணிவுற்று இயற்றியருளினார் ஆதலின் அவர் பெருமை அளவிட முடியாததாயிற்று.

இச் செய்யுள் உரையின் மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும், உரையாசிரியர் விடையும் வருமாறு :

நாத்திகன் : துறந்தார் என்று நடித்துத் துணிந்து கொள்ளையடிக்கும் ஆட்களைப் பார்த்து வருகின்றோம். சிவசிவா என்பார்கள் கோவிந்தா என்பார்கள், சைவத்தை நிலைநாட்டுகின்றோம் என்பார்கள், வைணவத்தை பரப்புகின்றோம் என்பார்கள். இவர்கட்குப் பெருமை ஒரு கேடா?

உரையாசிரியர் : வள்ளுவர் சொல்லும் துறந்தார் சங்கராச்சாரியும் அல்லர்; தருமபுரத்தாரும் அல்லர்.

நாத்திகன் : வேறு?

உரையாசிரியர் : அவர் குறித்தது துறந்தாரை!

நாத்திகன் : அப்படியானால் சரி.

ஆத்திகன் : சிவனடியாரைக் கண்டால் சிவனையே கண்டதாக மகிழ்ந்து அவர்க்கு மன நிறைவு செய்ய வேண்டும். நாமக்கட்டி நெற்றியைக் கண்டால் நாராயணனையே கண்டதாக மகிழ்ந்து ஆடவேண்டும் என்பதை இச்செய்யுள் நமக்கு நினைவூட்டவில்லையா?

உரையாசிரியர் : ஆமாம் நினைவூட்டுகின்றது. அவர்களைக் கண்டால் உடனே ஊர்க்காவலர்க்கு அறிவித்து விடவேண்டும். அவர்கள் முடிச்சவிழ்த்திருந்தால் பிடித்துக் கொள்வார்கள். பிச்சை எடுப்பது கண்டால் பிச்சைக்கார விடுதிக்கேனும் சாவடிக்கேனும் அனுப்புவார்கள்.

ஆத்திகன் : சங்கராச்சாரியைக் கூடவா?

உரையாசிரியர் : அவர் பாட்டனைக் கூட.

நாத்திகன் : இறந்தாரை எண்ணிக் கொள்வது அருமையா?

உரையாசிரியர் : இறந்தார் இத்தனை பேர் என்று கணக்குக் காட்டுவது மட்டுமன்று, இவ்வளவு தொகையிருக்கும் என்று மனத்தால் அளப்பதும் முடியாது என்றபடி.

—(குயில் 26-7-60)

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(பி.மா) இருமை வகை தெரிந்து ஈண்டு அறம்
பூண்டார் பெருமை உலகம் பிறங்கிற்று.

பொருள்: இருமை—அறம் பாவம் என்னும் இரண்டின், வகை தெரிந்து—கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து, ஈண்டு—இல்லறத்தினின்று, அறம் பூண்டார்-துறவறத்தை மேற்கொண்டாராகிய தமிழ்ச் சான்றோரின், பெருமை—பெருமையே, உலகு—உலகில், பிறங்கிற்று—மேன்மையுற்றது.

கருத்து: செயற்கருஞ்செயல் என்பது மக்கள் கடைத்தேற ஒருவன் இல்லந் துறத்தல் என்பதேயாகும்.

இருமை—இருமைத்தன்மை. இரண்டு என்றபடி. இவ்வாறே மூன்றைக் குறிக்க மும்மை எனவரும். இருமைத் தன்மை என்பதன் மரூஉவே இருமை என்க.

பாவம்—வடமொழியன்று; தூய தமிழ்ச்சொல். மனம் தன்னிலை திரியாது நிற்றலே பொருள். அஃது பொருள்களின் மேற்சென்று பரவுதல் மனக்கோட்டம். பர—பரவுதல் முதனிலை. அம் தொழிற்பெயர் இறுதி நிலை. அறம் என்பதன் எதிர்மொழி மறம் அன்று, பாவம் என்பதேயாகும். அது ''பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி'' என்றதனாலும் அறிக.

இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும், உரையாசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன்: இருமை என்பதற்குப் பரிமேலழகர் பிறப்பு, வீடு என்று பொருள் கொண்டிருக்க நீவிர் அறம் பாவம் என்று பொருள் கூறியதென்ன?

உரையாசிரியர்: பரிமேலழகர் பிறப்பு, வீடு என்று பொருள் கொண்டது பொருந்தாது. பிறப்பு, வீடு என எண்ணுங்கால் நடுவில் இருப்பு (வாழ்க்கை) என்பதும் எழு

வதால் அறம் பாவம் என்று எண்ணும்போது இடையில் எதுவும் விடப்படவில்லை.

நாத்திகன்: அறம் என்றால் முற்பிறப்பில் செய்ததா? பாவம் என்பதும் அப்படித்தானா?

உரையாசிரியர் : முற்பிறப்புக் கேள்வி எழுப்பப் படுவதே தேவையில்லை. பிறந்துள்ளவன் இதற்குமுன் பிறந்தான் என்பது பற்றியும், இனியும் பிறப்பான் என்பது பற்றியும் திருவள்ளுவர் ஒன்றுமே சொன்னதில்லை. இதை மேலே விளக்கப்படும் முற்பிறப்புப் பிற்பிறப்புப் பற்றி திருவள்ளுவர் கூறியுள்ளது போல் பரிமேலழகர் உரையில் தோன்றுகின்றதென்றால் அது பரிமேலழகர் வேலைப்பாடு என்க.

நாத்திகன் : இல்லத்தினின்று துறவறத்தை அடைந்தவர் என்று பொருள் கூறினீர்கள் அஃதென்ன?

உரையாசிரியர்: அவர்கள் இல்லத் துறவிகள் என்பதை அறிவித்தற்பொருட்டு!

—(குயில் 2-8-60)

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

(பி. மா.) உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் வைப்புக்கு ஓர்வித்து வரன் என்னும்.

பொருள்: உரன்—அறிவு, என்னும்—என்கின்ற, தோட்டியான்—தோட்டிக் கருவியால், ஓர் ஐந்தும்—ஐம்பொறிகளாகிய ஐந்து யானைகளையும், காப்பான்— அவற்றின் புலன்கள் மேல் செல்ல ஒட்டாமற் காக்க வல்ல இல்லத் துறவியானவன், ஓர்வித்து— தான் கண்டவாறு உண்மை பிறரையும் உணரும்படி செய்து, வைப்புக்கு— உலகினர்க்கு, வரன் என்னும்—இதுவே பெறத்தக்க இன்பப் பேறு என்று அருளிச் செய்து வலியுறுத்துவான்.

கருத்து: இல்லத் துறவுடையான் தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வுலகம் என்று எண்ணித் தொண்டு செய்வான். என்னும்— செய்யும் என்னும் முற்று. இங்கு ஆண்பாலுக்கு வந்தது. காப்பான் எழுவாய். என்னும் பயனிலை. வரன் வரம் என்பதன் திரிபு, வியன்—அகன் என்பவற்றிற்போல். வியல் என்கிளவி அகலப் பொருட்டே. (தொல். 364) என்ற நூற்பா வுரையில் "இது வியன் தானை விறல் வேந்தே (புறம் 38: 4) எனத் திரிந்தும் நிற்கும் என்றது இங்குக் கருதத்தக்கது.

வரன் என்பதன் பொருள் என்னெனில் கைவரல் என்பது. இதை வடவர் சித்தி என்பர். ஈண்டு இன்பப் பேறு எனப் பொருள் கூறப்பட்டது. ஓர்வித்தல்—ஓர்தல் என்பதன் பிறவினை. தோட்டி—யானை ஓட்டுவதோர் கருவி. இதை வடவர் அங்குசம் என்பர். உள்ளத் துறவு டையான் எல்லாவற்றையும் துறந்தவன், அவன் இன்ப மெனக் கொண்டது தானே ஆனதோர் நிலை என்பர் சில தத்துவ நூலுடையார். இல்லந்துறந்தார் மன அறிவுடன் உலக முன்னேற்றத்தின் பொருட்டுத் தொண்டு செய்வதே இன்பமெனக் கொண்டவன் என்ற அரிய உண்மையை விளக்கவந்தது அந்தக் குறட்பா என உணர்தல் வேண்டும்.

இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு :

ஆத்திகன்: உரன் என்பது பற்றி அறிய வேண்டிய தென்ன?

உரையாசிரியர்: உரம் என்பதன் போலியே உரன். அதை மொழி இறுதிப் போலி என்க. மரம்—மரன், திறம்—திறன் முதலியவும் அது.

நாத்திகன்: வரம் என்பது வரன் ஆயிற்று என்றீர், நன்று—வரம் என்பது கடவுள் கொடை என்று

ஆத்திகன்: கூறுகிறார்கள். அதை வள்ளுவர் ஏன் வற்புறுத்த வேண்டும்?

உரையாசிரியர்: ஆத்திகர் தம்தம் மதத்தையே சேர்ந்தவை உலகமும் உலகப் பொருள்களும் என்று காட்டுவர். அன்றியும் அயல் மதத்தவர்க்கு அவற்றின்மேல் எவ்வுரிமையும் இல்லை என்றும் மறுப்பர். தமிழ்ச் சொற்களுக்குத் தம் எண்ணம் போன போக்கில் காரணம் கற்பிப்பர். அது பற்றித் திருவள்ளுவரிடமா வாலாட்டுவது! அவர் மதங் கடந்தவர் அல்லரோ? வரம்—வா என்பதன் அடியாகப் பிறந்த— வரவு—அரிய வரவு என்ற பொருளுடையதான தமிழ்க் காரணப் பெயர் என்று மனதுள் பதிக்க.

ஆத்திகன்: ஓர் வித்து?

உரையாசிரியர்: உணர்வித்து, உணரும்படி செய்து.

ஆத்திகன்: உணரும்படி செய்து பெறத்தக்க பேறு என்பான் துறவி என்பதில் உணரும்படி என்றால் எதை?

உரையாசிரியர்: வரன் என்பதை!

ஆத்திகன்: அதை அல்லவா முதலில் சொல்லியிருக்க வேண்டும்?

உரையாசிரியர்: உணரும்படி செய்தலை முதலில் வைத்தது விரைவை உணர்த்த. இதுதான் பெறத்தக்கது என்பதை உணர்வில் ஏறும்படி விரைந்து செய்து என்றபடி.

—(குயில் 9-8-60)

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும் புளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

(பி. மா) ஐந்து அவித்தான் ஆற்றல் சாலும் கரி
அகல் விசும்பு உளார் கோமான் இந்திரனே?

பொருள்: ஐந்து—பொறிகள் ஐந்தையும், அவித்தான்—புலன்களின் மேற் செல்ல வொட்டாமல் அடக்கிய தமிழ்த்

துறவியினது, ஆற்றல்—அறப்பனுவலுக்கு, சாலுங்கரி—போதிய சான்று, அகல் விசும்புளார் கோமான் இந்திரனே—அகன்ற விசும்பில் உள்ளவரின் கோமானாகிய இந்திரனாற் செய்யப் பெற்றதென்னும் ஐந்திர நூலா? இல்லை.

கருத்து : தமிழ் நூற்களுக்கு வடநூல் முதனூலன்று. ஆற்றல் என்றால் ஆற்றலால் விளைந்த அறப்பனுவலை. இவ்வாறு ஆனது தொழிலாகு பெயர். இந்திரன் என்றது இந்திரனாற் செய்யப் பெற்றதாய் உரைக்கும் ஐந்திரம் என்னும் நூலை. இவ்வாறு ஆனது ஆக்கியோன் ஆகு பெயர்: "திருவள்ளுவர் படித்தான்" என்பதில் திருவள்ளுவர் அருளிய திருக்குறளுக்கு ஆனது போல். அகல் விசும்புளார் கோமான் என்றது இந்திரன் என்ற பெயருக்கு அடை.

இவ்வாறு அகல் விசும்புளார் கோமான் என்று அடை கொடுத்தார் எனின், 'இந்திரன் ஒருவன் இருந்தான் என்பதையும் ஆசிரியர் ஒப்பினார் என்றும், அவ்வாறு ஒப்பவே, ஐந்திர நூல் தமிழ் நூற்களின் முதல் நூலாகும் தகுதியையும் ஒப்பத்தான் நேரும் என்றும் பலவாறு எண்ணியிழுக் கடைதல் வேண்டாம்.

வண்தமிழ் நாட்டின்கண் வந்தேறிகள் தம்மை உயர்த்திக் காட்டப் பொய்ந்நூற்கள் பல புனைந்தனர். அவ்வாறு புனைந்த பொய்நூற் கருத்துக்களை மெய்யென பரப்பி வந்தனர். அவற்றைத் தமிழர் நம்பித் தம் ஒழுக்கத்திற் பிறழலாகாதன்றோ? அது பற்றியே திருவள்ளுவர் இந்நூலில் பெரும்பான்மையிடங்களில் தமிழர்க்கு விழிப்பை ஆக்கி மீட்கத் திருவுளங்கொண்டார் என்பதை மறக்கலாகாது. பின்னை ஏன் அவ்வாறு அடை தந்தார் எனின், நூல் செய்வார் அந்நூலைச் செய்து செல்வதில் எழுவகை முறைகளை மேற்கொள்ளுவார்கள். அவை வருமாறு:

எழுவகை மதமே (1) உடன்படல் (2) மறுத்தல் (3) பிறர் தம் மதம் மேற்கொண்டு களைவே (4) தாஅன்

நாட்டித் தனாஅது நிறுப்பே (5) இருவர் மாறுகோள் ஒரு தலை துணிவே (6) பிறர் நூற் குற்றங் காட்டல் (7) பிறிதொடு படாஅன் தன்மதங் கொளலே.

இவற்றில் 'பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவே' என்பது என்னவெனில், பிறர் கொள்கையில் ஒருபுடை மேற்கொண்டு பின்பு அது முழுதும் மறுத்தொழித்தல் என்க. இக்கொள்கை கொண்டே ஆசிரியர் அதை எடுத்தார். நஞ்சு நிறைந்த குடத்தைக் கையில் வாங்கித்தான் மண்ணிற் புதைக்கவேண்டும்; வாங்கிச் சுமப்பது கொண்டே அதை அவன் அருந்தினதாக எண்ணிவிடுதல் கூடா தன்றோ! வடவர் கதைப்பது போல் இந்திரன் ஒருவன் இருந்தானாயினும் ஆகுக. அவனும் தேவர் தலைவனே ஆயினும் ஆகுக. ஐந்தவித்த அறத்தமிழர் ஆக்கிய நூலுக்கு ஐந்தவியாது அயன் மாதர் கற்பவித்த அறமிலான் இந்திரனின் ஐந்திரம் முதனூலாகாது என்பார், "அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலுங்கரி" என்றார்.

இந்திரனே என்பதற்கு இந்திரனா என்பது பொருள். ஏ வினா எதிர்மறைப் பொருட்டு, கரி—உண்மை, காரணம் கரு முதனிலை இ இறுதிநிலை.

இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும், உரையாசிரியன் விடையும் வருமாறு:

ஆத்திகன் : அகல் விசும்பு உளார் கோமான் என்று இந்திரனைச் சிறப்பித்தார் வள்ளுவர். ஆதலால் இந்திரனை ஆதரிக்கின்றார் அல்லரோ?

உரையாசிரியர் : இந்திரனைப் பற்றித் தமிழரின் எதிரிகள் அவ்வாறு சொல்லித் திரிவதையே வள்ளுவர் சொன்னார். தமிழர்களிடையே அந்த இந்திரன் கதை புகுந்து விட்டது. அதை அப்படியே சொல்லிக் காட்டித்தானே மறுக்க வேண்டும்? அடையோடு சொல்லாவிட்டால் வேறு இந்திரனையும் குறித்து விடுமன்றோ? நரேந்திரன் முதலிய பல இந்திரர்கள் பெயர்கள் உலவுகின்றதையும் நோக்குக.

ஆத்திகன் : கரி வட சொல் என்கிறார்களே?

உரையாசிரியர் : கரு என்ற தமிழ்ச்சொல் கரு×இ= 'முற்றும் அற்று ஒரோ வழி' என்ற நன்னூல் சட்டத்தால் கரி எனப் புணர்ந்தது. கரு முற்றியலுகரம். அதன் முன் இகர உயிர் வந்தது. இகரம் பெயர் இறுதிநிலை. எனவே அது தூய தமிழ்க் காரணப் பெயர். சொல்லுவார்கள் இது வடசொல் என்று. அவர்கள் எதைத்தான் தமிழ்ச்சொல் என்று சொல்லுகிறார்கள்! வீட்டிற்குள் புகுந்து பொருளைத் திருட வந்த ஒரு கூட்டம் கணக்கு ஆளவந்தார் ஒத்திருப்பதை எண்ணி, வீடே என்னுடையது என்றுதானே சொல்லும்!

—(குயில் *16-8-60*)

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்.

(பி.மா) பெரியர் செயற்கு அரிய செய்வார்; சிறியர்
செயற்கு அரிய செய்கலாதார்.

பொருள் : பெரியர்—தமிழ்த்துறவிகள், செயற்கு அரிய செய்வார்—பிறர் செய்தற்கு அரியவான செயல்களைச் செய்வார்கள். சிறியர்—அறிவில்லாதவர், செயற்கு அரிய செய்கலாதார்—செய்தற்கு அரிய செயல்கள் செய்ய மாட்டார்.

கருத்து : பெரியர் என்றது தமிழ்த்துறவிகளை. அவர் செயற்கரிய செய்தலாவது, தன்னல நீத்தலும் பிறர் நலம் காத்தலும். சிறியர் என்றது அறிவிலாதாரை—வந்தேறிகளை—உயிர்கள் மாட்டுச் செந்தண்மை இல்லாதவரை.

இதுவும், அறப் பனுவல் செய்த துறந்தாரை உட்கொண்டே சொல்லி அவர் அருமை கூறியவாறென்க.

இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும், உரையாசிரியர் விடையும் வருமாறு:

நாத்திகன் : பெரியர் என்றது எப்படித் தமிழ்த் துறவிகளைக் குறிக்கும்?

உரையாசிரியர் : *அதிகாரத்தால்!*

நாத்திகன் : துறவிகளிலும் தமிழ்த் துறவிகளைக் குறிக்கும் என்பது எப்படி?

உரையாசிரியர் : தமிழகத்தில் தமிழரால் தமிழில் சொல்லியுள்ளது ஆங்கிலத் துறவியையா குறிக்கும்?

ஆத்திகன் : செயற்கரிய செய்தல், யோகம் முதலிய செய்து கடவுளை அடைதல் அல்லவா?

உரையாசிரியர் : இவ்வாறு திருவள்ளுவர் கருதினமைக்குச் சான்று ஒன்றையும் காணோம். பிறர் நலம் கருதி இல்லம் துறத்தலும் மக்களின் மேன்மைக்கும் ஒழுக்கத்திற்கும் உழைத்தலும் அவர்களின் நோக்கம் என்பதற்கு இந்த அதிகாரம் சான்று.

ஆத்திகன் : செயற்கரிய செய்யாமை என்பது என்ன?

உரையாசிரியன் : மதத்தையும், சாதியையும் வற்புறுத்தும் செக்குமாடுகள் செயற்கரிய செய்யாதவர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்று கூறிய அருஞ் செயலும் பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறிய அருஞ்செயலும் அவர்கள் செய்யாதவர் தாமே!

—(**குயில்** *23.8.60*)

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டே யுலகு.

(பி. மா) உலகு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான் கட்டே.

பொருள் : உலகு—உலகமானது, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும் நாற்றமும் என்ற ஐந்தின்—ஐந்து நுண் பொருள்களின், வகை

கூறுபாட்டை, தெரிவான் கட்டே—ஆராய்ந்துணர்ந்தவன் கண்ணதே.

கருத்து : மெய்யுணர்வுடையார்க்கே உலகின் உண்மை காணல் கூடும்.

பகவன் என்பது மெய்யுணர்வின் முதன்மை என்பது முன்னே விளக்கப்பட்டது. அம்மெய்யுணர்வைப் பெற்றவரே அப்பகவனை அடைந்தவர் என்க. மெய்யுணர்வு பெற்ற நிலையே வீடு என்னும் எண்ணூற் கொள்கை இங்குக் கருதத் தக்கது.

எல்லாம் இருபத்தைந்து தத்துவங்களில் அடங்கின என எண்ணூல் கூறுகின்ற அவ்விருபத்தைந்தையே ஆசிரியர் இங்குச் சுவை முதலியவும் அவற்றின் வகையும் எனச் சுருங்கக் கூறினார். இப்பாட்டுக்குப் பரிமேலழகரும் உரை கூறுகையில் இது சாங்கியநூ(எண்ணூ)லின் அடிப்படையில் அமைந்ததான உண்மையை ஒப்புகிறார்.

எண்ணூல் விளக்கம் :

தத்துவம், 1. ஆதி (மூலப்பகுதி) இது இன்னபடி என்று ஒருவராலும் அறியப்படாதது. காமம், வெகுளி, மயக்கம் என்ற முப்பண்புகளினாயது. மனத்திற்கு விளங்காதது. எல்லாப் பொருளும் தோன்றுதற்கு இடமானது. தனக்கொரு பெரிது இல்லாதது.

தத்துவம், 2. அறிவு (புத்தி) இது ஆதி [மூலப்பகுதி] யினின்று தோன்றியது.

தத்துவம், 3. வெளி [ஆகாயம்] இது அறிவினின்று [புத்தி] தோன்றியது.

தத்துவம், 4. காற்று [வாயு] இது வெளியினின்று தோன்றியது.

தத்துவம், 5. நெருப்பு [தேயு] இது காற்றினின்று தோன்றியது.

தத்துவம், 6. நீர் [அப்பு] இது நெருப்பினின்று தோன்றியது.

தத்துவம், 7. மண் [பிரிதிவி] இது நீரினின்று தோன்றியது.

தத்துவம், 8. மனம் இது மண் முதலியவற்றின் கூட்டத்தினின்று தோன்றியது.

தத்துவம், 9. முனைப்பு [ஆங்காரம்] இது மனத்தினின்று தோன்றியது.

தத்துவம், 10. ஒலி இது வெளியினின்று தோன்றியது.

தத்துவம், 11. சுவை இது நீரினின்று தோன்றியது.

தத்துவம், 12. ஒளி இது தீயினின்று தோன்றியது.

தத்துவம், 13. நாற்றம் இது நிலத்தினின்று தோன்றியது.

தத்துவம், 14. ஊறு இது காற்றினின்று தோன்றியது.

தத்துவம், 15. செவி இது ஒலியினின்று தோன்றியது.

தத்துவம், 16. வாய் இது சுவையினின்று தோன்றியது.

தத்துவம், 17. கண் ஒளியினின்று தோன்றியது.

தத்துவம், 18. மூக்கு இது நாற்றத்தினின்று தோன்றியது.

தத்துவம், 19. மெய் இது ஊற்றினின்று தோன்றியது.

தத்துவம், 20. பேச்சு இது மெய்யினின்று தோன்றியது.

தத்துவம், 21. கால் இது மெய்யினின்று தோன்றியது.

தத்துவம், 22. கை இது மெய்யினின்று தோன்றியது.

தத்துவம், 23. எருவாய் இது மெய்யினின்று தோன்றியது.

தத்துவம், 24. கருவாய் இது மெய்யினின்று தோன்றியது.

தத்துவம், 25. பகவன் இது எதினின்றும் தோன்றியதன்று, மெய்யுணர்வு.

இப்பாட்டால், அறப்பனுவல் செய்வார் இங்ஙனம் **தத்துவ உணர்வு உடையார் என்று குறித்தார்.**

இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன் : திருவாரூர்க் கபிலர் அருளிய எண்ணூற் கொள்கை ஒரு மதமல்லவா?

உரையாசிரியர் : இல்லை பண்டைத் தமிழர் பண்பாடு. அதைத் தத்துவம் என்றும் சொல்வர்.

ஆத்திகன் : மதவிளக்கம் கூறுவார் எண்ணூற் கொள்கையையும் ஒரு மதமாகவே வைத்து விளக்குவர்.

உரையாசிரியர் : எனக்குத் தெரியாது.

ஆத்திகன்: தத்துவ விளக்கம், கூறும் ஆசிரியர்கள் எண்ணூற் கொள்கையையும் தத்துவநூற்களில் ஒன்றாக வைத்துப் பாடம் சொல்லுவதை நீவிர் அறிவீரா?

உரையாசிரியர்: தத்துவம் மதமல்ல என்று நீவிர் அறிய வேண்டும்.

ஆத்திகர்: எண்ணூற் கொள்கையைப் பண்பாடு என்று கூறுவது சரியா?

உரையாசிரியர்: மதமான பேயாற் பிடிபடாமல் இருக்க அவர்களிடம் அமைந்திருக்கும் பண்பாடுதான் எண்ணூற் கொள்கை. உலகம் சிவனாற் படைக்கப்பட்டது என்றெல்லாம் பண்டைத் தமிழர் தடுமாறியதில்லை. முதன்மையினின்று உலகம் தோன்றியது என்று எண்ணி மதவலையிற் படாத திறம் பண்பாடுதான். மக்கள் அடையத்தக்கது. சிவனடி, திருமாலடி, பிற என்று பண்டைத் தமிழர் தடுமாறியதில்லை. பெறத்தக்கது அறிவு என்றார்கள். சிவனும், திருமாலும் பிறவும் மக்கள் நல்வாழ்வுக்குத் தேவையில்லை என்றார்கள். உருவ வணக்கம் முட்டாள்தனம் என்றார்கள். இவ்வாறு மேற்கொண்டு ஒழுகுவதுதான் பண்பாடு. இவ்வாறு கூறுவதுதான் கபிலர் எண்ணூல்! இதைத்தான் வடவர் சாங்கியம் என்று மொழிபெயர்த்துக் கொண்டனர்.

நாத்திகர்: கடவுள், சிவம், திருமால் வேண்டியதில்லை என்று சாங்கியம் கருதுவதால் சாங்கியம் நாத்திக நூலே ஆகும். அன்றியும் சாங்கியப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது திருக்குறளாதலின். திருக்குறள் நாத்திகமே. அன்றியும் நாத்திக விளக்கமே திருவள்ளுவர் செய்தார். ஆதலின் வள்ளுவர் நாத்திகர் இல்லையா?

உரையாசிரியர்: மக்கள் பெறத்தக்கது மெய்யுணர்வு என்று கூறி விளக்கிய திருவள்ளுவர் நாத்திகருமல்லர் ஆத்திகரும் அல்லர்.

—(குயில் 30-8-60)

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(பி.மா) நிலத்து நிறைமொழி மாந்தர் பெருமை
மறை மொழி காட்டி விடும்.

பொருள்: நிலத்து— உலகின் கண், நிறை— உண்மை நிறைந்த, மொழி மாந்தர்—நூலைச் செய்த தமிழ்ச் சான்றோரின், பெருமை— பெருமையை, மறை—பொய்ம்மை உடைமையால் மறைந்தொழிந்த, மொழி— மொழிகள், (பாடைகள்) காட்டிவிடும்— எடுத்துக் காட்டிவிடும்.

கருத்து: பொய்ந்நூலுடைய பிறமொழிகளே மெய் நூலருளிய தமிழ்ச் சான்றோரது பெருமையைக் காட்டிவிடும்.

ஒரு மொழி (பாடை) நிலைத்து வாழ வேண்டுமானால் அம்மொழியில் உண்மை நூற்கள் அமைய வேண்டும். அவ்வுண்மை நூற்களையும் மெய்யுணர்வுடையாராலேயே செய்ய முடியும். அதற்கு நூலாசிரியரின் பெருமையைப் பொய்ம்மை நிறைந்திருந்த காரணத்தால் நூற்களும் ஒழிய அந்நூற்களையுடைய மொழியும் ஒழிந்து போனதொன்றே எடுத்துக் காட்டிவிடும் என்பார் இவ்வாறு கூறினார்.

நிறைமொழி— நிறைந்த மொழி. அஃதாவது உண்மை நிறைந்த மொழி என்றாம். இறந்தகால வினைத்தொகை நிலைத்தொடர்.

நிறைமொழி என்பதிலுள்ள மொழி என்பது நூலுக்காயிற்று; ஆகுபெயர், திருவாய்மொழி, திருவாசகம், முனிமொழி என்பவற்றிற் போல.

மறைமொழி— இறந்தகால வினைத்தொகை நிலைத் தொடர். நிகழ் காலத்து எனினும் இழுக்காது. அவ்வாறு கூறினால், மறைமொழி என்பது மறைந்து வருகின்ற மொழி என விரிதல்வேண்டும். இதில் வரும் மொழி, மொழி முதலைக் குறித்தது. இதைப் பாடை என்பர் வடக்கர். தமிழ் உலகு தோன்றிய நாளில் தோன்றியது என்பர் தொன்று நிகழ்ந்ததனைத்தும் உணர்ந்தவர். இன்றுவரை அது அழியாதிருப்பதால் தமிழ் மொழியில், தமிழ்ச் சான்றோர் உண்மை நிறைந்த நூற்களையே இயற்றினார் என்பது உணரப்படும். ஆரியம் மறைந்தொழிந்த மொழிகளில் ஒன்று. இப்பாட்டுக்குப் பரிமேலழகர் கூறிய உரை வருமாறு:

நிறைமொழி மாந்தர் பெருமை— நிறைந்தமொழியினையுடைய துறந்தாரது பெருமையை, நிலத்து மறைமொழி காட்டிவிடும்—நிலவுலகத்தின் கண் அரவணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டி விடும்.

நிறைமொழி என்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் மொழி. காட்டுதல் பயனானுணர்த்துதல் என்பது.

இதில் அருளிக் கூறுவதும் வெகுண்டு கூறுவதும் துறவிகளுக்கு என்று காட்டினார். துறவிகள் அருளிக் கூறுவது எப்போது? வெகுண்டு கூறுவது எப்போது? தமக்குப் பயன்

பட நடந்துகொள்ளும்போது அருளிக் கூறுவார் என்றால், பயனை எதிர்பார்ப்பதும், அதற்குக் கைம்மாறு செய்வதும் துறவிகட்கு அடுக்குமா? பிறர் தமக்கு தீமையுற நடந்து கொள்ளும்போது வெகுண்டு கூறுவார் என்றால் சிறியோர் செய்த சிறுபிழைக்கு வெகுளுவதும், அதற்காக அவரை ஒறுத்தலும் துறவிகட்கு அடுக்குமா? நீத்தார் என்பதற்கு முற்றுந் துறந்தார் என்று பொருள் கூறிய பரிமேலழகர் இவ்வாறு பொருள் கூறலாமா?

புராணங்களில் நாம் காணும் துறவிகளைத் தமிழ்த் துறவிகளுடன் ஒப்பிட்டுப் பேசவும் கூடாது. இப்பாட்டில் புராணத் துறவிகளை ஆசிரியர் கூறியிருக்க முடியாது. அவர் தமிழ்த் துறவிகளை உட்கொண்டே கூறினார். ஆதலின் பரிமேலழகர் கொண்ட அருளிக்கூறுதல், வெகுண்டு கூறுதல் புராண விளக்கம் பொருந்துவதன்று.

இவ்வாசிரியரே,

''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு'' என்றும்

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்''

என்றும் பலவாறு கூறித் தமிழ்த் துறவிகளின் சால்பை விளக்கியருளினார். அதை உற்று நோக்குவார்க்குத் துறவிகளுக்குப் பிறரை அருளிக்கூறும் நிலையும் வெகுண்டு கூறும் நிலையும் ஏற்படுதல் இருக்க முடியாது என்பது புலனாகும். ''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்'' (குறள் 341) என இவ்வாசிரியர் கூறியபடி, எப்பொருள்மேல் செல்லும் பற்றை விடுகிறானோ அப்பொருளைப் பெற வேண்டும் என்பதால் வரும் துன்பம் இல்லாதொழியும். ஆதலின், துறவிகள் எப்பொருள் மேலும் பற்றுவையார் என்றால், சிலரால் நலம் பெறு

தலால் அவரை அருளிக் கூறுதலும், சிலரால் தீமை பெறுதலால் அவரை ஒறுத்தலும் செய்யார்.

புராணத் துறவிகளின் இழிந்த போக்கினை எண்ணுக. அவர்கள், ஒருவன் பிழை செய்தான் என்றும், ஒருவன் மதியாதிருந்தான் என்றும், அவர்களைக் கல்லாக்குவதும், எரிப்பதும் ஆகிய பல வெறுக்கத்தக்க ஒறுத்தல்களைச் செய்ததாய்க் கூறப்படுகிறது.

இத்தகைய பிற்போக்காளர் அருளிக் கூறினாலும் வெகுண்டு கூறினாலும் அவ்வாறே பயன் கிடைத்துவிடும் என்பதும் இயலாத தொன்று. சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லிக்கு இடமளிக்கும் அவர்கள் துறவிகளாதலும் இல்லை.

இதனால் நிறைமொழி என்பதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையும் அதுபற்றி அவர் தந்த விளக்கமும், தங் கொள்கை நோக்கித் தமிழரை இழுத்துச் செல்வனவே யன்றி, ஏற்புடையன அல்ல என மறுக்க.

இனிப் பரிமேலழகர், நிறைமொழி என வரும் தொல்காப்பியச் செய்யுளின் பிழையான உரையினை மேற்கொண்டு இப்பாட்டுக்கும் அதுபோலவே உரையும் விளக்கமும் தந்திருக்கிறார் என எண்ணக் கிடக்கின்றது. இவ்வாறு சொற்றொடர் ஒப்பு நோக்கிப் பலவிடங்களில் பொருந்தாவுரை செய்து தம் திருந்தா நிலையை வெளிக்காட்டியிருக்கின்றார். இது மேலே சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லப்படும்.

இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும், உரையாசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன்: முனிவர்கள், ரிஷிகள் சாபமிட்டாலும், அனுக்ரகம் செய்தாலும் அப்படியே பயன் ஏற்படுவதில்லையா?

உரையாசிரியர்: ஆரிய முனிவர்களும் ரிஷிகளும் அவர்களால்

சொல்லப்படுகின்றவர்களும் யார் என்று முதலில் ஆராய வேண்டும். பண்பாடு சிறிதும் இல்லாதவரும், தகுதி இல்லாதவருமே அவ்வாறு கொல்லப்படுகின்றனர் என்று அவர்களின் புராணங்கள் இதிகாசங்களைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வாறே பயனைத் தந்துவிடும் என்பதில் பொருளே இல்லை. ஒருவர்க்கு அருளுதலும் ஒருவர்மேல் வெகுளு வதும் ஏற்படுவது எந்த மனத்தில்? பற்று நிறைந்த மனத் தில். பற்றுடையான் சான்றோன் அல்லன். ஆரியர் சொல் லும் இக்கதைகள் அறிவின் அடிப்படையில் எழுந்தன அல்ல. அவை வெறும் பூச்சாண்டிகள்.

நாத்திகன்: உலகில் என்னாது நிலத்து என்று வள்ளுவர் சொல்லுவானேன்?

உரையாசிரியர்: மறைந்து வருகின்ற— மறைந்தொழிந்த மொழியைச் சொல்ல வந்தவர், என்றும் நிலைத்து நிற்கின்ற இடையில் ஒருவரால் தோன்றியதல்லாத உலகத்தையே கூறவேண்டும். அவ்வாறு பொருள்படுவது நிலம். நில் என்ற முதனிலையின் பொருளை நோக்குக.

ஆத்திகன்: மாந்தர் என்று வள்ளுவர் சொன்னது கொண்டு தமிழ்த்துறவிகளையே அவர் சொன்னார் என்று கொள்வது எபபடி?

உரையாசிரியர்: நிறைமொழி என்ற அடையால்.

—(குயில் 6-9-60)

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(பி.மா) குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

பொருள்: குணம் என்னும்— காமம் வெகுளி மயக்கம் என்று சொல்லப்படுகின்ற, குன்று—மலைத்தலையில், ஏறி நின்றார்—ஏறி அசைவின்றி நின்றாரது, வெகுளி— அம்முக்

குணங்களில் ஒன்றான வெகுளியை, கணமேயும்— கண் இமைக்கும் நேரங்கூட, காத்தல் அரிது— அவ்வெகுளப் பட்டார்க்குத் தீமை உண்டாகும்படி வைத்துக் காப்பது **அரிது**. (இல்லை என்றபடி)

கருத்து: முக்குணங்கட்கும் அப்பாற்சென்ற மெய்யுணர்வுடையார் தம்பால் ஒரோவழித் தோன்றும் வெகுளியை அதே அதே கணத்தில் அடக்கிக் கொள்வார்கள்.

குணம் மூன்று: காமம், வெகுளி, மயக்கம். இவற்றை முறையே சத்துவம், இரசசு, தமசு என்பர் வடவர். இப் பண்புகளைத் தாண்டிய நிலையே மெய்யுணர்வு நிலை என்று கூறும் எண்ணூல்.

ஒன்றாய் எங்கும் பரந்து நித்தியமாய்
அறிதற் கெளிதாய் முக்குணம் அன்றி
பொறியுணர் விக்கும் பொதுவும் அன்றி
எப்பொரு ளுந்தோன் றுதற்கிடம் அன்றி
அப்பொருள் எல்லாம் அறிந்திடற் குணர்வாய்
ஒன்றாய் எங்கும் பரந்து நித்தியமாய்
நின்றுள உணர்வாய் நிகழ்தரும் புருடன்

(மணிமே, சம. 226-232)

உலகுக்கு அறப்பணுவல் இயற்றுவார் வெகுளி மேற் கொள்ளின் அவ்வெகுளி, அவரிடமுள்ள எல்லாப் பண்பு களையுமே அழித்து விடும். ஆதலின், வெகுளி கணமேயும் காத்தல் அரிது என்றார்.

கணம் என்பது கண்ணிமைக்கும் நேரம். கண் முதனிலை. அது கணம் என ஈறு வேறுபட்டு நின்றதோர் ஆகுபெயராய் கண் இமைக்கும் நேரத்திற்கு ஆயிற்று, கபிலம் என்பதிற்போல. இதற்கு இவ்வாறே இலக்கணம் கூறினார் தொல்காப்பிய உரைகாரரும். கணம் என்ற சொல் வடமொழியில் க்ஷணம் ஆக்கப்பட்டது, கடைக்கண்— கடாக்ஷம் ஆக்கப்பட்டது போல.

அரிது— இன்மை குறித்தது. குணம் வடசொல் என்று கூறி இழுக்கடைவர் வடவர். குண்டு என்றதன் அடியாகப் பிறந்த தூய தமிழ்ச் சொல் அது. இவ்வாறு மறைமலையடிகளாரும் கூறினார்கள். குண்டு—தேங்குமிடம்; அறிவின் நோக்கம் அஃதே குணம் என்க. இச்செய்யுட்குப் பரிமேலழகர் கூறிய உரை தம் பயனற்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. துறவிக்குச் சினம் உண்டாகும், அச் சினம் சிறிதுநேரமே இருக்குமாயினும், எதிரியை அழித்து விட்டுத்தான் மறுவேலை பார்க்கும். ஆதலால் வந்தேறிகள் காட்டும் பூச்சாண்டிகளுக்கு நீங்கள் நடுங்கி அவர் மகிழும் வண்ணம் நடந்து கொள்ளுங்கள் என்பார், அவ்வாறு பொய் யுரை கூறினார் என்க.

இக்குறட்பாவுக்கு உரைக்கப் பெற்ற உரைமேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரையாசிரியர் கூறிய விடையும் வருமாறு:

நாத்திகன்: குணத்தைக் குன்று என்றது என்ன?

உரையாசிரியர்: மனம் தன்னிலை நிற்றல் பொருள். அது பொறிவழிச் செல்லுங்கால் மனக்கோட்டம் எனப்படும். முக்குண வடிவான மனம் அசைதல் கூடாது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். ஆதலால் குணத்தை அசைவில்லாத குன்று என்று கூறினார்.

நாத்திகன்: ஏறி நின்று என்றது என்ன?

உரையாசிரியர்: மனம் இடம் விட்டு அசையாது நிற்றலை அவ்வாறு கூறினார். நிற்றல்— நிலைத்தல்.

ஆத்திகர்: கணமேயுங் காத்தல் அரிது என்றால் ஒரு கண நேரமும் தாழ்க்காமல் குற்றம் புரிந்தாரை ஒழித்து மறு வேலை பார்ப்பார்—நல்லவாறு நடந்து கொண்டவர்களை ஒரு கண நேரமாவது தாழ்க்காமல் அவர்க்கு மாடி வீடு உண்டாகும்படி செய்து விடுவார்கள் என்பது பொருள் அல்லவா?

உரையாசிரியர்: முக்குணம் மாறும் இயல்புடையது. இதனால்தான் முல்லானைப் பாடும்போது,

காலையில் ஒன்றாவர் கடும்பகலில் ஒன்றாவர்.
மாலையில் ஒன்றாவர் மனிதரெல்லாம்—சாலவே
முல்லானைப் போல முகமுமகமும் மலர்ந்த
நல்லானைக் கண்டதில்லை நாம்

என்று முக்குண இயல்பை விளக்கியருளினார். அவ்வாறு குணம் மாறுதல் அடையும் போது, அதாவது வெகுளி தலை காட்டுங்கால் அதை அதே கணத்தில் இல்லாமற் செய்து விடுவார்கள் தமிழ்ச் சான்றோர் என்றார் வள்ளுவப் பெருந்தகை.

ஆத்திகன்: காத்தல் அரிது என்றால்?

உரையாசிரியர்: இருக்கும்படி விட்டு வைப்பது இல்லை என்பது பொருளாகக் கொள்க.

—(குயில் 13-9-60)

அந்தண ரென்போர றவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

(பி. மா.) எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்
அந்தணர் என்போர் அறவோர்.

பொருள்: எவ்வுயிர்க்கும்— எவ்வுயிர்களிடத்திலும், செந்தண்மை பூண்டு ஒழுகலான்—செவ்விய அருளைப் பூண்டொழுகும் காரணத்தால், அந்தணர் என்போர்—அந்தணர் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் தமிழ்ச் சான்றோர், அறவோர்— துறவறத்தினர்.

கருத்து: தமிழ்ச் சான்றோர் எவ்வுயிர்கண் மாட்டும் அருளுடையர் ஆதலின் அவர் இல்லத்துறவிகளே.

பூணல்—நோன்பாக நோற்றல் என்றவாறு. அந்தணர்—அழகிய தட்பத்தையுடையார், ''தட்பம்'' அருள் என்ற

வாறு. அந்தணர் என்பதிலுள்ள அந்தண்மை என்பது தமிழில் பல சொற்களுக்கு அடையாக வருவதுண்டு. அவை அந்தண் காவிரி, அந்தண் கூடல், அந்தண் பாதிரி முதலியன. இவற்றை யறியாது, அந்தணர் என்பதற்கு வேதாந்தத்தை அணவுவார் என்று கூறும் குறிகெட்டவர்களும் உளர்.

இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன் : அந்தணர் என்ற சொல் இப்போதுள்ள பார்ப்பனரைக் குறிக்கின்றதா?

உரையாசிரியர் : இல்லை.

ஆத்திகன் : பின்னையேன் பார்ப்பனரை அனைவரும் அந்தணர் என்று அழைக்கின்றனர்?

உரையாசிரியர் : அனைவருமா?

ஆத்திகன் : பெரும்பாலோர்.

உரையாசிரியர் : பெரும்பாலோரா?

ஆத்திகன் : சிலர்

உரையாசிரியர் : சிலரா?

ஆத்திகன் : பின் என்ன?

உரையாசிரியர் : அறிவற்ற சிலர் என்று கூற வேண்டும்.

ஆத்திகன் : அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்கள். அது ஏன்?

உரையாசிரியர் : அறிவற்ற சிலர் ஏன் பார்ப்பனரை அந்தணர் என்கின்றனர் என்பதா உம் கேள்வி?

ஆத்திகன் : அறிவற்றவர் ஆதலின் அவ்வாறு சொல்கின்றார்கள் போலும்.

உரையாசிரியர் : இப்போதுள்ள பார்ப்பனர் தம்மைப் பூசுரர் (உலகின் தேவர்) என்றும் சொல்லிக் கொள்கின்ற

னர். இது ஏமாற்று. அவ்வாறே தமிழர் சிலரும் சொல்கின்றனர். இது அறிவின்மையின் பயன். அந்தணர் என்பவர் துறந்தோர் என்று வள்ளுவர் கூறியிருக்கவும் இவரா அவரா என்பது சரியா? எண்ணுக.

நாத்திகன் : துறந்தோராவார் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுதல் வேண்டுமோ?

உரையாசிரியர் : தன்னலத்தின் பொருட்டுப் படிற்றொழுக்கம் பூண்டுள்ளாரும் உலக குரு என்று தம்மைச் சொல்லிக் கொள்வோரும் மடத்தலைவர், தம்பிரான்கள் என்று சொல்லிக் கொள்வோரும் துறந்தவர் தாமோ?

கொலை வேள்வி செய்வோனும் அதை ஆதரிப்போனும் துறந்தவனா? அந்தணனா? கோயில் திருவிழாத் தொடங்க எருமை மாட்டை வெட்டச் சொல்லும் பாவி துறந்தவனா? இல்லை என விடுக்க.

—(குயில் 20-9-60)

அதிகாரம் 4 : அறன் வலியுறுத்தல்

அஃதாவது: அறம், ஆற்றல் உடையது என்பதைக் கூறுவது. முன்னர் அறப்பனுவல் ஆசிரியரின் மேன்மையையும், அவ்வறநூற் பெருமையையும் கூறினார். இவ்வதிகாரத்தில் அறம் மிக ஆற்றலுடையது, அதை மக்கள் மேற்கொண்டே ஒழுகுதல் வேண்டும் என வற்புறுத்தினராயிற்று. அறம் அறன் ஆனது, மொழி இறுதிப் போலி.

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(பி.மா) சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு உயிர்க்கு ஆக்கம் எவன்,

பொருள்: சிறப்பு ஈனும்— மெய்யுணர்வையும் நல்கும், செல்வமும் ஈனும்— கல்விச் செல்வம், பொருட்செல்வம் எனப்படுவதோர் செல்வத்தையும் நல்கும், அறத்தின் ஊங்கு— அறத்தை விட, உயிர்க்கு—மக்கட்கு, ஆக்கம் எவன்— உயிர்நிலை வேறு எது?

கருத்து: அறமுடையான் அனைத்தும் உடையான். சிறப்பு—பொதுமையற்றது. அஃது மெய்யுணர்ந்த நிலை ஆதலின், சிறப்பு மெய்யுணர்வு எனப் பொருள் கொள்ளப்பட்டது. ஆக்கம்—உயர்நிலை. கடையில் நின்ற ஓகாரம் அசை. ஊங்கு—ஐந்தனுருபு எல்லைப் பொருளில் வந்தது.

இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன்: அறன் வலியுறுத்தல் என்பதன் பொருள் விளங்கவில்லை.

உரையாசிரியர்: அறத்தின் ஆற்றலை (அறிந்து பின்பற்றும்படி) வலியுறுத்துவது.

நாத்திகன்: சிறப்பு என்றால் மெய்யுணர்வா?

உரையாசிரியர்: உரையை முழுதும் படித்துப் பார்க்க.

ஆத்திகன்: ஆக்கம் என்ன பொருள்?

உரையாசிரியர்: ஆக்கம், ஆக்கப்படுவதோர் செல்வத்திற்கு ஆனது காரணப் பெயர். செல்வம் ஒருவனுக்கு மேன்மையளிப்பதால் உயர்நிலை எனப் பொருள் கூறப்பட்டது.

ஆத்திகன்: அறம் என்றால் என்ன?

உரையாசிரியர்: மாசற்ற மனத்தால் நினைப்பனவும், நினைப்பின் பயனாக வரும் செயல்களும் — அறம், அறச் செயல்கள் என்று அறிக.

நாத்திகன் : மாசற்ற மனம் என்பது வடவர் கூறும் ஆத்மாவா?

உரையாசிரியர் : வடவர் சொல்லும் ஆத்மா என்பது பொருளற்ற சொல். மனம் உள்ள பொருள், அதன் துயரம், மக்கள் பெறத்தக்க பேறு என்பதே திருவள்ளுவர் கருத்து.

—(குயில், 27-9-60)

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(பி.மா) ஆக்கம் அறத்தின் ஊங்கு இல்லை, கேடு அதனை மறத்தலின் ஊங்கு இல்லை.

பொருள் : அறத்தின் ஊங்கு—அறஞ் செய்வதை விட, ஆக்கமும்—ஒருவனுக்கு மேன்மை நிலையும் இல்லை—உண்டாதல் கிடையாது, அதனை—அந்த அறம் செய்வதை, மறத்தலின் ஊங்கு—மடமையால் மறந்து விடுவதைவிட, கேடு இல்லை—கேடான நிலை கிடையாது.

கருத்து : அறஞ்செய மறப்பதைவிட கேடான நிலை இருக்க முடியாது.

அறத்தின் பயன் முன்னும் கூறியவர் பின்னும் அதைக் கூறிய தென்ன எனில், அதனை மறத்தலினால் வரும் கேட்டினைத் தெளிவுறுத்த என்க.

இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு :

ஆத்திகன் : இங்குக் கூறப்பட்ட மறதி பற்றி விளக்குக.

உரையாசிரியர் : அறம் செய்ய அட்டியில்லை. ஆனால் செய்யாதிருந்து விட்டதற்கு மறதிதான் காரணம் என்பவன் ஊரை ஏமாற்றுகிறவனே. தூய மனமானது. தூய செயலைச் செய்ய மறந்ததற்குக் காரணம் என்னவாயிருக்க

வேண்டும்? அவன் உள்ளம் கேடுற்றிருக்க வேண்டும். இருக்கவே, கெட்ட செயலை—பாவச் செயலைச் செய் திருக்க வேண்டும். அதனால் விளைவது கேடே.

நாத்திகன் : ஊங்கு என்பது என்ன?

ஆசிரியர் : பார்க்கிலும், காட்டிலும் என்ற பொருளை யுடையது. ஐந்தாம் வேற்றுமை உருபாக நின்றது, இடைச் சொல்.

—(குயில் 4-10-60)

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

பொருள் : செல்லும் வாய் எல்லாம்—மனஞ் செலுத்து மிடத்தும், சொற் செல்லுமிடத்தும், மெய் செல்லுமிடத்தும் ஆகிய எல்லாவிடத்திலும் ஒல்லும் வகையான்—அவரவர் கட்கு இயன்ற வகையால், ஓவாது—இடையறாது, அறம் வினை—அறச் செயல்களை, செயல்—செய்க.

கருத்து : எல்லாவிடத்திலும், இயன்றவகை இடையறாது அறம் செய்க.

கால்வாய் வெட்டிக் கங்கையைக் கொணர்வான் ஒருவன் செயலும் அறச் செயலே. இல்லார்க்கு ஒரு பிடிச் சோறிடுவான் ஒருவன் செயலும் அறச் செயலே. இவற்றில் எவனுக்கு எது இயலுமோ அதைச் செய்க என்பார் ஒல்லும் வகையான் என்றார். பெரிதோ சிறிதோ இடையறாது செய்க. இன்றேல், அல்வழிப்படும் மனம் என்பார் ஓவாதே என்றார். செயல் வியங்கோள் வினைமுற்று.

இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு :

ஆத்திகன் : ஒல்லும் வகை?

உரையாசிரியர் : கூடிய மட்டும்

நாத்திகன் ; எல்லாவிடத்தும் என்று வற்புறுத்திய தென்ன?

உரையாசிரியர் : நடையிற் கிடந்த வைக்கோலை அங்கிருந்த மாட்டிற்கு எடுத்துப் போட்டான். அவன் கடையிற் குந்தி கள்ள வாணிகம் செய்தால் என்ன பயன்?

ஆத்திகன் : சிவன் கோயிலுக்குப் போக வேண்டிய நேரத்தில் சிற்றிலக்கண வினா விடை படித்தல் அறமா?

உரையாசிரியர் : கோயிலுக்குப் போகாதிருப்பதும், சிற்றிலக்கணம் படிப்பதுமாகிய இரண்டும் அறமே.

—(குயில் 4-10-60)

மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற.

(பி. மா) மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன் பிறகு ஆகுலம் நீர.

பொருள் : மனத்துக்கண்—மனத்தில், மாசு இலன் ஆதல் அனைத்து அறன்—மாசு இலாதவன் ஆகுவது எந்த அளவோ அந்த அளவுக்கு அவன் அறமுடையவன். பிற—மாசு உளன் ஆகுதல் எல்லாம், ஆகுல நீர—பொய் விளம்பரத் தன்மையுடையவை.

கருத்து : அறம் என்பது மனமாசு அற்ற நிலை. மாசு என்பது குற்றம், தீயன எண்ணுதல். தூய உள்ளத்தானன்றித் தீய உள்ளத்தால் ஒன்று செய்து செல்வான் அது தூயதாகக் காட்டப் பெரிய விளம்பரம் செய்வான். அதையே ஆகுலநீர என்றார். ஆகுலம்—அகும் கலித்தல் என்றதன் மரூஉ. மனம் அத்து, கண், அத்துச்சாரியை. கண் ஏழனுருபு. மனம்—பொறிவழிச் செல்லாது ஒரு வழி மன்னுவது எது? அது மனம். காரணப் பெயர்.

முழுமை அறம் என்பது மெய்யுணர்வு பெற்ற நிலை. அஃது வீட்டு நிலை எனப்படும். முழுமையற்ற அறத்தையே இங்கு மாசு இலன் ஆதல் அனைத்து என்றுரைத்தார். மனத்துக்கண் எவ்வளவு மாசு தீர்ந்ததோ அவ்வளவு அறம் என்றார் என அறிதல் வேண்டும். அனைத்து—அத்தனைத்து

மரூஉ மொழி. பிற—பலவின் பால் குறிப்பு வினையாலணை யும் பெயர். எழுவாய். நீர—பலவின்பாற் குறிப்பு வினை முற்று. மாசு தீர்ந்த மனம் அறம் என ஆசிரியர் அருளிய இது, இதற்கு முன் உலகுக்கே தெரியாத ஒன்று.

இவ்வுரை மேல் எழும ஆத்திக நாத்திக வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு :

ஆத்திகன் : மாசிலன் ஆதல் அனைத்து அறம் என்பதை விளக்குக.

உரையாசிரியர் : அனைத்து என்பது அத்தனை அல்லது அவ்வளவு என்றபடி. எவ்வளவு மாசு போயிற்றோ அவ்வளவு அறம் என்றாம்.

நாத்திகன் : அறம் என்பது இன்னது என்று விளக்கினார் திருவள்ளுவரையன்றி வேறெவரும் இலரோ?

உரையாசிரியர் : இவ்வகையில் விளக்கினார் திருவள்ளு வரே. வேறுவகையில் விளக்கினார் சாக்கரிட்டீசு என்பார். அவர் விளக்கியது: அறம் என்பது இன்பத்தைப் பெறுவ தோர் ஆற்றல் என்பது. இவ்வாறு கூறியதில் அறம் என்ப தன் விளக்கம் நிரம்பாமை அறிக.

ஆத்திகன் : முழுமை அறம் என்பது மெய்யுணர்வு என்றும் அதுவே வீடு பெற்ற நிலை என்பதும் உங்கள் கருத்தா?

உரையாசிரியர் : மாசற்ற மனம் மெய்யுணர்வு என்பது என் கருத்து. மெய்யுணர்வு பெற்ற நிலையே வீட்டு நிலை என்பது எண்ணூல் (சாங்கியம்) கருத்தாகும்.

—(குயில் 11-10-60)

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

(பி. மா) அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

பொருள் : அழுக்காறு—பிறர் ஆக்கங்கண்டு பொறாமையும், அவா—ஐம்புலன்கள் மேலும் செல்லுகின்ற அவாவும், வெகுளி—அவாக் காரணமாக எழும் சினமும், இன்னாச் சொல்—இனிமையில்லாத கடுஞ் சொற்களைச் சொல்லுதலும் ஆகிய நான்கும் இந்த நான்கு குற்றங்களையும், இழுக்கா—நீக்கி, இயன்றது—நடந்தது எதுவோ அது, அறம்—அறமாம்.

கருத்து : மனக் குற்றங்களின் வழி இயல்வது அறமாகாது. இழுக்கா—செய்யா என்னும் வாய்ப்பாட்டு இறந்த காலத் தெரிநிலை வினையெச்சம். இழுக்கி என்பது பொருள். இழுக்கி—நீக்கி.

இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன் : இழுக்கா வியன்ற · தறம் என்பதை வேறு வகையில் பிரித்துப் பொருள் கூறலாமோ?

உரையாசிரியர் : ஆம், இழுக்கு ஆ இயன்றது அறம் என்ற பொருள் கூறலாம். அப்படிக் கொள்ளும்போது ஆ என்பது ஆக என்பதின் கடைக்குறை என்க. அழுக்காறு முதலிய நான்கும் குற்றமாக வைத்து மற்றப் பண்புகளின் வழியே தோன்றுவது அறம் என்று விரித்துரைக்க.

நாத்திகன் : அவா இன்றேல் செயல் எவ்வாறு தோன்றும்?

உரையாசிரியர் : அவா என்றது இங்குத் தன்னலத்தின் பொருட்டே பொருள்களின் மேற் செல்லும் பேராசையை! அத்தகைய அவா இன்றிச் செயல் செய்தல் வேண்டும். செய்யவே குற்றம் நிகழாது.

ஆத்திகன் : வெகுளி நீங்கவே இன்னாச்சொல், வெகுளியால் மட்டும் எழும் எனல் வேண்டாம். அஃதின்றியும் தோன்றுதல் கூடும். கேலிச் சொல் முதலியவும் இன்னா செய்தலினால் அவையும் இன்னாச் சொற்களே ஆகும்.

—(குயில் 18-10-60)

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

(பி.மா) அன்று அறிவாம் என்னாது அறம் செய்க மற்று அது
பொன்றும் கால் பொன்றா துணை.

பொருள்: அன்று அறிவாம்—உடல் அழியும் காலத்திற் பார்த்துக் கொள்ளுவோம், என்னாது—என்று எண்ணாமல், அறம்செய்க—இடையறாது என்றும் அறத்தைச் செய்து கொண்டிருக்க, அது—ஏனெனில் அவ் வறாமானது, பொன்றுங்கால்—உடல் அழியும் நேரத்தில், பொன்றாத் துணை—மற்றோர் அழியாவுடம்பு.

கருத்து: பருவுடல் போயினும் புகழுடல் தருவது அறம். துணை—அறம் செய்தற்கும், உயிர் மேவுதற்கும் துணை யாவது. ஆதலின் உடம்பைத் துணை என்றார். பொன்றாத் துணை—கெடாத உடம்பு, புகழ் என்றவாறு. மற்று—அசை. பொன்றுங்கால்—பெயரெச்சத் தொடர். கால்—காலம், கடை—குறைந்தது.

சாதலின் இன்னாதது இல்லை என்றார் இவ்வாசிரியர். அச்சாக்காட்டுத் துன்பம் ஏற்படும்போது அதை நீக்குவது மருத்துவனாலும் ஆகாது. ஆயின் அவன் தேடியுள்ள புகழே நீக்க வல்லது. அஃதேயுமின்றி அப்புகழ் அத்துன்பத்தை இன்பமாக்கி விடும். இவ்வுடம்பு செல்லினும் செல்லுக இதோ நிலைபெறுகின்றது புகழுடம்பு என்றெண்ணி அமைதியடைவான் என்பார் இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

இதற்குப் பிறரெல்லாம் உடம்பை விட்டு உயிர்போகும் பொழுது அறம் அவ்வுயிருக்குத் துணையாகச் செல்லும் என்று கருதும்படி பொருள் கூறுவார். சமய நிலை ஒன்று, சமயம் அற்ற நிலை ஒன்று. இரண்டுக்கும் பொதுவாக நின்று செய்யுள் செய்தார் ஆசிரியர். போம் உயிருக்கு அறம் துணை செல்வது என்பது சமயநிலைச் சார்பாகும் என விடுக்க.

இக் குறட்பாவின் உரை மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும், உரையாசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன் : பொன்றும் கால் பொன்றாத்துணை என்றதின் பொருள் உயிர் சென்று மற்றோர் உடலிற் சேரும் போது என்று பொருள் கொள்வது நன்று அன்றோ?

உரையாசிரியர் : மறுபிறப்புக் கொள்கையை நிலைநாட்ட எண்ணும் மதக் கணக்கர் அவ்வாறு பொருள் கொள்வார் எனினும் அவர் கூறும் பொருளுக்கு ஏற்ப என்ன இருக்கிறது இங்கே? பொன்றுதல்—கெடுதல். எது கெடுதல்? உடம்பு தானே? உயிரா கெடும்? அல்லது பொன்றுதல் எனின் உடம்பை விட்டு உயிர் நீங்குதல் என்று பொருள் கொள்ள வேண்டும் எனில் அவ்வாறு நலிந்து பொருள் கொள்ள வேண்டிய தேவை என்ன வந்தது? மதக் கணக்கருக்கு ஆக்கந்தேடித் தர வேண்டியவர் உரையாசிரியரா? சரியன்று! நாம் சொல்லியுள்ள உரையை மற்றும் படித்துப் பார்க்க. அதுவே வள்ளுவர்உள்ளம் என்பதை நுணுகி ஆய்க.

அறத்தால் புகழ் வரும்! அறஞ் செய்தானுக்கு ஏற் பட்டுள்ள புகழை அவ்வறஞ் செய்தான் அறியும் சூழ்நிலை ஏற்படும். அவன் பருவுடல் அழியும் போது அவனுக்கு ஏற்பட்ட புகழ் அவனை நோக்கித் தேறுதல் கூறும் 'நீ சாக வில்லை; இருக்கின்றாய்; எப்போதும் இருப்பாய்' என்று! மக்கள் தேடத் தக்கதும் இதுதானே!

—(குயில் 25-10-60)

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

(பி. மா) பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை
அறத்து ஆறு இது என வேண்டா.

பொருள் : சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான்— பல்லக்குச் சுமந்து போவானும் ஏறிச் செல்வானுமாகிய

இருவரினது, இடை—நடுவில் நின்று, அறத்து ஆறு இது என வேண்டா—அறத்தினது பயன் இதுதான் என்று பணிகளில் உயர்வு தாழ்வு காண்பது விரும்பத் தக்கதன்று.

கருத்து : செய்யுந் தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை.

ஏறிச் செல்வான் உயர்ந்தான் ஆதலுமில்லை; சுமந்து செல்வான் தாழ்ந்தானாதலுமில்லை. அஃதேயுமன்றி ஏறிச் செல்லும்நிலை உயர்ந்ததுமில்லை; சுமந்து செல்லும் நிலை தாழ்ந்ததுமில்லை. முயற்சி மிகுதியாலும் குறைவாலும் ஏற்படும் அன்றைய நிலை வேறுபாடு அது. முயற்சி திருவினை ஆக்கும் அன்றோ! இவற்றையெல்லாம் கருதாது சில சமயத்தவர் கூறுவதை மேற்கொண்டு மயங்குதல் விரும்பத் தக்கதாமோ! வந்தேறிகள், முற்பிறப்பில் தம்மைக் கருதி நன்கொடை கொடுத்து ஏமாறுதலாகிய அறத்தைச் செய்தால், வரும் பிறப்பில் உயர்நிலை அடையலாம் என்று கூறி மறுபிறப்புக் கொள்கையை இந்நாட்டிற் பரப்பி நம்பச் செய்தார்கள். அதை ஆசிரியர் முற்றும் மறுப்பார் இவ்வாறு கூறினார். இடை—நடுவிடம் வேற்றுமையுருபன்று. பொன்றாத்துணை பெயரெச்சத் தொடர். பொன்றா ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். சிவிகை—விசிகை எழுத்து நிலைமாறிய போலி, சிவிறி—விசிறி போல. விசித்தல்—இழுத்துக் கட்டுதல், சிவிகைக்கு ஆகுபெயர்.

அறத்தாறு இது என வேண்டா—என்றது இன்னதல்ல இதுவென மொழிந்தது.

இக்குறட்பாவின் உரைமேல் எழும் ஆத்திக நாத்திக வினாக்களும் உரையாசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன் : ஆத்திகர் கொள்கைக்கும், ஆரியர் நான்மறைக் கொள்கைக்கும் பரிமேலழகர், மணக்குடவர் முதலிய உரையாசிரியர் கொள்கைக்கும் இழுக்குத் தேடும் முகத்தால் இக்குறட்பாவுக்கு இவ்வாறு உரை கூறியது பொருந்துமா?

உரையாசிரியர் இவ்வாறு நாம் கூறிய இவ்வுரை ஒன்றுதான் பொருந்தும்! இதுவே வள்ளுவர் உள்ளமும் ஆகும் என்க. இக்கருத்தில் இக்குறட்பாவை வள்ளுவர் அருளிச் செய்ய வில்லை எனில் அவர் உலகினர்க்கு இன்றியமையாது சொல்ல வேண்டிய ஒன்றைச் சொல்லாதொழிந்தார் என்ற பழி அவருக்கேற்படும். குறளில் எல்லாம் உண்டு என்ற சொல்லுக்கும் இழுக்கு ஏற்பட்டிருக்கும். செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை என்ற உண்மையை இக்குறட்பாவில் அன்றி வேறு எங்கும் வள்ளுவர் கூற வில்லை.

—(குயில் 1-11-60)

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(பி. மா) வீழ்நாள் படாஅமை நன்று ஆற்றின் அஃது
ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல்.

பொருள் : வீழ் நாள் படாஅமை—(அறம்) செய்யாமற் கழிந்த நாள் இல்லாமல், நன்று—அறத்தை, ஆற்றின்—செய்து வருவானானால், அஃது—அந்த அறமானது, ஒருவன்—ஒருவனின், வாழ்நாள் வழி அடைக்கும் கல்—வாழ் நாட்கள் அழிந்தோடாமல், சாகாமையைத் தேக்குவதோர் அடை கல்.

கருத்து : அறம் வாழ்நாள் கழிந்து போகாமல் சாவாமை யைத் தேக்கி வைப்பதோர் அடைகல்.

இடைவிடாது அறமே செய்து கொண்டிருப்பான் ஒருவனின் வாழ்நாள் வீணிற் கழியாது எனவே, அவனுக்கு மூப்புவராது, சாக்காடு அண்டாது என்றால், ஒருவன் அறமே செய்து நாட்களைப் பயனுள்ளனவாக்கினால் அந் நாட்கள் மட்டும் கழியாது நிற்குமா? அதனால் மூப்பு வராமற் போகுமா? சாக்காடு அண்டாதோ?—என்று கேட்கலாம்.

இடைவிடாது அறமே செய்வான் ஒருவனுக்கு மட்டும் வாழ்நாள் கழிவதில்லை. அந்த அறம் அவனுக்குச் சாகாமையைச் சேர்க்கின்றது என்று நம்ப வேண்டும். அவ்வாறு நம்புவோன் பிழை செய்து விட்டவனாகான். தீமைக்குட்பட மாட்டான். அவன் சாகான். என்றும் இன்புற்றிருப்பான். அவனால் உலகம் இன்புறும், துன்பு நீங்கும்.

யாண்டுபல ஆக நரையில ஆகுதல்
யாங்காகியர் என வினவுதி ராயின்
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான் கண் டனையர் என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே (புறம். 192)

இல்லந் துறந்த புலவன் ஒருவன் இடைவிடாது அறமே செய்து வந்தான்; அதுவேயுமன்றி அவன் ஏவல் கேட்போர் எல்லோரையும் அறமே செய்விப்பதோர் அறத்தையும் செய்தான்; அதுவுமேயன்றி அரசனையும் அறந்தவறாத வனாக்குவதோர் அறத்தையும் செய்தான்; அவன் மனைவி மக்களையும் அறிவு நிரம்பியவராதற்குரிய அறப் பண்பாடும் மிக்கிருந்தான்; ஆன்றவிந்தடங்கிய சான்றோர் வாழும் ஊராகத் தன்னூரை ஆக்குவதோர் பேரறத்தையும் செய்து வந்தான். அவ்வாறாக அவனை நரையே அடையவில்லை. என்ற கருத்துக்களைத் தன்னுட் கொண்டமைந்தது இச்செய்யுள். இவ்வாறு சொன்னால், அவ்வறவோனுக்குப் பிறகு நரைக்காதா? அவன் சாகமாட்டான் என்று நம்புவது எப்படி?—என்று கேட்கலாம்.

நரை என்பது காலத்தால் ஏற்படும் மாறுதல் என்பார் மேற்புல் மேய்வார். அவ்வாறு கூறுவது தவறு. ''காலம்'' என்பதோர் தனிப் பொருள் இல்லை என்பதை ஊன்றி உணர வேண்டும். ஆனால் பொருளின் நிகழ்ச்சி என்பது ஒன்று உண்டு. மகன் ஒரு பொருள். அப்பொருளின்

நிகழ்ச்சி என்பது அவனின் தொழில்கள். அத்தொழில்கள் அறம் பற்றியவை, பாவம் பற்றியவை என இருவகைப் படும். பாவம் பற்றிய தொழில்கள் விரைவும் குறியும் அற்றவை. அறம் பற்றிய தொழில்கள் விரைவுடையவை, குறியுள்ளவை (குறி—இலக்கு).

வண்டியுருளையின் ஆரையின் விரைவுக்கு உலகின்காலக் கணக்குச் செல்லும். மகன் என்பதோர் உயிர் உருளையின் ஆரையின் விரைவுக்குஅது செல்லாது. அவ்வறவோன் அறச் செயலின் விரைவு தன் இலக்கை அடையும் வரைக்கும் நிற்காது.அவ்விடத்தில் உலகின் காலக் கணக்குப் பயனற்றுப் போகும். ஏனென்றால், காலம் என்பதோர் தனிப்பொருள் இல்லை. பொருளின் நிகழ்ச்சி என்பது உண்டு.

இறப்பே நிகழ்வே எதிரது என்னும்
திறத்தியல் மருங்கில், தெரிந்தனர் உள்ளப்
பொருள் நிகழ்வு உரைப்பது காலம் ஆகும்

என்பதை ஊன்றியுணர்க.

அம்ருதம் உண்ணுபவர்கள் சாகாதிருந்தனர் என்னும் பொய்யான புராணக் கருத்தை நம்புவாரை அப்பாழுங் கிணற்றினின்று மீட்டு நன்னெறி காட்டினார் இப்பாட்டி னால் ஆசிரியர்.

வீழ்நாள், வாழ்நாள் வினைத்தொகை நிலைத்தொடர் கள்.படாஅமை- உயிரளபடை. நன்று—அறம் என்றவாறு. வழியடைத்தல்—அது செல்லும் வழியடைத்துச் சாகாமை காத்தல். ஆற்றின்-செயின் என்னும் வாய்பாட்டு எதிர் கால தெரிநிலை வினை யெச்சம்.

அறம் பிறவியை அகற்றும் என்ற கருத்தில் பிறரெல் லாம் நலிந்து பொருள் கூறி இழுக்குவார். அவர்தம் சமயம் நோக்கி மக்களை இழுக்க முயல்வார் என விடுக்க.

—(குயில் 8-11-60)

அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(பி.மா) அறத்தான் வருவதே இன்பம் மற்றஎல்லாய்
புறத்த புகழும் இல.

பொருள் : அறத்தான்—நன்று ஆற்றுவதோர் ஆற்றலின் காரணமாக, வருவதே இன்பம்—வருவதே இன்பமாகும். மற்ற எல்லாம்—அறமல்லாத வழியில் செய்யப்படும் செயல் அனைத்தும், புறத்த—இன்பத்தின் புறமாகிய துன்பத்தின் பாற்பட்டவை, புகழும் இல—அச்செயல்களால் புகழும் ஏற்படா.

கருத்து : இன்பம் என்பது அறத்தால் வருவது.

அறத்தான்—ஆன் மூன்றாவதன் உருபு. முதற் கருவிப் பொருளது. இன்பம் என்பது காம நுகர்ச்சி என்றார் பரிமேலழகர். காம நுகர்ச்சி மட்டும் இன்பம் அன்று; ஈத்து வத்தலும் இன்பம்; குழந்தை மழலை கேட்டலும் இன்பம். மனமகிழ்ச்சியே இன்பம் என்க. இன்பம் காம நுகர்ச்சியே என்று பொருந்தாப் பொருள் கொண்டதால் அறத்தால் வருவதே இன்பம் என்பதற்கு இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பம் என நலிந்து பொருள் கொள்ள நேர்ந்தது. அது ஒழுக்கத்தின் பாற்பட்ட மனையாளோடு கூடிச் செய்யும் அறத்தாலும், இல்லந்துறந்து செய்யும் அறத்தாலும் இன்பம் வரும். மற்றெல்லாம்— மற்ற எல்லாம், அகரம் தொக்கது. புறத்த, இல—பலவின்பால் குறிப்பு முற்றுக்கள்.

—(**குயில்** *15-11-60*)

செயற்பால தோரு மறனே வொருவற்
குயற்பால தோரும் பழி.

(பி. மா) ஒருவற்கு செயற்பாலது ஓரும் அறனே
உயற் பாலது ஓரும் பழி,

பொருள் : ஒருவற்கு செயற்பாலது— ஒருவனுக்குச் செய்யத்தக்கது, ஓரும் அறனே—ஆராய்ந்து செய்யப்படும் அறமேயாகும், உயற்பாலது—நீக்கத் தக்கது, ஓரும்பழி— அவன் அறிந்த பழி.

கருத்து : தெரிந்து செய்யத் தக்கது அறம், தெரிந்து நீக்கத் தக்கது பழி.

ஓர்தல்—ஆராய்தல். ஓரும் அறன், ஓரும் பழி பெயரெச்சத் தொடர்கள். தெரியாது செய்யும் குற்றம் குற்றமன்று. தெரிந்து செய்வது குற்றம். ஆதலால் ஓரும் பழி என்றார். அவ்வாறே ஓரும் அறமும் கொள்க. அறம்—அறன். போலி. செயற்பாலது உயற்பாலது குறிப்பு வினைமுற்றுக் கள். அவை முதல் வேற்றுமையில் வந்தன. வினையாலணை யும் பெயர்கள். பழிக்குக் காரணமாகிய பாவத்தைப் பழி என்றார்.

இவ்வதிகாரத்தால் அறத்தின் பயன், மேற்கொள்ளும் முறை, அறம் இன்னதென்பது, செய்யவேண்டியதன் இன்றியமையாமை, இன்னது அறமன்று இன்னது அறம் என ஐயம் அறுப்பு, அறம் சாகாமை ஆக்கும் என்பது, அறமே இன்பம் என்பது ஆகியவற்றை விளக்கினார் ஆசிரியர்.

முடிந்த நான்கதிகாரங்களால் உலகின் தோற்றத் தையே கூறினார். என்னை? ஆதியினின்று உலகு விரிந்து, உணர்வை நாடி, மழையால் நிலை நின்று, சான்றோரால் காப்பாற்றத் தோன்றிய தோற்றத்தைக் கூறியதன்றி வேறின்றாதலின்.

—(குயில் 15-11-60)

அதிகாரம்-5 இல்வாழ்க்கை

அஃதாவது, மனையாளோடு கூடி வாழ்தலின் சிறப்பு.

"பாழே மடக்கொடி இல்லாமனை" ஆதலின், இல் என்பது மனையாளோடு கூடி வாழும் நிலையைக் குறித்தது. வாழ்க்கை என்றது வாழ்க்கைச் சிறப்பை. இல்லினது வாழ்க்கை என விரிக்க, ஆறாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்.

வாழ்வார்க்கு இன்றியமையா அறம் நிறைந்த பனுவலைத் துறந்தார் இயற்றி யருளியதாலும், மழையினாலும் மெய்யுணர்வு பெறுவதோர் வேட்கையாலும் நிலைபெற்ற தான இவ்வுலகின் தோற்றத்தைக் கூறியருளிய ஆசிரியர், சமயக் கணக்கர் மதி வழி கூறாது அறிவுடையார் இன்னது செய்வார், இன்னது விலக்குவார் என எடுத்துக் காட்டுதல் வாயிலாக இது பொருள் எனக்கூறுவாராகி முதற்கண் இல்வாழ்க்கையைக் கூறியருளினார்.

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

(பி.மா) இல்வாழ்வான் என்பான் இயல்பு உடைய மூவர்க்கும் நன்மை ஆற்றின் நின்ற துணை.

பொருள்: இல்வாழ்வான் என்பான்— மனையாளோடு கூடி வாழுகின்றவன் என்று சொல்லப் பெறுகின்றவன், இயல்பு உடைய—இயற்கைத் தொடர்புடைய, மூவர்க்கும்— அன்னை, தந்தை, ஆசிரியன் ஆகிய முத்திறத்தார்க்கும், நன்மை ஆற்றின் நின்ற துணை— அந்த முத்திறத்தார்க்கும் ஆன நல்லொழுக்க நெறிக்கு ஏற்ப நின்ற துணையாவான்.
கருத்து: இல்வாழ்வான் தாய், தந்தை, ஆசிரியர்க்கு நற்றுணையாதல் வேண்டும்.

தாய் தந்தை ஆசிரியன் மூவரும் இல்வாழ்வானுக்கு இயற்கை முறையில் அமைந்த தொடர்புடையாராதல் வெளிப்படை; பிறப்புத் தருதல், வளர்ப்புத் தருதல், அறிவு தருதல் ஆகிய மூன்றும் அம்மூவர்க்கும் உரியவையாதலின்.

மூவர் என்பவர், வடவர் கூறும் பிரமசாரி, வானப் பிரத்தன், சந்நியாசி என்றார் பரிமேலழகர். வருண முறையை எதிர்க்கும் திருவள்ளுவர் பிரமசாரி முதலிய மூவரை உட்கொண்டு செய்யுள் செய்வாரா?—பரிமேலழகர் தம் மதம் நோக்கித் தமிழரை வலிந்து இழுக்க முயல்வது வெளிப்படை. இவ்வாறு பொய்ப் பொருள் கூறிய அவர் மேற் செய்யுட்களிலும் இடர்ப்பட்டு, ஒரு பொய்யை மறைக்க மற்றொரு பொய் புகன்று செல்வது ஆங்கு ஆங்கும் காட்டப் பெறும்.

இல்வாழ்வான் அன்னைக்குத் துணையாவது என்பது, பிணி, மூப்பு, சாக்காடு நேராமல் உண்டி உடை உறையுள் உதவுவதோடு, தானும் நன்னெறி பற்றியே ஒழுகுதல்.

தந்தைக்குத் துணையாவது என்பது, உண்டி முதலிய உதவுவதோடு, 'இவன் தந்தை என்னோற்றான் கொல்'' எனும் சொல்லையும் ஏற்படுத்தல்.

ஆசிரியர்க்குத் துணையாவது என்பது ''தயையாக வித்தையைச் சாற்றினோன் ஒரு பிதா'' (குமரேச சதகம்) ஆதலின், அவனையும் தந்தை என எண்ணி, அவற்கு, உண்டி முதலியவற்றில் குறைபாடு இன்றித் துணை செய் வதும், அவன் பால் என்றும் நன்றியுடையனாதலுமாம். என்பான்— எனப்படுவான், செயப்பாட்டு வினை செய் வினையாய் வந்தது.

—(குயில், 22-11-60)

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

(பி. மா.) இல்வாழ்வான் என்பான் துறந்தார்க்கும்
துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும் துணை.

பொருள்: இல்வாழ்வான் என்பான்— இல்வாழ்வான் என்று சொல்லப் பெறுவோன், துறந்தார்க்கும்— இல்லம் துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும்— வறியவர்க்கும், இறந் தார்க்கும்—செத்தவர்க்கும், துணை — துணையாம்.

கருத்து: துறவிகட்கும், வறியவர்கட்கும், இறந்தார்க்கும் இல்வாழ்வான் துணை.

இங்குத் துறந்தார்க்கும் என்றது களைகண் ஆனவரால் துறக்கப் பட்டாரை என்றுகூறி இடர்ப்பட்டார் பரிமேலழ கர், துறந்தாரைச் சந்நியாசி என்று முற்பாட்டில் கூறிப் பொய்த்ததால். துவ்வாதவர் — சாப்பாடின்றி வருந்துப வர் ஆதலின் வறியவர் என்றாம்.

இறந்தார்க்கு இல்வாழ்வான் துணை செய்தலாவது: நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின் கட் செலுத்துவ தென்று பரிமேலழகர் உரை கூறினார். புலனழுக்கற்ற அந்தணாளரான கபிலரும் நகை செய்த கொள்கை இது.

புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது

(மணி. சிறை செய். 22,137)

வையம் உய்ய அவர் வகுத்த முறைகளை அவர் இறந்த பின் இவ்வுலகிற் பரப்புதலும், இயற்றிய நன்னூற்களை அவர் இறந்தபின் முடித்துப் பயன்படுத்தலும், பிறர் நலம் கருதித் தொடங்கிய பெருஞ்செயல், அரும் பொருள்களை அவர் இறந்தபின் நிறைவு செய்து உலகுக்குப் பயன் படுத்தலும்.

இறந்தார்க்குச் சேரவேண்டிய புகழை அவர்க்குச் சேர்ப்பதே இருப்பார் கடன் என்க.

இறந்தாரின் உடலை இடுகாடு சேர்ப்பதும் இருப்பார் செய்யும் துணை எனின் அதுவும் அமைவதே.

(குயில் 22-11-60)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.

(பி. மா) தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்
என்ற ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை.

பொருள் : தென்புலத்தார்— கடல்கோட்பட்ட குமரி நாட்டினின்று புகலென வந்தோரும், தெய்வம்— தெய்வங்களும், விருந்து— விருந்தினரும், ஒக்கல்—சுற்றத்தாரும், தான்—தானும், என்ற—என்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து—ஐந்து இடத்தும், ஆறு —செய்யும் அறநெறியை, ஓம்பல்—வழுவாது காத்தல், தலை— தலையாய அறமாம்.

கருத்து: தென்புலத்தார் முதலிய ஐந்திடத்தார்க்கும் இல் வாழ்வான் துணையாதல் வேண்டும்.

தென்புலத்தார் பற்றிய விளக்கம்:—

தொல்காப்பியப் பாயிரத்திற்கு நச்சினார்க்கினியர் உரை நவிலுங்கால் குமரி என்ற சொல்லுக்குக் குமரியாறு என்று பொருள் கூறினார். அவர் அவ்வாறு பொருள் கொண்டதற்குக் காரணம், நச்சினார்க்கினியருக்கு முன்னிருந்த இளம்பூரணரும், இறையனாரகப் பொருள் உரையாசிரியர் முதலியோரும், புறநானூற்றுப் புலவர் சிலரும் குமரியை ஓர் ஆறென்று கூறியிருந்ததேயாகும்.

தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்துக் குமரி என்பது ஓர் ஆறாக இருந்திருக்க வேண்டும் என்றே ஆராய்ந்துணரப் பட்டதாகும்.

அடியார்க்கு நல்லார் குமரிக்குத் தெற்கே ஒரு காலத் திருந்தொழிந்த நாற்பத்தொன்பது நாடுகளின் பெயர் களையும் பின்வருமாறு கூறினார்,

அக்காலத்துப் பஃறுளி என்னும் ஆற்றுக்கும், குமரி என்னும் ஆற்றுக்கும் இடையே எழுநூற்றுக்காவத ஆறும் அவற்றின் நீர் மலிவானென மலிந்த, ஏழ்தெங்க நாடும் ஏழ் மதுரை நாடும், ஏழ்முன்பாலை நாடும் ஏழ்பின்பாலை நாடும் ஏழ்குன்ற நாடும் ஏழ் குணகாரை நாடும் ஏழ் குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலால் குமரியாகிய பௌவம் என்றார் என்று உணர்க.

முன்னொரு காலத்தில் குமரி முனைக்குத் தெற்கில் குமரியாறு ஒன்று இருந்ததென்றும், அதற்குத் தெற்கே பல காவதத்துக்கப்பால் பஃறுளியாறு இருந்ததென்றும், இவ்விரண்டுக்கும் இடையே உள்ள நிலப்பகுதி கடலாற் பன்முறையாகக் கொள்ளப்பட்டதென்றும் அறியக் கிடக்கின்றதன்றோ!

அவ்வாறு பலகால் கடல்நீர் ஏறி விழுங்கப்படுந்தோறும், அந்நாடுகளில் இருந்தாராகிய தென்புலத்தார் என்றார் என்க.

தென்புலம்— தெற்கிடம்; ஏழ்தெங்கநாடு முதலிய நாற்பத்தொன்பது நாடுகள்.

தென்புலத்தார் என்பது பிதிரர் என்று பொருள் கூறினார் பரிமேலழகர். அவ்வாறு அவர் பொருள் கூறியதற்கு, இடைக் காலத்தில் வடவரால் புகுத்தப்பட்ட பொய்நூற்களே காரணம் என்க.

தென்புலம், தெற்கும் புலமும் ஆகிய இரு சொற்களால் ஆகியது. புலம்—இடம். புலம் என்பது அறிவுக்கும் பெயர் எனின், இங்குப் பொருந்தாமை அறிக.

கலை மலிந்த தென்புலவர் கற்றோர் தம் இடர்
தீர்க்கும், —கருப்பறியலூர். (சுந். தேவாரம் கருப்பறி)

என்ற இடத்தும் தென் புலத்தாரையே குறித்த தென்பர்.
தெய்வம் என்பதன் விளக்கம்:

மிகப்பழ நாளில், தன்னில் எழுந்து இன்னல் விளைக்கும் காட்டுத் தணலையும், எந்நிலத்தும் பாய்ந்து இடர்ப்படுத்தும் காட்டாற்றுப் புனலையும், மாற்றருந் துன்பம் விளைவிக்கும் பெருங்காற்றையும், கலங்கக் கலங்க வந்தடிக்கும் விலங்குகளையும் எண்ணிப் பொதுவாக அத்துன்பத்தைத் ''தெய்'' என்ற சொல்லாற் குறித்தார்கள்.

''தெய்'' என்ற அச்சொல்லிற்குக் கொல்லுவது என்பது பொருள்.

தெய் என் கிளவி கோறலும் தெய்வமும் (பிங்கலந்தை 642) என்பது இங்கு நோக்கற்குரியது.

பின்னர் அம்மக்கள் அறிவு வளர்ச்சி பெற்ற அளவில், அத்தணலை உணவு ஆக்குதற்கும் உலைக்களம் எடுத்தற்கும், அப்புனலை, நெல் முதலிய விளைத்தற்கும், குள முதலிய காண்டற்கும், அக்காற்றை வெப்பம் ஆற்றுதற்கும் நெல்லைத் தூற்றுவதற்கும் அவ்விலங்குகளை ஏரடித்தற்கும், பால் கறத்தற்கும் பயன்படுத்துவராகி அவற்றைப் போற்றலானார்கள். திங்களைப் போற்றினர்; செங்கதிர் போற்றினர்; மழை தரும் வானைப் போற்றினர்; வளஞ் செய்யும் நிலத்தைப் போற்றினர். அப்போதும் அவர்கள் அவைகளைத் தெய் என்றே கூறினர். மொழி வளர்ச்சி ஏற்பட்ட போதன்றோ தெய் என்பது தெய்வம் ஆயிற்று. தெய்வம் தூய தமிழ்ச் சொல். (தெய்-வ்-அம்) தெய் முதனிலை; அம் பெயரிறுதிநிலை; வ் பெயரிடைநிலை எனப் பிரித்துணர்க. இதை வடசொல் என்று கூறி மகிழ்ந்து கொள்வார் சில கலகக்காரர்.

யரழ என்னும் புள்ளி முன்னர் முதலா கெழுத்து-வகரமொடு தோன்றும் (தொ. எ. 29) என்ற எழுத்து மயங்கு முறைக்குத் தெய்வம் வரலாறு காட்டப் பட்டதையும் அவர் அறியார்.

இதனாலே, நாளடைவில் கண்ணையும் மனத்தையும் கவரும் பொருள்களையும், பயன்படு பொருள்களையும் தெய்வம் என்றார் என அறிந்து கொள்ள வேண்டும்.

காலம் உலகம் உயிரே உடம்பே,
பால் வரை தெய்வம் வினையே பூதம்,
ஞாயிறு திங்கள் சொல்லென வருஉம்,
ஆயீரைந்தும் பிறவும் அன்ன,
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்,
பால் பிரிந்திசைக்கும் உயர்திணைமேன.

(தொ. சொ. 58)

என்ற நூற்பாவினால், காலம் தெய்வமாயிற்று. சொல் தெய்வம் ஆயிற்று. செயல் தெய்வம் ஆயிற்று. ஞாயிறு, திங்கள், கோள்கள் தெய்வங்கள் ஆயின. பின்னும் செல்வம் தெய்வமாயிற்று. நெல் முதலியவை தெய்வங்கள் ஆயின. வெற்றி, புகழ், நூல் தெய்வங்களாயின. சான்றோர் தெய்வம், அன்னை தெய்வம், தந்தை தெய்வம், ஆசிரியன் தெய்வம், தலைவிக்குத் தலைவன் தெய்வம், காதல் தெய்வம், அரசன் தெய்வம் ஆயினவாறு காண்க.

குரவை தழீஇயாம் மரபுளிப் பாடித்
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்

(முல்லைக்கலி 3 அடி 75-76)

இதில் புகழ் தெய்வமாயிற்று.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (குறள் 28)

இதில் சான்றோர் தெய்வங்களாகக் கூறப்பட்டனர் என்றிவ்வாறு (தொல் பொருள் 81-ம் பாட்டின் உரையில்) கூறப்பட்டது.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. (குறள் 15)

இதில் மழை தெய்வமாகக் கூறப்பட்டது (இவ்வாறு தொல் பொருள் 81-ல் கூறப்பட்டது)

காரார் புறவிற் கலித்த புதர் மாந்தி
ஆ வாழியரோ நெடிது.

இதில் ஆ தெய்வமாகக் கூறப்பட்டது (ஷை உரை)

கொடி நிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே (தொல். 88)

இதில் கதிரும் தீயும் திங்களும் தெய்வங்கள் ஆயின.

குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறவோர்க்(கு)
அடிகளே தெய்வம் அனைவர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூணிறை

(நீதிநெறி விளக்கம் 27)

இதில் கொழுநன் முதலியவர் தெய்வங்கள் ஆயினவாறு காண்க.

மற்றும், அன்பு, அறிவு, வாய்மை, அறம் முதலிய நற்பண்புகள் அனைத்தும் தெய்வங்கள் எனவும் அறிதல் வேண்டும்.

இனித் தென் புலத்தாரை ஓம்புவதாவது:- தமிழ் நாட்டார் என்று கருதி அவர் வாழ்வுக்கு ஆன வழிவகை செய்தலாம். தெய்வங்களை ஓம்புவதாவது :- ஆப் போன்றவைகளை நன்கு காத்தலும், அரசன் போன்றோரை வாழ்த்தி அவர் கட்டளைக்குக் கட்டுப்படுவதும் அவரைப் போற்றுவதும் ஆம்.

நிலம், தீ, நீர், வளி, விசும்பு போன்றவைகளின் பயனறிதலும் போற்றுதலும் ஆம்.

அறம் முதலியவற்றின் அருமை தெரிந்து மேற்கொண் டொழுகுதலும் ஆம்.

புகழைப் பெரும் பயனாகக் கருதி உலகில் அருஞ்செயல் செய்தலும் ஆம்.

இனி விருந்தோம்பலாவது--உள்ளம் உவந்து வரவேற்று உண்பித்தல்.

ஒக்கல் ஓம்பலாவது: உறவினர்க்கு ஒன்று உற்றுழிக் கை கொடுத்தலாம்.

தன்னை ஓம்புவதாவது: தன் மனைவி மக்களையும் தென் புலத்தாரையும் காத்தற்கு ஆன தகுதிக்கு இடையூறின்றித் தன்னைக் காத்துக் கொள்வதாம்.

தலை—முதன்மை, அஃது அறம் என்றாம்.

—(குயில் 6-12-60)

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

(பி. மா) வாழ்க்கை பழி அஞ்சி பாத்து ஊண் உடைத்து ஆயின் எஞ்ஞான்றும் வழி எஞ்சல் இல்.

பொருள் : வாழ்க்கை—ஒருவனின் இல்வாழ்க்கையானது, பழி அஞ்சி —பழிக்கு அஞ்சி, பாத்தூண் உடைத்து ஆயின்—பகுத்துண்டலைக் கொண்டதாயிருப்பின், எஞ்ஞான்றும்—எக்காலத்தும், வழி எஞ்சல் இல்—அவன் வழி வருவோர் உயர்ந்து நிற்றலன்றிக் கெடுதல் இல்லை.

கருத்து : நல்வழியில் செல்வம் சேர்க்க வேண்டும். அதையும் தனக்குள்ளது கழித்து மற்றதைப் பொது நலத்துக்குப் பகிர்ந்து உதவ வேண்டும்.

பகுத்துண்டலைப் பின்னர்க் குறித்தலின், முதற் கண்ணுள்ள பழியஞ்சுதல் செல்வம் சேர்த்தற்கண் பழியஞ்சுதல் எனக் கொண்டு அறவழியில் பொருள் தேடுக என்றாராயிற்று.

பாத்தூண் என்றது, தன் குடும்பத்துக்கானதைவிட மிஞ்சிய செல்வத்தை அரசுக்கும், அற நிலையங்கட்கும் ஆம் வகையில் பிரித்துக் கொடுத்தலை. பகுத்து-பாத்து என மருவிற்று. உண்ணலின் முதனிலை ஆகிய உண், ஊண் எனத் திரிந்தது. இது முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

பழியஞ்சி என்பது இரட்டுற மொழிந்தது: பழியஞ்சிப் பொருள் சேர்த்தலுக்கும், பழியஞ்சிப் பாத்தூண் உடைமைக்கும் ஆயினமையான்.

பகுத்துண்ணுதலில் பழியஞ்சுவதாவது, தான் பெற்ற செல்வம் தன் நாட்டுக்கே ஆம்படி பகுததல்; பிற நாட்டார்க்கு ஆம்படி பகுத்தானாயின் அவனுக்குப் பழி நேரும் என்க.

ஒருவன் மீத்துவைக்கும் செல்வத்தாலேயே அவன் வழி வருவோர் வாழ முடியும் எனறு கருத வேண்டா. அவன் பழியஞ்சிப் பகுத்துண்ணக் கடவன். அதனால் அவன் அடைந்த அறமும் அறத்தால் வந்த புகழும் வழி வந்தோரை வாழவைக்கும் என்பார், இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

(பி. மா) இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்து
ஆயின் அது பண்பும் பயனும்.

பொருள் : இல்வாழ்க்கை—காதலிருவர் கருத்தொருமித்து வாழ்வதோர் இல்வாழ்க்கையானது, அன்பும்—அன்பையும், அறனும்—அறத்தையும், உடைத்தாயின்—கொண்டதாயிருந்தால், அது—அவ்வாறு கொண்ட அது, பண்பும் பயனும் —அவ்வில் வாழ்க்கையின் பண்பும், பயனுமாகும்.
கருத்து : மன நலத்தானாகிய அன்பும், அறமும் கொண்ட இல்வாழ்க்கையே பேரின்ப வாழ்க்கை.

அன்புக்கும் அறத்திற்கும் அப்பாலாக இன்பம் பயப்ப தொன்றில்லை என்பார் பண்பும் பயனும் அது என்றார். இச் செய்யுளால் உருவ வணக்கம், சமயக் கணக்கர் கூறும் தம்மில் மாறுபட்ட பலவகை முயற்சிகள், மூட வழக்கங்கள் அனைத்தையும் மறுத்தார்.

இதில் பயன் என்றது இன்பத்தை; பண்பு என்றது அன்பையும், அறத்தையும்; அன்பும் அறமும் கொண்டிருத்தலே இன்ப நிலை என்று வலியுறுத்தியதை உற்று நோக்கித் தெளிக.

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்.

(பி. மா) இல்வாழ்க்கை அறத்து ஆற்றின் ஆற்றில் புறத்து ஆற்றில் போஒய்ப் பெறுவது எவன்?

பொருள் : இல்வாழ்க்கை—மனையாளோடு கூடிச்செய்யும் இல்வாழ்க்கையை, அறத்து ஆற்றின் ஆற்றில்—அற வழியில் நடத்தினால், புறத்து ஆற்றில் போஒய்ப் பெறுவது எவன்—பிற வழியிற் சென்று பெறத் தக்க பயன் எது? (ஒன்றுமில்லை என்றபடி.)

கருத்து : அற வழியில் ஆற்றும் இல்வாழ்க்கை இன்பந் தரும். பிற வழியில் ஆற்றுவது துன்பந் தரும்.

புறத்தாறு எனபது, துறவற நெறி என்று கருதினார் பரிமேலழகர். துறவறத்தாலும் பயனை அடையலாம் என மேல் ஆசிரியர் குறித்தார் ஆதலின் அது பொருந்தாது. அற நெறிக்கண் இல்லறம் செய்வதால் இன்பம் கிடைக்கும் என்றார் முன்னும். பிற நெறி என்றது, ஈண்டு வந்தேறிகள் மக்கள்பால் விதைத்துள்ள மடமை நெறிகளை.

கொலை வேள்வி செய்வதால் வானுலகு பெறலாம்; உருவங்களை நோக்கி நோற்றலால் எல்லாம் பெறலாம், என்பன போன்றவற்றில் உள்ள தீ நெறிகளால் துன்பமே உண்டாம் என்பார் இவ்வாறு கூறினார் என்க.

அறத்தாறு, புறத்தாறு என்பவற்றில் ஆறு—வழி. ஆற்றின் என்பது, ஆற்றுதலின் முதனிலையாகிய ஆற்று, இன் என்ற எதிர்கால வினையெச்ச இறுதிநிலை பெற்றது. எவன்—எது, எவை எனும் இரண்டுக்கும் பொதுவாய் வரும் வினா.

—(குயில் 13-12-60)

இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

(பி. மா) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்
என்பான் முயல்வாருள் எல்லாந் தலை.

பொருள் : இல்வாழ்க்கை— இல்லாளோடு கூடிவாழும் வாழ்க்கையினின்று, இயல்பினால்—அதற்குரிய அற முயற்சியோடு, வாழ்பவன் என்பான்—வாழ்கின்றவன் என்று சொல்லப் பெறுவான், முயல்வாருள் எல்லாம் தலை—பிற வழியில் முயல்வார் எல்லாரினும் மேலானவன்.

கருத்து : அற முயற்சியுடன் கூடிய இல்லறத்தான், பிற முயற்சி செய்வானினும் மேலானவன்.

பிறமுயற்சி : கொலை, வேள்வி, உருவ வணக்கம் முதலியவை.

—(குயில் 13-12-60)

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

(பி.மா) ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

பொருள் : ஆற்றின் ஒழுக்கி தவஞ் செய்வாரைத் தவ நெறியே ஒழுகச் செய்து, அறன் இழுக்கா இல்வாழ்க்கை— அறம் பிழைக்காத இல்வாழ்க்கையானது, நோற்பாரின் நோன்மை உடைத்து—அத்தவம் செய்வாரின் ஆற்றலை விடப் பேராற்றல் உடையதாகும்.

கருத்து : தவம் செய்வார் ஆற்றலினும் இல்வாழ்க்கை நடத்துவான் ஆற்றல் பெரிது.

தவம் செய்வார்க்குறும் இடையூறு நீக்குவான் இல்வாழ்வான் ஆதலின், இல்வாழ்வான் ஆற்றல் பெரிது என்றார். ஒழுக்கி—ஒழுகி என்பதன் பிறவினை.

—(குயில் 13-12-60)

அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன் பழிப்ப தில்லாயி னன்று.

பி.மா) இல்வாழ்க்கையே அறன் எனப்பட்டது. அஃதும் பிறன் பழிப்பது இல் ஆயின் நன்று.

பொருள்: இல்வாழ்க்கையே அறன் எனப்பட்டது—மனையாளோடு கூடி நடத்தும் வாழ்க்கையே அறம் எனப்பட்டது, அஃதும்—அறமே நிறைந்த அவ்வில்வாழ்க்கையும், பிறன் பழிப்பது இல் ஆயின்— பிறனால் பழிக்கப்படுவது இல்லாதொழிந்தால், நன்று— அறம் எனப்படும்.

கருத்து: இல்வாழ்வே, அறவாழ்வு என்று சொல்லப்படினும், ஒரு மாசு உறினும் அது அற வாழ்வு எனப்படாது.

துறவறத்தின் வேருக்கு இல்லறமே காரணம் ஆதலின், அறன் என்றார். அதுவேயுமன்றி இல்லாளோடு கூடி நடத்தும் வாழ்க்கை வகையில் அறமே நிறைந்திருத்தலின் இல்வாழ்க்கையே அறம் என்றார் என்பதும் அறிதல் வேண்டும்.

இனி, அறம் நிறைந்த அவ்வில்வாழ்க்கையும், பிறன் பழிக்கும் வகையில் சிறிது குற்றப்படினும் அஃது அறன் எனப்படாது என்பார் இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

அறன் எனப்பட்டதே என்பதன் பிரிநிலை ஏகாரம் இல்வாழ்க்கை என்பதனோடு கூறப்பட்டது. நன்று—அறம்.

துறவறததைச சிறப்பிலதாகக் காண்பார் ஆசிரியர், ஏன்? இல்லத்துறவை நீக்கி உள்ளத் துறவினை ஆராயின்,

அவ்வுள்ளத்துறவால் உலகுக்குப் பயன் எதுவுமில்லா தொழி தலால் என்க. மேலும், துறந்தான் என்பான், இல்வாழ் வானையே எதிர்பார்த்தவனாகிறான் அதனாலும் என்க,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

(பீ.மா) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

பொருள்: வையத்துள்—உலகத்தில், வாழ்வாங்கு வாழ்ப வன்—வாழும் முறைப்படி வாழும் ஒருவன், வான் உறை யும்—வானுலகில் வாழ்வதாகச் சொல்லப்படும், தெய்வத் துள் வைக்கப்படும்—தெய்வங்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுவான்.

கருத்து: மனையாளோடு கூடி, வாழும் முறைப்படி வாழ்க.

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்றது பிறர் தம் மதம் மேற்கொண்டது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் என்றது, அவ்வாறு மேற்கொண்ட அப்பிறர் மதத்தைக் களைந்தது. தெய்வத்துள் வைக்கப்படுவதற்குச் சமயக் கணக்கர் மேற்கொள்ளப் பணித்த முறைகள் வேறு வேறு. அவற்றையெல்லாம் தேவையற்றவை என ஒதுக்கி, வாழும் முறைப்படி வாழ்க என்றார்.

எத்தனை சமையங்கள்! அவையும் ஒன்றினோடொன்று ஒவ்வாதவை. அச்சமயங்கள், மக்களை மேற்கொள்ளப் பணிக்கும் முறைகள் எத்தனை! அவைகளும் ஒன்றினோ டொன்று ஒவ்வாதவை.

அம்முறைகளை மேற்கொண்டு மக்கள் படும் இன்னல் கள் எத்தனை! மான இழப்பு, மதியிழப்பு, செல்வ இழப்பு, செயலிழப்பு!

இத்தனை பாட்டுக்கும், பயனுண்டு எனும் உறுதியேனு முண்டா? அதுவும் இல்லை.

எனினும் மக்கள் தெய்வ உலகத்தில் தெய்வ வரிசையில் சேர இத்தனையும் பட்டுத்தான் ஆகவேண்டும் என்று நம்புகின்றார்கள்—நம்பச் செய்ததால்.

ஆசிரியர், மக்கள் மனத்தில் இடம் பெற்றுவிட்ட இந்த நம்பிக்கையை எதிர்க்க எண்ணவில்லை. தெய்வ வரிசையில் தெய்வமாகச் சேரவேண்டியதற்கே வழி சொல்வார் போல், மக்கள் மேற்கொள்ள வேண்டிய முறையை இதோ என்று காட்டினார். மக்களே! மனையாளோடு கூடி வாழும் முறை தவறாது வாழ்க்கை நடத்துங்கள் என்று கூறி அருளினார். இவ்வாறு ஆசிரியர் கூறியருளியதால், அவர் நல்லதோர் உண்மையை மக்களுக்குக் காட்டினாராயினர். இவ்வாறு ஆசிரியர் கூறியருளிய்தால், சமயக் கணக்கர் மதி வழியேகுதல் வேண்டாம் என்றும் விழிப்பூட்டியவராயினார்.

இவ்வதிகாரத்தால், இல்வாழ்க்கையின் மேன்மை, அதன் பயன் இவ்வாறெனை விளக்கியதோடு, சமையங் களையும் மறுத்து, வாழுமுறைப்படி வாழ வேண்டியதோர் உண்மையையும் கூறியருளினார்.

அதிகாரம் 6 : வாழ்க்கைத் துணை நலம்

அஃதாவது: முற்கூறிய இல்வாழ்க்கைக்குத் துணை யாகிய இல்லாளின் நன்மை.

மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(பி. மா) வாழ்க்கைத் துணை மனை தக்க மாண்பு உடையாள்
ஆகி, தன் கொண்டான் வளம் தக்காள்.

பொருள்: வாழ்க்கைத்துணை—இல்வாழ்க்கைத் துணைவி யாவாள், மனைதக்க—மனையின் கண்ணதான அறத்திற்கு ஏற்ற, மாண்பு உடையள் ஆகி—நற்பண்புடையவளாகித் தன் கொண்டான்—தன்னைக் கொண்டவனது, வளம் தக்காள்— வருவாய்க்குத் தக்க செலவு செய்யும் செட்டு உடையவள்.

மனைக்குத் தக்க என்பது மனைத்தக்க என வந்தது; நான்கன் தொகை. வளத்துக்குத் தக்காள் என்பது வளத் தக்காள் என வேறுபாடுற்றது.

தன்கொண்டான், தன்னைக் கொண்டான் என விரிக்க. இரண்டன் தொகை. வேறுபாடு என்பதை விகாரம் என்பர் வடவர்.

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

(பி. மா) இல்லாள்கண் மனைமாட்சி இல்ஆயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்.

பொருள்: இல்லாள் கண்— இல்லாளிடத்து, மனை மாட்சி— மனையறத்துக்கு வேண்டிய நற்பண்பு, இல் ஆயின்—இல்லையாயின், வாழக்கை—அவ்வில் வாழ்க்கை யானது, எனை மாட்சித்து ஆயினும் இல்— செல்வ முதலிய வற்றால் எத்தகைய பெருமையுடையதாயினும் அனைத் தும் இல்லையாகும்.

கருத்து: செல்வ முதலிய உற்ற குடும்பமாயினும், இல்லா ளிடம் வேண்டிய நற்பண்பு அற்றதாயின் அனைத்தும் அற்றதாகி விடும்.

மாட்சி—இதில் மாண் முதனிலை சி பண்புப் பெயர் இறுதிநிலை. இத்தூய தமிழ்ச் சொல்லை இன்றும், ஆரியச் சார்பினர் க்ஷி என்ற எழுத்து இட்டு எழுதி வடசொல்லாக்கி

வருகின்றனர். காட்சியையும் அப்படி. அதில் காண் முதனிலை, சி தொழிற் பெயர் இறுதி நிலை.

இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை.

(பி.மா) இல்லவள் மாண்பு ஆனால் இல்லது என்
இல்லவள் மாணாக்கடை உள்ளது என்.

பொருள் : இல்லவள் மாண்பு ஆனால்— இல்லாள் மாண்பு உள்ளவள் ஆனால், இல்லது என்—அக்குடும்பத்தில் இல்லாதது என்ன, இல்லவள் மாணாக்கடை—இல்லாள் மாண்பு இல்லாதவளானால், உள்ளது என்—அக்குடும்பத்தில் இருப்பது என்பது எது? (ஒன்றுமில்லை என்றபடி).

கருத்து : இல்லாள் மாண்பு உடையள் ஆதல் வேண்டும். மாண்புடையாள் ஆனால் எனற்பாலது, மாண்பு ஆனால் எனப்பட்டது. பண்பு பண்பிக்கானது ஆகுபெயர். இல்லாளிடம் பண்பில்லாவிடில் என்ன இருந்தும் பயனில்லை என்றாராயிற்று.

—(குயில் 20-12-60)

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

(பி.மா) கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்
பெண்ணின் பெருந்தக்க யா உள.

பொருள் : கற்பு என்னும் திண்மை—கற்பு என்பதோர் அசையாத் தன்மை, உண்டாகப்பெறின்— அடையப் பெற்றால், பெண்ணின் பெருந்தக்க யாஉள—பெண்ணைவிட பெருத்த பெரும்பேறு வேறென்ன இருக்க முடியும்? (இல்லை என்றபடி).

கருத்து : கற்புள்ள மனையாளைப் பெறுவதைவிட வேறு பேறு இல்லை.

கற்பு என்பது, பொருள் ஊட்டமுள்ள ஒரு தமிழ்ச் சொல். அது கல் என்ற முதனிலையும், பு என்ற பண்புப் பெயர் இறுதி நிலையும் உடையது. கல்லின் தன்மை என்பது அதன் நேர் பொருள். கல்லின் தன்மையாவது :

உலகம் வியக்குமாறு போரில் திறங்காட்டி இறந்த மறவன் பெயர் பொறித்தும், உலகினர்க்கு நன்னெறி காட்டிச் சென்ற தமிழ்ச் சான்றோர் பெயர் பொறித்தும், தன் வாழ்க்கைத் துணைவனோடு ஒன்றிய உள்ளமானது அசையாத்தன்மை பெற்று அரிது செய்த மகளிர் பெயர் பொறித்தும் கல் நடுவார்கள் அன்றோ! அக்கல் அருஞ் செயல்கட்கு அடிப்படையான பெரும் பண்புகளை நினைவு படுத்தும் அன்றோ? கல்லின் தன்மை இதனால் அறியப் படும். எனவே தக்காரின் பெரும் பண்பே கற்பு என அறிதல் வேண்டும்.

கற்பு, கற்றல் என்ற பொருளுடையது என்றும், ஒரு பெண் இளமையில் பெற்றோரிடம் கற்பதாலும் மாமன் மாமியரிடம் கற்பதாலும், அப்பெயர் வந்ததென்றும் சொல் வாரும் உளர். இது சிறப்புடைப் பொருள் அன்று. ஏன்? எக்காலத்தும் பிறரிடமிருந்தே கற்கும் ஒருத்தியைத் தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைசான்ற சொற் காத்தல் முதலிய அறிவு ஆற்றலுடையவளென்று கொள்ளுவ தற்கில்லை ஆதலின்.

பெண்ணின்—இன் ஐந்தனுருபு ; நீங்கற் பொருட்டு. தக்க—பலவின்பால் குறிப்பு வினையாலணையும் பெயர்.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

(பி.மா) தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள் பெய் என மழை பெய்யும்.

பொருள் : தெய்வம் தொழாஅள்— தெய்வங்களைத் தொழமாட்டாள், கொழுநன் தொழுது எழுவாள்—

கணவனைத் தொழுதபடியே, துயில் விட்டெழுவாள், (அவள் அக் கொழுநனுக்கு) பெய் என பெய்யும் மழை— பெய் என்று எண்ணிய அளவில் பெய்தால் ஒத்த பயன் மழை.

கருத்து: கண்ணையும் மனத்தையும் கவர்வனவும், மிக்க பயன் விளைப்பனவும் ஆகிய தெய்வம், தன் கணவனைவிட வேறு இல்லை என்று எண்ணும் மனைவி, அக் கணவனுக்குப் பயன் மழை.

பெய்யெனப் பெய்யும் மழை என்றது, அளவறிந்து பெய்வதோர் பயன் மழையை.

ஞாலம் விரும்பிய வண்ணம் பெய்யும் மழை போல் காதலன் விரும்பிய போது, அவன் பெறுமளவு இன்பம் அளிப்பவள் என்று காதல் இன்பத்தை விளக்கினார். இவ்வாறு காதலின்பத்துக்கு மழையை உவமித்தார் ஆசிரியர், மற்றோரிடத்தும். அது வருமாறு:

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

(குறள் 1112)

என்றது காண்க.

இப்பாட்டிற்கு வேறு வகையாற் பொருள் கொண்டார் பிறரெல்லாம். பிறதெய்வங்களைத் தொழாது, கணவனையே தொழுவாள், மழையை நோக்கிப் "பெய்" எனில் அம்மழை பெய்துவிடும் என்றன்றோ பொருள் கொண்டார்? அது பொருந்தாது. என்னை? மழையை நோக்கிப் 'பெய்' என வேண்டுவாள் எனில், எத்தெய்வத்தையும் வணங்காதவள் எனப்பட்டவள் மழைத் தெய்வத்தை வணங்கியவளாவாளன்றோ! இது கிடக்க, பன்னாட்கள் விண்ணின்று பொய்ப்பதும் உண்டு. அந்நாட்களிலெல்லாம் கற்புடைப் பெண்டிர் இல்லாதொழிந்தார் என்பதா?

உலகப் பெண்கள் அனைவரும் கற்பில்லாதவர் எனக் கொள்ளும் மனுவின் கொள்கையுடையார் அவ்வாறு கருதுவது பொருத்தமேயாகும். கற்புடை மகளிராலேயே இவ்வுலகு நிலைபெறுகின்றது எனக் காணும் தமிழர் அவ்வாறு கருதார். ஆதலால், வள்ளுவர் உள்ளம் அதுவன்று. மழை இயற்கையின் கொடை, அது மக்கட்குக் கட்டுப்பட்டதன்று.

உறற் பால நீக்கல் உறுவார்க்கும் ஆகா
பெறற் பாலனையவும் அன்னவாம் மாரி
வறப்பின் தருவாரும் இல்லை அதனைச்
சிறப்பின் தணிப்பாரும் இல். (நாலடி 104)

என்றதால், வாரா மழையை வருவிப்பார் என்றும், எங்கும் இல்லை யென்பதையும் உணர்க. அஃதேயும் அன்றி, வந்து அளவின் மிக்குப் பொழிந்து கெடுக்கும் மழையைத் தடுப்பாரும் இல்லை என்பதை அறிந்து வைக்க.

தொழாஅள்—உயிரளபெடை

கற்புடைய பெண் அமிர்து......

(சிறுபஞ்ச மூலம்)

என்ற அடியோடு இச்செய்யுள் ஒப்பு நோக்கத் தக்கது. கற்புடைய பெண்ணானவள் தன் கணவனுக்கு அமிழ்து என்பது அவ்வடியின் பொருள்.

—(குயில் 27-12-60)

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

(பி.மா) தன்காத்து தன்கொண்டான் பேணி தகைசான்ற
சொல் காத்து சோர்வு இலாள் பெண்.

பொருள் : தற்காத்து— கற்பினின்று அசையாமல் தன்னைக் காத்தும், தன் கொண்டான் பேணி—தன்னைக் கொண்டவனாகிய கணவனைக் காத்தும், தகை சான்ற

சொல் காத்து — பெருமை மிக்க தன் குடிக்குரிய புகழைக் காத்தும், சோர்வு இலாஅள் பெண்—ஆகிய இவற்றில் சிறிதும் மனத்தளர்ச்சி யில்லாதவள் எவளோ, அவளே மனைவி.

சேர சோழ பாண்டியர் வழி வந்தவள் என்ற புகழ்ச் சொல்லுக்கு இலக்காகும்படி ஒழுக்கந் தவறமாட்டாள் என்பார், தகை சான்ற சொல் காத்து என்றார். மனவுறுதி யுடையவள் என்பார் சோர்விலாள் என்றார். பெண்— மனைவி.

கருத்து : தன்னையும், துணைவனையும், குடிப்பெருமை யையும் காப்பதில் மனத்தளர்ச்சி யில்லாதவள் பெண்.

பண்பு, குடிப்பிறப்பு நிலைமை முதலியவற்றில் தனக் கொப்புடையானைக் கண்டு காதலால் மனம் ஒன்றுபடு மட்டும் தன் கற்பைத் தான் காத்துக் கொள்பவள் பெண் அஃதேயுமன்றி கொண்ட தலைவனைப் பிரிந்த வழியும் கற்பில் தன்னைக் காத்துக் கொள்பவள் பெண் என்பார் தற்காத்து என்றார்.

தன்னைக் கொண்டவன், அதாவது தன் உள்ளத்தைப் பறித்தவன் இருளிலும், இடுக்கணிலும் வருவதைத் தவிர்க்க என்று கூறித் தலைவனைத் தடுத்துக் காத்தலால் தற் கொண்டான் பேணி என்றார்.

—(குயில் 27-12-60)

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை.

(பி. மா) மகளிர் நிறை காக்கும் காப்பே தலை
சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்?

பொருள் : மகளிர்—தமிழ் மகளிர், நிறை—தம் நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்துவதோர் நிறையை, காக்கும் காப்பே தலை— காப்பதோர் காவலே உலகில் சிறந்தது. சிறை—

பிற வந்தேறிகள் தம் மனைவியரைச் சிறை வைத்தலால் காக்கும் காப்பு, எவன் செய்யும்—என்ன பயனைச் செய்யும் (பயன்படாது என்றபடி).

கருத்து : மகளிர் மாட்டு வந்தேறிகள் கொண்ட மனப் பான்மை தமிழர்களால் வெறுக்கத்தக்கதாகும்.

மனு சொல்கிறார்:

மாதர்கள், கற்பு நிலை இன்மையும், நிலையாமனமும், நட்பின்மையும் இயற்கையாக உடையவர்களாதலால், அவர்களின் கணவன்மார்களால், சிறை வைத்துக் காப் பாற்றப் பட்டிருப்பினும், கணவர்களை அம்மகளிர் பகைப் பார்கள். மகளிர்கட்கு இந்த இயற்கைப் பண்பு பிரமன் தோற்றுவித்த போதே உண்டானதென்றறிந்து ஆடவர்கள் அவர்கள் கேடுறாமல் நடப்பதற்கான கட்டாய முயற்சி செய்ய வேண்டும்—என்று.

தம்மினப் பெண்களின் இயற்கை நடைகண்டே மனு இவ்வாறு கூறினார். நிறைகாத்தல் என்றது தமிழ் மகளிரைப் பற்றியது. சிறை காத்தல் பிற வந்தேறிகளைப் பற்றியது. நிறை என்பதில் நிறு முதனிலை; ஐ தொழிற் பெயர் இறுதி நிலை. நிறுத்தல் என்பது பொருள்.

—(குயில், 27-12-60)

பெற்றார் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

(பி. மா) பெண்டிர் பெற்றான் பெறின் பெருமை சிறப்பு
புத்தேளிர் வாழும் உலகு பெறுவர்.

பொருள் : பெண்டிர்—மகளிர், பெற்றான் பெறின்—தன் உள்ளத்தைக் கவர்ந்த துணைவனின் உள்ளத்தைக் கவர்ந்தா ராயின், பெருமை சிறப்பு புத்தேளிர் வாழும் உலகு பெறுவர்—பெருஞ் சிறப்பினையுடைய தெய்வங்கள் வாழு வதெனச் சொல்லப்படும் உலகைப் பெறுவார்கள்.

கருத்து : தற்கொண்டான் உள்ளத்தைக் கவர்ந்த மகளிர் எல்லாப் பேறும் பெறுவர்.

புத்தேளிர் வாழும் உலகு என்றது புகழ், செல்வம், முதலிய பயன்படு பொருள்களும், கண்ணையும் மனத்தை யும் கவர்கின்ற பொருள்களும் ஆகிய கூட்டத்தை; இது முன்னர் விளக்கப்பட்டது. பெற்றான் பெறின் இரண்டாம் வேற்றுமைத்தொகை. நிலைமொழி உயர்திணையானதால் பெற்றாற் பெறின் என்றாயிற்று. புத்தேளிர் உயர்திணைப் பன்மை, தெய்வங்கள் என்பது பொருள்.

பெற்றான்பெறின் என்பதற்குக் கணவனை வழிபடுதல் பெறுவராயின் எனப் பொருள் கூறினார் பரிமேலழகர். வழிபடுவதால் காதலர் இருசாரினரும் எதிர்பார்க்கும் இன்பம் அடைதலில்லை என்பதை அவர் எண்ணினாரில்லை.

—(குயில் 3-1-61)

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

(பி. மா) இகழ்வார் முன் ஏறு போல் பீடு நடை
புகழ் புரிந்த இல் இலோர்க்கு இல்லை.

பொருள்: இகழ்வார்முன்—இகழ்வாராகிய பகைவர் எதிரில், ஏறுபோல் பீடு நடை—அரிமா ஏற்றைப் போல் நிமிர்ந்த நடை, புகழ் புரிந்த இல் இல்லோர்க்கு இல்லை—புகழை விரும்பிய மனையாள் இல்லாதார்க்கு இருக்க முடியாது.
கருத்து : நன் மனைவியைப் பெறாதான் பகைவர் முன் நிமிர்ந்து நடக்க முடியாது.

புரிந்த என்னும் பெயரெச்சத்தின் ஈற்று அகரம் தொக்கது. இல்—மனைவி, ஆகு பெயர்.

'இல்லாள் ஒருத்தி' புகழை விரும்புவதாவது: ஆதிமந்தி, ஒளவை போன்ற பெண் மக்களையும், செங்குட்டுவன் வள்ளுவன் போன்ற ஆண்மக்களையும் உலகுக்கு ஈன்றுதர

விரும்புவது முதலியவை: பீடுநடை—பெருமை நடை, நிமிர்ந்த நடை என்றாம்.

—(குயில் 3-1-61)

மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு.

(பி, மா) மனைமாட்சி மங்கலம் என்ப மற்று அதன்
நன்மை கலம் நன்மை மக்கள் பேறு.

பொருள் : மனைமாட்சி—மனையாளின் நற்பண்பு, நற்செயல்களை, மங்கலம் என்ப— குடும்பத்திற்கமைந்த இயற்கையழகு என்பர் அறிவுடையோர். அதன் நன்மை கலம் நன்மை மக்கட் பேறு என்ப—அதற்கு மேல் அமைந்த நல்லணியாவது நல்ல மக்களைப் பெறுவது என்பர் அறிவுடையோர்.

கருத்து : மனைமாட்சி மங்கலம் என்ப. நன்மக்கட் பேறு, அதன் மேல் அமைந்த நல்லணி என்ப.

மங்கலம்—இயற்கையழகு.
நறுமலர்க் கோதைநின் நலம்பா ராட்டுநர்
மறுவில் மங்கல அணியே அன்றியும்
பிறிதணி அணியப் பெற்றதை எவன்கொல்?

(சிலப். மனையறம் 62—64)

என்பதில் மங்கல அணி, இயற்கை அழகென்று பொருள் கொள்ளப்பட்டது காண்க.

இயற்கை அழகிருக்கவும், செயற்கை யழகாய அணியும் இல்லாள் விரும்புமோ எனின், அவள் மக்களை விரும்புதல் போல் விரும்பும். இதனாலன்றோ,

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க் கணியும் போல்—நாடிமுன்

ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

(நன். 55)

எனப் பிறரும் கூறி மகளிர்க்கு அணியின் தேவையை விளக்கினார்.

நன்மக்களாவார் : இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்லை உண்டாக்கும் மக்கள்.

என்ப என்பது நன்மக்கட்பேறு என்பதனோடும் கூட்டப்பட்டது.

—(குயில் 3-1-61)

அதிகாரம் 7 : மக்கட் பேறு

அஃதாவது, நன் மக்களைப் பெறுதல்.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட் பே றல்ல பிற.

(பி. மா) பெறுமவற்றுள் அறிவு அறிந்த மக்கள் பேறு
அல்ல பிற யாம் அறிவது இல்லை.

பொருள் : பெறுமவற்றுள்—ஒருவன் பெறத்தக்க பேறுகள் பலவற்றில், அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற—பொருட் பெற்றியறிந்த நன்மக்களைப் பெறுவதல்லது வேறு பேறுகளை, யாம் அறிவது இல்லை—யாம் அறியப் போவதுமில்லை.

கருத்து : நன்மக்களைப் பெறுதலைவிட வேறு பெறத் தக்க பேற்றை யாம் அறிந்ததுமில்லை, அறிகின்றதுமில்லை, அறியப் போவதுமில்லை.

அறிவது இல்லை என எதிர்காலத்தாற் சொன்னது, மற்றக் காலத்தையும் கொள்ளுவதற்கு. உம்மை தொக்கது.

அறிவு அறிதல் என்பதில் முதறகண்ணுள்ள அறிவு, பொருள் என்றவாறு; அது பொருளின் உயர்வுக்காதலின் ஆகுபெயர்.

முன் அதிகாரத்தில், மனைமாட்சி நன்கலம் என்று கூறினவர், இவ்வதிகாரத்தில் அதையே வலியுறுத்தத் தொடங்கினார். அடுத்த பாட்டில் அதற்குக் காரணம் கூறுவதும் காண்க.

—(குயில் 3-1-61)

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

(பி. மா) பழி பிறங்கா பண்பு உடை மக்கள் பெறின்
எழு பிறப்பும் தீயவை தீண்டா.

பொருள் : பழி பிறங்கா—பிறர் பழிக்கும் பழி ஏற்படாத, பண்புஉடை—நற்பண்புடைய, மக்கள் பெறின்—மக்களை ஒருவன் பெறுவானானால், எழு பிறப்பும் தீயவை தீண்டா—அவனது ஏழு தலைமுறைக் கண்ணும் துன்பம் அணுக மாட்டா.

கருத்து : ஏழு தலைமுறை என்றது, கீழேழு தலை முறையை, அவன் மகன், பேரன் முதலியவரை.

எழு பிறப்பு என்பதற்கு எழுவகைப் பிறப்பு என்று பொருள் கொண்டார் பரிமேலழகர். ஒருவன் வினைக்கீடாக மக்களாய், விலங்காய்ப், பறவையாய், ஊர்வனவாய், நீர் வாழ்வனவாய், மரம் செடி கொடிகளாய்த் தேவராய்ப் பிறப்பானாம். அவன் நன்மக்களைப் பெற்று விட்டு, இறந்து, பின் மக்களாகவோ, விலங்காகவோ பிறந்தால், எந்தத் தீமையும் அந்த மக்களோ, அந்த விலங்கோ, பிறவோ அடைவதில்லையாம்.

ஏன்?—இது கிடக்கட்டும்! நன்மக்களைப் பெற்ற ஒருவன் அடுத்த பிறப்பாகக் கீரைத் தண்டாகப் பிறந்தாலும், அந்தக் கீரைத் தண்டும் தீமையடைவதில்லை எனில், கீரைத் தண்டாய்ப் பிறப்பதே தீமையடைந்தவாறு தானே! அவன் புலியாய்ப் பிறக்கின்றான் எனின், புலியாய்ப் பிறப்பதே தீமையடைந்தவாறுதானே? நன்மக்களை அடைந்ததால் பயன் என்ன?

எழுவகைப் பிறப்பு எனப் பொருள் கொண்டது பொருந்தாது என விடுக்க.

இனி எழு பிறப்பு—ஏழு தலைமுறை என்பதற்கு மேற்கோள் வருமாறு:

கேசவன் றமர் கீழ்மேல் எமரே ழெழு பிறப்பும்
(திருவாய் மொழிப் பாட்டு)

என்பதற்குக் கீழே ஏழு தலைமுறையும், மேலே ஏழு தலைமுறையும் எனப் பொருள் ஆவதும், அவ்வாறே பொருள் கொண்டதும் காண்க.

பாவந் தன்னையும் பாறக்கைத்
தெமர் ஏழேழு பிறப்பும் (2-ம் பத்து)

என்பது போல மற்றும் பலவிடத்து வருதலும் காண்க.

ஒருவன் நன்மக்களைப் பெறுவான் எனில், அவனது ஏழு தலைமுறையுடையாரும் தீமை காணார் என்பது மட்டும் பொருந்துவதோ எனில், ஆம் பொருந்துவதே. அறிவுடைய மகனுக்கு மகனும் அறிவுடையானன்றோ? அவனுக்கு மகனும் அவ்வாறே அன்றோ?

இவ்வாறு ஏழு தலைமுறையுடையாரும் அறிஞராவார் அன்றோ?— அறிவுடையார் ஆகவே, தீமைகள் அண்டா என்பது சொல்லவும் வேண்டுமோ!

எழுபிறப்பு என ஏழைக் குறித்தது என்னவெனில், ஒன்றல்லாதது ஏழ் எனக் கூறுவது வழக்கு. ஒருவனை

நோக்கி மற்றொருவன் கடைக்குச் சென்று நெல்லும், கொள்ளும் வாங்கி வா என்றான். அது கேட்டோனும் நன்று என்றான். பின்னும் அவன், நெல்லும், கொள்ளும் வாங்கி வா என்றான். அதற்கு மற்றவன் ஏழு முறை கூறுவதென்ன என்று முனிந்தான். ஒன்று அல்லாதது ஏழு ஆனமை காண்க.

—(குயில் 10-1-61)

தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

பொருள் : அவர்—அம் மக்களுக்கு, பொருள்—செல்வமானது, தம் தம் வினையான் வரும்—தத்தமது செயலின் தகுதிக் கேற்பச் சேரும். ஆதலின், தம் மக்கள் தம் பொருள் என்ப—பெற்றோர் தம் மக்களே அப்பெற்றோரின் முதுமைக்கு வேண்டிய செல்வம் என்று அறிவுடையோர் கூறுவார்.

கருத்து : பெற்றோரின் முதுமைக்கு அவர்தம் மக்களே செல்வம்.

பெற்றோர் மனந்தூயராய் நற்செயல் செய்து வாழ்க்கைத் துணை பெற்று, நன் மக்களைப் பெற்றாராக அவர் முதுமை பெற்ற ஞான்று, அவரது மக்களும் மனந்தூயராய் நற் செயல் செய்து தம் பெற்றோரின் முதுமைக்கு நற்றுணையாவார் என்பார் இவ்வாறு கூறினார் ஆசிரியர் என்க.

தம் மக்கள் என முற்கூறிய அதனால் அவர் என்றது அம் மக்கள் என்றாம். பொருளைச் சேர்ப்பாரைப் பொருள் என்றே கூறினார். இஃதோர் ஆகுபெயர்.

தம்தம் வினையான்வரும் என்றது எதற்கு எனில், தந்தை தேடிய செல்வத்தால் வாழ்நாளைக் கடத்த நினையார் நன்மக்கள்; தாமே முயன்று தேடுவார் என்றதைக் குறிக்க என்க,

—(குயில் 10-1-61)

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

(பி.மா) தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்
அமிழ்தினும் ஆற்ற இனிது.

பொருள் : தம் மக்கள்— பெற்றோர்தம் குழந்தைகள், சிறுகை—தம் சிறிய கைகளால், அளாவிய கூழ்— துழவப் பெற்ற சோறானது, அமிழ்தினும் ஆற்ற இனிது—அமிழ்தை விட மிக இனிமையுடையது பெற்றோருக்கு.

கருத்து : குழந்தை கையிட்டு அளாவிய சோறும், பெற்றோர்க்கு அமிழ்தைவிட இனிமை செய்யும்.

சிறிய அளவினதான கை என்றும், அழகிய கை என்றும் எண்ணுமாறு சிறுகை என்றார். அமிழ்து— மேனின்று அமிழும் உணவு என மழையின் காரணப் பெயர், இனிமை தரும் பொருளுக்கு வழங்குவதாயிற்று. குழைதலின், கூழ் காரணப் பெயர்.

சிறுகையாற் கூழை அளாவிய இக் குழந்தையோடு,

படைப்புப் பலபடைத்துப் பல்லாரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக் குறை இல்லைத்தாம் வாழும் நாளே

(புறம்.188)

எனப் பாண்டியன் அறிவுடைய நம்பி காட்டும் இக் குழந்தையையும் ஒப்பு நோக்கி இன்புறுக.

—(குயில் 10-1-61)

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

(பி. மா) உடற்கு இன்பம் மக்கள் மெய்தீண்டல் செவிக்கு
இன்பம் மற்று அவர் சொல் கேட்டல்.

பொருள்: உடற்கு இன்பம்—பெற்றோரின் உடலுக்கின்பமாவது மக்கள் மெய்தீண்டல்—குழந்தைகளின் உடம்பைத் தீண்டுவது, செவிக்கு இன்பம்—அவர்களின் காதுக்கு இன்பமாவது, அவர் சொல் கேட்டல்— அக்குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேட்பது.

கருத்து: குழந்தையுடல் தீண்டல், உடற்கின்பம் பயக்கும். அவர் மழலை கேட்பது, காதுக்கின்பம் பயக்கும்.

முற்பாட்டால் நாவிற்கினிமை கூறி, இப்பாட்டில் உடற்கும், காதுக்கும் ஆகும் இனிமை கூறினார். மற்று—வினை மாற்றுப் பொருளுடைய இடைச்சொல். குழந்தை நிலையில் சொல்லும் சொல்லையே ஈண்டு ஆசிரியர் குறித்தார். அதனாலன்றோ மீண்டும் 'அவர்' எனச் சுட்டினார். தீண்டல், கேட்டல் என்பன தீண்டுதலாலான இன்பத்திற்கும் கேட்டலாலான இன்பத்திற்கும் ஆனமையான் ஆகுபெயர்கள்.

செவ்வி—அழகு;

செவ்வியின் தொகுத்தல் பெற்ற செவி காரணப் பெயர். இஃதறியார் இதை வடசொல் என்பார்.

—(குயில் 17-1-61)

குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

(பி. மா) தம் மக்கள் மழலை சொல் கேளாதவர் குழல்
இனிது யாழ் இனிது என்ப.

பொருள்: தம் மக்கள் மழலை சொல் கேளாதவர்— தம் மக்களின் மழலைச் சொல்லின் இனிமையை நுகர்ந்தில்லாதவர், குழல் இனிது—புல்லாங்குழலின் ஓசை இனியது,

யாழ் இனிது என்ப— யாழின் ஓசை இனிமையுடையது என்று கூறுவார்கள்.

கருத்து: தம் குழந்தைகளின் மழலையின்பம் நுகர்ந்தவர் குழல், யாழ்களின் இசையை இனிதென்னார்.

குழல், யாழ், மழலை என்பவை, அவற்றின் இனிமையைக் குறித்தன. குழல் என்றதால், துளைக் கருவி அனைத்தும் கொள்க. யாழ் என்றதால் நரம்புக்கருவி அனைத்தும் கொள்க. துளைக்கருவி, நரம்புக்கருவிகளில் மிகச் சிறந்தன குழலும் யாழும் ஆதலின், அவற்றை மட்டும் குறித்தார். மழலை—எழுத்தும், சொற்றிறமும் நிரம்பா மொழி.

சென்ற பாட்டில் சொல் என்றார். ஆயினும், மழலைச் சொல்லையே குறித்தது என்பதை இப்பாட்டில் வந்துள்ள மழலைச் சொல் என்பதால் அறிக.

—(குயில் 17-1-61)

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

(பி.மா) தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்ப செயல்.

பொருள் : தந்தை— பெற்றோன், மகற்கு ஆற்றும்—தன் மகனுக்குச் செய்ய வேண்டிய, நன்றி—நன்மையாவது; அவையத்து— கற்றோர் குழுவில், முந்தி—மேம்பட்டு, இருப்பச் செயல்—இருக்குபடி செய்வது.

கருத்து : தன் மகனைச் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே.

வடவர் வாழ்க்கையின் தீநெறி பற்றாது தந்தை, மகனுக்குக் கல்விச் செல்வத்தைப் பண்ணுவதோடு நிற்றல் வேண்டும் என்றும், அவனுடைய மண வாழ்க்கையுரிமை முதலியவற்றில் குறிக்கிடுதல் கூடாதென்றும் விழிப்புறுத்துவார் இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

''தம் பொருள் என்ப தம் மக்கள்'' என்ற முற்செய்யுள் மகன் கல்வி, கேள்விகளில் சிறந்து, செய்தக்க செய்து முதிய தன் தந்தைக்குச் செல்வமாதலைக் குறித்தது ஆதலின் அச் செய்யுள், இச் செய்யுளை யடுத்து நிறுத்தற்குரியது. இச் செய்யுள் மகனின் கல்வி கேள்விகளிற் சிறப்புறுதல் பற்றியது ஆதலால் என்க.

முந்துதல் அவையத்தாரினும் அறிவான் மேம்படுதல்.

—(குயில் 17-1-61)

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

(பி. மா) மாநிலத்து மன்உயிர்க்கு எல்லாம் தம்மில் தம் மக்கள் அறிவு உடைமை இனிது.

பொருள் : மாநிலத்து மன் உயிர்க்கு எல்லாம்—பெருவையத்திலுள்ள பெருமை பொருந்திய மக்களெவர்க்கும், தம்மில்—(பெற்றோர்) தம்மைவிட, தம் மக்கள்—தம் பிள்ளைகளின், அறிவு உடைமை— மேம்பட்டு வரும் அறிவுடைமையானது, இனிது—அப்பெற்றோர்க்கு இனிதாகும்.

கருத்து : பெற்றோரினும் மக்கள் அறிவான் மேம்படுதல், அப் பெற்றோர்க்கு இனிதாகும்.

தந்தை மகனைச் சான்றோனாக்குதலை முற் பாட்டிற் குறித்த ஆசிரியர், இப்பாட்டில் அவ்வாறு கல்வி வல்ல மக்கள், தம்மினும் அறிவால் உயர்ந்தாராய்த் திகழ்ந்தால் அதுபற்றி மகிழ்வார்கள் என்று குறித்தார்.

மன்— பெருமை. மன்னுயிர் என்றதால் மாந்தர் என்பது பெற்றாம்.

மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது என்றதால், மக்களியற்கைப் பண்பே அதுவாகும் என்றாராயிற்று.

—(குயில் 17-1-61)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(பி. மா) தன்மகனை சான்றோன் என கேட்ட தாய்
ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும்.

பொருள் : தன் மகனை—தான் ஈன்ற மகனை, சான்றோன் என—கல்வி, கேள்வி நிறையப் பெற்றவன் என்று, கேட்ட தாய்—பிறரும் சொல்லுதலைக் கேட்ட தாயானவள், ஈன்ற பொழுதின்—ஆண் குழந்தை பெற்றதாக மருத்துவச்சியால் சொல்லக் கேட்ட பொழுது உண்டானதைவிட, பெரிது உவக்கும்—மிகுதியும் மகிழ்ச்சியடைவாள்.

கருத்து : உலகினர் தம் மகனைச் சான்றோன் என்று சொல்லக் கேட்ட தாய் பெரு மகிழ்ச்சியடைவாள்.

தன் மகன் சான்றோன் என்பதைத் தாய் அறிந்து வைத்தும், அது பற்றி மகிழ்ச்சி கொள்ளாள் ஏன்?

தன் மகன் சான்றோன் என்பதை அவள் அறிவாள். அதன் மேலும், உலகினர் அவ்வுண்மை யறிந்து—அவனது சான்றாண்மை அறிந்து கூறியக்கால், அதற்கே மகிழ்வாள் என்பார் இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

—(குயில் 17-1-61)

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

(பி. மா) மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல்.

பொருள் : மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி—மகனானவன் தன்னைக் கல்வி, கேள்விகள் நிறையச் செய்த தன் தந்தைக்குச் செய்ய வேண்டிய உதவி என்னெனில், இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும் சொல்—இவனுடைய தந்தையானவன் இந்த நல்ல மைந்தனைப் பெறவும், இவனைச்

சான்றோனாக்கவும் என்ன தவத்தைச் செய்தானோ என்ற சொல்லேயாகும்.

கருத்து : இந்த நன்மகனைப் பெற இவன் தந்தை என்ன தவத்தைச் செய்தானோ என்று உலகம் சொல்லும் ஒரு சொல்லை ஆக்குவதுதான் மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய உதவியாகும்.

மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடன் கூறப் பட்டது.

இவ்வதிகாரத்தால் மக்கட் பேற்றின் அருமையும், பயனும், இனிமையும், மக்களுக்குத் தந்தை கடனும், மக்களிடம் தந்தை எதிர் பார்க்கத் தக்க கடனும், தாய்க்கு மக்கள் ஏற்படுத்தும் இன்பமும் விரித்தார் ஆசிரியர்.

தந்தை 'தவம்' செய்தலாவது அன்பு, அறம் ஒழுக்கங்களில் பொறுப்பேற்றல்.

—(குயில் 24-1-61)

அதிகாரம்-8 அன்புடைமை

அஃதாவது, பிற உயிர்களுடனுள்ள தொடர்பினின்று தோன்றுவதோர் உணர்வுடைமை. அன்பு—தொடர்பு. அத்தொடர்பினின்று தோன்றும் உணர்வுக்கு ஆனது ஆகு பெயர். உடைமை—கொண்டிருக்குந் தன்மை.

வாழும் உடல், உயிர் இரண்டிற்கும் உள்ள தொடர்பும், உடலும் உயிரும் கொண்ட உலகத்தான் ஒருவனுக்கும், அவ்வுலக மக்கட்கும் உள்ள தொடர்பும், அவ்வுலகத்துள்ள ஒருமொழி பேசுவானுக்கும் அம்மொழி பேசும் மக்களுக்கும் உள்ள தொடர்பும், அம்மொழியுடைய ஊரானான ஒருவனுக்கும் அவ்வூர் மக்களுக்கும் உள்ள தொடர்பும், அவ்வூரின்

அமைந்த ஒரு குடும்பத்தானுக்கும் அக்குடும்பத்தினர்க்கும் உள்ள தொடர்பும், அக்குடும்பத்தின் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உள்ள தொடர்பும், பெற்றோருக்கும் பிள்ளைகட்கும் உள்ள தொடர்பும் என அத்தொடர்பு பலவாக வைத்து எண்ணப்படும்.

அஃதேயுமன்றி, வானப் பெருவெளியில் தாழாது நிலை நிற்கும் ஓர் உருண்டைக்கும், பிறவுருண்டைகட்கும் தொடர்பு உண்டு என்பர் பொருட் பெற்றியுணர்ந்தார். அத்தொடர்பும் அன்பே என வைத்து அன்பின் ஆற்றலை உற்றுணர்க. இனி வேறு முகத்தான் அன்பினது உயர்வு காட்டப்படும். அஃதாவது அன்பு இன்றேல், அனைத்துலகும் அனைத்துயிரும் ஒன்றற்கொன்று தொடர்பில்லாத துகள்களாகப் பறந்து மறைந்தொழியும் என்பதாம்.

வாழாது வாழ்ந்த தமிழர், அறிவு வாழ்க்கை பெற்ற நாள் அன்பின் உண்மை கண்ட நாளேயாகும். சமையக் கணக்கர் பிற்றை நாளில் அஃதறிந்தாராக, அன்பே கடவுள் என்று கூறித் தம் பிழைபாட்டை நீக்கிக் கொள்ள முயன்றார்கள்.

அன்பு உணர்வின் வழியது. உள்ளது சிறத்தல் என்ற கொள்கையால் உணர்வே அன்பு, அன்பே உணர்வு என அறிய வேண்டும்.

அன்பு அல்லது உணர்வு என்பது ஒன்றை உண்டு பண்ணாதது. அது மற்றொன்றினின்றும் தோன்றாதது. என்றும் உள்ளது. இதைத்தான் முதற்பாட்டில் பகவன் என்றார் என்பது முன்னரே விளக்கப்பட்டது.

மக்கள் பெறத்தக்க ஒன்று அன்பு. அன்பு என்பதன் வேர்ச்சொல் அன் என்பது. தொடர்பு என்பதே அதன் பொருள். அன்னை என்பதிலும் அன்றில் என்பதிலும் வேர்ச்சொல் அன் என்பதே. தொடர்பு என்பதே அதன் பொருளாவதை உணர்ந்து இன்புறுக, அன்னை—மக்க

ளோடு தொடர்புடையவள்; அன்றில், தன் துணையோடு தொடர்புடையது.

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசற் றரும்.

(பி.மா) ஆர்வு அலர் புன்மை கண் நீர் பூசல் தரும்
அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ?

பொருள்: ஆர்வு—ஆர்வத்தால், அலர்—வெளிப்படுகின்ற, புன்மை கண்ணீர்—புல்லிய கண்ணீரானது, பூசல் தரும்—தூற்றி விடும் ஆதலின், அன்பிற்கும்—பிற உயிர்மேல் ஏற்படும் தொடர்புணர்ச்சிக்கும், அடைக்கும் தாழ் உண்டோ—தெரியாது வைத்துச் சாத்தும் தாழ்ப்பாள் உண்டோ?
கருத்து: தொடர்புணர்ச்சியை மறைத்தல் அரிது. தாழ்ப்பாள்—தாழ். இழி வழக்கு. அன்பிற்கும் என்பதன் உம்மை உயர்வு சிறப்பு. புன்மை—கண்ணீர்—புன்கணீர், மை யீறு போயிற்று.

அன்பு என்பதற்குக் காதல் என்று பொருள் கூறினார் பரிமேலழகர். அது பொருந்தாது. அவ்வாறு கூறிய அவரே, பின்னர் தொடர்பு பற்றி உண்டாகும் காதல் என்று குறிப்பிடுவதும் காண்க. இஃதன்றியும்,

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு.

(குறள் 73)

என்று கூறிய இடத்தும் உற்று நோக்குக. இனி, புன்கணீர் பூசல் தரும் என்பதற்குத் "தம்மால் அன்பு செய்யப் பட்டாரது துன்பங்கண்டுழி அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லோரும் அறியத் தூற்றும் என்று பொருள் கூறினார் அவர். பிறர் துன்பம் கண்ட இடத்தில் மட்டும் கண்ணீர் வரும் என்பது பொருந்தாது. பிறர் இன்புறுதல் கண்டு இன்புறுதலும் துன்புறுதல் கண்டு துன்புறுதலும் அன்பு என

அறிதல் வேண்டும். அவர் அன்பு என்பது தொடர்பு என்ற உண்மைப் பொருளை அறியாமையால் இவ்வாறு கூறினார் என்க. மற்றொன்றும் நினைவு கொள்ள வேண்டும், இன் புறக் கண்டு இன்புறும் போதும் கண்ணீர் வரும் என்பது.

—(குயில் 24-1-61)

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

(பி.மா) அன்பு இல்லார் எல்லாம் தமக்கு உரியர் அன்பு
உடையார் பிறர்க்கு என்பும் உரியர்.

பொருள்: அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர்—அன்பில் லாதவர் எவரும் பொருள் முதலியவற்றால் தமக்கே பயன் படுபவர். அன்புடையார் பிறர்க்கு என்பும் உரியர்— அன் புடையவர் பிறர்க்குப் பொருள் முதலியவற்றால் பயன்படு வது மட்டுமன்றித் தம் உடலாலும் பயன்படுவார்.

கருத்து: அன்புடையார் பிறர்க்குத் தம் உடல், பொருள், ஆவி மூன்றாலும் பயன்படுவர்.

தமக்கு உரியர் என்றது, தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தமக்கே பயன்படுத்துபவர் என்றவாறு. இங்கு உடல் என்றது உடலுழைப்பை. பிறர்க்குப் பயன்படுவதை யும் இவ்வாறு கொள்க.

என்பு—உடலுக்கு ஆகுபெயர். என்பும் உரியர் ஆதலை,

பாடி நின்றனென் ஆகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல், என்
நாடிழந் ததனினும் நனிஇன் னாதென
வாள்தந் தனனே தலைஎனக்கு ஈய

(புறம் 165)

எனப் பேசப்படும் குமணன் முதலியோரிடத்துக் காண்க. என்பும் என்றதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.

—(குயில் 24-1-61)

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(பி. மா) அருமை உயிர்க்கு என்போடு இயைந்த
தொடர்பு அன்போடு இயைந்த வழக்கு என்ப.

பொருள் : அருமை உயிர்க்கு—மக்களுயிர்க்கு, என்போடு இயைந்த தொடர்பு—உடம்போடு ஏற்பட்டுள்ள தொடர்பினை, அன்போடு இயைந்த வழக்கு என்ப—அன்புடன் இயைய வழங்கும் வழக்கம் என்று அறிந்தோர் கூறுவார்கள்.

கருத்து : அன்பு, உடலுயிர்க்குள்ள தொடர்பு.

உடல் உயிர் இரண்டிற்கும் உள்ள தொடர்பைக் கூறினார் எனினும், பிற தொடர்பும் கொள்க.

—(குயில் 31-1-61)

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(பி. மா) அன்பு ஆர்வம் உடைமை ஈனும் அது நண்பு
என்னும் நாடாச் சிறப்பு ஈனும்.

பொருள் : அன்பு— தொடர்புணர்ச்சியானது, ஆர்வம் உடைமை ஈனும்—எல்லா உயிர்களிடத்தும் விருப்பம் உடையனாம் தன்மையை உண்டாக்கும், அது—அவ் விருப்பமுடையனாந் தன்மையானது, நண்பு என்னும் நாடா சிறப்பு ஈனும்—தொடர்பு கருதிப் போற்றுதலும், தொடர்பின்மை கருதித் தூற்றுதலும் இல்லாததான அளவிறந்த சிறப்பை உண்டாக்கும்.

கருத்து : அன்பு நிலை அருள் நிலையிற் சேர்க்கும்.

அருள் என்பது, அன்பு ஈனும் குழவி என்று மேற் காட்டுவார்; ஈண்டும் அன்பு என்பது முதிர்ச்சிக்கண் அருளாகும் என்று மொழிந்தார். ஆர்வம் என ஈண்டுக் குறித்தது, எல்லா உயிர்கண் மாட்டும் எழும் விருப்பத்தை. நாடாச் சிறப்பு என்றது, நாடுதற்கரிய சிறப்பை; அஃதாவது இவர் நமர், இவர் பிறர் என்ற எண்ணமே தோன்றாத நிலையில் உயிர்கண்மாட்டு எழுவதோர் அருளை.

—(குயில் 31-1-61)

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

(பி. மா) வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு
அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப.

பொருள் : வையகத்து—உலகத்தின்கண், இன்பு உற்றார்-இல்லந் துறந்து மக்கட்குத் தொண்டு செய்தலினால் இன்பம் எய்தியவர், எய்தும் சிறப்பு—பெறுவதோர் நன் மதிப்பானது, அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப—அன்பு உடையராகி இல்லறத்தோடு பொருந்தியதாலாகிய பயன் என்று அறிவுடையார் கூறுவர்.

கருத்து : துறந்தார் அடையும் சிறப்பும் இல்லறத்தோடியைந்த அன்பாலானது.

வழக்கு—பயன், ஆகுபெயர்.

மனைவி மக்கள்பால் உற்ற அன்பு, அருளாக அஃது அனைத்துயிரும் தன்னுயிரென் றெண்ணுவதோர் பண்பாடே, உலக மக்களின் நலன் கருதித் தொண்டு செய்யச் செய்ததன்றோ எனின், அவனுக்கு நன்மதிப்பு ஏற்பட்டது. அந்நன் மதிப்புக்கு அவன் அன்பே காரணம் என்பார், இவ்வாறு கூறினார் என்க. அஃதேயுமன்றி, ஒருவனின் உடல் வீழ்ந்த பின்னரும் மற்றொரு நிலை

உண்டென்னும் பிறர் நூற் கொள்கையையும் மறுப்பார் வையகத்து இன்புற்றார் என்றார்.

—(குயில் 31-1-61)

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(பி. மா.) அறியார் அறத்திற்கே அன்பு சார்பு என்ப
மறத்திற்கும் அஃதே துணை.

பொருள் : அறியார்—அறியாதார், அறத்திற்கே—அறஞ் செய்தற்கு மட்டுந்தான், அன்பு சார்பு என்ப—அன்பானது துணையாகும் என்று கூறுவார்கள். மறத்திற்கும்—வீரச் செயலுக்கும், அஃதே துணை—அந்த அன்பே துணையாவது.

கருத்து : தீமையினின்று மீட்க, அத்தீமையின் மேல் விரைவதோர் வீரத்திற்கும் அன்புதான் துணை செய்கின்றது.

ஆய்ந்து தெரிந்த புகன்மற வரோடு
படுபிணம் பிறங்க நூறிப், பகைவர்
கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே
(பதிற்றுப் பத்து 69: 8-10)

என்பது போன்ற இடங்களில் மறத்திற்கும் அன்பு துணையாதல் காண்க.

—(குயில் 31-1-61)

என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

(பி. மா) அறம் என்பு இலதனை வெயில்போல
அன்பு இலதனை காயும்.

பொருள் : அறம்—அறமானது, என்பு இலதனை—என்பு இல்லாத தசைக் கூட்டை, வெயில்போல—வெயிலானது காய்ந்தால் போல், அன்பு இலதனை காயும்—

அன்பில்லாத உடம்பைக் காய்ந்து பொசுக்கிப் பயனற்ற தாக்கி விடும்.

கருத்து : அன்பில்லா உடம்பை அறம் பொசுக்கி விடும்.

என்புள்ள உடம்பை வெயில் காய்ந்து பொசுக்குவது அரிது என்பார் என்பிலதனை வெயில் போல என்றார். அன்புள்ள உடம்பை அறம் பொசுக்கித் தீர்ப்பது அரிது என்பார், அன்பிலதனை அறம் என்றார்.

அன்பில்லா உடம்பை அறம் பொசுக்கவே, அவ்வுடம்பு பெறத் தக்க பேறுகளை இவ்வுலகிலிருந்தே பெற இயலாமை அறிக. அன்பில்லாத இடத்தும் உயிர் உண்டேயன்றோ, பெறத்தக்க பேறுகளைப் பெற என்ன தடை என்று கேட்பார்க்கு விடை என்னவெனில், அன்பு இல்லா தொழிய, உயிர் இருத்தலால் ஆவது ஒன்றுமில்லை என்ப தாம். உயிர் என்பதைத் திருவள்ளுவர் இன்றியமையாப் பொருளாகக் கருதவேயில்லை.

அன்பையே அவ்வாறு கருதினார் என்பது கருதத் தக்கது.

—(குயில், 31-1-61)

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

(பி. மா) அகத்து அன்பு இல்லா உயிர் வாழ்க்கை வன்
பாற்கண் வற்றல்மரம் தளிர்த்தற்று.

பொருள் : அகத்து—மனத்தின் கண், அன்பு இல்லா உயிர்—அன்பு இல்லாத உயிரானது, வாழ்க்கை—உடம்புடன் கூடி வாழ்வதானது, வன்பாற்கண்—வன்னிலத்தின் கண், வற்றல் மரம்—பட்ட மரம், தளிர்த்தற்று—தளிர்த்தால் அதை ஒக்கும்.

கருத்து : வன்னிலத்திற் பட்டமரம் தளிர்க்காதது போல அன்பில்லாத உயிரோடு கூடிய உடம்பு வாழ்தல் என்று மில்லை.

முன்னைய செய்யுட் கருத்தையே வலியுறுத்தினார். வற்றல்—தொழிற் பெயர். வற்றல் மரம்—பட்டமரம், பண்புத் தொகை நிலைத் தொடர்.

—(குயில் 31-1-61)

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

(பி.மா) யாக்கை அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு
புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும்.

பொருள் : யாக்கை- உடம்பின், அகத்து உறுப்பு— அடிப் படை உறுப்பாகிய, அன்பு இலவர்க்கு—அன்பில்லாதவர் கட்கு, புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும்— இன்றியமையாமைக்குப் புறம்பான கண் முதலிய உறுப்புக் கள் எல்லாம் வாழ்க்கைக்கு என்ன உதவியைச் செய்து. விடும் (செய்யமாட்டா என்றபடி).
கருத்து : யாக்கையில் கண் முதலிய உறுப்புக்களினும் மனத்தின் அன்பு ஆகிய உறுப்பு இன்றியமையாதது.

மற்றொரு வகையானும் அன்பினதுயர்வு கூறினார். மற்றைய புறத்துறுப்புக்களின் வரிசையிலேயே உயிரையும் வைத்துக் காட்டினார் இச் செய்யுளில், ஊன்றியுணர்க.

அன்பினுயர்வு கூறவே, இல்லறத்தோடுள்ள தொடர் பும் கூறினார் ஆயிற்று. யாக்கை—யாத்தல், கட்டுதல் தொழிற் பெயர். தோல், நரம்புகளால் கட்டியது போன்ற மையின் உடலுக்கு ஆகுபெயர்.

—(குயில் 7-2-61)

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(பி.மா) உயிர்நிலை அன்பின் வழியது அஃது இல்லார்க்கு
உடம்பு என்பு தோல் போர்த்த.

பொருள் : உயிர்நிலை—உயிர் நின்ற உடம்பாவது எது எனில், அன்பின் வழியது—அன்பை முதலாகக் கொண்டு அதன் வழியாக அமைந்தது, அஃது இலார்க்கு—அந்தக் காரணப் பொருளாகிய அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு உடம்புகளோ எனில், என்பு தோல் போர்த்த—என்பும் தோலும் போர்த்தவை.

கருத்து : உயிருடன் கூடிய உடல் அன்பினின்று வந்தது.

இல்லறத்திற்கு அன்பு இன்றியமையாதது என்பதும், அவ்வன்பு உயிர் வாழ்வுக்கே காரணமானதென்பதும் இவ்வதிகாரத்தால் விளக்கியருளினார்.

—(குயில் 7-2-61)

அதிகாரம்-9: விருந்தோம்பல்

அஃதாவது, விருத்தினரைப் பேணுதல். விருந்தினராவார், கடல் கோட்பட்டு வரும் குமரி நாட்டினின்று அவ்வப்போது வந்துறுவாரும், தெய்வ வரிசையில் வைத்தெண்ணப் படும் சான்றோர், அரசர் முதலியோரும் அவரல்லாத பிறரும் உறவினரும்.

(43 குறள் உரை பார்க்க)

விருந்து—புதுமை, புதுமையாய் வந்தோர்க்கு ஆகுபெயர், உண்பித்தல் என்னாது ஓம்பல் என்றது, உண்பித்தலோடு அமையாது, எதிர்கோடல், முகமலர்தல், அவர் விருப்பம் அறிதல் முதலியவும் குறித்தற்கு. விருந்து அன்பின் வழியது ஆதலின், அன்புடைமைக்குப்பின் இது வைக்கப் பட்டது.

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(பி. மா) இருந்து ஓம்பி இல் வாழ்வது எல்லாம் விருந்து
ஓம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள்: இருந்து—அறத்தின்கணிருந்து, ஓம்பி—பொருள் காத்து, இல்வாழ்வது எல்லாம்—இல்லத்தின் கண் வாழ்ந் திருப்பதெல்லாம் எதற்கு எனில், விருந்து ஓம்பி—வரும் விருந்தினரைப் பேணி, வேளாண்மை செய்தற் பொருட்டு— உதவி செய்வதன் பொருட்டேயாகும்.

கருத்து: இல்வாழ்வது விருந்தினரைப் பேணுதல் நோக்கத் தது.

—(குயில் 7-2-61)

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(பி.மா) தான் உண்டல் சாவா மருந்து எனினும்
விருந்து புறத்தது ஆ வேண்டற்பாற்று அன்று.

பொருள்: தான் உண்டல்—தான் உண்ண இருப்பது, சாவா மருந்து எனினும்—சாவாமைக்கு ஆதரவான மருந்தே ஆயினும், விருந்து புறத்தது ஆ—வந்த விருந்தினர் ஒரு புறத்தே இருக்க, அவரை விட்டுத் தானே, வேண்டற்பாற்று அன்று—உண்ணுமோர் பான்மையுடையதன்று. (உண்ணு தல் கூடாது என்றபடி).

கருத்து: மருந்தேயாயினும், விருந்தோடுண்ணுதல் வேண்டும்.

அமிழ்து—மேனின்று அமிழ்வது, மழை. அது சாவா மருந்து ஆதலின் அப்பெயராலும் வழங்கலாயிற்று. சாவா மருந்து—சாவதைத் தவிர்க்கும் மருந்து. நாளடைவில் இனிய பொருளுக்கெல்லாம் ஆயிற்று என்க.

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

(பி. மா) வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

பொருள்: வருவிருந்து—வந்த விருந்தினரை, வைகலும்—நாடோறும், ஓம்புவான்—பேணுவானது, வாழ்க்கை—நல் வாழ்க்கையானது; பருவந்து—வருந்தி, பாழ்படுவது இன்று—கேடுறுவது இல்லை.

கருத்து: வாழ்வு விருந்திட்டுக் கேடுற்றது என்பது இல்லை.

வருவிருந்து ஓம்புவான் புகழ் செய்தான் ஆதலின், அவன் வாழ்வு கேடுறுதல் இல்லை என்பார் பாழ்படுதல் இன்று என்றார்.

வருவார்க்கு ஊட்டலின் வளங்குறையாதெனை ஐய மறுத்தார் இப்பாட்டால்.

வருவிருந்து—இறந்தகால வினைத்தொகை நிலைத் தொடர். வந்த விருந்து என விரிக்க.

—(குயில் 7-2-61)

★

'வள்ளுவர் உள்ளம்'
பாவேந்தரின்
உரைபெறும் திருக்குறள்கள்

முறை கோடி மன்னவன் செய்யில் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்

பாயிரம்

1 அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

2 கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழா ரெனின்

3 மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்

4 வேண்டுதல் வேண்டாமை யிலானடி
சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில

5 இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

6 பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறி நின்றார் நீடுவாழ்வார்

7 தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது

8 அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது

9 கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை

10 பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்

வான்சிறப்பு

1 வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று

2 துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை

3 விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி

4 ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்

5 கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை

6 விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது

7 நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்

8 சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு

9 தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்

10 நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு

நீத்தார் பெருமை

1 ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு

2 துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று

3 இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு

4 உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து

5 ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி

6 செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

7 சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு

8 நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

9 குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது

10 அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்

அறன் வலியுறுத்தல்

1 சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு

2 அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு

3 ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்

4 மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற

5 அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம்

6 அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை

7 அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை

8 வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்

9 அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில

10 செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி

இல்வாழ்க்கை

1 இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை

2 துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் துணை

3 தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க
றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை

4 பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்

5 அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

6 அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற்
புறத்தாற்றிற்
போஒய் பெறுவ தெவன்

7 இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை

8 ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா இலவாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து

9 அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்

வாழ்க்கைத் துணைநலம்

1 மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

2 மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்

3 இல்லதெ னில்லவள் மாண்பானா லுள்ளதெ
னில்லவள் மாணாக் கடை

4 பெண்ணிற் பெருத்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்

5 தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை

6 தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

7 சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை

8 பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு

9. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை

10 மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கலம் நன்மக்கட் பேறு

மக்கட்பேறு

1 பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற

2 எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

3 தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்

4 அமிழ்தினு மாற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்

5 மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு

6 குழலினிதி யாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்

7 தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்

8 தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது

9 ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்

10 மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்

அன்புடைமை

1 அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசற் றரும்

2 அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடைய
ரென்பு முரியர் பிறர்க்கு

3 அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு

4 அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு

5 அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு

6 அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை

7 என்பிலதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்

8 அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று

9 புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு

10 அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு

விருந்தோம்பல்

1 இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

2 விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

3 வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று

ஆய்வுரை

திருக்குறள் உரையாசிரியர்கள்

உலக மக்கள் நன்னெறியில் வாழத் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். திருக்குறளுக்குப் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர், தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர் ஆகிய பதின்மர் உரை எழுதியுள்ளனர்.

பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், பரிப் பெருமாள், காளிங்கர் ஆகிய ஐவர் எழுதிய உரைகள் கிடைத்துள்ளன.

தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர் ஆகியோர் எழுதிய உரைகள் முழுமையாகக் கிடைக்க வில்லை.

தருமர், தாமத்தர், நச்சர் ஆகிய மூவர் கடவுள் வாழ்த்தில் இடம்பெற்றுள்ள 5, 6 ஆகிய இருகுறளுக்கு எழுதிய உரைகள் கிடைத்துள்ளன. மற்றவை கிடைக்க வில்லை.

அப் பெருமக்கள் எழுதிய உரைகள் தமிழ் இலக்கிய உலகிற்குக் கிடைக்காமல் போனமை நமக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பேயாகும். தொன்மை உரையாசிரியர் பதின்மர் அன்றி எழுதியவர் யார் என்று தெரியாத இரு உரைகள் நமக்குக் கிடைத்துள்ளன.

1. உ. வே. சா. நூல் நிலையம் வெளியிட்ட உரை.

2. மற்றோர் உரை பரிதியாரின் உரையைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

பரிமேலழகர்

திருக்குறள் உரையாசிரியர்களில் சிறந்து விளங்கும் இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். வைணவ சமயத்தைச் சார்ந்தவர். தமிழ் மொழி, வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிக்கவர்.

மணக்குடவர்

மணக்குடி என்னும் ஊரில் பிறந்ததால் மணக்குடவர் என்னும் பெயர் பெற்றார் என்பர். சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் மணக்குடி என்ற பெயரில் ஊர்கள் உள்ளன.

பரிமேலழகருக்குக் காலத்தால் முற்பட்டவர். பரிமேலழகர், மணக்குடவர் உரையைப் பல இடங்களில் மறுத்துள்ளார். (கு. எண் 128, 205, 223, 229, 254, 278, 299, 334, 338, 349, 369).

பரிதியார்

பரிதியார் என்பது பருதியார் என மருவிற்று என்பர். சைவ சமயச் சார்புடைய இவர், 'அறவாழி அந்தணன்' என்பதற்குப் பரமேஸ்வரன் என்று பொருள் எழுதுகிறார் இவர் எழுதிய திருக்குறள் உரையின் பெயர் 'சைவ உரை' என்பதாகும்.

காளிங்கர்

ஆய்வாளர் இவரைச் சமணர் என்று கருதுகின்றனர். பரிமேலழகருக்கு முற்பட்டவர். சிற்சில இடங்களில் இவருடைய உரையும் பரிதியார் உரையும் ஒத்தவையாக அமைந்துள்ளன.

பரிப்பெருமாள்

தென்செழுவை என்னும் ஊரில் பிறந்தவர் என்றும் மொழியியல் காமநூல் முதலிய நூல்களை எழுதியவர் என்றும் கூறுவர். 'கவிப்பெருமாள்' என்ற சிறப்புப் பெயராலும் அழைக்கப்பட்டவர். மணக்குடவர் உரையைப் பெரும்பாலும் தழுவி இவருடைய உரை அமைந்துள்ளது பரிமேலழகர் உரைக்கும் உரை எழுதிய பெருமை 'பரிமேலழகர் உரை நுண்பொருள்மாலை' என்னும் நூலால் புலனாகின்றது. காரிரத்தினக் கவிராயர் என்பவர் இந் நூலை இயற்றினார். (தமிழ்ப் புலவர் அகராதி, ப. 117)

தொன்மை உரையாசிரியர்களைப் போன்று இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களும் திருக்குறளுக்கு உரை எழுதி உள்ளனர்.* இவ்வாறு திருக்குறளுக்கு அறிஞர் பெருமக்கள் பலர் உரை எழிதியதற்குரிய காரணத்தைக் குறித்துத் தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் ''முன்னோர் எழுதிய உரையைத்

(*) திருக்குறள் உரையாசிரியர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு மேலும் படிக்க வேண்டிய நூல்கள்.

1. டாக்டர் இரா. சாரங்கபாணி, திருக்குறள் உரையாசிரியர், முதல் பதிப்பு, சென்னை 1991.
2. மு. வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், இரண்டாம் பதிப்பு, சென்னை, 1977, பக். 353—461.
3. டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், சென்னை-1985
4. டாக்டர் மு. கோவிந்தசாமி, பரிமேலழகர், அண்ணமலைப் பல்கலைக் கழகம், 1978.
5. டாக்டர் தமிழண்ணல், உரை விளக்கு, மதுரை, 1985.

தழுவக்கூடாது; தாமே ஒருதனியே, குறளுக்குப் புத்துரை எழுத வேண்டும் என்று எண்ணியதின் விளைவாகப் பிறந்தவையே திருக்குறள் புத்துரைகளாகும்'' என்பர். (எந்தச் சிலம்பு?, ப.20).

அறிஞர் செம்மல் வ. சுப. மாணிக்கம் அவர்களின் கருத்து, திருக்குறளின் உரைப்பெருக்கத்திற்கு உரிய உள்நோக்கத்தை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

மேலும் உரைகள் பல்கிப் பெருகியதற்குத் திருக்குறளின் பேரு வழக்கும் கருத்துச் செம்மையும் செறிவும் காலப்பொதுமையான கருத்துக்களும் இவை போன்றனவும் காரணமெனலாம்... காலந்தோறும் வளர்த்துவரும் கருத்து வளர்ச்சிக்கு ஏற்பத் திருக்குறளுக்குப் பொருளுரைத்ததாலும் உரைகள் பெருகியது என்று திருக்குறள் உரைகளின் பெருக்கத்திற்குரிய காரணத்தைக் காட்டுவார் ஆய்வாளர். (ப. தொழந்தசாமி, திருக்குறள் உரைகள் காட்டும் குறள் நெறி, முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், 1990, ப. 16).

திரு. வி. க. அறத்துப்பால் பாயிரத்திற்கும், வ. உ. சி., சுப்பிரமணிய சாஸ்திரி, ச. தண்டபாணிதேசிகர் ஆகியோர் அறத்துப்பாலுக்கும், கவிஞர் கண்ணதாசன் காமத்துப்பாலுக்கும் உரை எழுதி யுள்ளனர்.

கலைஞர் மு. கருணாநிதி திருக்குறளுக்குக் கதை வடிவில் உரை எழுதியுள்ளார். திருக்குறள் முழுமைக்கும் அவர் உரை எழுதவில்லை என்றாலும் கருத்துக்களை வெளிப்படுத்தும் மொழித்திறன் சிறப்பிற்குரியது.

நாமக்கல் கவிஞர், கவிராச பண்டிதர் (செகவீர பாண்டியர்), புலவர் குழந்தை, சாமி சிதம்பரனார், கவியோகி சுத்தானந்த பாரதியார் முதலிய கவிஞர்கள் திருக்

குறளுக்கு உரையெழுதி இருப்பது இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இவர்களுள் திராவிட இயக்கச் சார்புடையவர் புலவர் குழந்தை ஆவார். சாமி சிதம்பரனார் தொடக்கத்தில் திராவிட இயக்கத்திலும் பின்னர்ப் பொதுவுடைமை இயக்கத்திலும் இரண்டறக் கலந்தவர்.

டாக்டர் மு. வ., பாவாணர், டாக்டர் சி. இலக்குவனார், கோ. வடிவேலு செட்டியார், தண்டபாணி தேசிகர், திருக்குறள் முனுசாமி, பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, முனைவர் மு. கோவிந்தசாமி, பால்வண்ணன், கி. வா. ஜகந்நாதன், கோபால கிருஷ்ணமாச்சாரியர், கு சா. ஆனந்தன், பொதுவுடைமை இயக்கச் சிந்தனையார் டாக்டர் எஸ். இராமகிருட்டிணன், நாவலர் இரா. நெடுஞ்செழியன் முதலியோர் திருக்குறள் முழுவதற்கும் உரை எழுதியுள்ளனர்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் திருக்குறள் தொடர்பாக வெளிவந்த உரைகளையும் நூல்களையும் கற்று விரிந்த அளவில் திருக்குறளுக்கு உரை கண்டுள்ளார். நுண்மான் நுழைபுலம் மிக்க அவருடைய உரைத்திறன் முன்னுரையிலும் உரையிலும் வெளிப்படுகிறது.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, 'திருக்குறள் மணிவிளக்கவுரை' என்ற தலைப்பில் உரை எழுதியுள்ளார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் திருக்குறளுக்கு வள்ளுவர் உள்ளம் எனும் தலைப்பில் உரை எழுதியுள்ளார்.

உரை முழுவதும் நமக்கு கிடைக்கவில்லை. ஆயினும் கிடைத்த உரைகள் இங்கு நூலாக்கம் பெற்றுள்ளன.

பாரதிதாசனின் நெஞ்சம் கவர்ந்த நூல் திருக்குறள்

பழந்தமிழ் நூல்களில் பாரதிதாசனைக் கவர்ந்த நூல்களுள் திருக்குறள் ஒன்று. அந் நூல் பற்றித் "தெள்ளு தமிழ்நடை; சின்னஞ்சிறிய இரண்டடிகள்: அள்ளுதொறுஞ்சுவை; உள்ளுந்தொறும் உணர்வாகும் வண்ணம் கொள்ளும் அறம், பொருள், இன்பம் அனைத்தும் கொடுத்த திருக்குறள்" (பா.தா. க.தொ. 2., ப. 154) என்று திருக்குறளின் அமைப்பையும், சிறப்பையும் போற்றுகிறார்.

பாரதியார் வள்ளுவரை உலகிற்குக் கொடுத்துத் தமிழ்நாடு வான்புகழ் கொண்டது என்கிறார்.

குறளால் புகழ்பெற்ற வையகம்

பாரதிதாசன் அவரைக் காட்டிலும் ஒருபடி உயரச் சென்று 'வள்ளுவரைப் பெற்றதால் இவ் வையகம் புகழ் பெற்றது' என்கிறார்.

உலகம் சிறக்கப் பிறந்தவர் வள்ளுவர் என்பது பாரதி தாசன் கருத்து

திருமால் ஈரடியால் இவ்வுலகை அளந்தார் என்பர் புராணிகர். திருமாலைப் போன்று வள்ளுவனும் திருக் குறளில் இரண்டடியால் இந்த வையத்தை அளந்தார் என்று எண்ணிப் பாரதிதாசன் பெருமைப்படுகிறார். திருக்குறள் உலக நலம் தழுவியது; சாதி, சமய, மொழி எல்லைகளைக் கடந்தது என்பதை இலக்கிய நலம் சிறக்க பின்வருமாறு விளக்கியுள்ளார்:

வானுக்குச் செங்கதிர் ஒன்று — புனல்
வண்மைக்குக் காவிரி ஒன்று — நல்ல
மானத்தைக் காத்து வாழ எண்ணுமிந்த
வையத்துக் கொன்று திருக்குறள்

(தேனருவி, ப. 12)

என்று திருக்குறளின் நிலைபேற்றினைப் புகழ்கிறார்.

நன்னெறி, தீநெறி ஆகிய இருநெறிகளைத் தெளிவாக விளக்கி, அவற்றுள் மக்களை நன்னெறிச் செலுத்தத் தூண்டும் நூல் திருக்குறள் என்கிறார்.

அறமி தென்றும்யாம் மறமி தென்றுமே
அறிகிலாத போது — யாம்
அறிகிலாத போது — தமிழ்
இறைவ னாரின்திருக் குறளிலே ஒருசொல்
இயம்பிக் காட்ட மாட்டாயா? நீ
இயம்பிக் காட்ட மாட்டாயா?

(இசையமுது-I, ப. 48)

எனும் பாடல் பகுதி இங்கு எடுத்துக்காட்டத் தக்கது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது பழமொழி. 'வள்ளுவன் வழிச் சென்றால் நல்லவழி பிறக்கும்' என்பது பாரதிதாசனின் புதுமொழி. (பா. தா. க. தொ. 3, ஏற்றப்பாட்டு, ப. 153).

காதல் பாடல் திருக்குறள்

காதலன் காதலியை நோக்கி,

மரத்தின் நிழலில் நின்று கொண்டு
வந்த என்னை நீயும் கண்டு
வானம் பார்க்க என்ன உண்டு நல்ல
பருத்தி புடவை காய்த்ததடி பொன்வண்டு—நீ
பக்கத் திலேநின் றாயடி கற்கண்டு

(குயில் — 28.6.60)

என்று பாடுவதாகக் குறிப்பிடுகிறார். அப் பாடலுக்குத் 'திருக்குறள் படித்தான்' என்று பாவேந்தர் தலைப்பளித் துள்ளார்.

திருக்குறள் காமத்துப்பாலில் 110-வது அதிகாரம் குறிப்பறிதலுக்கு இலக்கியமாக இப் பாடல் அமைந் துள்ளது.

காதல் பாடலுக்குத் 'திருக்குறள் படித்தான்' என்று தலைப்பிட்டிருப்பது அவர் திருக்குறள் மேல் கொண்ட ஈடுபாட்டையும் மதிப்பையும் காட்டுகின்றன.

பாரதிதாசன் திருக்குறள்

திருக்குறளில் ஈடுபாடு கொண்ட பாரதிதாசன் திருக் குறளைப் போன்று தானும் ஒரு நூலைப் படைக்க வேண்டும் என்று எண்ணினார். அதற்குப் 'பாரதிதாசன் திருக்குறள்' என்று பெயரிட்டார். அவர் பாடிய குறள் கள் வருமாறு :

பாட்டு 1

எந்நற் பொருள்கட்கும் ஏங்கா தொருவயின்
மன்னலே ஆகும் மனம்.

(பாரதிதாசன் திருக்குறள், குயில்—12.7.60)

பாட்டு 2

ஒருவன் புகழ்வான் ஒருவன் இகழ்வான்
இரண்டுக்கும் அப்பால் இரு.

(பாரதிதாசன் திருக்குறள், குயில் - 20.6 60)

பாட்டு 3

இடைச்செருகல் வள்ளுவரில் இல்லை படைத்தமிழ்
யாவினும் உண்டென்பேன் யான்.

(பாரதிதாசன் திருக்குறள், குயில் - 28.6.60)

பாட்டு 4

இருந்தாள் இருக்கின்றாள் என்றும் இருப்பாள்
வருந்தாள் மறத்தமிழ்த் தாய்.

(பாரதிதாசன் திருக்குறள், குயில்-9.8.60)

பாட்டு 5

அவன்செய லாலவன் செல்வம் அடைந்தான்
எவன்செயலால் ஏந்துகின்றான் கை.

(பாரதிதாசன் திருக்குறள், குயில்-16.8.60)

ஆயினும் பாரதிதாசன் திருக்குறள்' முழுமையான நூல் வடிவம் பெறவில்லை.

பாரதிதாசனைப் போன்று ரசிகமணி டி.கே.சி.யின் இலக்கிய வட்டத்தைச் சார்ந்த வழக்கறிஞர் ஆவுடையப்ப பிள்ளையும் திருக்குறளைப் பின்பற்றி'நவீன குறள்களை'ப் புனைந்துள்ளார். வண்ணாரப்பேட்டையில் அவர் வாழ்ந்ததால் 'வண்ணாரப்பேட்டை வள்ளுவர்' என்று சிறப்பாக அழைக்கப்பட்டார். அவர் பாடிய சில குறள்கள் வருமாறு :

1. டைகட்டி வாழ்வாரே வாழ்வார் மற்றவர்
   கைகட்டிப் பின்செல் பவர்.

2. சொன்ன சொல்லைச் சுருதியால் கேட்டு
   பின்னர் மறந்து விடு.

3. குல்லாய்க்குள் குல்லாய்க்குள் குல்லாய்க்குள்
குல்லாய்க்குள் எல்லாம் தலை. [குல்லாய்க்குள்

4. கற்றதனா லாய பனென் கணவனை
விற்றுச் சுருட்டலே தான்.

ஆவுடையப்ப பிள்ளையின் இக் குறள்கள் நகைச்சுவையை முதன்மையாகக் கொண்டவை. (ஹாஸ்யக் குறள்கள், தில்லி-சுடர், திருவள்ளுவர் மலர், 1968, ப. 55).

ஆயின் பாரதிதாசன் குறள்கள் சமூக மாறுதலையும் தாய்மொழிப் பற்றையும் உள்ளடக்கமாகப் பெற்றவை.

தமிழர் திருமண முறைக்குச் சான்றுபகரும் திருக்குறள்

தமிழர் திருமண முறையைத் தெளிவாக விளக்குகின்ற இலக்கியங்கள் இல்லை என்று கூறுவோரின் கருத்தை மறுத்து, திருக்குறள் தமிழர் திருமணமுறையை வெளிப் படுத்தும் நூல் என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார். (குயில்-22.3.60).

''தொல்காப்பியர், இளங்கோவடிகள் முதலியோர் கூறும் திருமணமுறை ஆரியர் திருமண முறையாகும். தமிழகத்தில், புகுந்த அம் மூடப்பழக்க வழக்கங்களுக்கு அவர்கள் செய்யுள் செய்தனர்'' என்றும் சுட்டுகின்றார்.

மேலும் தொல்காப்பியத்தில் காணப்படும் ஆரிய திருமணமுறைச் சடங்குகள் இடைச்செருகல் என்று கருதுகிறார்.

திருவள்ளுவர் தந்த திருமணத்திட்டம் குறித்து, ''ஒருவனும் ஒருத்தியும் மறைவாக ஒன்றுபடுகின்றார்கள்.

வெளிப்படையாக வாழ்க்கை நடத்துகின்றார்கள். பெண்ணிருக்கும் இடத்தைத் தெரிந்துகொள்ள மாப்பிள்ளையின் தந்தை பார்ப்பானிடத்தில் போவது பற்றியோ, பெட்டிவாணம் கொளுத்துவது பற்றியோ, அம்மி, சாலுங்கரகம் பற்றியோ, தீ வளர்த்துவது பற்றியோ, பார்ப்பானுக்குச் செருப்பும் பருப்பும், கட்டணமும், பொட்டணமும் காலில் வைத்து விழுவது பற்றியோ பேசவேயில்லை வள்ளுவர். அவர் கூறியுள்ளது சாதகமல்ல என்றும் மாறுபடாத உண்மை வாழ்வியல் நெறி என்றும் விளக்கமளித்துள்ளார். (குயில்-14.6.60).

திருக்குறள் வாழ்வியல் நூல்

டாக்டர் அ. சிதம்பரனார் திருக்குறள் பற்றி உரை நிகழ்த்த உருசியா சென்றார். மாசுகோவில் நடைபெற்ற கீழைநாட்டு மொழியறிஞர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட அவர், 'உலகினருக்குத் திருவள்ளுவர் தரும் செய்தி' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையின் சுருக்கம் வருமாறு :

''திருவள்ளுவர் வாழ்வியலில் பல்வேறு குணங்களையும் நன்கு உணர்ந்தவர். செம்மையாக வாழ்வை நடத்தி உயர்நிலை அடைவதற்கு வழிவகைகளைக் கூறும் கருத்துக்கள் பல திருக்குறளில் பொதிந்து கிடக்கின்றன. அன்றாட வாழ்வை இனிமையும் பண்பும் பயனும் உடைய தாக்குவதே திருக்குறளின் உள் உணர்ச்சியாகும். இது ஓர் அப்பட்டமான வாழ்க்கை நூல்''

முன்னர்ச்சுட்டிய டாக்டர் சிதம்பரனாரின் உரையைப் 'பேராசிரியர் அவர்கள் தமிழர்களின் பண்பாட்டின் உயர்வை உருசியால் நன்கு எடுத்து விளக்கினார் என்பதில் ஐயமில்லை' என்று பாவேந்தர் பாராட்டியுள்ளார். (குயில்-13.9.60).

திருக்குறள் ஒரு சாட்டை

பொருளியல் மேதை டாக்டர் நடராசன் திருக்குறள் பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கத்தைப் பாரதிதாசன் குயில் இதழில் வெளியிட்டுள்ளார்.

''பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் போரையும் காதலையுமே நோக்கமாகக் கொண்டவை என்று நடராசனார் கூறித் தமிழுக்கு இலக்கியமே இல்லை என்ற மரமண்டைகளுக்கும் தமிழிலக்கியத்தில் திருமணம் பற்றி ஒன்றுமேயில்லை என்ற முட்டுக்கட்டைகட்கும் நல்ல சாட்டை கொடுத்தார்'' என்று பாராட்டியுள்ளார். (குயில்-14.1.61).

திருக்குறளில் இடைச்செருகல்

தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பியங்கள் முதலிய தமிழ் இலக்கியங்களில் இடைச்செருகல் உண்டென்றும் திருக்குறளில் மட்டும் இடைச்செருகல் இல்லையென்றும் பாரதிதாசன் சுட்டியுள்ளார். (குயில்-28 6.60)

ஆரியக் கருத்துக்களுக்கு எதிரானவர்

திருக்குறள்மாலையில் இடம்பெற்றுள்ள நல்கூர் வேள்வியார்,

உப்பக்க நோக்கி உபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப — இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.

எனும் பாடலைப் பாரதிதாசன் எடுத்துக்காட்டி, 'இதனால் அறிவதென்னவென்றால் - இருவேறு நூற்கள்,

இருவேறு கொள்கைகள், இருவேறு மொழிகள், இருவேறு பண்பாடு உள்ளன, உணர்தல் வேண்டுமன்றோ? என்று வினவுகிறார். (பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2, ப. 156). இணைப்பு — நிழற் படம்,)

ஆரியப் பண்பாடு, தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றுள் தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகம் திருக்குறள் என்பது பாரதிதாசன் கருத்து.

வள்ளுவர் ஆரியக் கருத்துக்களுக்கெதிராகத் திருக்குறளை இயற்றினார் என்பது அறிஞர்களின் முடிவு.*

(*) 1. 'வள்ளுவர்செய் திருக்குறளை மறவறநன்கு உணர்ந்தோர்கள், உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி' — சுந்தரம்பிள்ளை, மனோன்மணியம்நாடக முன்னுரை.

2. மறைமலையடிகள், திருக்குறள் ஆராய்ச்சி, மூன்றாம் பதிப்பு, சென்னை, 1977, பக். 26-39.

3. நாவலர் சோமசுந்தர பாரதியார், திருவள்ளுவர், மதுரை, 1929, ப.14.

4. ஞா. தேவநேயன், திருக்குறள் தமிழ் மரபுரை, முதற் பதிப்பு, காட்டுப்பாடி, 1969, முன்னுரை பக். 16 - 17.

5. புலவர் குழந்தை, திருக்குறள் உரை, ஈரோடு, 1967, முகவுரை.

6. கி. ஆ. பெ. விசுவநாதம், திருக்குறள், புதைபொருள் முதல்பாகம் சென்னை, 1974, ப. 32.

7. நாவலர் இரா. நெடுஞ்செழியன், திருக்குறள் தெளிவுரை, இரண்டாம பதிப்பு, சென்னை, 1991, முன்னுரை ப. 21.

பாரதிதாசன் அவர்கள் முடிவை ஏற்றுக்கொள்கிறார். ஆரியனும் வள்ளுவனும் பேசுவதைப் போன்று ஆறு வெண்பாக்களைப் பாரதிதாசன் இயற்றியுள்ளார்.

1. மேலுலகம் நல்லது

2. தேவருலகே சிறந்தது

3. மக்கள் பெறத்தக்கது மேலுலகு

4. மேலுலகில் வாழ்பவர்களே நிலவுலகைப் படைத்தனர்.

5. ஆரிய நான்மறையே சிறந்தது.

6. மேலுலகில் வாழ்பவர்களுக்குப் பிணியேற்படுவதில்லை.

எனவே அவர்கட்கு மருந்து தேவையில்லை. வறுமையும் அவர்கட்கில்லை, ஆகவே பசி, பட்டினியால் அவர்கள் சாவதில்லை.

இவ்வாறு ஆரியன் உரைத்த கருத்துக்களையெல்லாம் வள்ளுவர் தக்கவாறு மறுத்து, 'நான்பிறந்த இவ்வுலகம் சிறந்தது' என்று அறிவுறுத்துகிறார். (குயில் — 10.5.6.).

மேலுலகு

மேலுலகு என்பது ஒரு கற்பனை வாதம் என்றும் மேலுலகில் இருக்கும் தேவர்களுக்கு நோய் இல்லை என்றால் அங்கு உபயேந்திரன் என்னும் மருத்துவன் இருப்பதாக ஏன் புராணங்கள் சுட்டுகின்றன? என்றும் தேவருலகைக் காட்டிலும் மக்கள் உலகே சிறந்தது என்றும் அறிவிக்கிறார். ஆரிய நான்மறையை விடுத்துத் தமிழ் நான்மறையைத் தழுவியே தாம் திருக்குறளை இயற்றிய

தாகத் தெரிவிக்கிறார். இரப்பார் இல்லாத வாழ்க்கை சுவைக்காது என்று எல்லாம் அறிந்த வள்ளுவன் கூறிய தாகப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார். (குயில் — 10.5.60).

மேலும் ஆரிய நான்மறையும், மனுவும் ஒரு குலத்திற் கொரு நீதி வகுத்தனர். ஆயின் வள்ளுவர் பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லையென்னும் சமூகநீதியை வலியுறுத்தித் திருக்குறளை இயற்றினார். எனவே பாரதிதாசன்,

வித்திப் பிழைக்கும்
உழவனும் வேந்தனும் நாடனைத்தும்
ஒத்துப் பிழைக்க
வழிகாட்டி வள்ளுவன் ஓதியநூல்
எத்துப் பழுத்தனர்
ஏமாற்றும் ஆரியர் நான்மறை போல்
அத்திப் பழமன்று
தித்திக்கும் முப்பழம்

என்று குறிப்பிடுகிறார். (பா.தா.க., தொ.2, ப.155).

வள்ளுவரை மானிட சமூகம் உய்யப் பாடிய 'மானுடம் பாடி' என்று போற்றுகிறார். அதற்குப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர், தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்னும் திருக்குறளைச் சான்றாகக் காட்டுகிறார் (பன்மணித்திரள், ப.311).

திருக்குறள் தொடர்களைக் கையாளுதல்

பாரதிதாசனுடைய நூல்களில் சிறந்தவற்றுள் குடும்ப விளக்கும் ஒன்று. அந் நூலைக் 'குறளோவியம், குடும்ப விளக்கு' என்று பாவேந்தர் முன்னுரையில் குறிப்பிடு கிறார். சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்திற்கு முதலடியை எடுத்துத் தந்தவர் சிவபெருமான் என்பர். கலைஞரின் குறளோவியம் என்னும் நூலுக்கு

அத் தலைப்பைத் தந்தவர் பாரதிதாசன் என்பது இங்கு நினைக்கத்தக்கது.

பாரதிதாசன் திருக்குறள் மேல் கொண்ட ஈடுபாட்டைக் குடும்பவிளக்கு முன்னுரை வெளிப்படுத்துகிறது.

பாரதிதாசன் குடும்பவிளக்கில் திருக்குறள் தொடர்களைப் பல இடங்களில் கையாண்டுள்ளார்.

எடுத்துக்காட்டு

1. மோந்தால் குழையும் அனிச்
 சம்பூ முகமாற்றம்
 வாய்ந்தால் குழையும்
 வருவிருந்தென்று — ஆய்ந்ததிரு
 வள்ளுவனார் சொன்னார்

(குடும்ப விளக்கு, விருந்தோம்பல், ப.42)

எனும் பாடல் பகுதி திருக்குறள் விருந்தோம்பலில்,

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

(குறள் 90)

எனம் திருக்குறளை அடிப்படையாக வைத்துப் புனையப் பட்டுள்ளது.

2. அறத்தால் வருவதே
 இன்பம் என்றான்றோர்
 குறித்தார் குறிப்பறிக

(குடும்ப விளக்கு, விருந்தோம்பல், ப.68)

எனும் பாடற்பகுதி திருக்குறள் அறன்வழியுறுத்தலில் இடம் பெற்றுள்ள,

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல

(குறள் 39)

எனும் திருக்குறளைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

3. வேடப்பன் நகைமுத்து ஆகியோரின் முதலிரவு பற்றிப் பாரதிதாசன்,

புலவர்தரு திருக்குறளின்
பொருளாய் தற்கு
வகை செய்து வைத்த இடம்
வாழ்வில் இன்பம்
வாய்க்கும் இடம் 'மணமக்கள்
வாழ்க நன்றே'

என்று வாழ்த்துகின்றார். (குடும்ப விளக்கு திருமணம், ப. 132.)

இங்குத் திருக்குறள் காமத்துப்பாலைப் 'பொருளாய் தற்கு வகை செய்து வைத்த இடம்' என்று குறிப்பிடுகிறார்.

4. தற்காத்துத் தற்கொண்டானைத்
தான் காத்துத் தகைமை சான்ற
சொற்காத்துச் சோர்விலாளே

(குடும்ப விளக்கு, முதியோர் காதல், ப. 190)

எனும் பாடற்பகுதி திருக்குறள் வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள,

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

(குறள் 56)

என்னும் திருக்குறளைத் தழுவி உள்ளது.

5. மனதில் மாசு வராமையே அறம் எனும்
வள்ளுவர் வாய்மொழி மறந்தறியேன்

(குடும்ப விளக்கு, முதியோர் காதல், ப.193)

எனும் பாடற்பகுதி திருக்குறள் அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள,

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற'' (குறள், 34)

எனும் திருக்குறளைப் பின்பற்றி அமைந்துள்ளது.

6. அறம் என்பதற்கு இல்லறம், துறவறம் என இரு வகையாகப் பரிமேலழகர் பொருள் கொள்வதைப் பாரதிதாசன் ஏற்கவில்லை. (இல்வாழ்க்கை குறள் 9, பரிமேலழகர் உரை) 'அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை' என்று வள்ளுவர் தெளிவாகக் குறிப்பிட்டு விட்டதாகப் பாரதிதாசன் சுட்டுகிறார். (குடும்ப விளக்கு, முதியோர் காதல், ப. 193, 194).

7. 'அன்பின் வழியதுயிர் நிலை' எனும் பாடற்பகுதி திருக்குறள் அன்புடைமை அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள,

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு

(குறள் 80)

எனும் திருக்குறளைப் பின்பற்றி இயற்றப்பட்டுள்ளது.

8. மணவழகரும் தங்கமும் அகவை முதிர்ந்த காலத்தில் திருக்குறளில் ஆய்வு நடத்தினர் என்றும் விரிவுரை

செய்தனர் என்றும் பாரதிதாசன் பின்வருமாறு குறிப்பிடு கிறார்:

குறட்பாவில் இரண்டு செய்யுள்
படித்தோமே அவற்றினுக்கு
விரிவுரை பலவும் ஆய்ந்து
முடித்தோமே!

(குடும்ப விளக்கு, முதியோர் காதல், ப 197, 198)

இவ்வாறு குடும்ப விளக்கில் பாரதிதாசன் தம்முடைய கருத்துக்களுக்கு வலிமை சேர்க்கவும் விளக்கவும் திருக் குறள் தொடர்களை ஆங்காங்கு எடுத்தாண்டுள்ளார்.

9. கடல்மேல் மொழியில்,

போகுமட்டும் பூரிப்பாள் போகவிடை பெற்றுப்பின்
ஏகுமட்டும் பின்னழகு பார்த்திருப்பாள்

(பா.தா.க. 3. க.மே.கு. ப 5)

எனும் பாடற்பகுதி திருக்குறளில் 'குறிப்பறிதல்' எனும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பாடல் கருத்துக்களைத் தழுவி அமைந்ததாகும்.

10. திராவிடர் திருப்பாடலில் (பா.தா.க.,3, ப.171)

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனுமோர் சிறப்புடைய நம்கொள்கை நானிலத்தில் செல்வம்'' எனும் பாடற்பகுதி திருக்குறளில் 'பெருமை' எனும் அதிகாரத் தில் உள்ள 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப் பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்' (குறள் 972) எனும் குறளை அடியொற்றிப் புனைந்ததாகும்.

11. மேற்படி நூலில், 'வீழ்நாள் படாஅமை' எனத் தொடங்கும் பாடற்பகுதி, (பா.தா.க.3., திராவிடர் திருப்பாடல், ப. 173) திருக்குறளில் 'அறன் வலியுறுத்தல்' எனும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள,

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்

(குறள் 38)

என்னும் குறளைப் பின்பற்றி யமைந்ததாகும்.

புரட்சித் திருமணத்திட்டம்

திராவிடர் புரட்சித் திருமணத் திட்டத்திற்கு அடிப்படைக் கொள்கையாகப் பாரதிதாசன் திருக்குறளைக் கொள்கிறார். திருமணத்திட்டம் குறித்துப் பாரதிதாசன் கூறிய கருத்துக்கள் வருமாறு :

அவைத்தலைவரை ஒருவர் முன்மொழிய, பிறிதொருவர் வழிமொழிய வேண்டும்.

அதன்பின் திருமணத்தை நடத்தி வைக்கும் அவைத் தலைவர் திருமண மேடையில் அமர்வர்.

அவர் மூடநம்பிக்கைகளைக் கொண்ட ஆரிய திருமண முறையை எதிர்த்தும் தமிழர் திருமண முறையை வலியுறுத்தியும் பேசுவர்.

பின்னர் மணமக்களுக்கு வாழ்க்கை ஒப்பந்த உறுதி மொழியைக் கூறச்செய்வர். மணமக்கள் இருவரும் மாலையையும் கணையாழியையும் மாற்றிக் கொள்வர்.

அந் நிகழ்ச்சிக்குப்பின் தலைவர் மணமக்களைத் திருக்குறள் வழியில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுமாறு அறிவுரைகள் பகர்வார்.

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
(குறள் 45)

2. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. [கொண்டான்
(குறள் 51)

3. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.
(குறள் 56)

4. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.
(குறள் 60)

5. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இல்*
(குறள் 955)

6. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு.
(குறள் 970)

இவ்வாறு திருமணத்தை நடத்திவைக்கும் பெரியார் அறவுரைகள் வழங்குவதாகப் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார்.

திராவிடப் புரட்சித் திருமணத்திட்டம் என்னும் நூல் இயற்றுவதற்குத் திருக்குறளும் ஓர் அடிப்படையாயிற்று எனலாம்.

(பா. தா. க., தொகுதி 3, பக் 218, 219)

---

* இல், இன்று என்பன பாடபேதம், பாரதிதாசன் இக்குறளின் ஈற்றுச் சீரை 'இல்' என்றே முடித்துள்ளார்.

திருக்குறள் கருத்துக்களைக் கையாளுதல்

திருக்குறள் சமயக் கணக்கர் வழி நின்று எழுதப் படாமல் உலகியல் நலம் கருதி எழுதப்பட்ட நூலாகும்

1. 'திருக்குறளில் கோயில் இல்லை' என்பது பாரதி தாசன் கருத்து. எனவே அவருடைய கருத்தைக் கதை வடிவில் ஒரு சிறு நிகழ்ச்சி மூலம் குடும்பவிளக்கில் வெளிப் படுத்தியுள்ளார்.

நாடிமுத்து வேடப்பனிடம் பத்து ரூபாய் கடன் கேட்டான். வேடப்பனும் கொடுப்பதற்கு இசைந்தான். அதற்குள் வேடப்பனின் மகள் அமுது திருக்குறளைக் கையில் எடுத்துக்கொண்டு வந்து தொப்பென்று போட்டுத் 'திருக்குறளில் கோயில் காட்டுப்பா' என்று கூறினாள். வேடப்பன், 'திருக்குறளில் கோயில் இல்லையம்மா' என்று கூறினான். இதனைக் கேட்ட நாடிமுத்து, 'தில்லைக் கோயிலுக்குச் செல்ல எண்ணியே பத்து ரூபாய் பணம் உனைக்கேட்டேன். கோயில் இல்லையா குறளில்? ஆயின் என் பணத்துக்கில்லை அழிவே? என்று நவின்றான். (கு. வி., மக்கட்பேறு, ப 175).

2. குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

(குறள் 66)

எனும் குறள் கருத்தைக் கவிஞர் கதை நிகழ்ச்சி மூலம் விளக்கியுள்ளார். வேடப்பன் காலை உணவுண்டு கடைக்குப் புறப்படும்போது அவருடைய மகள் அமிழ்தை நோக்கி உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டார். அமிழ்து கோழி', 'நாயிகுட்டி', 'அம்மா' என்கிறாள். (கு. வி., மக்கட்பேறு, ப. 175).

3. திருக்குறள் மக்கட்பேறு அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள,

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்

(குறள் 64)

எனும் திருக்குறளுக்குக் கதை நிகழ்ச்சி வடிவம் தந்துள்ளார்:

சின்னஞ்சிறு குழந்தையான அமிழ்து சிறகு விரித்த செங்கால் அன்னம் போல நடந்து தாழ்வாரத்தில் இடையில் இருந்த மைக்கூட்டை எடுத்துக் கொல்லையில் உள்ள முல்லைக்கொடியில் அதைச் சாய்த்தாள். அங்கு நீலம் சார்ந்த சேற்றால் சிற்றில் ஒன்று செய்து முடித்தாள். பின் தந்தை உண்ணும் தயிரின் சோற்றை அங்கையால் பிசைந்தாள். நிலா நிறத்தயிர்ச் சோறு நீலநிற தயிர்ச் சோறாக மாறிற்று. வேடப்பனும் அவளுடைய செய்கையைக் கண்டு வெறுப்படையாமல் அங்கையால் அவள் அள்ளித் தந்த சோற்றை அவனும் விரும்பி வாங்கி உண்டான் சேறும் சோறும் தந்தைக்குத் தேனாகவே தித்தித்தது. (கு வி., மக்கட்பேறு, ப. 176).

இவ்வாறு திருக்குறள் கருத்துக்கள் குடும்ப விளக்கில் கதை நிகழ்ச்சிகளாகப் பொலிவு பெற்றுள்ளன.

திருக்குறள் — நாடகவடிவம்

புதுக்கோட்டையில் இருந்து வெளிவந்த பொன்னி இதழின் சார்பிதழான 'முத்து' என்னும் இதழில் திருக் குறள் 'ஊக்கமுடைமை', 'தீவினையச்சம்' எனும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள இரு குறட்பாக்களைச் சிறு நாடகங்களாக்கியுள்ளார். அவை வருமாறு:

1. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை.

(குறள் 594)

2. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று.
(குறள் 208)

இவ்வாறு திருக்குறள் கருத்துக்களை மையமாக வைத்துக்கொண்டு பாரதிதாசன் கதை நிகழ்ச்சிகளையும் நாடகங்களையும் புனைந்துள்ளார்.

இவர் வழியைப் பின்பற்றிப் பின்னர்ச் செகவீர பாண்டியனும், கலைஞர் கருணாநிதியும், திருக்குறள் குமரேசவெண்பா, குறளோவியம் ஆகிய நூல்களைப் படைத்தனர்.

திருக்குறள் — கதை வடிவம்

மாணிக்கத்தின் பசுமாடு நோய்வாய்ப்பட்டது. வாகீச அய்யர் வருகை தந்தார். மாணிக்கம், 'நேற்று வந்தீர்கள் என் பசுமாடு நோயால் கிடந்தது. இன்றும் வந்தீர்கள் உயிர் ஊசலாடுகிறது. மாட்டைக் காப்பாற்ற மருந்தெழுதிக் கொடுங்கள்' என்று கேட்டான். உடன் அய்யர், "உன் மனத்துன்பத்திற்கு மருந்தாக இதை எழுதிக் கொடுத்தேன். படித்துக் கொள்க" என்று கூறினார். 'முற்பிறப்பில் செய்த வினைப்பயனை வெல்ல முடியாது' என்று வெள்ளைத்தாளில் அய்யர் எழுதியிருந்தார். பின்னர் மாணிக்கத்திடம் வாகீச அய்யர் கூலி கேட்டார். இல்லையென்றான் மாணிக்கம்—ஏனென்றான் பார்ப்பான். அதற்கு மாணிக்கம் பார்ப்பான் எழுதிக் கொடுத்ததையே மீண்டும் அவன் கையில் கொடுத்தான். (மனத்துன்பத்திற்கு மருந்து, குயில் — 22.9.59).

வள்ளுவர் ஆரிய சமயச் சார்பான பல் பிறவிக் கொள்கைக்கு எதிர்ப்பாளர் என்ற கருத்தை இச் சிறு கதையில் விளக்கியுள்ளார்.

நெடும் பாடல்கள்

பாரதிதாசன் குறட்பாக்களுக்கு விளக்கம் தருகின்ற வகையில் மூன்று நெடும் பாடல்களை இயற்றியுள்ளார்.

1. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
   பெய்யெனப் பெய்யும் மழை.

(வாழ்க்கைத் துணை நலம், குறள் 55)

எனும் குறள் கருத்தை விளக்குகின்ற வகையில் 'தொழு திடுவாள்' என்னும் சிறுகதைப் பாடலைப் பாடியுள்ளார்.

கணவன் மனைவி ஆகிய இருவரின் உயிர் நட்பைக் கதைப்பாடலில் சித்திரித்துள்ளார். தலைவி தோழியிடம், ''நவிலுவேன் கேட்பாய் தோழி! கண், மூக்கு, காது, வாய், மெய் இன்பத்தில் கவிழ்ப்பான்; மற்றும் பெண் பெற்ற தாயும் போல்வான்; பெரும்பணி எனக் கிழைப் பான்; வன்மையால் கால் துடைப்பான்; மறுப்பினும் கேட்பானில்லை; உண்மையில் நான் அவன்பால் உயர் மதிப்புடையேன்'' என்று தலைவனின் அரும்பெரும் பண்புகளை மெச்சுகிறாள்.

கணவனிடத்தில் பேரன்பு கொண்ட அத் தலைவி,

நிலந்தொழேன் நீர்தொழேன் விண்
வளிதொழேன் எரிதொழேன் நான்
அலங்கல்சேர் மார்பன் என்றன்
அன்பனைத் தொழுவதன்றி

என்று கணவனைத் தொழுகின்ற முறைக்குரிய காரணத்தை விளக்குகிறாள். மேலும்,

இயங்கிடும் உயிரன்னோனை
இருகையால் தொழுதெழுந்தேன்

என்று கணவனைப் பேரன்பின் காரணமாகத் தொழு தெழுந்த முறையைக் குறிப்பிடுகிறாள்.

அதன்பின் தலைவனும் தலைவியும் குடிமக்களிடம் சென்றனர். மக்கள் தலைவனிடம் வறுமைத் துன்பத்தைப் போக்க உதவவேண்டும் என்றனர். உடனிருந்த தலைவி, 'பிழைத்தது மழை' என் அத்தான் பெய் என்றாள். கொடுக்கும் இயல்புள்ள தலைவன் குடிகட்கெல்லாம் உடன் செந்நெல் மூட்டைகளை வண்டிகளில் அனுப்பி ஏழை மக்களின் வாட்டத்தைப் போக்கினான். (பா. தா. க., தொகுதி 2, ப. 47—49).

ஒருமனமான தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர் தொழுவதும் பேரன்பு காட்டுவதும் இயல் பானவை. எனவே கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் ஒருவரையொருவர் தொழுதெழுவது பிழையன்று என்பது பாரதிதாசன் கருத்து எனக் கொள்ளலாம்.

> ''தொழுதல் எப்போதும் கணவனையே நினைத்
> எழுதல்-மிகுதல்-வளர்தல், அந்நினைப்பு [திருத்தல்
> மேன்மேலும் வளர்ந்து 'தான், அவன்' என்னும்
> இரண்டற்று 'நாம்' என ஒன்றாதல்''

என்று புலவர் குழந்தையின் குறள் விளக்கம் பாரதி தாசனின் கருத்துக்கு ஏற்புடைத்தாக அமைகிறது. (புலவர் குழந்தை, திருக்குறள் உரை, ப.25).

2. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
   ஆகுல நீர பிற

(அறன் வலியுறுத்தல், குறள் 34)

எனும் குறட் கருத்தைத் தோழன் தோழி ஆகிய இருவர் மூலம் விளக்குகிறார்.

திருச்சி வானொலியில் 14.1.57-இல் பாவேந்தர் பாரதிதாசன் பாடிய பொங்கல் வாழ்த்துப்பாடல் இதுவாகும்.

''குறள் காட்டும் அறம்'' எது என்றும், தவம் எது என்றும், மனத்துக்கண் மாசிலனாதல் எங்ஙனம்'' என்றும் பாரதிதாசன் இக் கவிதை நெடும்பாடலில் விளக்கியுள்ளார். (தமிழ்முரசு, ஆண்டுமலர், புதுச்சேரி, 10.1.60, குயில் 5.1 60; பாரதிதாசன் குயில், 21.4.1968)

தோழன் தோழியிடம் 'ஒண்டொடி! பொய்யன்; மனமாசு உடையான்; பொய்யினாற் போந்த அம் மன மாசுதான் உய்யொணாத் துன்பம் உண்டாக்கும். ஆனால் மெய்யினை அன்னவன் மேற்கொள்வானெனில் அம் மன மாசு அகலும்' என்று மனமாசு அகல வழி கூறுகின்றான்.

மேலும் தோழியிடம் ''அழுக்காறுடையான் இழுக்கே அடைவான், அவன் மனமாசுடையான் அன்றோ? பிறர் நலம் கண்டு மகிழ்வதோர் பேறு பெறுவானாயின் அறம் வரும்'' என்று நல்லெண்ணம் மனத்தில் துளிர்ப்பதற்கு நெறிப்படுத்துகின்றான்.

மாந்தர் இன்பம் அடைய இருவழிகள் உள்ளன. அவை மெய்ம்மையும், பொதுநலமும் ஆகும். இவ்விரு நிலைகளை அடைந்தவர் இரண்டுபடி அறத்தைச் சேர்ந்தவன் என்றும் அவற்றால் இரண்டுபடி இன்பம் அடைவான் என்றும் விளக்குகிறான்.

தவம்

தவம் என்பதற்குத் தலைவன் தோழியிடம் அப் பாடலில் புதுப்பொருள் புகல்கிறார்:

''அருளின் மிகுதி தவம்'' என்றும்
''தவச்சொல் இழிவழக்காகத் தனக்கோர்
மகர இறுதிபெற்றது''

என்றும் விளக்கம் தருகிறார்.

தவத்தோர் யார் என்பதற்குத் தோழன் பின்வருமாறு சான்று காட்டுகிறார். ''அருள் மிகக்கொண்டே இருள்மிகு மக்கட்குத் தன்னலம் நீக்கிப் பிறர் நலம் காக்கும், அத்தகு தவத்தைச்செய்பவர் தவத்தோர்'' என்றும் ''அத் தன்னல மற்ற தவத்தைச் செய்து விழிப்பூட்டுபவர் பெரியார்'' என்றும் குறிப்பிடுகிறார்.

இங்கும் பொரியார் என்பது 'தந்தை பெரியாரைக்' குறிப்பால் உணர்த்தவதாகும். 'ஆகுல நீரபிற' என்னும் இரண்டாம் அடிக்குத் தோழன் தோழியிடம் பின்வருமாறு பொருளுரைக்கிறார்:

'மாசு படிந்த மனங் காரணமாய்த் தோன்றும் ஒருவனின் சொல்லும் நடிப்பும் விளம்பரத் தன்மை கொண்டவை' என்று குறிப்பிடுகிறார்.

தமிழக முதலமைச்சர் காமராசரை மொழியின உணர்வுடைய தி.மு.க. எதிர்ப்பது முறையாகாது என்னும் குறிப்பும் இப் பாடலில் காணப்படுகிறது.

பல்லாண்டின் பின் பைந்தமிழர்க்குச்
செல்வமாய்க் கிடைத்த செம்மைத் தமிழனைத்
தாழ்த்தப்பட்டுள்ள தமிழர்க் குழைப்பதே
வாழ்க்கைப் பயன்என்று மதிக்கும் தமிழனை
நற்றமிழ் மக்களை நம்பிமறைந்து வாழ்

புற்றுப் பாம்பைப் புதைக்க எண்ணியவனைத்
தோள்வலிமிக்க தூயனை, நாட்டில்
ஆள்வலிமிக்க அன்பனைச் சற்றும்
அறந்தவ றாத ஆட்சியாளனை
மறந்தும் எதிர்ப்பது மாண்பாகுவதா?

என்று முதலமைச்சர் காமராசரின் பெருமையையும் அவரை எதிர்ப்பவரின் சிறுமையையும் குறிப்பால் புலப் படுத்துகிறார்.

கழுகின் எஃகுவிரல் கடிந்து தமிழரை
முதுகு காத்த முதன்மைத் தமிழன்
இனியும் ஆட்சி எய்துக! எங்கள்
ஆதரவெல்லாம் அவனுக்கே

என்று முதலமைச்சர் காமராசர் பார்ப்பனர்களை எதிர்த்துத் தமிழர்களைக் காப்பாற்றியவர் என்று குறிப் பிடுகிறார்.

தன்மேனி பெற்ற புழுதி தவிர்ந்து
பொன்மேனி பெற்றான் பொய்யில்லாத் தமிழன்
என்று வையம் இயம்பவைக் கும்பெருந்
தகையினை நிலைபெறச் செய்வதா? தமிழர்
பகையினை நிலைபெறச் செய்வதா?

என்னும் பாடற்பகுதியில் தி.மு.க. தமிழர் நலம் நாடும் தனிபெரும் தலைவரான காமராசரை ஆதரிப்பதற்கு மாறாகக் குலக்கல்வித்திட்டம் கொண்டுவந்த இராசா சிக்குத் துணைபோவது பொருந்தாது என்று குறிப்பால் கடிகிறார்.

தமிழ்ப் பகைவர்களை எதிர்த்துத் தாக்கி வெல்ல தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்னும் சிந்தனை அப் பாடலில் காணப்படுகிறது.

தமிழன் ஒருவனின் தகுதி கண்டால்
அமிழ்துண் டதுபோல் மகிழ்தல் வேண்டும்
தமிழர்பால் ஒற்றுமை தழைக்க வேண்டும்
தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழ்வார்.
தமிழ் மீண்டால்தான் தமிழர் மீள்வார்

பாரதிதாசனின் இப்பாடற் கருத்துக்கள் தமிழர்கள் அனைவரும் தம் வாழ்நாளில் பின்பற்ற வேண்டியவை.

பாரதிதாசன் அரசியல் கோட்பாடு இக் குறள் விளக்கப் பகுதியில் அழுத்தம் பெற்றுள்ளது. தந்தை பெரியார், முதலமைச்சர் காமராசர், தி.மு.க. இயக்கத்தினர் ஆகியோரைப் பற்றிப் பாரதிதாசனின் கருத்தோட்டங் கள் இப் பாடலில் குறிப்பால் உணர்த்தப்படுகின்றன. (பாரதிதாசன் குயில் - சிறப்பிதழ், புதுச்சேரி 21.4.1968).

3. வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று

(வான்சிறப்பு, குறள் 11)

எனும் குறட் கருத்தை விளக்க எழுதிய நெடும்பாடலே, 'அமிழ்து எது?' என்பதாகும்.

தலைவன் தலைவி உரையாடலாக இப் பாடல் அமைந்துள்ளது. அமிழ்து என்பதற்குத் தலைவன் தலைவி யிடம்,

அமிழ் தென்றால் மேல்நின்
றமிழும் உணவாம்

'அமிழ்' என்றும் 'துவ்' வென்றும்
சொல் இரண்டுண் டத் தொட ரில்''

என்று பொருள் உணரக்கிறான். மேலும் அமிழ்து என்பதற்கு மழை என்பது பொருள் எனக் குறிப்பிடு கிறார்:

வானின் றுலகம்
வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற்
பாற்றென்று சாற்றிய
வள்ளுவர் பாட்டை
வகையாகச் சொல்லி, அதற்
குள்ள கருத்தை உரை
அதையும் கேட்பாய்
அமிழ் தென்றுணரும்
அருமை மழைக்கே
அமையும் என உரைத்தார்
வள்ளுவரே.

(பா. தா.க., தொகுதி 3, பக்.92.98)

என்று சுட்டியுள்ளார்.

"அமிழ்தம், அமுதம் முதலிய சொற்கள் அமிழ்து என்ற சொல்லில் இருந்து தோன்றியவை என்றும் வட மொழியாளர்கள் குறிப்பிடுகின்ற அம்ருதம் என்ற சொல்லில் இருந்து அமிழ்து என்னும் சொல் பிறக்க வில்லை என்றும் வாதிடுகிறார். அம்ருதம் தேவர்கட்கு மட்டும் கிட்டியது. ஆயின் அமிழ்து எனப்படும் மழை உலகையும் உலக மக்களையும் அழியாது காக்கிறது" என்று இருவேறு சொற்கள் உணர்த்தும் பொருள் வேறு பாட்டைக் சுட்டிக் காட்டுகிறார்.

அமிழ்து

பாரதிதாசன் அமிழ்து எனும் சொல்லுக்கு மழை என்று பொருள் என்பதை விளக்க மேலும் இரு குறள்களை எடுத்துக்காட்டுகிறார்:

1. வாழ்வார்க்கு வானம்
பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

(தனிப்படர் மிகுதி, குறள் 1192)

2. உறுதோறுயிர் தளிர்ப்பத்
தீண்டலாற் பேதைக்
கமழ்தின் இயன்றன தோள்

(புணர்ச்சி மகிழ்தல், குறள் 1106)

பாரதிதாசனின் பிறிதொரு நூலான குடும்ப விளக்கிலும் (மக்கட்பேறு) அமிழ்து என்பது மழை என்று பொருள் படும் என்கிறார்.

வானின்று மண்ணில் வந்து
மக்களைக் காக்கும்; அஃது
தேன் அன்று கரும்பும் அன்று
செந்நெல்லின் சோறும் அன்று
ஆன் அருள் பாலும் அன்றே
அதன் பெயர் அமிழ்தாம்! தொன்மை
ஆனபே ருலகைக் காக்க
அமிழ்வதால் மழை அஃதேயாம்.

(கு.வி., மக்கட்பேறு, ப.153)

என்னும் பாடற்பகுதி இங்கு ஒப்பீட்டுக்காக நினைக்கத் தக்கது.

பாரதிதாசன் குயில் இதழில் எழுதிய 'வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?' என்ற தொடர் கட்டுரையிலும் 'அமிழ்து' என்பதைப் பற்றி ஆய்வு நிகழ்த்தியுள்ளார். ''அமிழ்து என்பது அமிழ் - து எனப் பிரியும். இதன் பொருள் மேலிருந்து அமிழ்கின்ற உணவு என்பது. மழைக்குப் பெயர், அமிழ்து என்பது வினைத் தொகை நிலைத்தொடர்'' என்று விளக்கமளிக்கிறார். (குயில் — 8.7.58).

திருக்குறளில் இடம்பெற்றுள்ள அமிழ்து என்னும் பொருள் குறித்துப் பாரதிதாசன் ஆழமான ஆய்வு நிகழ்த்தியுள்ளார்.

பாரதிதாசனின் தமிழ் இலக்கிய, இலக்கணப் பயிற்சி இவ்வாய்வு மூலம் வெளிப்படுகிறது.

முழுக்க முழுக்க இலக்கிய நலம் சார்ந்த பாடல் இதுவாகும்.

திருக்குறள் ஆய்வு

(1) இரத்தல்

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

(பொருட்பால், இரவு 1058)

என்று கூறிய வள்ளுவர் தம் கருத்துக்கு மாறாக,

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

(இரவச்சம் 1062)

என்றும் இயம்புகிறார்.

இதனால் திருவள்ளுவர் முன்னுக்குப்பின் முரண் பாடாகக் கூறினார் என்று கருதலாமா? என்ற வினா விற்குப் பாரதிதாசன் பின்வருமாறு விளக்கமளித் துள்ளார்:

''கூழுக்கு வழியில்லை என்று இரப்பவனும் இரப்ப வனே; சுவைநீர் அருந்தப் பாலுக்கு வழியில்லை என்று சின்னப்படியால் ஒருபடிப் பால் இருந்தால் கொடுங்கள் என்று இரப்பவனும் இரப்பவனே. நாட்டில் விளை வில்லை; ஓர் இலக்கம் கலம் நெல் கொடுங்கள் என்னும் நாடுடையானும் இரப்பவனே என்பதை முதலில் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது: இரப்பாரை இல்லாத என்ற செய்யுள் மேற்சொன்ன இரப்பவர் எல்லாரையும் பொதுவாகச் சொன்னதென அறிதல் வேண்டும். அது மட்டுமன்று. அது ஈவோருக்குப் படும்படி சொன்னதுமாகும்!'' என்று முதல் குறளுக்கு விளக்கமளித்துள்ளார்.

அடுத்த குறளுக்கு, ''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் என்ற செய்யுள் உயிர் வாழ்வதற்கு இன்றி யமையாத கூழும் இல்லையே என்று இரப்பவனைப் பற்றிச் சொன்னது என அறிதல் வேண்டும். (அதனால் தான் உயிர் வாழ்தல் என்று பாட்டிற் குறிப்பிட்டுள்ளார்).

அவ்வாறு அறிந்து கொண்டால் மட்டும் போதாது. அது இரப்பவர்கரு விழிப்பூட்டச் சொன்னதென்றும் அறிதல் வேண்டும்'' என்று தெளிவுப்படுத்தியுள்ளார்.

மேலும் பாரதிதாசன் ''இதனால் வள்ளுவர் அறி வுடைமை, பொருளுடைமை முதலிய எல்லாவற்றிலும் சிறிதும் உயர்வு தாழ்வு வேண்டாம் என்று கருதினாரல்லர்

என்பதும் பெறப்படும்'' எனக் குறிப்பிட்டுள்ளார். மானிட சமூகத்தில் அறிவிலும் பொருளிலும் உயர்வு தாழ்வு இருந்தே தீரும் என்பது வள்ளுவர் கருத்து என்று பாரதிதாசன் சுட்டியுள்ளார்.

வள்ளுவர் காலச் சமூக அமைப்பையொட்டி பாரதிதாசன் உரை விளக்கம் தந்துள்ளார். ''முருகப்பிள்ளை வீட்டிலும் கறிவேப்பிலைக்குப் பஞ்சம் உண்டு என்பதற்கு மாறாக இல்லை என்பதே எல்லார்க்கும் இல்லாதொழியும் நிலையை நாம் வேண்டினோமில்லை. அந்நிலை என்றும் ஏற்படாது'' (குயில் - 16 2 60) என்று பாரதிதாசன் தன்னுடைய கருத்தைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

வள்ளுவர் காலச் சூழ்நிலை வேறு; பாரதிதாசன் காலச் சூழ்நிலை வேறு. வள்ளுவர் காலத்தில் பொதுவுடைமை இயக்கம் தோன்றவில்லை. ஆனால் பாரதிதாசன் காலத்தில் பொதுவுடைமை இயக்கம் தோன்றி மாந்தருள் சரிநிகர் சமான வாழ்க்கையை அமைத்துக் காட்டியது.

வள்ளுவர் காலத்துச் சூழ்நிலையைப் பாரதிதாசன் விளங்குவதை நாம் ஏற்றுக்கொள்வோம். ஆனால் பாரதிதாசன் வள்ளுவரைப் போன்று ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தை உருவாக்க முடியாது என்று குறிப்பிடுவது பொருத்தமாகத் தெரியவில்லை. பொதுவுடைமைத் தத்துவத்திற்கு எதிராகப் பாரதிதாசனின் கருத்து அமைந்துள்ளது. எனவே பாரதிதாசன் பொதுவுடைமைக் கோட்பாடு மேலும் விரிந்து ஆய்வதற்குரிய களனாக விளங்குகிறது.

(2) ஊழ்

திருக்குறள் அறத்துப்பால் முப்பத்தெட்டாம் அதிகாரம் 'ஊழ்' என்பதாகும். பரிமேலழகர் அவ்வதிகார வைப்புமுறை பற்றி, ''அஃதாவது இருவினைப்பயன். செய்தவனையே சென்றடைவதற்கு ஏதுவாகிய நியதி, ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், விதி என்பன ஒரு பொருட்கிளவி'' என்று விளக்கம் தருகிறார். ''ஊழாவது முன்பு செய்த வினை, பின்பு விளையும்'' என்று மணக்குடவரும், 'ஊழாவது போன ஜென்மத்தின் வினைப்பயன்' என்று பருதியாரும் பரிமேலழகரைப் போன்றே அதிகார விளக்கம் தருகின்றனர். (திருக்குறள்-உரைக்கொத்து, அறத்துப்பால், ப. 306).

ஆனால் பாரதிதாசன் 'ஊழ்' என்பதற்குச் 'சட்டம்' என்று பொருள் கொள்கிறார். 'ஊழ்' என்பதற்கு மதக்காரர்கள் கொண்ட பொருள் வேறு; திருவள்ளுவர் கொண்ட பொருள் வேறு. மதக்காரர்கள் ஊழ் என்பதை முற்பிறப்பு ஒன்று இருந்தது; பிற்பிறப்பும் உண்டு என்பதை வலியுறுத்தப் பயன்படுத்தி வந்தனர். அதற்காக அவர்கள் செய்துவந்த செய்து வருகின்ற விளம்பரங்கள் மிகப் பெரிது. எனினும் அது அருவருக்கத் தகுந்தது. மணிமேகலை, புண்ணியராசனைக் கையோடு மணிபல்லவத்துக்கு அழைத்துப்போய், ''நீ முற்பிறப்பில் ஆபுத்திரனாய்ப் பிறந்தாய். நீ இறந்த இடமும் மணிபல்லவந்தான். உன்னைப் புதைத்த இடமும் இதோ இதுதான். அது மட்டுமல்ல புதைத்த மேடையும் தோண்டி எடுக்கிறேன். இதோபார் இந்த என்புகளும் உன்னுடையவே'' என்று கூறி என்புக்கூட்டை அவன் மூக்கில் அடிக்கிறாள்.

இது அளவுகடந்த காட்டுமிராண்டித்தனம். ஆனால் இவை அனைத்தும் மணிமேகலை ஆசிரியன் மத விளம்

பரமே தவிர மெய் என்பது கடுகளவும் இதில் இல்லை. முற்பிறப்புக் கொள்கையை நம் பண்டைய சமயக் கணக்கர்கள் தமிழர்கள் மானம் கப்பலேறும்படி முழக்கம் செய்து வந்தார்கள்.

இதைத் திருவள்ளுவரும் பின்பற்றினார் என்றால் திருவள்ளுவரும் காட்டுமிராண்டிகளில் ஒருவர்தாம்.

திருவள்ளுவர் சமயக் கணக்கர் மதிவழியே செல்லவே யில்லை; எங்கும் எதிலும் அவ்வாறிருக்க அவர் சமயக் கணக்கர் கொண்ட பொருளிலேயே 'ஊழ்' என்ற அதிகாரத்தையும் இயற்றி, 'ஊழ் சிறிது; முயற்சியே பெரிது' என்று காட்டும் வகையில் மற்றோர் அதிகாரத்தையும் இயற்றுவாரா?'' என்று வினா எழுப்புகிறார்.

மேலும், ''ஊழ் என்ற சொல்லுக்குச் சட்டம் என்பது தான் பொருள். விதி என்றுதான் பொருள். முறை என்று தான் பொருள் அதை விட்டு முற்பிறப்பில் ஒருவன் செய்த பாவத்தையோ புண்ணியத்தையோ தன் நாட் குறிப்பில் குறித்து வைத்துக்கொண்டு அவன் செத்த பிறகு அவன் செய்த பாவ புண்ணியத்தின் பயனை அவன் அடையும்படி செய்கின்ற ஒரு தெய்வம் என்ற வரிகள் ஊழ் என்ற சொல்லில் அடங்கியா இருக்கின்றன?'' என்று கேள்வி எழுப்புகிறார். மேலும் ''ஊழ் என்பது தமிழ்ச் சான்றோரால், துறந்தோரால், நீத்தோரால், அருளிச் செய்யப்பட்ட சட்டம்'' என்றும், ''ஊழ் பற்றிய திருவள்ளுவரின் பத்துக் குறட்பாவிற்கும் அதைச் சட்டம் என்று வைத்துப் பொருள் காணுங்கால் பொருந்து வதையும், பிராரத்துவம் என்று வைத்துப் பொருள் காணுங்கால் பொருந்தாமையும் உய்த்துணர்க'' என்றும் ஊழ் பற்றிப் பாரதிதாசன் புதுவிளக்கத்தைத் தந்துள்ளார். (குயில்—13.9.60).

3. நோற்பார்

இவர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்

(திருக்குறள் 270)

என்னும் குறட்பாவுக்குப் பரிமேலழகர், ''உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார். பலராதற்குக் காரணம் யாது எனின், தவம் செய்வார் சிலராக அது செய்யார் பலராதல்'' என்று பொருள் கூறுகிறார். ''தவம் செய்யாதவர்க்கு இம்மையின்பமும் இல்லை'' என்பது அவர் கருத்து.

'நோற்பார்' என்பதற்குப் பரிமேலழகர் 'தவம் செய்வோர்' என்று பொருள் கூறுகிறார். மணக்குடவரும், பரிதியாரும், காளிங்கரும் அவ்வாறே கருதுகின்றனர். உரை வேறுபாடில்லை. (திருக்குறள்—உரைக்கொத்து, அறத்துப்பால், ப. 213).

திராவிட இயக்கச் சார்பாளர்களான புலவர் குழந்தையும், தேவநேயப் பாவாணரும், முன்னை உரையாசிரியர்களைத் தழுவியே பொருள் கொள்ளுகின்றனர். (புலவர் குழந்தை, திருக்குறள் உரை, ப. 102, ஞா. தேவநேயப் பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை, ப. 161).

ஆனால் பாரதிதாசன் அந்தச் சொல்லுக்குத் தன்னலம் நீக்கிப் பிறர்நலம் கருதித் தொண்டு செய்யும், சான்றோர்' என்று பொருள் உரைக்கிறார. (குயில், கேட்டலும் கிளத்தலும், 12.6.60. ப.6).

பாரதிதாசன் அவ்வாறு பொருள் கோடல் ஏற்புடையதா என்பது ஆய்வுக்குரியது.

வள்ளுவர் வரலாறு

திருவள்ளுவர் பிறப்புப் பற்றிப் பல கதைகள் உலவுகின்றன. உறையூரை அடுத்திருந்த மேலூர் அகரத்தில் நீதி ஐயர் வாழ்ந்துவந்தார். அவருடைய வளர்ப்பு மகள் ஆதி. காசிக்குச் சென்று திரும்பி வந்த 'பகவன்' என்னும் பிராமணன் ஆதியின் மேல் காதல் கொண்டான். ஆதியும் அவனை விரும்பினாள், நீதி ஐயர் ஒப்புதலோடு அவ்விருவரின் திருமணமும் நடந்தேறியது.

அதன்பின் பகவன் தன்னுடைய மனைவி ஆதி புலையர் குலத்தைச் சார்ந்தவள் என்று அறிந்து வருந்தினான். அவளை விட்டுத் துறநது செல்ல எண்ணினான். ஆயின் ஆதி அவனை விடவில்லை. அவனைப் பின் தொடர்ந்தாள்.

இறுதியில் இருவரும் ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். ஆதி ஊழ் வலியாலும் இறையருளாலும் நாம் இருவரும் இணைந்தோம். என்னை விட்டுப் பிரித்து செல்வது முறையோ? என்பால் இரக்கம் காட்டவேண்டும்'' என்று கெஞ்சினாள்.

அதனால் பகவன் மனம் இளகினான். ஆயினும் ஒரு தடையை விதித்தான். ''நம் இருவருக்கும் பிறக்கும் குழந்தைகளை ஆங்காங்கே, அப்படியே விட்டுவிட்டுச் செல்ல வேண்டும், சம்மதமா?'' என்றான். ஆதிக்கு வேறு வழியே தெரியவில்லை. எனவே அவளும் இசைந்தாள். அதன்பின் அவர்களுக்கு உப்பை, உருவை, ஔவை, வள்ளி, வள்ளுவன், அதியன், கபிலன் ஆகிய ஏழு மக்கள் பிறந்தனர்.

ஒவ்வொரு குழந்தையையும் பெற்றோர் தங்களை விட்டுப்பிரிந்து செல்லும்போது ஒவ்வொரு வெண்பாப் பாடியது.

மயிலையில் பிறந்த வள்ளுவக் குழந்தையும் பெற்றோர் பிரியும்போது,

எவ்வுயிரும் காக்கவொரு ஈசனுண்டோ, இல்லையோ?
அவ்வுயிரின் யானொருவன் அல்லனோ? — வவ்வி
அருகுவது கொண்டிங்கு அலைகுவதேன்! அன்னே
வருகுவது தானே வரும்

என்னும் பாடலைப் பாடியது. (சுவாமி சுத்தானந்த பாரதியார், திருக்குறள் இன்பம்),

உமையாளின் ஞானப்பாலைப் பருகிய ஞான சம்பந்தன் மூன்று வயதில் பாடினான் என்பர் சைவர். ஞானசம்பந்தனைக் காட்டிலும் வள்ளுவன் உயர்ந்தவன் என்பதைக் காட்ட நினைத்த சிலர் வள்ளுவன் பிறந்த உடனே பாடினான் என்று கதைகட்டினர். (டாக்டர் சு. சண்முகசுந்தரம், வள்ளுவர்கள், ப. 97).

பிறிதொரு கதையைப் பார்ப்போம். ஒரு பிரளயத்தில் பிரமன் சுரைக்குடுக்கையில் புகுந்து தண்ணீரில் மிதந்தான். சிவபெருமான் அவனை யார் என்று வினவ, 'வள்ளுவர்' என்று பதில் உரைத்தார். 'அவ்வாறே ஆகுக, என்று சிவன் அருள் பாலித்தான். அதன் விளைவாகப் பிரமதேவன் மயிலையில் ஆதிக்கும், பகவனுக்கும் மகனாகப் பிறந்து வள்ளுவன் என்ற பெயரைப் பெற்றான். பிறந்தவுடனே பெற்றோரை விட்டு நீங்கி வேளாளரிடம் வளர்ந்தான். பின்னர் அவர்களை விட்டு நீங்கி, 'மார்க்க சகாயன்' என்னும் வேலாளனை வந்தடைந்தான். அவனுடைய வேண்டுகோளுக்கிணங்கிப் பஞ்சாட்சர மந்திரத்தால் வேதாளத்தை விளை நிலத்திருந்து விரட்டினான். பின்னர் அவருடைய மகள் வாசுகியை மணலைச் சமைக்குமாறு கூறினான். கற்பின்

ஆற்றலால் அவள் அவ்வாறு செய்து முடிக்கவே அவன் அவளை மணந்தான். 'ஏலேல சிங்கன்' என்றும் வணிகனிடம் நூலை வாங்கி நெசவுத்தொழில் செய்து இனிதாகஇல்லறம் நடத்தி வந்தான். (அபிதான சிந்தாமணி ப.249).

இக் கதையில் வள்ளுவர் பிரமனின் அவதாரமாகக் காட்டப்பட்டுள்ளார். பிரமனின் படைப்புக்கள் அழிந்து விடுகின்றன. ஆயின் இலக்கியப் படைப்பாளனின் படைப்புக்கள் காலத்தைவென்று வாழ்கின்றன. எனவே பிரமதேவனைக் காட்டிலும் இலக்கியப் படைப்பாளன் உயர்ந்தவன் என்பதை நிலைநிறுத்த வேண்டி இக் கதையைப் புனைந்தனர் எனலாம்.

இனி, இலக்கிய நூல்கள் நுவலுகின்ற வள்ளுவர் வரலாற்றைப் பார்ப்போம்.

வள்ளுவர் வரலாற்றை நமக்குத் தெரிவிப்பவை ஞானாமிர்தம், கபிலரகவல், தனிப்பாடல் ஆகிய மூன்றாகும்.

ஞானாமிர்தம் என்ற நூலில் 'பகவன்' என்ற பிராமணன் 'யாளிதத்தன்' என்று சுட்டப்பட்டுள்ளான். அவன் புலைச்சி ஆதியை மணந்தான் என்றும் அவர்களுக்குக் கபிலர். வள்ளுவர் முதலிய ஏழு மக்கள் பிறந்தனர் என்றும் குறிப்பிடுகிறது. ஞானாமிர்தம் நூலைப் பதிப்பித்த உரைவேந்தர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை இப் பாடலை இடைச் செருகல் எனக் கருதுகிறார். (ப. 253).

ஞானாமிர்த மூலமும் பழைய உரையும், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை (பதி, ப. 249).

வள்ளுவர் புனை கதைக்கு அடித்தளம் அமைத்துத் தந்தது கபிலரகவல் ஆகும். அந் நூலில் வள்ளுவருடைய பெற்றோர் பகவன் என்ற பிராமணனும் ஆதி என்ற புலைச்சியும் ஆவார் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது. மேலும் வள்ளுவரோடு பிறந்தவர்கள் எழுவர் என்பதையும் குறிப்பிடுகிறது.

வள்ளுவரோடு பிறந்தவர்கள் எழுவர் என்பதைத் தனிப்பாடல் ஒன்றும் செப்புகிறது. அப் பாடல் பின்வருமாறு:

ஐயாறு நூறும் அதிகாரம் மூன்றுமாய்
மெய்யாய வேதப்பொருள் விளங்கப் — பொய்யாது
தந்தான் உலகிற்குத் தான்வள் ளுவ னாகி
அந்தா மரைமேல் அயன்.

இவ்வாறு வள்ளுவர் வரலாறு வாய்மொழிக் கதைகளிலும் புனைந்துரைக்கப்பட்டுள்ளது.

'பிராமணர்களுக்கு மட்டுமே அறிவு உண்டு' என்பதை நிலைநிறுத்த விரும்பிய தீயோர் வள்ளுவரைப் பார்ப்பன வாரிசாக மாற்றினார்.

'சாதிச் செருக்குடையவர்கள் இக் கதைகளைக் கற்பித்து விட்டிருக்கக்கூடும்' என்று மொழியியல் அறிஞர் தெ. பொ. மீ. குறிப்பிடுவது இங்குச் சுட்டிக்காட்டத் தக்கது. (கலைக்களஞ்சியம் — 6, பக்-30-36).

திருக்குறளை ஓலைச்சுவடிகளிலிருந்து அச்சேற்றியவர் இருவர். ஒருவர் திருத்தணிகை விசாகப்பெருமாள் ஐயர். மற்றவர் ஆறுமுக நாவலர். அவ்விருவரும் பதிப்பித்த நூல்களில் வள்ளுவர் வரலாறு இடம் பெற

வில்லை. வள்ளுவர் வரலாற்றில் உண்மை ஒரு துளியும் இல்லை என்பதை உணர்ந்த அப் பெருமக்கள் அக் கதை களை விடுத்தனர் எனலாம்.

கடவுள் வாழ்த்தில் இடம்பெற்றுள்ள 'ஆதிபகவன்' என்பது வள்ளுவரின் பெற்றோரைக் குறித்தது என்பர்'

வள்ளுவர் தம்முடைய தாய் ஆதியையும் தந்தை பகவனையும் நினைத்து அவர்களை மதித்துப் போற்ற வேண்டும் என்பதற்காக, 'ஆதி பகவன்' என்று பகர்ந் தார் எனப் புகல்வர். இவ்வாறு உரைப்போரின் கருத்தை நாவலர் சோமசுந்தர பாரதியார் மறுத்து, "இக் கதைக் கிவர் விருப்பும், இவர் விருப்புக் கிக்கதையுமே ஆதார மாவதன்றிப் பிறிது பிரமாணம் காட்டக் காணோம்" என்று குறிப்பிட்டுள்ளார். (திருவள்ளுவர், ப.—)

இனி வள்ளுவர் வரலாறு பற்றிப் பாரதிதாசனின் கருத்துக்கு வருவோம்.

பாரதிதாசன் வள்ளுவர் வரலாறு பற்றிய இக் கதை யைப் பொய் என்கிறார்.

"திருவள்ளுவருக்கு வரலாறு இல்லாமலே இருந்த தாம். அதனாலேதான் திருவள்ளுவர் ஆதி என்ற தாழ்த் தப்பட்ட மகளுக்கும், பகவன் என்ற பார்ப்பனனுக்கும் பிறந்தார் என்ற அருமையான வரலாற்றை ஏற்படுத்தினார்களாம். வள்ளுவருக்குப் பார்ப்பன வரலாறு ஏற்பட வேண்டும். அதையும் இப்படித்தானா ஏற்படுத்துவது?" என்றும் "திருவள்ளுவர் பேரறிஞ ராகத் திகழக் காரணம் அவர் பகவன் என்னும் பார்ப் பனனுக்குப் பிறந்ததாகும் இப்படி அந்தப் பாவிகள் ஒரு கதை கட்டி விட்டிருக்கிறார்கள்" (குயில்—24.6.58)

என்றும் கடிந்துள்ளார். வள்ளுவரை இழிவுபடுத்தும் இப் பொய்க் கதைகளை எதிர்த்துக் குரல் எழுப்புகிறார்.

வள்ளுவர் பணி

வள்ளுவர் நெசவுத் தொழில் செய்தார் என்றும், சோதிடம் கணித்தார் என்றும் உழவுத்தொழில் செய்தவர் என்றும் வள்ளுவர் தொழில் பற்றிய கதைகள் உலாவுகின்றன.

பாரதிதாசன் வள்ளுவர் 'உட்படு கருமத்தலைவர்' என்று கருதுகிறார்.

வள்ளுவன் சாக்கை எனும் பெயர் மன்னற்கு
உள்படு கருமத் தலைவற்கு ஒன்றும்

என்னும் பிங்கலந்தைச் செய்யுள் இங்குக் கருதத்தக்கது. உள்படு கருமத் தலைமை என்பது வள்ளுவன் என்ற அலுவற் பெயரையே குறித்து நின்றது காண்க.

பின்நாளில் வள்ளுவன் என்ற சொல் சாதியைக் குறிப்பதாகக் கருதும் நிலை உண்டாயிற்று. இப்படிப் பல. அகம் பட்டன் என்ற சொல் அரசனின் அகச்சுற்றம் ஆறில் மருத்துவப் புலவன் பெயர். இதைப் பண்டிதர் என்னும் சொல்லாலும் வழங்கி வந்ததுண்டு.

இந்நாளில் இழிந்த சாதிக்காரர் என்று எண்ணும்படி ஆக்கப்பட்டிருக்கிறது. வள்ளுவன் என்ற சொல் வண்மையினடியாகப் பிறந்தது. வண்மை என்றது அறிவு வளத்தை'' என்று குறிப்பிட்டுள்ளார். (தென்றல், 5.11.55).

தேனருவியில் "வள்ளுவர் அரசவையில் உட்படு கருமத் தலைவராகப் பணிபுரிந்தார்" என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

வண் என்று சொல்வது வண்மையாம் — அந்த
வண்மை படைத்தவன் வள்ளுவனாம் — மன்னர்
உள்படு கருமத் தலைமை அலுவல்
ஒன்றுக்கு வள்ளுவம் என்றது கண்டு

என்றும்,

அமைச்சர் அவையின் தலைவன்
அகம்புறம் காணும் வலவன்
தமிழ்மக்களின் பகைவரும் — தம்
தலையில் தூக்கி ஆடும் புலவன்

என்றும் குறிப்பிட்டுள்ள பாடல் பகுதிகள் இங்குச் சுட்டிக் காட்டத்தக்கன. (தேனருவி, ப. 12).

வள்ளுவர் உள்படு கருமத் தலைவர் என்பதைக் குடும்பவிளக்கிலும் சுட்டியுள்ளார்.

மிகு சீர்த்தித் தமிழ்வேந்தின்
அரசியல் அலுவற் கெல்லாம்
தருசீர்த்தித் தலைவனான — வள்ளுவன்

என்று பாடியுள்ளார்.

அப் பாடலுக்கு "வள்ளுவன் என்பது அந்நாளில் அரசியல் அலுவலகத்தின் தலைவனுக்குப் பெயர் என்பதைக் குறிப்பதாகும்" என்று பொருள் உரைத்துள்ளார். (குடும்ப விளக்கு, மக்கட்பேறு, ப. 135).

வள்ளுவனின் பணி குறித்து நாவலர் சோமசுந்தர பாரதியார், ''பெரு விழாக்களையும், மன்னர்களின் திருமணச் செய்திகளையும் பட்டத்து யானைப் பிடரித் தலையிலிருந்து அந்நகரில் அரச வீதிகளில் தெரிவிப்போர் வள்ளுவர் ஆவார். வள்ளுவப்பெயர் சங்க காலத்தில் தமிழரசர் உள்படு கருமத் தலைமை உத்தியோகப் பெயராக இருந்தது'' என்று விளக்கியுள்ளார். (திருவள்ளுவர், ப. 2) நாவலரின் கருத்தோடு பாரதிதாசன் உடன்படுகிறார்.

பரிமேலழகரைப் பற்றிப் பாரதிதாசன்

திருக்குறளுக்கு உரை வகுத்த பதின்மரில் பரிமேலழகர் சமயச்சார்புடையவர். எனவே, ''மதமிலார் நூற்கு மதமுளார் உரைசெயின் பொருந்தாது'' என்று பாரதிதாசன் வாதிடுகிறார். மேலும் வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர். அவருக்குப்பின் ஆயிரத்து எழுநூறு ஆண்டுகள் கழித்துத் தோன்றிய பரிமேலழகர் வள்ளுவரின் காலத்தைக் கணக்கிடாமல் நூலுக்கு உரை எழுதியது பொருந்தாது'' என்று சுட்டுகிறார்.

பரிமேலழகர் உரையோ வள்ளுவர்
திருவுள்ளத்தின் திரையே ஆனது!
நிறவேறு பாட்டை அறவே ஒதுக்கிய
தமிழ்த்திரு வள்ளுவர் அமிழ்தக் கொள்கையை
நஞ்சென்று நாட்டினர் பரிமேழகர்

(பா. தா. க., தொகுதி 2, ப. 15)

என்று குற்றம் சாட்டுகிறார். மேலும் பாரதிதாசன்,

பழந்தமிழ் நாட்டின் பண்பே பண்பென
அன்னார் ஆய்ந்த அறமே அறமென
ஒழுக்கமே ஒழுக்க விலக்கணம் ஆமென
வள்ளுவர் நாட்டினர், தெள்ளுதமிழர்
கீர்த்தியைத் திறம்பட உரைத்துக்காட்டினார்
பரிமேலழகர் செய்த உரையில்
தமிழரைக் காணுமா றில்லை — தமிழரின்
எதிர்ப்புறத்துள்ள இனத்தார் மேன்மையின்
செருகலே கண்டோம்! செருகலே கண்டோம்!

(பா. தா. க., தொகுதி 2 பக் 157 - 158)

என்று திண்மையுடன் குறிப்பிட்டுள்ளார். மேலும் பரிமேலழகர் தம்முடைய திருக்குறள் உரையில் வடநூல் கருத்துக்களை வலிந்து புகுத்தி இருப்பதால் திருக்குறள் வடநூலின் தழுவலோ என்றம் எண்ணம் ஏற்படும்படி பிழை செய்துவிட்டார் என்றும் சுட்டியுள்ளார். 'ஒழுக்கமுடைமை', 'குடிமை' என்னும் அதிகாரங்களுக்குப் பரிமேலழகர் எழுதிய விளக்கங்களை அதற்குச் சான்றாகக் காட்டுகிறார்.

ஒழுக்கமுடைமை

'ஒழுக்கமுடைமை' அதிகாரம் குறித்துத் 'தத்தம் வருணத்திற்கும், நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கதிம்னை உடையாராதல்' என்னும் பரிமேலழகர் உரையைப் பாரதி தாசன் மறுக்கிறார். 'உரையா இது?' என்று அதைப் பழிக்கிறார். அதற்கு மாறாக "ஒழுக்க முடைமை உயர் தமிழ் குடிகளின் தன்மையுடையராதல்" என்று உரை வகுப்பது பொருந்தும் என்கிறார்.

குடிமை

'குடிமை' என்னும் அதிகாரம் பற்றிப் பரிமேலழகர், "அஃதாவது உயர்ந்த குடியின் கண் பிறந்தாரது தன்மை.

உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின், அச் சிறப்புப் பற்றி இது முன் வைக்கப்பட்டது' என்று விளக்குகிறார்.

பாரதிதாசன் பரிமேலழகர் கருத்தை மறுத்து, ''குடிமை என்பது குடிகளின் தன்மையே'' என்று குறிப்பிடுகிறார். அதற்கு,

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இல்

என்னும் திருக்குறளில் உள்ள 'பழங்குடி' என்னும் சொல்லை எடுத்துக்காட்டாகக் காட்டுகிறார்.

(பா.தா.க., தொகுதி 2, ப. 158).

இவ்வாறு பரிமேலழகர் உரையில் மாறுபாடு கண்டதின் விளைவாகப் பாரதிதாசன் திருக்குறள் உரை எழுதினார் எனலாம்,

திருக்குறள் உரை உருவாக்கம்

பரிமேலழகரின் உரையில் மாறுபாடு கண்ட பாரதிதாசன் திருக்குறள் உரைக்குப் புத்துரை காண விழைந்தார்.

மதுரையில் நடந்த இலக்கியக் கூட்டத்தில் பாரதிதாசன் திருக்குறளுக்குப் புத்துரை கூறினார். பத்துநாள் அக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

பாரதிதாசனின் அன்பர்களுள் ஒருவரான தனுஷ்கோடி ராஜு அக்கூட்ட நிகழ்ச்சி பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: ''மதுரையிலும் பாவேந்தர் பணியைத் தொடர்ந்து செய்யவிரும்பிப் 'பாரதிதாசன் மன்றம்'

என்னும் பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கினேன். அம் மன்றத்தின் சார்பில் திருக்குறள் வகுப்புத் தொடங்கப் பட்டது. திருக்குறள் வகுப்பு யூனியன் கிறிஸ்டியன் ஹைஸ்கூலில் நடைபெற்றது.

திருக்குறள் வகுப்பு நடைபெறத் தமிழாசிரியர் இராமையாப்பிள்ளை துணைபுரிந்தார். திருக்குறள் வகுப்புக்கு ஒருவாரம் நாவலர் சோமசுந்தரபாரதி தலைமை தாங்கினார். மூன்றுநாள் பேராசிரியர் மீனாட்சிசுந்தரம் தலைமை தாங்கினார், பத்துநாள் பாவேந்தர் தொடர்ந்து பேசினார். பாவேந்தர் பேச்சைக் கேட்க மக்கள் திரண்டு வந்தனர். பெருங்கூட்டம். பாவேந்தர் திருக்குறளுக்கு அப்போது புத்துரை எழுதிக் கொண்டிருந்த நேரம். தலைமை தாங்கிய சோமசுந்தர பாரதியாருக்கும் பாவேந்தருக்கும் 'தெய்வந் தொழாஅள்' என்ற திருக்குறள் உரையில் கருத்து வேறுபாடு தோன்றியது. இருவருமே விட்டுக்கொடுக்காத கொள்கை வாதிகள். (கவிஞர் முருகுசுந்தரம் (தொ.ஆ), பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம், பக் 246—247). இவ்வாறு தனுஷ்கோடி ராஜு குறிப்பிட்டுள்ளார்.

மதுரையில் திருக்குறள் அரங்கேறியது என்பர். பாரதிதாசன் திருக்குறள் உரை கூட மதுரையில்தான் அரங்கேறியுள்ளது.

பாரதிதாசன் மதுரையில் திருக்குறளுக்குப் புத்துரை நிகழ்த்தியதின் விளைவாக அங்கு வாழும் திராவிட இயக்கத் தோழர்கள் அறிவுக்கடல் பதிப்பகத்தின் சார் பாக, ''நம்மை இகழ்ந்து நிற்கும் வடநாட்டான், பார்ப் பான் அச்சை முறியடியுங்கள்'' என்ற தலைப்பில்,

''ஒட்டார் பின் சென்றொருவன் வாழ்தலி
[னந்நிலையே,
கெட்டா னெனப்படுத னன்று'
(குறள் 967)

எனும் குறளுக்குத் தன்னை இகழ்பவர் பின்னே போய்ப் பொருளைப் பெற்று, அதனால் ஒருவன் உயிர்வாழ் தலைக் காட்டிலும் அது செய்யாமல் முன்னை நிலையிலே நின்று இறந்தான் என்று சொல்லப்படுதல் அவனுக்கு நல்லது என்று புது விளக்கம் தந்து, துண்டு அறிக்கையை வெளியிட்டனர். (இணைப்பு நிழற்படம்).

சேலம் நகராட்சிக் கல்லூரியில் நடந்த தமிழ் மன்ற விழாவிற்குப் பாரதிதாசன் வருகை தந்திருந்தார். அக் கூட்டத்தில் பாரதிதாசன் திருக்குறளுக்குப் புத்துரை புகன்றார்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகிய இரு பெருந் தலைவர்களுடன் நெருங்கிப் பழகிய முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மதிப்பிற்குரிய இராசாராம் அப்போது இலக்கிய மன்றத்தின் செயலாளராக இருந் தார்.

விழா நிகழ்ச்சி முடிந்தபின் திரு க. இராசாராம் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசனிடம், திருக்குறளுக்குப் புதிய நோக்கில் உரை சொல்லுகிறீர்கள். எனவே தங்களுடைய உரையை எழுத்து வடிவம் ஆக்க வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார். பாவேந்தரும் எழுது கிறேன் என்று இசைவளித்தார்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்களிடம் பாரதிதாசன் தாம் திருக்குறளுக்கு உரை எழுதப்போவ தாகவும் அம் முயற்சிக்குத் துணைபுரிய வேண்டும்

வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பன்மொழிப் புலவரும் அவர் வேண்டுகோளுக்கு இசைந்தார்.

திருக்குறளுக்குப் பாரதிதாசன் புத்துரை எழுதுவது பற்றிப் பன்மொழிப் புலவரிடம் நீண்டநேரம் கலந்துரையாடினார். (பன்மொழிப்புலவர். கா. அப்பாதுரை, செட்டி நாட்டிலிருந்து சென்னை வரை - கவிஞர் முருகுசுந்தரம், தொகுப்பாசிரியர், பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம், பக். 30`—306).

பாரதிதாசன் திருக்குறள் உரை உருவாக்கத்திற்குப் பன்மொழிப் புலவரின் பங்களிப்பும் உண்டு என்பது இதன்மூலம் பெறப்படும்.

ஒருமுறை டாக்டர் மு வ., அவர்களிடம் பாரதிதாசன் பேசிக் கொண்டிருந்தபோது அவர் திருக்குறளுக்கு உரை எழுதுகின்ற பாங்கைக் கேட்டார். அதற்கு மு வ. 'பரிமேலழகர் உரையை அடிப்படையாக வைத்து எளிய நடையில் உரை எழுதுவதாகக்' கூறினார். அதற்குப் பாவேந்தர், 'பரிமேலழகர் உரையையே படித்து விடலாமே? உம்முடைய உரையை ஏன் படிக்க வேண்டும்?' என்று வினவியதாக அறிகிறோம். (நேர்காணல், தோப்பூர் திருவேங்கடம், எம்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், சென்னை . 10.5.87).

'பரிமேலழகர் உரையை முற்றிலும் தழுவித் திருக்குறள் உரை அமையக்கூடாது' என்பதில் பாரதிதாசன் கொண்டிருந்த உறுதிப்பாட்டுக்கு இந் நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டு.

திருக்குறள் உரை முற்றுப்பெற்றதா?

பாரதிதாசன் திருக்குறளுக்கு எழுதிய உரை முற்றுப் பெற்றுவிட்டது என்றும் இல்லையென்றும் அறிஞர்கள்

கருதுகிறார்கள். பாரதிதாசன் மாணவர் கவிஞர் வாணிதாசன், திருக்குறள் உரை முற்றுப் பெற்றுவிட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

''கவியரசர் அவர்கள் திருக்குறளுக்குப் பதின்மர் முன் எழுதிய உரையுடன் ஒப்பிட்டு எதிர்க்கும் புதிய உரையைப் பொதுமக்களிடம் பரவவிட்டார். அதன் பயனாக மதுரையில் பொதுமக்களால் அழைக்கப்பட்டு மதுரை உடுப்பி உணவு விடுதியில் இருந்துகொண்டே திருக்குறளுக்குப் புத்துரை எழுதிவந்தார். கவியரசர் அவர்கள் திருக்குறளுக்குப் புத்துரை பெரும்பாலும் எழுதி முடித்துவிட்டார். அதனை வெளிக்கொணர்வது அரசியலாருடையவும், பொதுமக்களுடையவும் கடமை யாகும்.'' (அரும்புகள், மொட்டுகள், மலர்கள் ப. 21, 22) என்று கவிஞர் வாணிதாசன் கருத்துரைத்துள்ளார்.

டாக்டர் திரு முருகரத்தினம் பாரதிதாசன் திருக்குறள் உரை முற்றுப்பெறவில்லை என்று ஐயுறுகிறார்.

''பின்னொருமுறை 1955-இல் கவிஞரைக் கண்டேன். கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் அவர் பேசினார். திருக்குறளுக்குப் புத்துரை வகுத்துப் பேசினார் அவர். அவ்வுரை பற்றி அவரிடமே நேரில் கேட்டேன். திருக்குறள் உரையை ஏறத்தாழ எழுதி முடித்துவிட்டேன் என்றார் அவர். பின்னர்க் குயில் இதழில் 'வள்ளுவர் உள்ளம்' என்னும் பெயரில் அவ்வுரை விட்டுவிட்டு வந்து கொண்டிருந்தது. அவர் எல்லாக் குறட்பாக்களுக்கும் முழுவதும் உரை எழுதியிருந்தாரா என்பது எனக்கு ஐயமாக இருந்தது. அவ்வுரை சில குறள்களுக்கு மட்டும் குயில் இதழில் வந்தது. பாரதிதாசனார் சில குறள் அதிகாரங்களுக்கு மட்டுமே முழுமையாகவும் முறை யாகவும் உரை எழுதியுள்ளார் எனவும் பிற அதிகாரங்

களுக்குத் திருக்குறள் நூலின் ஓரங்களில் எழுதப்பட்ட குறிப்புக்கள் மட்டுமே உள்ளன எனவும் அண்மையில் அறிந்தேன். இன்றும் அவ்வுரை வெளிவரக்காணேன். ஏமாற்றமே எனக்கு ஏற்பட்டது.

பாரதிதாசனார் திருக்குறளுக்கு எழுதிய புத்துரை பகுத்தறிவு நோக்கிலும் தனித்தமிழர் நோக்கிலும் எழுதப் பட்டது. திருவள்ளுவர் திருக்குறளைச் சாங்கிய நூல் அடிப்படையில் எழுதியுள்ளார் எனக் கவிஞர் அடிக்கடி கூறுவதுண்டு. பகுத்தறிவு வாழ்வு மேற்கொண்டு தமிழா சிரியராகத் தொழில் புரிய இருந்த எனக்குப் பாரதி தாசனார் புத்துரையைப் பரப்புவது பணியாக இருக்க வேண்டும் என்று அன்று எண்ணிக் கொண்டேன். ஆனால் அவ்வாய்ப்பு இன்றும் எனக்கு வாய்க்காதது ஏமாற்றமாக உள்ளது.'' - (அரும்புகள், மொட்டுகள் மலர்கள், ப 106-109)

இவ்வாறு முனைவர் தி. முருகரத்தினம் பாரதிதாசன் திருக்குறள் உரை கிடைக்காதது குறித்து மனம் நொந்து எழுதியுள்ளர்.

'பாரதிதாசன் இதழ்ப்பணிகளை' ஆய்வு செய்த டாக்டர் மா. அண்ணாதுரை 'பாவேந்தர் 560 குறட் பாக்களுக்கு உரை செய்திருக்கலாம்' (ப 193) என்று குறிப்பிட்டுள்ளார்.

இனி நமக்கு கிடைத்த சான்றுகளைக் குறிப்பிடு வோம்.

1. 1956-இல் மூன்றாம் பதிப்பாக வெளிவந்த பாரதிதாசன் கவிதைகள் தொகுதி இரண்டில் இடம் பெற்றுள்ள பின் அட்டையில் 'புரட்சிக் கவிஞரின் புதிய

நூல்கள்' என்ற தலைப்பில் 'திருக்குறள் - கவிஞரின் புதிய விளக்கம். வள்ளுவர் கருத்தைத் தெள்ளென உணர்த்தும் தீஞ்சுவை நூல் 'அச்சில்' என்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. (இணைப்பு - நிழற்படம்)

2. கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா ஆகிய நூல்களை வெளியிட்ட அன்பு நூலகம் உரிமையாளர் பொ. இராமரத்தினம் அவர்களுக்குப் பாரதிதாசன் 1962-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19-ஆம் நாள் எழுதிக்கொடுத்த உரிமை வெளியீட்டுப் பத்திரத்தில் மூன்றாவது நூலாகத் திருவள்ளுவர் திருக்குறள் மூலமும் வள்ளுவர் உள்ளம் என்ற பாரதிதாசன் உரையும்' என்பது இடம்பெற்றுள்ளது (இணைப்பு - நிழற்படம்). எனவே பாரதிதாசனின் திருக்குறள் உரை முற்றுப் பெற்றுவிட்டது என்றே கருத வேண்டியுள்ளது.

எனினும் பாரதிதாசனின் திருக்குறள் உரை நிறைவுற்றதா? இல்லையா? என்பது பற்றி அறிஞர்கள் மேலும் ஆராய்ந்து அதனைப் பெற முயலுதல் தமிழுக்குச் செய்யும் பெருந்தொண்டாகும்.

சாங்கியம்

ஒவ்வொரு நூல் தோற்றத்திற்கும் தத்துவமும் அக்காலச் சூழ்நிலையும் பின்னணியாகின்றன. கண்ணன் பகவத்கீதையைப் பகர்வதற்கு நான்மறையும், வள்ளுவர் திருக்குறள் எழுதுவதற்குச் சாங்கியத் தத்துவமும் தூண்டுதலாயின என்பது பாரதிதாசன் கருத்து.

திருவாரூர்க் கபிலர் தமிழில் இயற்றிய எண்ணூலை வடமொழிவாணர் சாங்கியம் என்று மொழிபெயர்த்துக் கொண்டனர் என்று பாரதிதாசன் கருதுகிறார்.

'தமிழில் தத்துவம்' என்னும் நூலை எழுதிய பேராசிரியர் சே.ந. கந்தசாமியும் பாரதிதாசன் கருத்தை மறுக்கவில்லை.-தமிழில் தத்துவம், ப. 166,167)

மேலும், வேத வழக்கங்களைக் கண்டிக்கும் கபிலர் அகவல் என்னும் நூலையும் சாங்கியக் கபிலர் பாடினார்' என்று பாரதிதாசன் கூறியதாக அறிகிறோம். - (தமிழில் தத்துவம், ப. 166)

சங்கத்தொகை நூல்களில் தொல் கபிலர், கபிலர் முதலிய புலவர் பெரு மக்கள் பாடிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. கபிலர் பிறந்த இடம் 'கபில நெடுநகர்' என்று சுட்டப்பட்டுள்ளது. (புறம் 337).

எனவே சங்கச் சான்றோர்களில் ஒருவரான கபிலர் சாங்கியத் தத்துவத்தை உருவாக்கி இருக்கலாம் என்னும் முடிவை எளிதில் புறக்கணிகக முடியாது.

சங்கப் பாடல்களிலும், திருக்குறளிலும், மணி மேகலை, பெருங்கதை, நீலகேசி முதலியகாப்பியங்களிலும் சாங்கியக் கொள்கைகள் இடம்பெற்றுள்ளன.

சாங்கியத் தத்துவத்தை நன்குணர்ந்த 'சாங்கியத்தாய் என்னும் பாத்திரம் பெருங்கதையில் படைக்கப் பட்டுள்ளது. எனவே சாங்கியத் தத்துவம் தமிழுக்கு அன்னியமானதன்று.

சாங்கியத் தத்துவத்தை விரிவாகத் தெரிந்துகொள்ள விரும்பிய பாரதிதாசன் 'சாங்கியம் என்னும் தமிழ் நூலைத் தேடி அனுப்புமாறு அவருடைய நண்பர் சேலம் தனபாலுக்குக் கடிதம் எழுதி இருப்பதும், இங்கு நினைவு கொள்ளத்தக்கது. (முதன்மொழி - பாவேந்தர் பாரதி தாசன் நினைவு இதழ், சேலம் 24.4.1971)

எண்ணூல்

அந்நூலை ஊன்றிக்கற்றதன் விளைவாக 'எண்ணூல்' என்னும் சாங்கியத்தை முதன்முதல் அறிந்தவர்கள் தமிழர்கள்' என்று பாரதிதாசன் 'அவர்களைப் பாருங்கள் என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். (குயில் 16.6. 59). இச் சாங்கியத் தத்துவம் குறித்த விளக்கத்தைப் பார்ப்போம்.

இந்திய மெய்ப்பொருள் வரலாற்றில் சாங்கியம் தொன்மையானது. 'சாங்கியக் கருத்துக்கள் இயற்கை யோடு இயைந்தவை; பகுத்தறிவுக்கு ஒத்தவை' என்று பாரதிதாசன் கருதுகிறார். (குயில்—1.12.59).

''உலகம் எவ்வாறு உருவாகிறது? உயிர்களின் இயல்பு என்ன? இன்ப துன்பங்களினின்று விடுதலை பெறுதல் எப்படி? என்பன போன்ற மறை பொருள் விளக்கங்களுக் குப் பகுத்தறிவினைப் பயன்படுத்தி முதன்முதல் உலக வரலாற்றிலேயே விரிவான விளக்கத் தத்துவம் சாங்கியம்' என்பர் (தமிழில் தத்துவம், ப. 162)

''சாங்கியம் ஒரு பெண்மைக் கோட்பாடு, உலகங் களும் உயிர்களும் பொருள்களும் பிற யாவும் பெண்ணிட மிருந்தே தோன்றியவை எனும் தொல்குடி விளக்கத்தின் வெளிப்பாடு சாங்கியம்'' (தமிழர் மெய்யியல், ப. 79.) என்றும் அறிஞர்கள் சாங்கியத் தத்துவத்தின் சிறப்பைப் பற்றிக் கூறுகின்றனர்.

இம் மெய்ப் பொருள் பற்றிய குறிப்புக்கள் உபநிடதத் திலும், மகாபாரதத்திலும், கீதையிலும், அசுவகோஷரின் புத்த சரிதத்திலும், அகிர்புத்தினிய சம்ஹிதையிலும், கடோபநிடதத்திலும், சுவேதாஸ்வரத்திலும், காணப் படுகின்றன.

வேதாந்த சூத்திரத்தின் ஆசிரியர் பாதராயணர் பிரம்ம சூத்திரத்தின் உரையாசிரியர் ஆதிசங்கரர் முதலியோர் இத் தத்துவத்தைக் கடிந்துள்ளனர். சங்கராச்சாரியார் சாங்கிய தத்துவத்தை தன்னுடைய முதல் எதிரி (Pradhana malla main opponent) என்று குறிப்பிட்டுள்ளார்.

சாங்கியம் (Sankhya) என்னும் சமசுகிருதச் சொல்லுக்குத் 'தேர்ந்து தெளிதல், எண், கணிதம், பகுத்தாய்வு, ஆய்ந்து கண்ட முடிவு' என்று அறிஞர் பல் பொருள் உரைப்பர்.

எண்ணூல் என்பது அனைத்தும் இருபத்தைந்து தத்துவமென எண்ணப்படுதலின் இப் பெயர் பெற்றது. இது காரணப்பெயராகும் என்பார் பாரதிதாசன். (குயில் — 1. 12. 59).

சாங்கியம் என்பது ஈசுவர சாங்கியம், நிரீசுவர சாங்கியம், ஞானசாங்கியம், இச்சா சாங்கியம், புருட சாங்கியம், பேத சாங்கியம் என்று ஆறு வகைப்படும். ஆயினும் மெய்ப்பொருள் அறிஞர்கள் ஈசுவர சாங்கியத்தையும், நிரீசுவர சாங்கியத்தையும் சிறப்பாகக் குறிப்பிடுவர்.

கடவுள் ஏற்புடையதைச் ஈசுவர சாங்கியம் என்றும், கடவுள் மறுப்பதை நிரீசுவர சாங்கியம் என்றும் அறிஞர்கள் சுட்டுவர்.

நிரீசுவர சாங்கியத் தத்துவத்தைக் கி. மு. 7 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கபிலர் உருவாக்கினார் என்பர். ஸ்வேதாஸ்வர என்னும் உபநிடதத்தில் இக் கருத்துக் காணப்படுகிறது.

அறிஞர்கள் சிலர் வழக்காற்றில் முன்னரே இருந்த இத் தத்துவத்தைக் கபிலர் தொகுத்துத் தந்தார் என்பர், கபிலர், ஆசுரி, பஞ்சசீசர், கார்க்கியார், உலூகர் முதலியோர் சாங்கியக் கொள்கைகளை விளக்கி எழுதிய நூல்கள் கிடைக்கவில்லை. ஆசிரியர் மாணவர் உறவில் இத் தத்துவம் தொடர்ந்து கற்பிக்கப்பட்டதாக அறிகிறோம். கி. பி. 5 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாகக் கருதப்படும். ஈஸ்வர கிருஷ்ணர் (Isvara Krishna) என்பவர் எழுதிய சாங்கியக் காரிகை (Sankhya Karika) என்னும் நூல் மட்டும் கிடைத்துள்ளது.

எழுபது செய்யுட்களில் சாங்கியக் கருத்துக்களை இந்நூல் உரைக்கிறது. சில நூற்பாக்களுக்கு எளிதில் பொருள் உணர முடியவில்லை. இன்னும் சில நூற்பாக்கள் இருபொருள் கொண்டவைகளாக விளங்குகின்றன. அளவை முறையில் சாங்கியத் தத்துவத்தை இந் நூல் நிருபித்துக் காட்டுகிறது.

கி. பி. 9 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப் படும் வாச்சசுப்பதி மிசுரா என்பவர் எழுதிய தத்துவ கௌமுதி (Tattava Kaumudi) என்னும் நூலும் சாங்கியத் தத்துவத்தை விளக்குகிறது. கி.பி. 16 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த விஞ்ஞான பிட்சு (Vijhana Bhiksu) என்பவர் 'சாங்கிய பிரவசன சூத்திரம்' என்னும் நூலுக்குச் சிறந்த தோர் உரையை எழுதியுள்ளார். சாங்கியத் தத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கும் கருத்து வளர்ச்சியை அறிந்து கொள்ளுவதற்கும் இவ்விரு நூல்களும் உதவுகின்றன.

கி. பி 6 - ஆம் நூற்றாண்டில் தோன்றியதாக எண்ணப்படும் 'யுக்திதீபிகை' என்னும் நூல் சாங்கியத் தத்துவத்தின் கோட்பாடுகளைச் சிறப்புற விளக்கு

கின்றது. சாங்கியத் தத்துவத்தில் கூறப்பட்டுள்ள படி முறை வளர்ச்சியை மேலும் இந் நூல் முன்னெடுத்துச் செல்கிறது.

சாங்கியத் தத்துவம் இறை மறுப்புக் கொள்கையைக் கொண்டதாகும்.

உலகம் இறைவனால் படைக்கப்பட்டது என்பதை இத் தத்துவம் மறுப்பது இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது.

திருக்குறள் அறத்துப்பாலுக்கு உரை எழுதிய கோ. வடிவேலு செட்டியார் 'வைதீக நாஸ்திகம்' என்று சாங்கியத்தைக் குறிப்பிடுகின்றார். (ப. 18)

சாங்கியத் தத்துவத்தின் அடிப்படைக் கூறுகள் இரண்டு. ஒன்று, புருடன் (Pursua) பிறிதொன்று பிரகிருதி (Prakrti).

புருடன் என்பதனை மூலமான ஆன்மாக்கள் அல்லது உயிர் எனலாம். இவ்வுயிர்கள் உறுதியானவை; மாறாதவை; என்றும் உள்ளவை. இவற்றின் தன்மை தூய உணர்வே எனலாம். இது செயல் நிலையில் வைத்து நோக்க எண்ணிறந்தனவாகும். (மணி. 27; 227 - 232).

பிரகிருதி, தோற்ற உலகின் பொருள் இயலையும், உள்ளத்தியலையும் தோற்றுவிக்கும் மூலப்பொருள் எனலாம். இதனை முற்றிலும் மாறான தன்மைகளின் இணைப்பு அல்லது சேர்க்கை என்று கொள்ள வேண்டும். (மணி. 27; 203—206). இதன் அடிப்படைக் குணங்கள் மூன்று ஆகும்.

1. சாத்வீகம் — Sattva
2. இராசதம் — Rajas
3. தாமதம் — Tamas

இம்மூன்று குணங்களும் பொருள் நிலையிலும் உள்ளத்து நிலையிலும் வெவ்வேறு தோற்றங்கள் உடையன.

பிரகிருதி உள்ளது சிறத்தல் என்னும் நெறிக்கு உட்படுவதால் பிரகிருதி வாயிலாகவும், பிரகிருதி இடத்தும் உள்ளது சிறத்தல் நிகழ்கிறது.

பிரகிருதியும் சேர்ந்து உள்ளது சிறத்தலாகிய முழு நிகழ்ச்சிகள் 24 தத்துவங்களில் அடங்கும்.

1. பிரகிருதி (Prakrti)
2. புத்தி (Mahat or Puddni)
3. அகந்தை (Ahankara)
4. மனம் (Manas)
5. தன் மாத்திரை (Tanmatras) ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்.
6. அறிகருவிகள் (Jnanendriyas) மெய், வாய், கண், மூக்கு, செவி.
7. தொழிற் கருவிகள் (Karmendriyas) வாய் (மொழி) கால்கள், கைகள், குதம் (அண்டி) குறி.
8. ஐம்பூதங்கள் (Mahabhutas) ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம்.
9. புருடன் (Purusa)

ஆக மொத்தம் இருபத்தைந்து தத்துவங்களைச் சாங்கியம் குறிப்பிடுகிறது.* இவற்றுள் புருடன் என்பது எதற்கும் காரண காரியம் ஆவதில்லை. உள்ளது சிறத்தல் என்னும் நிலையிலிருந்து விலகித் தனித்து இருக்கிறது.

பிரகிருதி உலக தோற்றத்தின் முதற்காரணமாகவும் மூலப் பொருளாகவும் விளங்குகிறது.

(*) சாங்கியத் தத்துவம் குறித்துப் படிக்கத்தக்க நூல்கள்;

1. கோ. வடிவேலு செட்டியார், திருக்குறள் மூலமும் பரிமேலழகரின் உரையும, ஆசிரியரின் தெளி பொருள் விளக்கமும் — முதல் பகுதி மறுபதிப்பு (மதுரை, 1992), பக். 36—39.

2. டாக்டர் சோ. ந. கந்தசாமி, தமிழும் தத்துவமும், முதற்பதிப்பு (சென்னை 1976), பக் 157—208.

3. குணா, தமிழர் மெய்யியல், முதற் பதிப்பு (சென்னை 1980) பக்-79—109.

4. ச. தண்டபாணி தேசிகர், வள்ளுவத்தில் மெய்ப் பொருள் சுவடுகள், முதற்பதிப்பு (அண்ணாமலை நகர், 1980), பக். 98—105.

5. தேவநேயப்பாவாணர், திருக்குறள் மரபுரை, முதற்பதிப்பு, (காட்டுப்பாடி, 1969), பக். 50—53.

6. டாக்டர் க. நெடுஞ்செழியன், தமிழ் இலக்கியத்தில் உலகாயதம் முதற்பதிப்பு (சென்னை. 1990), பக். 182—186).

7. கலைக்களஞ்சியம், தொகுதி 6, ப. 97.

8. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, பக் 612—613.

இவ்விரண்டையும் 'எதிர் மறைக் கூறுகள்' என்று சாங்கியம் குறிப்பிடுகிறது. தனித்தனிக் கூறுகளாக இவற்றைக் கருதுவதால் இருமையியல் (Dualism) என்று தத்துவறிஞர் சுட்டுவர்.

சாங்கியம் குறிப்பிடுகின்ற இவ் இருபத்தைந்து தத்துவங்களுள் புருடனைத் தவிர பிறத் தத்துவங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதைப் பின்வரும் வரை படத்தின் மூலம் அறியலாம்.*

---

* Further Reading about Sankhya Philosophy

1. Chandrasekara Sharma, A Critical Survey of Indian Philosophy, Re-print (New Delhi, 1973), pp. 149—163.

2. T.M.P. Mahadevan, Invitation to Indian philosophy, First print, (New Delhi, 1974), pp. 202—221.

3. Fr. Chacko Vatiaveetil S. J. Sankhya — Yoga pp. 12—25.

4. Josi Cheriantharavil, Concept of Moksa in Sankhya — Yoga, A Dissertatation submitted for Degree of Bachelor in Theology, March 1989, St. Peter's Ponitifical Institute of Theology Bangalore, 560 055.

5. Thomas Manakaziyil C. N. F., The Sankhya Theory of Evolution Comparative study with Greek Philosophy, December 1968, St. Peter's Pontifical Institute of Theology B'lore 560 055.

1. பிரகிருதி } சாத்வீகம், இராசதம், தாமதம்

2. மஹத் அல்லது புத்தி

3. அகந்தை

4. மனம் 5-9 அறிகருவிகள் 10-14 தொழிற்கருவிகள்

15—19 தன் மாத்திரைகள்

20—24 ஐம்பூதங்கள்

பாரதிதாசன் இச் சாங்கியத் தத்துவத்தை 'நீத்தார் பெருமை' என்றும் அதிகாரத்தில் உள்ள,

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு (27)

என்னும் குறளுக்கு எழுதிய உரையில் நன்கு தெளிவுபடுத்தியுள்ளார். (குயில் — 30.8.60).

பாரதிதாசன் பிரகிருதியை 'மூலப் பகுதி' என்றும் தமிழ்ப்படுத்தியுள்ளார்.

பிரகிருதி என்னும் மூலப்பகுதியில் இருந்து தோன்றுகின்ற சாத்வீகம் இராசதம், தாமதம் என்னும் மூன்று

குணங்களைக் காமம், வெகுளி, மயக்கம் என்று தமிழ்ப் படுத்தியுள்ளார். (குயில்—13.9.60).

புருடன் என்பதைப் பகவன் என்று குறிப்பிடுகிறார். ஐம்பூதங்களில் ஒன்றான ஆகாயத்தை 'வெளி' என்றும் குதம் (அண்டி), குறி ஆகியவற்றை எருவாய், கருவாய் என்றும் சற்காரிய வாதத்தை 'உள்ளது சிறத்தல்' என்றும் குறிப்பிடுகிறார்.

—(குயில், 30, 8, 60; 13.9.60; 1.12.59)

அடிப்படை நூல்

சாங்கியத்தை எண்ணூல் என்றும் எழுதாக்கிளவியாக இருந்த அத் தத்துவத்தை உருவாக்கியவர் திருவாரூர்க் கபிலர் என்றும், பண்டைய தமிழர் வெளிப்படை அத் தத்துவம் என்றும் மேலை நாட்டில் எழுந்த தத்துவ நூல்களுக்கும் எண்ணூலே அடிப்படை என்றும் பாரதி தாசன் குறிப்பிடுகிறார்.

—(குயில், 1. 12.59; 30.8.60)

எண்ணூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டது. ஆரிய - திபெத்தியர் இத் தத்துவத்தைத் திருத்தி எழுதினர். அதன் விளைவாகச் சாங்கியத் தத்துவத்தில் பொருள் மயக்கமும் முன்னுக்குப் பின் முரணும் ஏற்பட்டன.

—(குயில், 1.12.59)

மேலும், எண்ணூல் கொள்கையைப் பண்பாடு என்று கூறுவது சரியா? என்ற வினாவிற்குப் பாரதிதாசன் பின் வருமாறு விடையளிக்கிறார். ''மதமான பேயாற் பிடிபடாமல் இருக்க அவர்களிடம் அமைந்திருக்கும் பண்பாடுதான் எண்ணூற்கொள்கை. உலகம் சிவனாற்

படைக்கப்பட்டது என்றெல்லாம் பண்டைத் தமிழர் தடுமாறியதில்லை. முதன்மையினின்று உலகம் தோன்றியது என்று எண்ணி மதவலையிற் படாத திறம் பண்பாடுதான். மக்கள் அடையத்தக்கது சிவனடி திருமாலடி பிற என்று பண்டைத் தமிழர் தடுமாறியதில்லை. பெறத்தக்கது அறிவு என்றார்கள். சிவனும் திருமாலும் பிறவும் மக்கள் நல்வாழ்வுக்குத் தேவையில்லை என்றார்கள். உருவ வணக்கம் முட்டாள்தனம் என்றார்கள். இவ்வாறு மேற்கொண்டு ஒழுகுவது தான் பண்பாடு. இவ்வாறு கூறுவதுதான் கபிலர் எண்ணூல். இதைத்தான் வடவர் சாங்கியம் என்று மொழி பெயர்த்துக் கொண்டனர். (குயில், 30.8.60). இவ்வாறு பாரதிதாசன் விளக்கம் அமைந்துள்ளது).

சாங்கியத்தத்துவம் திருக்குறளில் இடம்பெறுகிறது என்பதைப் பரிமேலழகரும் உடன்படுகிறார் (நீத்தார் பெருமை-27). எனவே பாரதிதாசன் சாங்கியத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு திருவள்ளுவர் திருக்குறளைஇயற்றினார் என்று முடிவுக்கு வருகிறார்.

திருக்குறள் உரை தொடக்கம்

1. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
   காவலன் காவான் எனின்.

(கொடுங்கோன்மை 560)

எனும் குறளுக்குப் பாரதிதாசன் எழுதிய புத்துரை தென்றல் கிழமை இதழில் 5.11.55-இல் முதன்முதல் வெளிவந்தது. அடுத்து,

2. முறை கோடி மன்னவன் செய்யின் உறைகோடி
   ஒவ்வாது வானம் பெயல்.

(கொடுங்கோன்மை 559)

எனும் குறளுக்குப் பாரதிதாசன் எழுதிய உரை விளக்கம் குயில் கிழமை இதழில் 1.6.58; 8.6.58 ஆகிய நாள்களில் வெளிவந்தது.

3. பின்னர்ப் பாரதிதாசன் எழுதிய குறள் உரைகள் குயில் கிழமை இதழில் தொடர்ந்து இடம்பெற்றன. 'பாரதிதாசன் திருக்குறள் உரை' குயிலில் வெளி வருவதற்கு முன்னர் அவருடைய உரை பற்றி விளம்பரங் களும் விளக்கங்களும் வெளிவந்தன.

தமிழ்நெறி காக்கத் தமிழ்ச் சான்றோரான
வள்ளுவப் பெருந்தகை நம்பால் அருளின் வழிகாட்டி
அறத்தின் மொழிகாட்டி
நமக்கோர் வழிகாட்டி அப்படி அந்நிய
திருக்குறளுக்கு
நஞ்சொத்த நெஞ்சுபடைத்த பரிமேலழகர் உரையால்
எழும் கருத்து வேறுபாடுகளை ஆய்ந்து
நம்முப்பாற் பெருநூலை எப்பாலவரும் இன்னதே
என்று உணருமாறு விளக்க [தக்கது
திருக்குறளும்
கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்) எழுதும்
வள்ளுவர் உள்ளம்
எனற உரையும்

1.12.59 முதல் 'குயிலில்' கிழமை தோறும் வெளிவர இருக்கிறது, (குயில், 3.11 59) என்றும் 'தமிழ் உணர்ந் தோர் அனைவரும் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த கவிஞர் எழுதும் குறளுரை 1.12.59-இல் இருந்து தொடங்க இருக்கிறது'' என்றும் (குயில், 17 11.59. 3.11.59) விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன.

பாரதிதாசன் எழுத இருக்கும் குறள் உரை குறித்து அடுக்கு வினாக்களில் ஒரு புதிய நோக்கில் பின்வருமாறு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது:

- வள்ளுவர் ஆரியரா? தமிழ்ச்சீரியரா?
- வள்ளுவரின் பெற்றோர் புலைச்சியும் பார்ப்பனனும் என்னும் விரிப்பது முறையா? சிரிப்பது சரியா?
- பரிமேலழகர் உரைப்பகுதிகள் அனைத்தும் கொள்ளத் தக்கதா? தள்ளத் தக்கதா?
- பரிமேலழகரோடு பதின்மர் உரை பகர்ந்திருக்க வேறுரை காண்பது மறமா? அறமா?
- முன்னோர் வகுத்துள்ள உரைகளனைத்தும் மதத்தையும்
- தமிழெதிர்ப்புக் கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்ட பொய்யுரைகளா? மெய்யுரைகளா?
- பரிமேலழகர் முத்துரை போதுமா? புத்துரை வேண்டுமா?
- திருக்குறள் உரை பற்றி எழும் இருபாற் கருத்துக்களையும் ஆய்ந்து நம் முப்பாற் பெருநூலை எப்பாலவரும் இன்னதே தக்கது என்று உணருமாறு செய்வதே முறை, ஏனென்றால் குறள் உலகத்திற்கோர் பொதுமறை.
- தக்கது நிலைநாட்டப் புக்கதே கவிஞரவர்களின் வள்ளுவருள்ளம் என்ற குறள் மெய்ப்பொருளுரை.
- நீங்கள் நெடுநாட்களாக ஆவலுடன் எதிர்பாத்திருந்த கவிஞர் குறளுரை வரும் 1.12 59 முதல் குயிலில் தொடங்க இருக்கிறது.

(குயில். 24.11.59)

இவ்வாறு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

குயில் கிழமை இதழில் 1.12.59 முதல் 27.12.60 வரை பாரதிதாசன் 'வள்ளுவர் உள்ளம்' எனும் தலைப்பில் திருக்குறளுக்கு உரை எழுதினார்.

பாரதிதாசன் பாண்டியன் பரிசைத் திரைப்படம் எடுப்பதற்காகச் சென்னை சென்றதால் குயில் கிழமை இதழும் நின்றது, எனவே குறளுரையும் வெளிவராமல் போயிற்று.

குயில் கிழமை இதழில் வெளிவந்த பாரதிதாசனின் உரை பெறும் திருக்குறள் வருமாறு :

அறத்துப்பால்

பாயிரம்

1.	உலகின் தோற்றம் (கடவுள் வாழ்த்து)	—	10
2.	வான் சிறப்பு	—	10
3.	நீத்தார் பெருமை	—	10
4.	அறன் வலியுறுத்தல்	—	10
5.	இல்வாழ்க்கை	—	10
6.	வாழ்க்கைத் துணை நலம்	—	10
7.	மக்கட்பேறு	—	10
8.	அன்புடைமை	—	10
9.	விருந்தோம்பல்	—	3
			83

பொருட்பால்

1.	கொடுங்கோன்மை	—	2
			85

அறத்துப்பாலில் எண்பத்துமூன்று குறள்களுக்கும், பொருட்பாலில் இரு குறள்களுக்கும் ஆக மொத்தம் எண்பத்தைந்து குறள்களுக்குப் பாரதிதாசன் உரை விளக்கம் தந்துள்ளார். இவையேயன்றிக்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

(குறள்-391)

எனும் குறளுக்குப் பாரதிதாசன் குடும்ப விளக்கும் குண்டுக் கல்லும் என்னும் நாடகத்தில் புதுப்பொருள் மொழிந்துள்ளார்.

'கசடறக் கற்க வேண்டும்' என்பதற்கு 'ரேஷன் கடையில் அரிசியோடு கல்லையும் அளந்து வாங்குகின்ற வர்கள் போல இந்நாட்டில் சரி என்று பிழையையும் வாங்குகின்றார்கள்' என்று மக்கள் மொழிச் செப்பத்தைக் காப்பதில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று வழிப் படுத்துகின்றார்.

'கற்கத் தகுந்த நூல்கள் என்பதற்கு', தமிழர் கலை, ஒழுக்கம், நாகரிகம் முதலியவற்றைப் புகட்டும் நூல் களையே கற்க வேண்டும்' என்று வரையறை செய்கிறார்.

'கற்றபடி நிற்க அதற்குத்தக' என்பதற்குத் 'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவரைத் தரைமட்டம் ஆக்க வேண்டும்' என்று உணர்வூட்டுகிறார்.

—(தலைமலை கண்ட தேவர், பக். 95—98)

இவ்வாறு இக்குறளுக்கு மொழியின உணர்வு அடிப் படையில் புத்துதுரை புகன்றுள்ளார்.

2\. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

(குறள் 107)

எனும் குறளுக்குப் பேராசிரியர் நன்னன் அவர்களிடம் கூறிய உரை விளக்கமும் ஈண்டு நினைக்கத்தக்கது.

3\. மேலும் 'கல்லாடம்' பற்றிப் பாரதிதாசன் எழுதிய எண்பது பக்கக் குறிப்பேட்டில் திருக்குறள் காமத்துப்பாலில் இடம்பெற்றுள்ள சில குறட்பாக்களும் அவற்றிற்கான குறிப்புரைகளும் காணப்படுகின்றன. அவை வருமாறு : (இணைப்பு—நிழற்படம்)

குறிப்பறிதல்: 1-வது குறள்.

இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து

(குறிப்பறிதல், குறள் 1091)

உண்கண்—மையுண்ட கண்

குறிப்பறிதல்:

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
என்ன பயனும் இல [வாய்ச்சொற்கள்

(குறள் 1100)

புணர்ச்சி மகிழ்தல்:

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள

(குறள் 1101)

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்

(குறள் 1104)

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு

(குறள் 1110)

நலம் புனைந்துரைத்தல்:

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்

(குறள் 1120)

இக் குறட்பாக்களைப் பாரதிதாசன் விளக்கி எழுத எண்ணியிருக்கலாம். ஆயினும் அவர் விளக்கி எழுதிய குறிப்புக்கள் இதுகாறும் நமக்குக் கிடைக்கவில்லை.

1330 குறளில் பாரதிதாசன் பகர்ந்த 85 குறள் உரை விளக்கங்களே நமக்குத் தெள்ளத் தெளிவாகக் கிடைக்கின்றன.

பாரதிதாசன் திருக்குறள் உரைத்திறன்

இனிப் பாரதிதாசனின் திருக்குறள் உரைத்திறனைக் காண்போம்.

பாரதிதாசன் எழுதிய ஆத்திசூடி, கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா, ஆகிய நூல்களுக்கு அவரே உரையெழுதியுள்ளார். படைப்பாசிரியராகவும் உரையாசிரியராகவும் ஒருங்கே விளங்குகிறார்.

பாரதிதாசன் நயத்தகு உரையாசிரியர் என்பதை அந்நூல்கள் நமக்கு உணர்த்துகின்றன. ஆற்றல் மிக்க கவிஞராகவும் சிறந்த உரையாசிரியராகவும் பாரதிதாசன் விளங்குகின்றார்.

பாரதிதாசனின் திருக்குறள் உரையமைப்பு

பாரதிதாசன் திருக்குறள் உரையமைப்பு பல்வேறு சிறப்புக்களைக் கொண்டு விளங்குகிறது.

அறத்துப்பால் குறித்து உரைப்பாயிரத்தில் விளக்கி எழுதியுள்ளார்.

ஒவ்வொரு அதிகாரத்திற்கும் முன்னுரை எழுதி எழுதியுள்ளார். ஒவ்வொரு திருக்குறளுக்கும் பொருள், கருத்து, இலக்கணக் குறிப்பு, மேற்கோள் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. ஆத்திகர், நாத்திகர் வினாக்களும், உரையாசிரியர் விடையும் உரையாடல் பாங்கில் அமைந்துள்ளன.

சொற்பிரித்தலைப் 'பி' என்றும் அதனோடு மொழி மாற்றைப் 'பி.மா' என்றும் குறுக்க விளக்கமாகச் சுட்டுகிறார்.

அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில்,

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை

(குறள் 37)

எனும் குறளுக்குப் பாரதிதாசன் விரிந்த அளவில் உரையெழுதியுள்ளார். ஆத்திகர், நாத்திகர் வினாக்களும் உரையாசிரியர் விடையும் அதில் இடம்பெற்றுள்ளன. (குயில் 25.10.60).

ஆயின் அக் குறளுக்குப்பின் பாரதிதாசன் எழுதிய உரைவிளக்கங்களில் ஆத்திகர், நாத்திகர் வினாக்களும் உரையாசிரியர் விடைகளும் எனும் அரிய உரையாடல் பகுதி இடம்பெறவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

பாரதிதாசன் உரைத்திறனை ஆய்வாளர்கள் மூன்று நோக்கில் அணுகலாம்.

ஒன்று : பரிமேலழகர் உரையோடு பாரதிதாசன் வேறுபடும் இடங்கள்.

இரண்டு : உரை விளக்கம் பெறுமிடங்கள்.

மூன்று . சிறப்பியல்புகள்

பாரதிதாசன் திருக்குறள் உரையமைத்துள்ள பாங்கு புதுமையாக அமைந்துள்ளது. ஆத்திகர், நாத்திகர் வினாக்களும் உரையாசிரியர் பதில்களும் நாடகப் பாங்கில் அமைந்துள்ளன.

இலக்கணக் குறிப்புக்களும் நிறைந்து காணப்படு கின்றன. தமிழ்ச் சொற்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டு :

ஆதி	(குயில் - 1.12.59)
பகவன்	(குயில் - 1.12.59)
கடவுள்	(குயில் - 1.12.59)
தெய்வம்	(குயில் - 6.12.60)
இறைவன்	(குயில் - 16.2.60)
பூசனை	(குயில் - 21.6 60)
புயல்	(குயில் - 10.5.60)
வாரி	(குயில் - 16.5.60)
முகில், கொண்டல், வான், கார், மழை	(குயில் - 23.2.60)
தானம்	(குயில் - 28.6.60)
பாவம்	(குயில் - 02.08.60)
அந்தணர்	(குயில் - 20.9.60; 26.1.60)
செவி	(குயில் - 17.1.61)
தத்துவம்	(குயில் - 17.6.58; 9.12.59; 12.1.60
அடிகள்	(குயில் - 17 6.58
தண்டம்	(குயில் - 01.12.59)
கணம்	(குயில் - 13,9.60)
கரி	(குயில் - 16.8.60)
குணம்	(குயில் - 13 9.60)

முதலிய சொற்கள் குறிப்பிடத்தக்கவை. தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக

சிந்தாமணி, திருமந்திரம், நன்னூல், பிங்கலந்தை, நீதிநெறி விளக்கம், திருவாசகம், திருவாய்மொழி, நாலடியார் பகவத் கீதை, முதலிய நூல்கள் மேற் கோளாகக் காட்டப்பட்டுள்ளன

தாயுமானவர், அருணகிரியார், பட்டினத்தார், சிவஞானபோத உரையாசிரியர் முதலியோரின் பாடல் களும், கருத்துக்களும் எடுத்தாளப் பட்டுள்ளன.

புத்தர் மறுபிறவிக் கொள்கைக்கு எதிரானவர் என்று சுட்டப்பட்டுள்ளது. (குயில் - 16.2.60)

வள்ளுவரின் கடவுள் கொள்கையையும் இம்மை, மறுமை, எழுமை, வினைப்பயன், முதலியவை பற்றிய கோட்பாடுகளையும், பாரதிதாசன் புதிய நோக்கில் அணுகியுள்ளார்.

திருவள்ளுவர் பாயிரம் எழுதவில்லையென்று வ.உ. சி. கூறுவதைப் பாரதிதாசன் ஏற்கவில்லை (குயில் — 1.12.59).

மணக்குடவர், (குயில் — 5.7.60; 12.7.60) மாணிக்க நாயக்கர் (குயில் — 1.12.59), மறைமலையடிகள் (குயில் — 13.9. 60) முதலியவர்களின் கருத்துக்களைப் பற்றிப் பாரதிதாசன் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

பரிமேலழகர் 'இடும்பை' என்பதற்குப் 'பிறவித் துன்பம்' என்றும் 'இருமை' என்பதற்குப் 'பிறப்பு', 'வீடு' என்றும் பொருள்கொள்வதைப் பாரதிதாசன் மறுக் கிறார்,(குயில் — 22.12.59; 2.8.60).

'அறவாழி அந்தணன்' எனத் தொடங்கும் குறள் சமணச் சார்புடையது என்பதைப் பாரதிதாசன் எதிர்க்கிறார். (குயில் — 26.1.60).

'எண் குணத்தான்' என்பதற்கு 'எட்டு குணத்தான்' என்று சைவர் பொருள் கொள்வதையும் மறுக்கிறார் (குயில் — 2.2.60)

திருப்பனந்தாள் மடம் வெளியிட்ட திருக்குறள் பதிப்பில் (திருக்குறள் — உரைக்கொத்து — அறத்துப் பால், ஐந்தாம் பதிப்பு, திருப்பனந்தான், 1983)),

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

(குறள் 2)

எனும் குறளில் 'நற்றாள்' என்பதற்குச் சிவபெருமானின் 'ஸ்ரீபாதம்' என்று பரிதியார் பொருள் உரைப்பதையும் (ப.4), பாரதிதாசன் மறுக்கிறார், (குயில் — 17.6.58; 28.6.60).

அறம், பொருள், இன்பம், வீடு என்பவை வடநூல் கொள்கை என்பதைப் பாரதிதாசன் ஏற்கவில்லை.

"இனி அகம், புறம் எனும் இருபொருளும் பற்றிச் செய்யுள் செய்தார் ஆயின் அவற்றால் எய்தும் பயன்கள் எவை எனின், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் என்க. இவ்வாறு நூற்பயன் நான்காகக் கொள்வது வடவர்முறை அன்றோ எனின், அன்று, கடல் கொண்ட குமரிநாட்டு முதற் கழகத்தார், உலகுக்கு

முதற்கண் அருளிய தமிழ் நான்மறை என்பது அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கும் பற்றியதன்றோ?

— (குயில் — 1.12.59)

எனும் பாரதிதாசன் தன் மறுப்புக்கு விளக்கம் தருகிறார். இவ்வுரை தொடர்பாகப் பிறிதொரு செய்தியும் இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

பாரதிதாசன் வள்ளுவர் உள்ளம் என்னும் தலைப்பில் திருக்குறளுக்கு உரை எழுதியபோது, ''கனக சுப்புரத்தினம் என்கின்ற பாரதிதாசன்'' என்று குறிப்பிட்டார். உடன் இருந்த கவிஞர் சாமி. பழனியப்பன் 'ஏன் தாங்கள் இருபெயர்களைக் குறிப்பிடுகிறீர்கள்? பாரதிதாசன் என்ற தங்களின் புனை பெயர்தான் பெருவழக்காகி விட்டதே' என்று வினவினார். அதற்குக் கவிஞர் 'நான் கனக சுப்புரத்தினமாக இருந்தபோது திருக்குறளை ஆழ்ந்து கற்றேன், பாரதியின் தொடர்புக்கு முன்னரே திருக்குறளில் புலமை பெற்றிருந்தேன் என்பதை உணர்த்தவே கனக சுப்புரத்தினம் என்ற பெயரை இட்டேன். பாரதியாரின் தொடர்புக்குப் பின்னர் எளிய நடையில் எழுதத்தொடங்கினேன் என்பதைச் சுட்டவே பாரதிதாசன் என்ற பெயரையும் உடன் சேர்த்து இட்டேன் என்று கூறினார்.

— (சிலம்பொலி சு. செல்லப்பன், மதுரை முற்போக்கு எழுத்தாளர் மன்றம் நடத்திய பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் கூறிய செய்தி, 13.8.90).

பாரதிதாசன் படைப்புக்களிடையே இயற்பெயரையும் புனைபெயரையும் கொண்டு விளங்குவது இந்நூல் என்பது குறிப்பிடத்தக்கது. இவை பொதுவான செய்திகள். இனிப் பாரதிதாசனின் திருக்குறள் உரையினை ஆய்வோம்.

திருக்குறள் உரை விளக்கங்கள்:

1. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் கரவான் எனின்

(குறள் 560)

எனும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் 'காத்தற்குரிய அரசன் உயிர்களைக் காவானாயின் ஆபயன் குன்றும். அறன் இல்லாத ஆவன் நாட்டுப் பசுக்களும பால் குன்றும். அறுதொழிலோர் நூல் மறப்பர். அந்தணரும் நூல் மறந்து விடுவர்' என்று விளக்கம் தருகிறார்

உரை மறுப்புகள்

பாரதிதாசன் பரிமேலழகர் கருத்தை மறுத்துத் தரும் விளக்கங்கள் வருமாறு :

1. காவலன் காவான் எனின் ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்' என்று மொழிமாற்றிப் பொருள் கொள்க.

2. ஆபயன் என்பதற்குப் பரிமேலழகர் பசுவின் பயன் (பால்) குறையும் என்று பொருள் கொண்டார் அவர். ஆபயன் என்றதை ஆவினது பயன் என ஆறாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டார். அவ்வாறு கொண்டால் ஆப்பயன் என ஒற்று மிக வேண்டும், 'ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர்' என்ற சிலப்பதிகாரத்திற்போல். எனவே ஆபயன் என்பது வினைத்தொகை நிலைத்தொடர் என்க. காலம் கரந்த பெயரெச்சம்.

வினைக்குறை என்பது வினைத்தொகை இலக்கணம். 'ஆபயன் என்பது ஆனபயன் ஆகின்ற பயன், ஆகும் பயன் என முக்காலத்திற்கும் விரியும். இங்கு ஆனபயன் என்ற

இறந்த காலத்துக்கு விரிக்க. ஆபயன் (ஆனபயன்) என்றால் அரசன் நல்லபடி ஆண்டு வந்தபோது ஆன்பயன் என்பது பொருள். அவையாவன: பகையரசர் அஞ்சிக் கப்பம் கட்டுதல், வரி, வரவு முதலியவை.

3. இனி 'அறுதொழிலோர்' என்பது உழவு, தொழில், வாணிகம், கல்வி, தச்சு, வரைவு ஆகிய அறு தொழிலுக்குரியோர், அவர்தாம் ஆறு அமைச்சர்.

நூல்மறப்பர்-தம் கொள்கையை விடுவர்.
நூல்-கொள்கை; மறத்தல்-கைவிடுதல்,

இவ்வாறு விளக்கம் தருகிறார்.

4. மேலும் பரிமேலழகர் 'அறுதொழில் என்பது ஆரிய மறையோதுதல், ஓதுவித்தல், வேட்டல் (கொலை வேள்வி முதலியவை) வேட்பித்தல், அறிவுதரல், பிச்சை புகல் ஆகிய ஆறுதொழில் என்றார். பொருந்துமா? ஆரியர் தீயொழுக்கம் தமிழர்பால் தலைநீட்டத் தொடங்கக் கண்டறியவற்றுள் அவற்றை மறுத்துத் தமிழரைத் தமிழர் நெறியில் நிறுத்த அருளிய திருக்குறளில் ஆரியர் அறுதொழில் இந்நாட்டில் நடவாது ஒழிந்துவிடுமே என்றா அழுவார்? எனவே பரிமேலழகர் கொண்ட பொருள் பொய்ப் பொருள் என விடுக்க.

இறுதியில் குறளுக்குப் பாரதிதாசன் 'அரசன் தன் காத்தற்தொழிலைச் செவ்வனம் செய்யான் எனின் ஆறு துறையும் நடவா. நாட்டுக்கு ஆகிக்கொண்டு வந்தபயன் ஆகாமலே அளவிற் குன்றிவிடும்' என்று பொருளுரைக்கிறார். (தென்றல் - 5.11.55).

2. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒவ்வாது வானம் பெயல்

(குறள் 559)

எனும் குறளுக்குப் பரிமேலழகர் 'மன்னவன் தான்செய்யும் பொருளை முறை தப்பச் செய்யுமாயின் அவன் நாட்டுப் பருவமழை இன்றாம் வகை மேகம் பொழிதலைச் செய்யாது' என்று பொருள் கூறுகிறார்.

அதாவது அரசன் முறை தவறி நடந்தால் மழை பெய்யாது என்கிறார். பரிமேலழகர் எழுதிய இவ்வுரை விளக்கம் பொருந்தாது என்று பாரதிதாசன் கருதுகிறார். (குயில் - 1.6.58).

'வேள்விக்கு மழை கட்டுப்படுவது என்று கூறி' மக்களை ஏய்க்கும் ஓர் இனத்தாரின் கொள்கையை வலியுறுத்தலே இவ்வாறு பரிமேலழகர் பொருந்தாப் பொருள் புகன்றார் என்கிறார். இனி இக்குறளுக்குப் பாரதிதாசன் பின்வருமாறு பொருள் கொள்கிறார்:

"மன்னன் முறைகோடி செய்யின் - அரசன் செய்யத் தக்க செயல்களை முறை தவறாகச் செய்வானாயின், உறைகோடி (ஏரி, குளம் முதலிய) நீர்த்தேக்கங்கள் சீர்கேடு அடைதலாலே. வானம் பெயல்-வானம் பெய்தலை, ஒவ்வாது-தேக்குதல் செய்யமாட்டா" என்று பாரதிதாசன் விளக்கம் தருகிறார். ஏரி, குளங்களை மண்ணெடுத்து ஆழப்படுத்துவது நீர் ஊற்றுக் கருதி மட்டுமன்று. பெய்யும் மழையைத் தேக்கி வைக்க வேண்டும் என்பதைப் பெருநோக்கமாகக் கொண்டே அவ்வாறு செய்வாரென்க.

இந்நாளில் தொண்டை நாட்டில் கேணியையும், கிணற்றையும் உறை என்றே சொல்லுவது கருதத்தக்கது.

குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கிப் பாடிய பாடலைப் (புறம் 18) பாரதிதாசன் தம்முடைய கருத்துக்கு எடுத்துக் காட்டாகக் காட்டு கிறார் (குயில்-8.6.58).

3. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு

(குறள் 107)

பரிமேலழகர் இக்குறளுக்குத் "தம்கண் எய்தியதுன்பத்தை நீக்கியவருடைய நட்பினை எழுமையினையுடைய தம் எழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்" என்று பொருள் கூறுகிறார்.

ஆயின் பாரதிதாசன் பரிமேலழகர் கருத்தோடு முரண்படுகிறார்.

எழுமை

பரிமேலழகர் 'எழுமை' என்பதற்கு ஏழுவகைப் பிறவி என்று பொருள் கொள்கிறார். ஆனால் பாரதிதாசன் 'எழுமை' என்பதற்கு 'ஏழுதலைமுறை' என்று பொருள் கொள்கிறார், அவ்வாறு அவர் பொருள் கொள்ள வேண்டும் என்பதற்குக் கூறும் காரணங்கள் வருமாறு :

1. பரிமேலழகர் ஏழுபிறவிகளைப் பற்றிக் குறிப்பிடு கிறார். இப் பிறப்பில் மனிதனாக இருப்பின் சமயக்

கணக்கர் கருத்துப்படி அடுத்த பிறவியில் பூண்டாகவும், பிறக்கலாம். அப் பூண்டுக்குச் சிந்திக்கும் ஆற்றல் உண்டா? செய்ந்நன்றி உணர்வு உண்டா? என்று வினாக்களை எழுப்புகிறார்.

'ஏழு' என்னும் எண்ணுப்பெயரைச் சங்கச் சான்றோர்கள் விரும்பிக் கையாண்டுள்ளனர்.

3. மேலும் ஏழு என்னும் எண்ணுப்பெயர் இன்றும் மக்கள் வழக்கிலும் இடம்பெற்றுள்ளது.

(எ.கா) ஒருதடவை சொன்னால் போதாதா? ஏழு தடவை திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டுமா? என்னும் மக்கள் வழக்கை நோக்குக.

எனவே 'எழுமை' என்பதற்கு 'ஏழு தலைமுறை' என்று பொருள் கொள்வதே பொருத்தம் என்று பாரதிதாசன் கூறியுள்ளார்.

-(ஆய்வாளரிடம் பேராசிரியர் நன்னன் கூறியசெய்தி, சென்னை 5 5:84).

மேலும்

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிப்பிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

(குறள், 62)

எனும் குறளில் இடம்பெற்றுள்ள 'எழுபிறப்பு' என்பதற்குப் பாரதிதாசன் 'ஏழு தலைமுறை' என்றே

பொருள் கொண்டுள்ளார் என்பது இங்கு நினைக்கத் தக்கது. (குயில் -10.1.61).

4. துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்

(ஊழ், குறள் 378)

எனும் இக்குறளுக்கு வறுமையான் நுகர்ச்சி இல்லாதார் துறக்கும் கருத்துடையராவர் ஊழ்கள் உறுதற்பாலவாய துன்பங்களை உறுவியாது ஒழியுமாயின்' என்று பரிமேலழகர் பொருள் உரைக்கின்றார். ஆனால் பாரதி தாசன் பரிமேலழகர் உரையை ஏற்கவில்லை.

1. 'உறற்பால ஊட்டா கழியுமெனின் - அடையத் தக்கவற்றை அடைவிக்காமல் செல்லுமாயின் (ஊழ்த் தெய்வம்) அந்த ஏழை மக்கள் உயிரைத் துறக்க வேண்டும்' என்னும் பரிமேலழகர் உரை பொருந்தாது என்கிறார்.

2. மேலும், 'ஏழை மக்கள் கட்டிய வரிப்பணத்தை அரசன் மூலபண்டாரத்தில் அப்படியே விட்டு அவை களைப் பணக்காரருக்கே கொட்டியழும்படி விட்டு இவர் கள் ஒரு முழுக்கயிற்றைத் தேடி எடுத்துக்கொண்டு ஆருக்கும் தெரியாமல் ஆலமரக் கிளையில் தூக்கிட்டுத் துடித்துச் சாகவேண்டும் என்ற பொருளிலா திருவள்ளுவர் செய்யுள் அருளிச் செய்வார்?'' என்று பாரதிதாசன் வினா எழுப்புகிறார்.

எனவே பாரதிதாசன் இக்குறளுக்குப் பின் வருமாறு பொருள் உரைக்கிறார்:

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

இதன் பொருளைப் பாருங்கள்.

துப்புரவில்லார் உறற்பால ஊட்டா கழியும்
எனின் துறப்பார். மன்—அசை.

அதாவது துய்த்தற்கு வழி இல்லாத ஏழை மக்கள் தமக்குச் சேர வேண்டியவற்றைச் சேர்க்காமல் செல்லுமானால் அந்தச் சட்டத்தை மீறிப் புரட்சி செய்வார்கள் என்றவாறு, ஒருவனின் உழவுக்குக் கூலி எட்டணா என்பது பழைய சட்டமானால் இப்போதுள்ள சூழ்நிலையில் அந்த எட்டணா என்பதற்கு இரண்டு ரூபாய் என்று பொருள். எனவே உழவன் இந்நாள் நாளொன்றுக்கு அடையத் தகுந்தது இரண்டு ரூபாய். உறற்பாலவாகிய இந்த இரண்டு ரூபாயைச் சட்டமானது அவர்கள் அடைய முடியாமல் நடந்துகொண்டு இருக்குமானால் அதை உழவர்கள் அந்தச் சட்டத்தை துறக்கவேண்டும். அதாவது சட்டத்தை உடைக்கவேண்டும். அதாவது புரட்சி செய்ய வேண்டும் என்பதுதான் பொருள்' என்று விளக்கந் தருகிறார்.

(உருசியாவில் திருக்குறள் விளக்கம், குயில் 13.9.60).

5. தெய்வந் தொழஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

(வாழ்க்கைத் துணை நலம், குறள் 55)

என்னும் குறளுக்குப் பரிமேலழகர், "பிற தெய்வம் தொழாது தன் தெய்வம் ஆகிய கொழுநனைத்

தொழாநின்று துயிலெழுவாள் பெய் என்று சொல்ல, மழை பெய்யும்'' என்று பொருள் உரைக்கிறார்.

ஆயின் பாரதிதாசன் ''தெய்வங்களைத் தொழ மாட்டாள் கணவனைத் தொழுதபடியே துயிலெழுவாள். அவள் அக் கணவனுக்குப் பெய்யெனப் பெய்யும் மழை போன்று இன்பப் பயன் அளிப்பாள்'' என்று குறிப் பிடுகிறார்.

2. மேலும், 'பெயயெனப் பெய்யும் மழை' என்பதை உவமையாகப் பாவேந்தர் கொள்கிறார். 'ஞாலம் விரும் பிய வண்ணம் பெய்யும் மழைபோல் காதலன் விரும்பிய போது அவன் பெருமளவு இன்பம் அளிப்பவள் என்று காதல் இன்பத்தை விளக்கினார்'' என்று அதற்குப் பொருளுரைக்கிறார்.

3. இப்பாட்டிற்கு வேறு வகையாற் பொருள் கொண்டார் பிறரெல்லாம். பிற தெய்வங்களைத் தொழாது கணவனையே தொழுவாள் மழையை நோக்கிப் 'பெய்' எனில் அம் மழை பெய்துவிடும் என்றன்றோ பொருள் கொண்டார்? அது பொருந்தாது. என்னை? மழையை நோக்கிப் 'பெய்' என வேண்டுவாள் எனில் எத்தெய்வத்தையும் வணங்காதவள் எனப்பட்டவள் மழைத் தெய்வத்தை வணங்கியவளா வாளவன்றோ? இது கிடக்க, பன்னாட்கள் விண்ணின்று பொய்ப்பதும் உண்டு. அந்நாளிலெல்லாம் கற்புடைய பெண்டிர் இல்லா தொழிந்தார் என்பதா?

உலகப் பெண்கள் அனைவரும் கற்பில்லாதவர் எனக் கொள்ளும் மனுவின் கொள்கையுடையார் அவ்வாறு கருதுவது பொருத்தமேயாகும். கற்புடை மகளிராலேயே இவ்வுலகு நிலைபெறுகின்றது எனக் காணும் தமிழர்

அவ்வாறு கருதார். ஆதலால், வள்ளுவர் உள்ளம் அது வன்று, மழை இயற்கையின் கொடை, அது மக்கட்குக் கட்டுப்பட்டதன்று'' என்று பாரதிதாசன் பகுத்தறிவு நெறியில் நின்று விளக்கம் தருகிறார்.

ஆயின் சங்க காலச் சமூகத்தில் கற்புடைய பெண்டிர்கள் மழையைப் பெய்விக்கும் ஆற்றல் உடையவர்கள் என்ற நம்பிக்கை இருந்ததாக அறியவருகிறோம் (எ. கா.)

1. வறன்ஓடின் வையத்து வான்தரும் கற்பினாள்
(கலி. 16:20)

2. இன்துணை மகளிர்க்கு இன்றியமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண்டிலமால்
வானம் பொய்யாது வளம் பிழைப்பறியாது
நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடெனும்
அத்நகு நல்லுரை அறியாயோ நீ?
(சிலம்பு. 2:15, 142—148)

3. வான்றரு கற்பின் மனையறம்
(மணி. 22:58)

4. மழைதரும் இவள்
(மணி. 22:93)

5. செந்தீ முதல்வர் அறம் நினைத்து வாழ்தலும்
வெஞ்சின வேந்தன் முறை நெறியால் சேர்தலும்
பெண்பால் கொழுநன் வழிச்செலவும் இம்
திங்கள்மும் மாரிக்கு வித்து [மூன்றும்

(திரிகடுகம் பா. எ. 98)

பாரதிதாசனின் பகுத்தறிவுச் சிந்தனைக்கு ஏற்பச் சங்ககால மக்களின் நம்பிக்கை அமையவில்லை.

இக் குறளுக்கு உரை எழுதிய தேவநேயப் பாவாணர் 'கற்புடைய பெண்டிர்கள் மழை பெய் என்றால், மழை பெய்யும் என்பது பண்டைய தமிழர் நம்பிக்கை' என்று குறிப்பிட்டுள்ளார். (திருக்குறள் தமிழ் மரபுரை, ப. 67)

எனவே பாரதிதாசனின் இக் குறளுரை விளக்கம் வலிந்து பொருள் கொண்டதாகவே கருதவேண்டியுள்ளது.

வள்ளுவத்தில் ஊறித் தெளிந்த பேரறிஞர்கள் இதனை மேலும் அறியலாம்.

செய்ந்நன்றி

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 1977-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 2- ஆம் நாள் சென்னையில் வள்ளுவர் மன்றத்தின் சார்பாகக் கலைவாணர் அரங்கில் நடந்த விழாவில் கலந்து கொண்டு பேசும்போது, ''வள்ளுவர் நூலுக்குப் புராணச் சார்பு இல்லாமல் உரை எழுதத் தமிழறிஞர்கள் முன்வர வேண்டும். திருக்குறளுக்குப் பாரதிதாசன் உரையெழுதியதைப் பரப்ப வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார். —(தினத்தந்தி, வேலூர் பதிப்பு 3.9.74)

வள்ளுவர் கோட்டம் கண்ட அவருடைய வேண்டு கோள் இன்று பாரதிதாசன் திருக்குறள் உரை நூல்வடிவம் பெறுவதன் மூலம் நிறைவேறுகிறது.

நூல் வடிவில் வராத பாரதிதாசனின் படைப்புக்களில் ஒன்றான திருக்குறள் உரையைத் தமிழ் உலகிற்கு அளிப் பதில் மகிழ்கின்றேன்.


இதனை வெளியிட்ட பாரிநிலைய உரிமையார் பெரிய வர் செல்லப்பனார் அய்யா அவர்களுக்கும், அச்சுப்பிழை யின்றி நூல் வெளிவர வேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்திய பேராசிரியர் சாலை, பேராசிரியை சாலினி ஆகியோருக்கும் என் நன்றி என்றும் உரித்தாகுக.

தேனிகண்ட தீந்தமிழ் நாவலர்! அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் அண்ணா பல்கலைக்கழகத்திலும் பயின்ற சான்றோர்; வாய்மை நெறி பிறழா நேர்மையர்: ரயிலிலும் ஜெயிலிலும் இளமையின் பெரும் பகுதியைச் செலவிட்ட தியாகச்சுடர்; 'தம்பி வா! தலைமை ஏற்க வா!' என்று பேரறிஞர் அண்ணாவால் பெருமைப்படுத்தப் பட்டவர்; பாரதிதாசன் பாடல்களைப் பட்டிதொட்டி யெல்லாம் பரப்பியவர்; குறளுரை கண்டவர்; மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார். அப் பெருந் தகைக்கும், நூல் உருவாக்கத்திற்குத் துணைபுரிந்த திருமிகு சி. சுப்பிரமணியத்திற்கும் என் உளம் கனிந்த நன்றி.

தோழமையுடன்,
ச. சு. இளங்கோ


இணைப்புகள்

இணைப்பு—1



'இசை பெறு திருக்குறள்' எனும்
பாரதிதாசன் கவிதையின் கையெழுத்துப்படி.

இணைப்பு—2



மதுரை திராவிட இயக்கத் தோழர்கள் 'ஒட்டார்பின்' எனத் தொடங்கும் திருக்குறளுக்குப் புதுவிளக்கம் அளித்து வெளியிட்ட துண்டறிக்கை.

புரட்சிக் கவிஞரின்

புதிய நூல்கள்

தேனருவி

முற்றிலும் புதிய பாக்கள் 2 8 0

வளையாபதி

நாடகம் (அச்சில்)

திருக்குறள்


கவிஞரின் புதிய விளக்கவுரை வள்ளுவர்
கருத்தைத் தெளிவாக உணர்த்தும்
திருக்குறள் நூல் (அச்சில்)

பாரதிதாசன் பதிப்பகம்


புதுச்சேரி


'பாரதிதாசன் திருக்குறள் உரை'
வெளிவரப் போகிறது என்பதைத் தெரிவிக்கும் விளம்பரம்,

இணைப்பு—4



அன்பு நூலக உரிமையாளர் திரு. இராமரெத்தினம் அவர்களுக்குப் பாரதிதாசன் எழுதிக் கொடுத்த நூல் வெளியீட்டு உரிமைப்பத்திரத்தில், 'திருவள்ளுவர் திருக்குறள்மூலமும் வள்ளுவர் உள்ளம் என்ற பாரதிதாசன் உரையும்' எனும் நூல் இடம் பெற்றுள்ளது.


SCHOOL
EXERCISE BOOK.
PAGES
Subject
Mudaliar & Co.
Street, G. T., Madras.



கல்லாடம் பற்றிப் பாரதிதாசன் எழுதிய
குறிப்பேட்டில் திருக்குறள் காமத்துப்பாலில் உள்ள குறட்பாக்களும்
குறிப்புரைகளும் காணப்படுகின்றன.